

நக்கீரம்
Nakkeeram
2006-07
நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே!!
FIAT JUSTITIA
சட்ட மாணவர் இந்து மகா சபை
Law Students' Hindu Maha Sabha

To: JOTHILINGAM SIR

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

FIAT JUSTITIA

இலங்கைச் சட்டக்கல்லூரி

சட்ட மாணவர் இந்து மகாசபை - 2006 / 07

# நக்கீரம் - 2007

## கணை - 08

இதழாசிரியர்கள்


வித்யா அம்பிகைபாகன்

நிருஸ்யா செல்வநாதன்



இலங்கைச் சட்டக்கல்லூரி

244, புதுக்கடை வீதி,

கொழும்பு-12.


## இலங்கைச் சட்டக்கல்லூரி - சட்ட மாணவர் இந்து மகாசபை
## 'நக்கீரம்'


| | | |
|---|---|---|
| நூல் | : | 'நக்கீரம்' |
| இதழாசிரியர்கள் | : | வித்யா அம்பிகைபாகன் |
| | | நிருஸ்யா செல்வநாதன் |
| அட்டைப்படம் | : | எஸ்.நிருஸ்யா, இதழாசிரியர்- இ.ச.கல்லூரி இந்து மகா சபை |
| வெளியீடு | : | இலங்கைச் சட்டக்கல்லூரி |
| | | சட்ட மாணவர் இந்து மகாசபை |
| முகவரி | : | 244, புதுக்கடை வீதி, கொழும்பு-12 |
| ஆண்டு | : | 2006 / 2007 |
| மொழி | : | தமிழ் / ஆங்கிலம் |
| தாள் அளவு | : | ஏ4 |
| தாள் வகை | : | 80 Gsm வெள்ளை பாங் தாள் |
| பிரதிகள் | : | 200 |
| பதிப்பகம் | : | வக்மீ அச்சகம், 258/3, டாம் வீதி, கொழும்பு-12 |


## Sri Lanka Law College - Law Students' Hindu Maha Sabha
## ' Nakkeeram '


| | | |
|---|---|---|
| **Book** | : | Nakkeeram |
| **Editors** | : | Vithya Ambigaibagan |
| | | Nirusiya Selvanathan |
| **Cover Design** | : | S.Nirusiya, Editor, S.L. Law College Hindu Maha Sabha |
| **Published by** | : | Sri Lanka Law College |
| | | Hindu Maha Sabha |
| **Address** | : | 244, Hulftsdorp Street, Colombo-12 |
| **Year** | : | 2006 / 2007 |
| **Language** | : | Tamil / English |
| **Size** | : | A4 |
| **Paper Item** | : | 80 Gsm White Bank Paper |
| **Copies** | : | 200 |
| **Printer** | : | Vakmee Printer, 258/3, Dam Street, Colombo-12 |

உ
சிவமயம்



# விநாயகர் துதி

திருவார்க்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவார்க்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தன்கை.

# சமர்ப்பணம்



மறைந்த முன்னாள்
சட்டமா அதிபர் கௌரவ திரு க.சி.கமலசபேசன்
அவர்கட்கு சமர்ப்பணம்

*The views expressed by contributors are their own and do not represent the views of the Law Students' Hindu Maha Sabha Editors.*

அட்டைப்பட வடிவமைப்பு

**நிருஷ்யா செல்வநாதன் - இதழாசிரியர்.**

**அட்டைப்பட விளக்கம்**

வனிதையர் குழலில்
சுகந்தம் நிஜமா?
சொற்போர் தமிழில்,
வென்றான் தமிழ் கவி.
நெற்றிக்கண்ணன் விழியில்
ஆற்றாமை தெரிந்தது.
கீ(வீ)ரன் சொன்னான்
**"நெற்றிக்கண் காட்டிலும்**
**குற்றம் குற்றமே"**
வந்த நெருப்பு
தோற்றது தமிழிடம்
நல்லிசைப் புலவன்
நல்கிய நீதி
**நக்கீரமானது!!**

**வி. திருக்குமரன்**
**இரண்டாம் வருடம்**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்**

திருநாவுக்கரசர் - 4 ஆம் திருமுறை

ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்
மூன்றாம் உலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்றான்; இமையவர்க்கு அன்பன், திருப்பாதிரிப் புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன் அடியோங்களுக்கே!

**திருவாசகம்**

மாணிக்கவாசகர் - 8 ஆம் திருமுறை

வேண்டத் தக்க தறிவோய் நீ!
வேண்ட முழுவதும் தருவோய் நீ!
வேண்டும் அயன் மார்க் கரியோய் நீ!
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினனல்லால்
வேண்டும் பரிசொன்றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே!

**திருவிசைப்பா**

சேந்தனார் - 9 ஆம் திருமுறை

ஏக நாயகனை இமயவர்க் கரசை
என்உயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனை, புயல்வணற்கு அருளிப்
பொன்நெடும் சிவிகையா யூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோக நாயகனை யன்றி, மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே!

## திருப்பல்லாண்டு

சேந்தனார் - 9 ஆம் திருமுறை

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவா ருலகில்?
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே!

## பெரிய புராணம்

சேக்கிழார் - 12 ஆம் திருமுறை

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையிற் தனிப்பெரும் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

CHIEF JUSTICE'S CHAMBERS
SUPREME COURT
COLOMBO 12,
SRI LANKA.
Fax: 94 1 437534
Tel: 2422142

අග්‍රවිනිශ්චයකාර මැදිරිය
ශ්‍රේෂ්ඨාධිකරණය
කොළඹ 12,
ශ්‍රී ලංකාව.
ෆැක්ස් : 9414375 34
දුරකථනය : 2422142

10th August 2007

I take great pleasure in felicitating the publication of 'Nakeeram' - the magazine of the Hindu Maha Sabha of the Sri Lanka Law College. This is the 41st issue of the 'Nakeeram', which by itself demonstrate the commitment, consistency and dedication of succeeding groups of Law students who constituted membership of the Nakeeram during the past four decades.

This issue, as in the past, contains articles covering a variety of aspects of law and is indeed a great benefit to law students, practitioners and Judges.

Whilst commending the members of the Hindu Maha Sabha, though small in number, for their dedication and commitment in achieving this formidable task. I hope that this good work will be continued in future too.

Sarath N Silva
Chief Justice

# பிரதம விருந்தினரின் ஆசிச் செய்தி

''கற்றது கைம்மண்ணளவு கல்லாதது கடல் அளவு'' என்பார் சான்றோர். சட்ட மாணவர்கள் கற்கும் கல்வி பெரும்பாலும் ஏட்டுக் கல்வியாகவே அமைந்துள்ளது. அவர்களின் துறைசார் கல்வியை மேம்படுத்த அத்துறையில் அனுபவமும் ஆற்றலும் மிக்க கல்விமான்களின் படைப்புக்களைக் கற்பது இன்றி அமையாதது. மனித வாழ்வின் பல்வேறு அம்சங்களில் சட்டத்தின் பங்களிப்பு பற்றிய கருத்துக்களைச் சட்ட வல்லுனர்கள், மற்றும் பல்வேறு துறைசார் வல்லுனர்களிடம் இருந்து பெற்ற பல அரிய ஆக்கங்களை ஒன்று திரட்டி ''நக்கீரம்'' மலராக ஆண்டு தோறும் வெளியிடப்படுவது சட்ட மாணவரின் அறிவு வளர்ச்சிக்கு அரிய பங்காற்றும் என்பதில் ஐயம் இல்லை.

மேலும் சட்டத்தின் ஆட்சி (Rule of Law) பற்றி பொது மக்களுக்கு அறிவூட்டவும், அவர்களின் கடமைகள், உரிமைகள் பற்றி அறிந்து கொள்ளவும், அவற்றை சட்ட அறிவில்லாதவர்கள் கூட விளங்கிக் கொள்ளவும் கூடிய வகையில் அறிவுசார் கட்டுரைகள் பலவற்றையும் இந்த ''நக்கீரம்'' மலர் தாங்கி வெளி வருவது காலத்தின் ஓர் தேவையாகும். இம் மலர் மேலும் புதுப் பொலிவுடன் திகழ உழைக்கும் சட்ட மாணவர்களுக்கும் அம் மலரை ஆண்டு தோறும் வெளியிடும் சட்ட மாணவர் இந்து மகா சபைக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

**சு. சிறிஸ்கந்தராஜா,**
**மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி,**
**மேல் முறையீட்டு நீதிமன்றம்,**
**கொழும்பு**

**RAMAKRISHNA MISSION**
**(Ceylon Branch)**
**40, Ramakrishna Road, Colombo 6.**

*Phone - 2588253 & 5513805*
*Fax- 2361438*
*Email- rkmcey@eureka.lk*
*rkmcey@gmail.com*

## சிறப்பு விருந்தினரின் ஆசியுரை

இலங்கை சட்ட மாணவர் இந்து மகா சபையின் ஆண்டு விழாவும், அது சமயம் வெளியிட இருக்கும் ஆண்டு மலர் வெளியீட்டு விழாவும் சிறப்பாக நடைபெற வேண்டி எல்லாம் வல்ல இறைவனின் அருளையும், ஆசியையும் வேண்டுவதோடு என் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

' அரிது அரிது மானிடர் ஆதல் அரிது ' காரணம் மனிதனால் தான் முக்காலங்களையும் உணரவும், எண்ணவும் முடியும். அதிலும் இளமையும், மாணவர் வாழ்க்கையும் அளவற்ற சக்தியை தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதாகும். அந்த வாழ்க்கையானது நன்றாயினும், தீதாயினும் எதையும் ஆராய்ந்து பரிசோதனை செய்து பார்க்கும் காலமும் ஆகும். வாழ்க்கையில் எந்த ஒரு காரியத்தை சாதிப்பதற்கும் அளவற்ற சக்தியும், தைரியமும், உறுதியான மனமும் வேண்டும்.

அடிப்படை குணங்களைக் கொண்டவர்களின் மேல் சுவாமி விவேகானந்தர் அளவற்ற நம்பிக்கை வைத்திருந்ததால் தான், ''தூய்மையான, சுயநலமற்ற ஒரு நூறு இளைஞர்களைக் கொடுங்கள். இந்த உலகத்தையே ஆட்டிப் படைத்துக் காட்டுகிறேன்'' என்று சொன்னார். அதைப்போன்றே உயர்ந்த குணங்களைக் கொண்டதால் நீங்கள் இந்த நற்காரியத்தில் ஈடுபட்டுள்ளீர்கள்.

இம் மலரில் வெளியிட்டுள்ள ஆன்மீகக் கட்டுரைகளையும், சட்டம் பற்றிய தகவல்களையும் படிப்போர் அனைவரும் அதனால் பயனடைய வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன்.

24.07.2007

சுவாமி சர்வரூபானந்த

**சுவாமி சர்வரூபானந்த**
**தலைவர்.**

*Justice C.V.Wigneswaran*
*Retired Judge of the Supreme Court of Sri Lanka*

*16C, Cambridge Terrace,*
*Colombo-07.*
*Tel: 011-2677748*

**ஆசிச் செய்தி**

**' நக்கீரம் '** தொடர்ந்து வெளிவருவது இந்து நெஞ்சங்களை வியப்பிலும் பெருமையிலும் ஆழ்த்துகிறது. விரல் விட்டு எண்ணக்கூடிய இந்து மதஞ்சார் சட்ட மாணவர்களை வைத்துக் கொண்டு சட்டமாணவர் இந்து மகாசபை இப்படியானவொரு சட்ட, சமூக, சமய சஞ்சிகை ஒன்றினை வெளியிடுவது என்பது சட்ட மாணவ மாணவியர்களின் திட சங்கற்பத்தையும் திறனையும் திட்பத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. **நக்கீரக்** கட்டுரைகள் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளிவருவதால் பிற மொழி பேசும் மாணவ மாணவியரும் படித்துப் பயன் பெறமுடியுமானதாகச் சஞ்சிகை அமைந்துள்ளது.

சட்ட மாணவ மாணவிகள் நினைவில் இருத்த வேண்டியதொன்றுண்டு. இன்றைய சமுதாயம் ஏதாவது ஒரு விடயத்தை ஆழப்படிப்பதில் ஆர்வம் காட்டுகிறது வரவேற்க வேண்டிய தொன்று தான். ஆனால் எந்த ஒரு விடயமும் மற்றைய விடயங்களுடன் தொடர்புடையது என்பதை மாணவ சமுதாயம் மறந்து விடக் கூடாது. வாழ்க்கை என்பது பிரிக்கப்பட்ட பகுதிகளைக் கொண்ட ஒரு இரயில் வண்டி அல்ல. இரயில் பெட்டிகள் கூட பிரிந்திருந்தாலும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டவைதான். வாழ்க்கையின் தொடர்பை சமூக, சமுதாய அலகுகள் ஒன்றுடன் ஒன்று சார்ந்திருக்கும் நிலையை, பூகோள ரீதியாக மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக வாழவேண்டிய இன்றைய நிர்ப்பந்தத்தை எல்லாம் மாணவ உள்ளங்கள் கவனத்திற்கு எடுக்க வேண்டும்.

''குற்றாலத்தில் இடி இடித்தால் கோயமுத்தூர் விளக்கணையும்'' என்பார்கள் எதுவுமே தனித்து இயங்குவதில்லை. எவருமே தனித்து இயங்க முடியாத சூழல் இன்று இந்த உலகில் ஏற்பட்டுள்ளது. போக்குவரத்து, செய்தித்தொடர்பு, கணினி மயத்தாக்கம் எல்லாஞ் சேர்ந்து உலகத்தை மிகச் சிறியதாக்கிவிட்டன. இதனால் எம்மைச் சுற்றியுள்ள சகலதையும் பற்றி ஓரளவு அறிந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. எங்கள் மதம் பற்றிப் படிக்கும் போது சகோதர மதங்கள் பற்றியும் அறிந்திருக்க வேண்டும்.

ஆகவே இவற்றையெல்லாம் உணர்ந்து சட்டப் படிப்பென்றாலும் மற்றைய துறைகளென்றாலும் ஆழப் படிக்கும் அதே நேரம் அகலப் படிக்கவும் அறிந்து கொள்ள வேண்டும்.

நக்கு என்றால் நாவினால் தடவுவது, சுவை பார்ப்பது, ஈரம் என்ற சொல்லுக்கு அறிவு என்று ஒரு பொருள் உண்டு. (நக்கு + ஈரம்) = நக்கீரம் என்றால் சகல அறிவு சார் விடயங்களையும் சுவைத்துப் பார்த்தல் என்றும் பொருள் கொள்ளலாம். நக்கீர வல்லமை நம்மெல்லோரிடமும் வளர்வதாக!

**28.07.07**

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**




உ

குருபாதம்

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.**

**குருமஹா சந்நிதானம் ஆதி முதல்வர்.**

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்.**

**பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை**





தொலைபேசி: 021 - 222 2870


## அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்,

இலங்கையின் சட்டக் கல்லூரி சட்ட மாணவர் இந்து மகாசபை 2007 ஆம் ஆண்டு நக்கீரம் நூல் வெளியிடுவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். வருடம் தோறும் வெளிவரும் நக்கீரம் அனைவருக்கும் பயனுள்ளதாக அமைவது எல்லோருக்கும் மகிழ்ச்சியை தருகின்றது. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு சட்டமும் ஒழுங்கும் இன்றியமையாதது ஆகும். இதனை மனதில் நிறுத்தி வாழ்வதே மனித நேயமாகும். இதனை நம் சமயத்தில் இறைவனே செய்து காண்பித்துள்ளான். இறைவனுடைய பூரணமான நிலையைக் கண்டும் நக்கீர தேவனார் ''நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே" என்று வாதிட்ட வரலாறு நம் சமயத்தில் உண்டு. இதனை வெளிப்படுத்தும் பொருட்டு இந் நூலுக்கு 'நக்கீரம்' எனும் பெயர் சூட்டப்பட்டது. சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்ட கற்றுக் கொண்டிருக்கும் சட்ட மாணவர்களுக்கு இந்நூல் சிறப்புடையதாக அமைந்துள்ளது. இதனை வெளிக் கொணரும் இந்து மகாசபையினரை வாழ்த்து கின்றோம். இந் நூல் சிறப்பாக அமைவதற்கு நூலாசிரியர்களுக்கு இறைவனுடைய ஆசி கிடைப்பதாக, இந் நூலை அனைவரும் படித்து பயன்பெற்று மண்ணினல்ல வண்ணம் வாழ்வோமாக.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**இரண்டாவது குருமஹாசநநிதானம்.**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**

**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

21.03.2007

ශ්‍රී ලංකා නීති විද්‍යාලය

இலங்கை சட்டக் கல்லூரி

**Sri Lanka Law College**


## MESSAGE FROM THE PATRON

As the Principal of Sri Lanka Law College and the Patron of the Law Students' Hindu Maha Sabha it gives me great pleasure to contribute this message to 'Nakeeram'. The Law Students' Hindu Maha Sabha has made a substantial contribution towards the improvement of the quality of education at Sri Lanka Law College. 'Nakeeram' the Magazine they publish, contains articles on subjects of particular interest to lawyers and law students and of general interest to others. I believe this year's issue of the Magazine too will be of great value as in the previous years. The fact that the 'Nakeeram' has been in existence for a long time speaks of the enthusiasm, commitment and dedication of the committee and members of the Hindu Maha Sabha.

By providing a forum for student contributions the 'Nakeeram' aims at encouraging research of the law and developing the language skills of the writers who in the near future will be entering the legal profession of this country. The contribution of the Law Students' Hindu Maha Sabha is particularly important as we live in an era where the number and the frequency of violations of ethical principles has increased. This leads to the erosion of public confidence in the profession.

The Law Students' Hindu Maha Sabha deserves to be congratulated for it has proved itself a very viable student body that works towards the achievement of its objectives. It has made a significant contribution to the life of the College while promoting the interests of its members. I wish the Law Students' Hindu Maha Sabha all success in its future endeavours.

W.D. Rodrigo
Principal, Sri Lanka Law College

2nd August 2007


224, අළුත්කඩේ වීදිය, කොළඹ 12. දුරකථනය ෆැක්ස්
224, புதுக்கடைத் தெரு, கொழும்பு-12. தொலைபேசி 2323759 பக்ஸ் 2385847
224, Hulftsdorp Street, Colombo-12 Telephone Fax

ஓம் நமசிவாய

# SIVA SRI V.BALASUNDARA KURUKKAL

(CHIEF PRIEST & J.P OF WHOLE ISLAND)

**SRI PONNAMBALAVANASWARAR DEVASTHANAM**

**38, Sri Ramanathan Street, Colombo-01300, Sri Lanka.**

பிரதிடாபூஷணம், கிரியாகலாபமணி
**சிவஸ்ரீ வை.பாலசுந்தரக்குருக்கள்**
(பிரதம சிவாச்சாரியார்)
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்
38, ஸ்ரீ இராமநாதன் வீதி,
கொழும்பு 01300,
இலங்கை.

**Tel/Fax: +94(11) 2338319**
**Cell No: +94777391210**
**Email:vbk192@yahoo.com**

---

**இலங்கை கொழும்பு சட்டக்கல்லூரி**
**சட்ட மாணவர் இந்து மகா சபை**
**வெளியிடும்**
**'நக்கீரம்' மலருக்கான**

**ஆசியுரை**

சட்ட மாணவர்கள் வெளியிடும் நக்கீரம் என்னும் நூல் பல ஆன்மீகக் கட்டுரைகளுடன் மக்களுக்கு பிரயோசனப்படும் முறையில் வருவது மிக மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

இந்த 'நக்கீரம்' நூல் பல அம்சங்களுடன் பல ஆன்மீகக்கட்டுரைகளுடன் வெளிவர வேண்டும். எங்கள் இந்துமதம் மென் மேலும் வளர சட்டக்கல்லூரி மாணவர்கள் சமயவழி பிறழாது ஆன்மீகத்திற்கு முதல் இடம் கொடுத்து ஆண்டு தோறும் வெளிவரும் 'நக்கீரம்' வளர சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் யாவருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசௌந்தரி அம்பாள் சமேத சொர்ணசபேஸ்வர பெருமான் திருவருள் கிடைக்க பிரார்த்திக்கிறேன். ஆசீர்வதிக்கின்றேன்

வணக்கம்
சுபம்

இங்ஙனம்

வை.பாலசுந்தரக்குருக்கள்

**V.BALASUNDARA KURUKKAL**
CHIEF PRIEST
PONNAMBALAVANESWARAR
DEVASTHANAM
# 38, RAMANATHAN STRET,
COLOMBO 13.
TEL: 2338319

உ



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

**தெல்லிப்பழை, இலங்கை**

# Sri Durgadevi Devasthanam

**Tellippalai, Sri Lanka.**

**தலைவர்:**

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி,

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,** J.P

**President:**

Durgaduranthari, Sivathamilselvi,

**Dr.Miss.Thangamma Appacuddy,** J.P

**வாழ்த்துரை**

**இலங்கைச் சட்டக் கல்லூரி**
**சட்டமாணவர் இந்து மகாசபை**
'நக்கீரம்' 2006/07

'நக்கீரம்' என்ற சொல் உறுதியையும் உண்மையையும் உணர்த்தி நிற்கும் ஒரு சொல்லாகும். சங்கப்புலவர் நக்கீரர் இறைவனோடு வாதிட்டு உறுதியை வெளிக்காட்டியவர். இப்புலவரின் உறுதிப்பாட்டோடு தொடர்புடைய ஒரு சொல் 'நக்கீரம்' என்பதாகும். இலங்கைச் சட்டக்கல்லூரி மாணவர்கள் கடந்த பல ஆண்டுகளாக இந்து மகாசபை ஒன்றை நிறுவி 'நக்கீரம்' என்ற சஞ்சிகையையும் ஆண்டு தோறும் வெளியிட்டு வருகின்றனர். இதன் மூலம் சட்ட மாணவரிடையே இந்துப் பண்பாட்டு வளர்ச்சி ஓங்கி வளர்கிறது. மன்றங்களும் மகாசபைகளும் சங்கங்களும் ஆங்காங்கு தோன்றி பண்பாட்டையும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் வளர்த்து வருவது கண்கூடு இவற்றுக்குள் மதிப்பார்ந்த ஒரு சபையாக விளங்குவது 'சட்டக்கல்லூரி இந்துமகா சபை' யாகும். சட்டக்கல்லூரியில் கற்கும் சட்டமாணவர்கள் மேற்படி சபையை நல்லபடி வளர்த்து வருகின்றார்கள்.

சட்டத்தை மதித்து வாழ்பவன் தான் உண்மையான மனிதனாக கருதப்படுவான். அங்கே உண்மையும் நேர்மையும் ஒழுங்கும் தலைதூக்கி நிற்கும். போலிகளுக்கும் அநீதியாளர்களுக்கும் சட்டம் இடமளிக்காது. ஆண்டாண்டு காலமாக நீதிமன்றச் சட்டம் பேணப்பட்டு வருகிறது. உண்மையை நேசிப்பவர்கள் நீதிமன்றங்களை நம்பி வாழ்கிறார்கள். இதனால் வாழ்க்கையில் திருப்தியும் ஏற்படுகிறது. இத்தகைய செய்திகளை 'நக்கீரம்' என்ற சஞ்சிகையின் மூலம் நாம் படிக்க முடிகிறது. அர்த்தமற்ற சஞ்சிகைகளினால் இந்த மண்ணை நிரப்பி விடாது ஆக்கபூர்வமான 'நக்கீரம்' போன்ற சஞ்சிகைகளினால் மனித வாழ்வின் வளத்தை மேம்படுத்த வேண்டுமென்று அனைவரையும் வேண்டி அதற்கெல்லாம் இறை அருள் துணைநிற்க வேண்டுமென்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**
**சமாதான நீதிபதி**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா**

உ

சிவமயம்

# 2006/07 பெரும்பொருளாளரின் ஆசிச் செய்தி

சட்ட மாணவர் இந்து மகா சபையின் 2006/07 ஆம் ஆண்டுக்கான 'நக்கீரம்' வெளியீட்டில் மன்ற அங்கத்தவர்களுடன் சேர்ந்து நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நீதிநெறி சட்டத்தில் பல்வேறு பரிணாமங்களில் உள்வாங்கப்பட்டிருக்கின்றது. நன்னெறி மனிதனால் வகுக்கப்பட்டது. சமுதாய ஒழுங்கமைப்பிற்கு நீதிநெறியும் நன்னெறியும் வழிகாட்டல்களாக அமைவது அவசியம். சட்டமும் சமயமும் மனிதனின் வாழ்க்கையில் இன்றியமையாத பங்கினைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு மனிதனும் சமய வழியிலும் சட்டப் பிரகாரமும் வாழ்கின்ற போது நாட்டில் அமைதி நிலவும் என்பது நிச்சயமே.

இலங்கைச் சட்டக் கல்லூரி சட்ட மாணவர்களும் சமயநெறியையும் நன்னெறியையும் பின்பற்றி வாழ்கின்றார்கள், வாழ்வார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். சட்டத்துக்கும் சமயத்துக்கும் ஒருங்கிணைந்து முக்கியத்துவம் கொடுத்து ஆண்டுதோறும் வெளிவரும் 'நக்கீரம்' நீடூழி வாழ வேண்டும். சட்ட மாணவர்களின் முயற்சிகளும் ஆண்டு தோறும் மேன்மையடைய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

K. Nagendra

**திருமதி. கமலா நாகேந்திரா**
**பெரும் பொருளாளர்**
**சட்டக் கல்லூரி இந்து மகா சபை**

உ

சிவமயம்

# 2008 பெரும்பொருளாளரின் ஆசிச் செய்தி

இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் இந்து மகாசபையினால் வெளியிடப்படும் 'நக்கீரம்' மலர் இவ்வருடமும் வெளிக் கொணரப்படுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நூலானது சமயம் தொடர்பான கட்டுரைகளை மட்டுமன்றி சமூகத்தில் உள்ள அனைவருக்கும் தேவையான பல உபயோகமான கட்டுரைகளையும் தாங்கி வருவது மிகவும் சிறந்த ஓர் விடயமாகும்.

அனைத்துப் பிரிவு மக்களையும் வேற்றுமை காட்டாது அணைத்துச் செல்லும் இந்து சமயத்தின் பண்புகளை யாவரும் அறியச் செய்வதற்கு இவ்வாறான முயற்சிகள் பெரிதும் துணை நிற்கும்.

குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்டுள்ள சட்ட மாணவர் இந்து மகாசபையின் இப்பெரு முயற்சி வெற்றி பெற எனது நல்வாழ்த்துக்கள்.

வி. புவிதரன்
பெரும் பொருளாளர்
சட்டக் கல்லூரி இந்து மகா சபை

## இதழாசிரியர்கள் இதயத்திலிருந்து.......

சட்டக் கல்லூரியில் சட்டமாணவர் தொகை வற்றி வரண்ட நிலையில் சுனாமியாக உட்புகுந்த நாம், நீதி உணர்த்திடும் நக்கீரனார் பெயர் சூடி சட்ட உலகில் காலந்தோறும் கணையாய் உதித்திட்ட நக்கீரம் சஞ்சிகையை இவ் வருடமும் வெளியிட முன் வந்தோம்.

வானம் கறுத்த சூழ்நிலையில் நக்கீரத்திற்கு அடியிட்டோம். இன்று கார்மேகம் கலைந்த நிலையில் நக்கீரத்தினை வெளியிடுவதில் பெருமை கொள்கின்றோம். இருண்ட சமயத்தில் ஒளி விளக்காக எமக்கு உதவிய அனைத்து உள்ளங்களையும் நினைவு கூருகின்றோம்!

பொன்னான ஆக்கங்களை அமைத்திட தம் பொன்மயமான நேரத்தை நல்கிய அறிவுப் பெருந்தகைகளிற்கும், சுமைகளை பகிர்ந்திட்ட நண்பர்களுக்கும் நன்றிகளை நவில்கின்றோம்.

பல இன்னல்களுக்கு மத்தியிலும் இந்து சமயத்தை அழியாது காக்கும் இந்து சமய ஆர்வலர்களுக்கு இம் மலரை சமர்ப்பிப்பதில் மன நிறைவடைகின்றோம்.

இந்நூலில் ஏதேனும் தவறுள்ளவிடத்து சான்றோர் ஆகிய நீங்கள் மன்னித்து அதன் நிறைவை ஏற்குமாறு, பணிவுடன் வேண்டுவதுடன், இனி வரும் காலங்களிலும் நீதி வழிகாட்டும் தர்ம நூலாக நக்கீரம் உதித்திட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.!

**செ. நிருஸ்யா**
**அ. வித்யா**

## Law Students' Hindu Maha Sabha
## Executive Committee - 2007

| | |
|---|---|
| President | Manikkavaskar Thiyagaraja |
| Vice - President | Rajaratnam Thillairajah |
| Secretary | Menaka Kesavan |
| Asst.Secretary | Agalya Murugananthan |
| Treasurer | Selvaranjini Nadarajah |
| Editors | Nirusiya Selvanathan |
| | Vithya Ambigaibagan |
| Educational Secretary | Visvalingam Thirukkumaran |
| Committee Member | Shobana Asokathasan |

## Members of the Law Students' Hindu Maha Sabha - 2007

**Prelimnary Year**

Anbuvathani.S
Kalaimathy.V
Priyadharshini.R
Sharmila

**Intermediate Year**

Agalya.M
Menaka.K
Nirusiya.S
Selvaranjini.N
Shobana.A
R.Thillairajah
V. Thirukkumaran
Vithya.A

**Final Year**

G. Abimanju
M. Thiyagaraja

# Law Students' Hindu Maha Sabha - 2006 / 2007
## Sri Lanka Law College




***Seated Left to Right*** : Mrs. K. Nagendra (Senior Treasurer), Menaka Kesavan (Secretary), Sarath N. Silva (Chief Justice), Manikkavasagar Thiyagaraja (President) W. D. Rodrigo (Principal), Nirusiya Selvanathan (Editor), Vithya Ambigaibagan (Editor)

***Standing Left to Right*** : Selvaranjini Nadarajah (Treasurer), Agalya Muruganandan (Vice Secretary), Visvalingam Thirukkumaran (Educational Secretary), Rajaratnam Thillairajan (Vice President), Shobana Asokadasan (Committee Member)

# பொருளடக்கம்


**1. அறமும் ஆண்டவனும்** - கம்பவாரிதி இ. ஜெயராஜ் 3

**2. 'குறிக்கோள்'** - கலாபூஷணம் வித்துவான், திருமதி.வசந்தா வைத்தியநாதன் 8

**3. நம்பிக்கை தான் வாழ்க்கை** - எஸ்.என்.உதயநாயகன் B.Com 10
தலைவர், ஸ்ரீ சத்ய சாயி பாபா (கொழும்பு) மத்திய நிலையம்.

**4. கும்பாபிஷேகமும் கிரியைகளும்** - பிரதிஷ்டாகிரியாபூஷணம்-கிரியா கலாபமணி, 12
ஸ்ரீவஸ்ரீவைத்தியநாத பாலசுந்தரசிவாச்சாரியார் (பிரதமகுரு)

**5. பேரின்பத்திற்கு வழி** - **Dr.A.Gangadaran,** Attorney-at-Law 15

**6. சமய நெறியில் பண்பாடு** -பன்மொழிப்புலவர் - த கனகரத்தினம் பி.ஏ.(இலண்டன்) 23
கல்வி டிப்புளோமா- இலங்கை, கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைக்காப்பாளர்

**7. PEACE IS POSSIBLE** 28

**8. சட்டத்தின் அடிப்படை சமயமே** - **V.S.MAHALINGAM** J.P.U.M, 31
Attorney-at-Law

**9. சைவ வாழ்வும் ஆன்மீகமும் தற்காலச் சமுதாயத்திற்கு அவற்றின் பொருத்தப்பாடு** - கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் 34

**10. இலங்கையில் சமயரீதியான குடித்தொகையின் பிரதேசப் பரம்பல்** 42
ஆர்.ஸ்ரீகாந்தன், சிரேஷ்ட விரிவுரையாளர் - புவியியல் துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

**11. Of Religious Identities and Nationalists Fervour** 48
**Minna Thaheer,** Program Manager Peace Related Activities
Consortium of Humanitarian Agencies, Visiting Lecturer, Dept of History and International Relations, University of Colombo

**12. பின்நவீனத்துவத்தின் பின்னால்** - திருமதி பவானி முகுந்தன், 50
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

**13. HURDLES AND PROBLEMS OF CULTURAL COEXISTENCE** - **S.M.N.S.A. Marsoom,** Attorney-at-law 58

**14. நீதி நெறிமுறை தரும் சமயவாழ்வு** 65
மேனகா கேசவன், இடைநிலை ஆண்டு, இலங்கைச் சட்டக் கல்லூரி

**15. அறுபத்துநான்கினுள் ஓர் உன்னதமாம் இசைக்கலை** 68
ஷர்மிளதர்ஷினி சிவஞானம், இலங்கை சட்டக்கல்லூரி முதலாம் வருடம்,
கலைப்பீடம் இரண்டாம் வருடம், கொழும்பு பல்கலைக்கழகம்

**16. சட்டத்தின் அடிப்படை சமயமே** - இ.பிரியதர்ஷினி, முதல் நிலை ஆண்டு 73

**17. பயங்கரவாதம் என்றால் என்ன?** - நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் 78

**18. பிரிவிடல் சட்டம்** - **Mrs.S.Ellengovan,** District Judge Magistrate Mallakam 84

**19. CATEGORIES OF BODILY INJURY SPECIFIED IN THE PENAL CODE** - **Palitha Fernando,** Additional Solicitor General, 90
Lecturer, Sri Lanka Law College

**20. அடிப்படை உரிமைகளும் மீறல்களும் -** செ.செல்வகுணபாலன், உதவிச் சட்டவரைஞர் 94

**21. EXPRESSIONS OF FOLKLORE: PROTECTION UNDER THE INTELLECTUAL PROPERTY LAW** 107
**D.M.Karunaratna** LL.B.(Hons), M.Phil, PhD Attorney at Law
Director General of Intellectual Property

**22. PUBLIC SERVICE AND FUNDAMENTAL RIGHTS: HAVE WE OVERLOOKED THE FUNDAMENTALS?** 115
**Viveka Siriwardena De Silva** LL.M (WSU, Michigan), MBA (Sri.J), B.Sc (Hons) Colombo. Attorney-at-Law

**23. குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தின் சில அம்சங்கள்** 119
**A.Sarveswaran,** Senior Lecturer, Faculty of Law, University of Colombo.

**24. காலக்கிரமத்தில் உண்டியலொன்றை வைத்திருப்பவன் காலத்தை வென்றவனா? -** சாந்தி செஜராஜசிங்கம், சிரேஷ்ட விரிவுரையாளர் 125

**25. இலங்கையில், ஆயுத மோதலினாலான உள்நாட்டு இடப்பெயர்வு** 142
செல்வி. சாமினி சந்திரன், உதவி விரிவுரையாளர்,
கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை.

**26. DEMARCATION OF HIGH SECURITY ZONES AND THE RESULTANT MASS DISPLACEMENT OF CIVILIANS IN CONFLICT AFFECTED AREAS** 146
SWARNARAJAH NILAKSHAN MBA (Colombo), Attorney-at-Law,
Dip. in Journalism (Colombo). Dip.in.Dispute Resolution (BCIS/University of Peace).

**27. ANTICIPATORY BAIL -** ARAVINDA R.I. ATHURAPANE Attorney-at-Law 152

**28. Bio Genetic Piracy and Patenting -Hamsakanambiha Vamadeva** Attorney-at-Law 154

**29. நிர்வாக நடவடிக்கைகளில் நீதிமுறை மீளாய்விற்குக் காரணங்களை வழங்குதல் உறுதியான தளமாகக் காணப்படுகின்றன.** 161
செல்வி.ஷர்மினி விக்னேஸ்வரன், இறுதி வருடம், சட்டபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

**30. பித்துநிலை எதிர்வாதமாக...** ஷோபனா - அசோகதாசன், இலங்கை சட்டக்கல்லூரி இடைநிலை ஆண்டு 164

**31. சுயநிர்ணய உரிமை -** நிருஸ்யா செல்வநாதன், இரண்டாம் வருடம், இலங்கைச் சட்டக் கல்லூரி - இறுதி வருடம். கலைப்பீடம் - கொழும்பு பல்கலைக்கழகம் 168

**32. குற்றத்தின் பகுதியொன்றாக "குற்ற மனம்"** 175
**F.Madeeha Mawoon** (Intermediate year) Sri Lankna Law College

**33. அடிப்படை உரிமை மீறல்கள். அகதிமுகாம் வாசியின் குரலில்** 172
மேனகா கேசவன், இடை நிலை ஆண்டு, இலங்கை சட்டக்கல்லூரி

**34. EUROPEAN UNION** 180
**Vithya Ambigaibagan** Dip in Human Rights, Dip in International Relations
Intermediate Year, Sri Lanka Law College

**35. "பொதுச் செயலாளரின் ஆண்டறிக்கை"** 183

**36. நன்றியுரை** 185

# சமயமும் சமூகமும்

உ

# அறமும் ஆண்டவனும்

கம்பவாரிதி இ. ஜெயராஜ்

**உ**லகு இறைவனின் படைப்பு.
அவ்வுலகின் இயக்கமே இயற்கையாம்.
இயற்கையுள் காணப்படும் ஒழுங்கே அறம் எனப்படும்.
அந்தரத்தில் இயங்கும் இவ்வுலகின் நிலைத்தல் தன்மை,
யாராலும் உறுதிப்படுத்த முடியாதவொன்று.
ஆயிரமாய் விரிந்த அண்டங்கள் நிறைந்த பால் வெளியில்,
அவ்வண்டங்களின் ஒழுங்கமைந்த இயக்கமே,
அவற்றின் நிலைத்தற் தன்மைக்குக் காரணம் ஆகின்றது.
அவ்வண்டங்கள் இயங்கும் ஒழுங்கு சற்றேனும் மாறுபடுமேல்...
அடுத்த வினாடியே அவை ஒன்றுடன் ஒன்று மோதி சிதைந்து அழிவுறும்.
ஒன்றுடன் ஒன்று மோதி சிதைவுறாத அவ்வொழுங்கு அமைந்தது எங்ஙனம்?.
அவ்வொழுங்கு காரியமாயின் அக் காரியத்தின் காரணமாக இருப்பது யாது?
அறிவற்ற சடப்பொருட்களாய் இருக்கும்,
இவ்வண்டங்களில் காணப்படும் அவ்வொழுங்கமைப்பு,
அவற்றினாலேயே விளைதல் சாத்தியம் அன்றாம்.
பின் அச்சடப்பொருட்களின் ஒழுங்குநிலைக்குக் காரணம் யாது?
அறிவுலகத்தை ஆட்டிப்படைக்கும் கேள்வி இது.
இக் கேள்விக்கு விடை காணப் புகுந்த மெய்ஞ்ஞானிகள்,
அவ்வொழுங்கின் காரணத்தை **''இறை''** என்றனர்.
விஞ்ஞானிகளோ அவ்வொழுங்கின் காரணத்தை **''இயற்கை''** என்றனர்.
மெய்ஞானிகள் கண்ட **''இறை''**
மனம், வாக்குக்கு அப்பாற்பட்டு அறிவாரய்ச்சியைக் கடந்து,
**''ஒத்துக்கொள்ளப்படும்''** ஒன்றாகவே அமைந்தது.
விஞ்ஞானிகள் கண்ட அவ் **''இயற்கையும்''**
அதேபோல் கேள்விகளுக்கும், விளக்கங்களுக்கும் அப்பாற்பட்டு,
சிந்தனை கடந்து **''ஒத்துக்கொள்ளப்படும்''** ஒன்றாகவே ஆயிற்று.
மொத்தத்தில்,
மெய்ஞ்ஞானிகளாலும், விஞ்ஞானிகளாலும்,
வேறு வேறு பெயரிட்டு அழைக்கப்பட்ட போதிலும்,
அவ்விருவர் பார்வையிலும்,
இயற்கை ஒழுங்கின் அடிப்படை அறிவு கடந்தே நின்றது.
**காரணம்** அறிவாராய்ச்சிக்கு உட்பட மறுத்தாலும்,
**காரியமாகி** காணப்படும் ஒழுங்கே,
இவ்வுலகின் நிலைத்தற் தன்மைக்கு அடிப்படையாம்.
அங்ஙனமாய், இவ்வுலகில் இயல்பாயமைந்து தொடரும் ஒழுங்கினையே,
ஒழுக்கம் என்றனர் நம் ஆன்றோர்.

◈ ◈ ◈

இவ்வண்ட இயக்கத்தில் பொருந்திய ஒழுக்கு,
இவ்வண்டத்திற் பொருந்தி இயங்கும்,
இவ்வுலகில் அமைந்த அத்தனை பொருட்களின் இயக்கத்திலும்...
இயல்பாய் அமைந்தது.
வெவ்வேறான இயல்புடைப் பொருட் தன்மையால்,
அவ்வவற்றிற்காம் ஒழுக்கும் வேறுபட்டன.

தனித்தனி வகுக்கப்பட்ட அவ்வொழுங்கே,
அவ்வப் பொருட்களுக்காம் ஒழுக்கமாம்.
அவ்வொழுக்கத்துக்கு உட்படும் வரை,
அப்பொருள் இவ்வண்டங்கள் நிலைக்குமாற்போல்
இயல்பாய் நிலைத்தலும்,
அவ்வொழுக்கம் மாறுபடும் போது,
அதன் காரணமாகவே அப் பொருள் சிதைவுற்று
அழிவடைவதும் கண்கூடு.

◈ ◈ ◈

இவ்வுலகப் பொருட்கள் அறிவுப்பொருள், அறிவில்பொருள்
என இருவகைப்படும்.
அறிவற்ற சடப் பொருட்கள், இயற்கை ஒழுங்கினை மீறக்
காரணமில்லை.
ஓரறிவிலிருந்து ஆறறிவு வரை விருத்தி பெற்ற உயிர்ப்
பொருட்களுள்,
ஐந்து அறிவு வரை பெற்ற ஜீவராசிகள்,
மனம் எனும் சூக்குமக் கருவி வளர்ச்சியுறாமையால்,
தாமாய்ச் சிந்தித்து இயங்கும் தன்மையை பெரும்பாலும்
பெறுவதில்லை,
ஆதலால் அவையும் அவ்வொழுங்கினை மீறுதல்
இல்லையாம்.
மனம் எனும் சூக்குமக்கருவியின் இயக்கத்தை
முழுமையாய்ப் பெற்று,
சிந்திக்கும் திறன் கொண்ட மனிதனே,
இயற்கையை அறிந்து ஒத்து ஒழுகும் தன்மையையும்,
மாறுபட்டு திரியும் இயல்பையும் பெறுகிறான்.

◈ ◈ ◈

சிந்தித்ததால் பெற்ற சீரிய தெளிவு ஒழுக்கமாக,
புலன் வயப்பட்ட ஈடுபாட்டால் அச்சிந்தனையில் ஏற்படும்
ஐயமும், திரிபும்,
ஒழுங்கின்மையானது.
எனவே,
ஒழுக்கம், ஒழுக்கவீனம் எனும் இவையிரண்டும்,
மனித வர்க்கத்துக்கேயுரிய இயல்புகளாயின.
இதனால்,
தம் இயல்பால் தாமே உயர்தலும், தாழ்தலும் மனித
வரலாறாயிற்று.
இவ் வரலாற்றை ஊன்றிக் கவனித்த நம் ஆன்றோர்கள்,
உயர்தல், தாழ்தல் ஆகியவற்றின் காரணம் ஆராய்ந்து,
உயர்வுக்குக் காரணமாகிய ஒழுக்கங்களையும்,
தாழ்வுக்குக் காரணமாகிய ஒழுக்கமீறல்களையும்,
தம் நுண்ணறிவால் கண்டு கொண்டனர்.
அவ்வொழுக்கங்களே மனித வாழ்வின் இயல்பு என
அறிந்து,
அதனையே வாழ்வியல் **அறமாக்கி** விதித்து,
அதனைக் கடைப்பிடிக்க வலியுறுத்தினர்.
ஒழுக்கமீறல்கள் இயல்பு நிலையின் மாறுபட்டு,
அழிவுக்குக் காரணமாதல் அறிந்து,
அவற்றை **மறம்** என வகுத்துக் கண்டித்தனர்.
மொத்தத்தில் அவ்வான்றோர்களால்.

விதித்தன செய்தலும்,
விலக்கியன ஒழித்தலுமே,
இன்று நாம் பேணும் அறங்களாம்.

◈ ◈ ◈

அவ் அறவொழுங்கிற்கு உட்பட்டே,
நம் வாழ்வு அமைதல் வேண்டும்.
அங்ஙனம் அமையின்,
இறை,
இறையால் ஆக்கப்பட்ட இயற்கை,
இயற்கையின் ஒழுங்காய் அமைந்த அறம்,
என்ற வரிசையின் மறுதலைப் பெறுபேறாய்,
அறவாழ்வால் இயற்கையுணர்வும்,
இயற்கையுணர்வால் இறையின்பமும் எய்தப்படும்.
இயற்கையைப் பகுத்துணர்ந்து உயரவல்ல மனிதர்க்கு,
அதியுயர்ப் பேறாய் அமைவது இறைநிலை எய்தும் தகுதியே.
அவ்விறையின்பம் எய்த அறவாழ்வே அடிப்படையாம்

◈ ◈ ◈

இறையைப் போலவே அறமும்,
முற்றும் அறிய முடியாதது.
கடைப்பிடிப்பார் அறிவுத் தகுதிக்கேற்ப,
அறம் பலவாய் விளக்கமுறும்.
அதனால் தர்மம், அறம், நீதி எனும் பல சொற்களால்,
அறம் எனும் ஒரு பொருள் குறிக்கப்பட்டது.
பொதுவாய் நோக்க,
தர்மம், அறம், நீதி எனும் சொற்கள்
ஒரு பொருளவாய் கருதப்படினும்
சிறப்பு நோக்கில் அவற்றின் அர்த்தங்கள் வேறு வேறாம்.
தர்மம் என்பது,
இயற்கையின் நுண்மைகளை உட்கொண்ட,
உலகியல் கடந்த உண்மைநெறி.
நீதி என்பது,
அவ் உலகியல் கடந்த உண்மைநெறியில்,
அனைவரையும் நிறுத்தற்பொருட்டு,
அனைவர்க்குமாய் நூலால் வகுக்கப்பட்ட உலகியற் சட்டம்.
தமிழர் நூல் வழக்கில்,
அறம் என்ற சொல் சந்தர்ப்பத்திற்கேற்ப
தர்மம், நீதி எனும் இரண்டினையும் குறிக்கப் பயன்படும்.

◈ ◈ ◈

தர்மம் உலக ஜீவராசிகள் அனைத்திற்குமானது.
நீதி மானுடருக்கு சிறப்புரித்தானது.
தர்மம் கடல்.
நீதி ஆறு.
இவ்வுவமையே,
தர்மம், நீதி என்பவற்றின் வேறுபாட்டிற்கான விளக்கமாம்.
ஆறு ஓடி கடலுள் கலக்கும்.
அதுபோலவே நீதி உயர்ந்து தர்மத்துள் சங்கமமாகும்.
ஆறு கடலுள் அடங்கும் கடலோ ஆற்றுள் அடங்கா
அங்ஙனமே,
நீதி தர்மத்துள் அடங்கும் தர்மமோ நீதியினுள் அடங்கா.

தர்மம் முதலறம்,
நீதி சார்பறம்,
சார்பறம் உலகியலின்கண் மானுடத்தை செம்மையுற நிலைநிறுத்தி,
இம்மை இன்பம் பயப்பிக்கும்.
முதலறம் உயிரை செம்மைப்படுத்தி,
மறுமைப்பேறு நல்குவதோடு வீட்டுநெறிக்கும் காரணமாகும்.
சார்பறத்தூடு சென்று முதலறத்தைத் தொடின்,
அம்முதலறமாகிய தர்மம் இறையின்பம் விளைவிக்குமாம்.

◈ ◈ ◈

அறமே பக்தியின் முதல் நிலை எனும் இக்கருத்து
தமிழர்தம் பண்பாட்டில் பதிவானது.
தமிழர்தம் வாழ்வியலறமான வள்ளுவம்,
இக்கருத்தை தெளிவுற வலியுறுத்தும்.

**''ஒழுக்கத்து நீத்தார் பெருமை**
**விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு''**

எனும் நீத்தார் பெருமை அதிகாரக் குறளுக்கு,
உரைசெய்யும் பரிமேலழகர்,
இக்கருத்தைத் தெளிவு பட விளக்கம் செய்கிறார்.
''ஒழுக்கத்து நீத்தார்'' எனும் தொடரினை,
ஒழுக்கத்தின்கண் நின்று நீத்தார் என விரித்து,
ஒழுக்கத்தின்கண் நின்று நீத்தலாவது யாதென,
நுட்பமாய் எடுத்துரைக்கின்றார்.
ஒழுக்கங்களை வழுவாது ஒழுக, அறம் வளரும்.
அறம் வளர பாவம் தேயும்.
பாவம் தேய அறியாமை நீங்கும்.
அறியாமை நீங்க,
நித்த அநித்தங்களின் வேறுபாட்டு உணர்வும்,
அழியும் இயல்புடைய இம்மை மறுமை இன்பங்களில் வெறுப்பும்,
பிறவித் துன்பங்களும் தோன்றும்.
அவை தோன்ற,
வீட்டின்மேல் ஆசை உண்டாகும்.
அஃது உண்டாக,
பிறவிக்குக் காரணமாகிய பயனில் முயற்சிகள் எல்லாம் நீங்கி,
வீட்டுக்குக் காரணமாகிய யோக முயற்சி உண்டாகும்.
அஃது உண்டாக மெய்யுணர்வு பிறந்து,
புறப்பற்றாகிய எனது என்பதும்,
அகப்பற்றாகிய நான் என்பதும் விடும்.
அவ்விரண்டும் நீங்க வீடு எய்தப்படும்.
வீடே இறைநிலையாம்.
இதுவே ஒழுக்கத்தின்கண் நின்று நீத்தல் என்பதாகிய,
அறத்தை முதலாய்க் கொண்டு வீடடையும் வழியாம்.

◈ ◈ ◈

குறித்த ஓர் இடத்தைச்சார வாகனம் ஒன்றினுள் ஏறுபவன்,
அவ்வாகனத்துள் ஏறியபின்,
தான் செல்ல நினைத்த இடம்நோக்கி நடக்கத்தேவையில்லை.

அவன் ஏறிய வாகனமே அவன் நினைத்த இடத்திற்கு அவனைச் சேர்ப்பிக்கும்.
அதுபோல அறநெறியில் புகுந்தார் முக்திநெறி நோக்கித் தனித்தியங்கத் தேவையில்லை.
அவ்வறநெறியே அவர்தம்மைத் முக்திநெறியிற் சேர்ப்பிக்கும்.
மேற்குறளால் இக்கருத்தே வலியுறுத்தப்படுகிறது.

◈ ◈ ◈

இவ்வுண்மை உணர,
அறமே இயற்கையின் முதற்கூறு என்பதும்,
இயற்கையே இறையின் வடிவு என்பதும்,
அறத்தின் வழிநிற்க,
இயற்கையுணர்வெய்தி இறைநிலை அடையலாமென்பதும் தெளிவாகும்.
இவ்வுண்மை உணரப்படின்,
அறத்திற்கும் ஆண்டவனுக்குமான தொடர்பு தெளிவாகும்.
அறமே பக்திவாழ்வின் முதற்படி என்பதும் அறியப்படும்.

◈ ◈ ◈

உ

# ‘குறிக்கோள்’

கலாபூஷணம் வித்துவான்
திருமதி.வசந்தா வைத்தியநாதன்

மனித வாழ்க்கையை இறைவன் மிக மிக அற்புதமாகப் படைத்து இருக்கின்றான். ‘அரிது அரிது மானிடராதல் அரிது’ என்பது ஔவையின் வாக்கு ‘மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே’ என்பது ஆளுடை அரசாம் அப்பர் பெருமானின் திருவாக்கு.

முற்பிறப்பிலே செய்த புண்ணியத்தின் ஒரு துளிதான் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தற்குக் காரணம் கிடைத்திருக்கும் இந்த வாழ்க்கைதான் நிலையானதா? இல்லையே.........உறங்கிக் கழிந்த நாட்களும் நோயிலே வீணான நாட்களும், இளமை, மூப்பு இவை அரித்த நாட்களும் போக எஞ்சிய நாட்கள் எத்தனை. கிடைத்தவற்றையேனும் பயனுடைய தாக்குகின்றோமா?

‘‘பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்த நாளு மெலிவொடு மூப்புவந்து
கோலனாய்க் கழிந்தநாளுங் குறிக்கோளி லாதுகெட்டேன்
சேலுலாம் பழனவேலித் திருக்கொண்டீச் சரதிதுளானே’’

பசிதீர உண்பதும் உறங்குவதும் மட்டுமா வாழ்க்கை? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். அதனை விலங்குகளும் செய்கின்றனவே. விலங்குகள் வாழும் காலத்திலும் மனித குலத்திற்கு உதவுகின்றன. இறந்தும் உதவுகின்றன. ஆனால் மனிதன் வாழ்ந்தால்த்தான் பயன் இறந்தால் மண்ணுக்கும், தீக்கும் இரையாவதைத் தவிர வேறு பயன் உண்டா?

வளமான ஆற்றிற்கு வழியான கால்வாய்கள் மூலம் நீர் கிடைப்பதைப் போன்று, இறைவன் நம்மைப் படைத்துப் பொறி, புலன்கள் மூலம் உணர்வையும், அறிவையும் வரையாது வழங்கியுள்ளான். இதனை உரியமுறையில் பயன்படுத்துவோர் எத்தனைபேர்? பலருக்கு அதனைப் பயன்படுத்தவே தெரிவதில்லை என்பதுதான் உண்மை. அழிகின்ற செல்வத்தைச் சேர்ப்பதிலே உள்ள நாட்டம் அழியாத இறையருளைத் தேடுவதில் இல்லை. விழி இருந்தும் குருடர்களாய், வாய் இருந்தும் ஊமர்களாய், செவி இருந்தும் செவிடர்களாய் வாழ்கின்றோம். மாடு, மனை, மனைவி, மக்கள் என அவர்களுக்காக இரவைப் பகலாக்கி உழைக்கின்றோம். உயிரைப் பணயம் வைத்துப் பாடுபடுகின்றோம். விழலுக்கு நீர் இறைத்து வீணிலே மாய்கின்றோம். இவைகள் நிலைத்த இன்பத்தை நமக்குத் தருமா? ஒரு போதும் இல்லை. தற்காலிக இளைப்பாறுதல் தான். ஆனால் இறைவனின் திருவடிதரும் இன்பம், நினைத்தொறும், காண்தொறும். பேசுந்தொறும் பேரின்பத்தை நல்கும் பெற்றிமை வாய்ந்தது.


'மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிளவேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே'

அப்பர் பெருமானை பல்லவ மன்னன் நீற்றறையில் இட்டபொழுது நீற்றறை குளிர்ந்த பொய்கையாக மாறியது என்று எண்ணும் பொழுது அந்தப் பெரியோர்களிடம் இருந்த மனத்திட்பம், வைராக்கியம், உள்ள உறைப்பு நம்மிடம் இல்லை. காரணம் அவர்கள் உலகத்தை நேசித்தனர். திருவீழிமிழலையில் மக்கள் பஞ்சத்தால் வாடிய பொழுது அவர்களது பசிப்பிணியை நீக்க மிழலைப் பெருமானிடம் படிக்காசு பெற்றுப் பஞ்சத்தை நீக்கினர். சம்பந்தப்பெருமான் அரவு தீண்டிய வணிகனின் உயிரை இறையருளால் மீட்டார். அப்பூதி அடிகளின் மகனை அப்பரடிகள் உயிர்ப்பித்தார். வெங்கரா உண்ட பிள்ளையை சுந்தரர் மீட்டார். எலும்பைப் பெண்ணாக்கியதும், முயலகன் நோயிலிருந்து கொல்லி மழவனின் பெண்ணைக் காத்ததும், மறைக்கதவம் திறந்து மக்களின் வழிபாட்டிற்கு வழிவகுத்ததும், சமண இருள் கப்பியிருந்த பாண்டி நாட்டைச் சைவ நாடாக்கியதும், சைவச் சான்றோர்கள் தங்களின் நலங்கருதிச் செய்யவில்லை. நாட்டு மக்கள் துன்பமற்று வளமுடன் வாழ வேண்டும் என்ற பொது நலநோக்கமே அவ்வற்புதங்கள் நிகழ்த்தக் காரணமாகியது. தாங்கள் மட்டும் முக்தி பெற்றால் போதும் என்று அவர்கள் கருதியிருந்தால் இருந்த இடத்தில் இருந்தே வழிபட்டு அம்முக்திப் பாதையை அணுகியிருக்க முடியும். ஆனால் அவர்கள் தன்னலம் கருதவில்லை. பொதுமக்களை சந்தித்து அவர்களது குறைகளைத் தீர்க்க வேண்டும் என்பதனால் ஊர் ஊராக நாடு நாடாக நடந்தே சென்றனர். பசி, தாகம் எதனையும் பொருட்படுத்தவில்லை. அப்பெரு மக்களுக்காக இறைவனே, கட்டுச் சோறும், பொதி சோறும் சுமந்து அவர்களது பசியை ஆற்றினான். திருநாவுக்கரசர் கயிலைக் காட்சியைக் காண வேண்டும் என்று நடந்தும், தவழ்ந்தும், தமது மார்புத் தசைகள் சிதைவுபட, எலும்பும், நரம்பும் தேய, குருதி கொப்பளிக்க இமயவரையில் ஏறி கயிலைக் காட்சியைக் காண முயலாவிட்டால் இன்று அனைவரும் எளிதாகச் சென்று வணங்க வாய்ப்பாக இருக்கும் திருவையாறு 'தென் கயிலை' என்ற பெருமையைப் பெற்றிருக்க முடியுமா?

சந்தனம் தன்னை அழித்துக் கொண்டு மணம் நல்குவதைப் போல, உப்பு தன்னைக் கரைத்துக் கொண்டு சுவை நல்குவதைப் போல, மெழுகுவர்த்தி தன்னை உருக்கிக்கொண்டு ஒளி கொடுப்பதைப் போல, வாழை தன்னை அழித்துக் கொண்டு தன் வம்சத்தை வளர்ப்பது போல சான்றோர்கள் தங்களை சமூக நலனில் கரைத்துக் கொண்டு அதனை வாழவைக்கிறார்கள். அந்த எண்ணம், முனைப்பு மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவரிடத்தும் வேண்டும். தன்னைச் சார்ந்த சக மனிதர்களின் நலன் காக்க முனைய வேண்டும். அவர்களின் சுக, துக்கங்களில் பங்கு கொண்டு ஆறுதல் கூற வேண்டும்.உதவும் கரமாக ஒவ்வொருவரதும் வாழ்க்கை அமைய வேண்டும். அப்படியல்லாது ஏதோ இருந்தோம் ......இறந்தோம் என்று பழக்கணக்கு எழுதுவதல்ல வாழ்க்கை. வாழும் வாழ்க்கை நமக்கு ஒரு முறை தான் கிடைக்கும். அதனைப் பயனுடையதாக, பிறர்க்குப் பயன்படும் முறையில் சிறந்த குறிக்கோளை முன்னிறுத்தி வாழ முயல்வோமாக! இறைவன் திருவருள் முன்னின்று காக்கும்.

**நலமே தழைக!**

# நம்பிக்கை தான் வாழ்க்கை



எஸ்.என்.உதயநாயகன் B.Com
தலைவர்: ஸ்ரீ சத்ய சாயி பாபா (கொழும்பு) மத்திய நிலையம்

அன்பு (பக்தி) இல்லாத வாழ்க்கையும், நம்பிக்கையில்லாத வாழ்க்கையும் சோபிப்பதில்லை. நமது ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் நம்பிக்கையில் தான் தங்கியுள்ளது. நம்பிக்கை திடமாக இருந்தால், வாழ்க்கை வளமாக அமையும்.அதுபோல் அன்பு கலந்த பக்தியும் மனித மேம்பாட்டை உயர்த்தும். அது அனைத்து மாயையையும் மறைத்து பேரானந்தத்தை தோற்றுவிக்கும்.

'கணவன் - மனைவி', 'குரு சிஷ்யன்' போன்ற அன்பான உறவுகள் நம்பிக்கையின் உறவுகள். 'கணவன் - மனைவி' உறவு குடும்பத்தை வளர்க்கிறது. 'குரு-சிஷ்யனின்' உறவு அறிவை வளர்க்கிறது. அதுபோன்று தெய்வ நம்பிக்கையானது நம் வாழ்வைத் தூய்மைப்படுத்தி மனிதனை மனிதனாக வாழவைக்கின்றது.

முதலில் நாம் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும். இந்த தன்னம்பிக்கை மூலம் தான் அன்பைப் பெறமுடியும். 'இது என் கணவர்' 'இது என் குழந்தை' என்ற உறவு முறையில், நம்பிக்கையானது அன்பாக (பக்தி) தோன்றுகின்றது. முழு நம்பிக்கையில்லா விட்டால் அன்பு ஏற்படாது.

சாயி பக்தர்களின், சாயி நம்பிக்கையானது சாயிமார்க்கத்தை மேன்மைப்படுத்துகின்றது. இங்கு இன, மத, மொழி, ஏற்றத் தாழ்வு என்பது கிடையாது 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கோட்பாட்டின்படி 'அனைத்திலும் சாயி' என்ற ஒத்த கருத்துடன் உலகிலுள்ள சாயி பக்தர்கள் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மீது முழு நம்பிக்கை வைத்து வழிபட்டு வருகின்றார்கள்.

தெய்வத்தின் மீது நம்பிக்கை வைத்து, தெய்வத்தின் அருளைப் பெற்றுக் கொள்வதை பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா கீழ்க் கண்டவாறு கூறுகின்றார்.

"வங்கியொன்றில் பணத்தை வைப்புத் செய்யும்போது இது என் பணம் என்று வைப்பிலிடுவீர்கள். ஆனால் உங்கள் பணத்தை மீட்புச் செய்யும் போது உடனே அதனை பெறமுடியாது. இதற்கு ஒரு வழிமுறை உண்டு. அந்த வழிமுறையை ஒழுங்காக, கவனமாக பின்பற்றினால் தான் பணத்தை பெறமுடியும். காசோலை போன்ற ஒரு காகிதத்தில் குறிப்பிட்ட பணத்தை எழுதி கையெழுத்து இட்டு வங்கி முகவரிடம் கொடுத்தால் தான் உடன் பணம் கிடைக்கின்றது. இங்கு 'காசோலை' என்பது 'மாயை', 'கையெழுத்து' என்பது 'பிரேமை', (அன்பு - பக்தி) - 'வங்கி முகவர் என்பது 'தெய்வம்'

'அன்பு' என்கின்ற 'பிரேமை' கையெழுத்து இடும்போது, 'காசோலை' என்கின்ற 'மாயை' அகன்று 'பணம்' என்கின்ற பேரானந்தம் 'வங்கி முகவர்' (தெய்வம்) மூலம் கிடைக்கின்றது. இன்று நன்கு படித்தவர்கள் கூட காசோலையை எப்படி? எப்போது? எங்ஙனம்? எவ்வாறு? எழுதுவது என்று தெரிந்து கொள்வதில்லை" என்று அழகாக கூறியுள்ளார்.

ஒவ்வொரு மனிதனிடத்திலும் தெய்வத்துவம் உண்டு. அன்பினை இதயத்தில் நிலைநிறுத்திக் கொண்டால், நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் வெற்றியாக அமையும். ஒருவருடன் ஒருவர் நம்பிக்கை வைப்பதனால் அங்கு அன்பு பிறக்கின்றது. இதனை தெய்வத்திடம் செலுத்தும்போது, அந்த அன்பு பக்தியாகவும், ஆனந்தமாகவும் மாறுகின்றது.

இராமாயண கதாபாத்திரத்தில் இராமன் - இலட்சுமணனின் அன்பு, பாசம் புகழை காட்டியது, வாலி - சுக்கீரவனின் பகை கசப்பை ஏற்படுத்தியது. மகாபாரதக்கதையில் பாண்டவர் ஐவரின் ஒற்றுமையில் அன்பு வளர்ந்தது, 'இராவணன் - விபீஷணனின்' வேற்றுமை அன்பைக் கெடுத்தது. அன்பு இல்லாத இடத்தில் பக்தியும் இல்லை. புகழும் இல்லை.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அன்பை உணர்த்த சாயி பஜனைகள், சாயி சேவைகள் என்பவற்றை ஏற்படுத்தி, சாயி பக்தர்களிடம் அன்பையும், பக்தியையும் உணர்த்துகின்றார். சாயி மார்க்கத்திலே ஒரு அமெரிக்கன், ஒரு இந்தியனைப் பார்த்து 'சாயிராம்' என்று கூறும்போதும், ஒரு சீனன், ஒரு இலங்கையனைப் பார்த்து 'சாயிராம்' என்று அழைக்கும்போதும் இங்கு அன்பு பிறக்கின்றது.

அன்புடன் முழு நம்பிக்கை வைத்து தெய்வ வழிபாட்டை செய்யும் போது, தெய்வம் நம்முடன் பேசும். இதைத்தான் ஏனைய மதங்களும் கூறுகின்றன.

துரியோதனனின் மகாசபையில் திரௌபதி மானபங்கம் செய்யப்படும்போது, அங்கு அவள் முழு நம்பிக்கையுடன், மானத்தைவிட்டு, அவமானம் தாங்காமல் தன் இரண்டு கைகளையும் உயர்த்தியபோதுதான் பகவான் தோன்றினார். பக்தபிரகலாதன் தன் முழு நம்பிக்கையுடன் தூணை காட்டியபோதுதான் பகவான் வெளிப்பட்டார். இவற்றை எமது இதிகாசங்களும், புராணங்களும் எடுத்துக் காட்டுகின்றன.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா நம்பிக்கையைப் பற்றிக் கூறுகையில், ''இன்று நம்பிக்கையே காணப்படுவதில்லை. தவறான வழிகளிலும், நடத்தைகளிலும் நம்பிக்கை இருக்கிறது. தேவையற்றவற்றின் மேல் எல்லாம் நமக்கு நம்பிக்கை ஏற்படுகின்றது. உண்மையில் தெய்வத்தின் மீது நிச்சயமாக, ஸ்திரமாக இருப்பதில்லை. கூடுவதும் குறைவதுமான சலனத்துடன் தான் இருக்கிறது. எப்போதும் சந்தேகத்துடன் அந்த நம்பிக்கை அமைகின்றது. ஆனால் சந்தேகத்துக்கு மட்டும் இடமளிக்கக்கூடாது. பரிபூரண நம்பிக்கை இருக்க வேண்டும். அந்த நிலையை அடையவேண்டும்'' என்று விளக்கம் கூறியுள்ளார்.

ஒரு தடவை பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவிடம் ஒரு வெளிநாட்டவர், ''வர வர நமது கல்விமுறையானது செய்தியறிவின் சாதனையாகவுள்ளது. ஆன்மீகத்தைக் கல்வியில் சேர்க்க முடியாதா?'' என வினவினார். அதற்கு பகவான் ''கல்வியில் ஆன்மீகம் அவசியம், ஆன்மீகம் என்பது நம்பிக்கையை குறிப்பது. ஒவ்வொருவரிடமும் நமக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். நம்பிக்கை இல்லாது எதையும் சாதிக்க இயலாது என்றார்.

Where there is Confidence, there is Love நம்பிக்கை எங்கு இருக்கிறதோ அங்கே அன்பு நிலவும், Where there is Love, there is Peace எங்கு அன்பு இருக்கிறதோ அங்கே அமைதி இருக்கிறது. Where there is Peace, there is Truth எங்கே அமைதி இருக்கிறதோ அங்கே சத்யம் இருக்கிறது. Where there is Truth, there is Bliss எங்கே சத்யம் இருக்கிறதோ அங்கே ஆனந்தம் இருக்கிறது. Where there is Bliss, there is God எங்கே ஆனந்தம் இருக்கிறதோ அங்கே இறைவன் இருக்கின்றான். என்று பதிலளித்தார்.

நம்பிக்கை வைத்தால் அன்பு கிடைக்கும். நம்பிக்கையுடன் வாழ்ந்தால், அந்த வாழ்வில் சுபீட்சம் கிட்டும். பகவான் கூறியது போல் நம்பிக்கையுடன் இருந்தால், அந்த நம்பிக்கை அன்பாக, அமைதியாக, ஆனந்தமாக, சத்தியமாக மாறி இறுதியில் தெய்வத்தை உணரமுடியும்.

# கும்பாபிஷேகமும் கிரியைகளும்

பிரதிஷ்டாகிரியாபூஷணம்-கிரியா கலாபமணி
**ஸ்ரீவஸ்ரீவைத்தியநாத-பாலசுந்தரசிவாச்சாரியார்**
(பிரதமகுரு)
ஸ்ரீசிவகாமசௌந்தரி சமேத-சொர்ணசபேஸ்வரர்
(பொன்னம்பலவானேஸ்வரம்) தேவஸ்தானம்

அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபித்து பரந்து விளங்கும் இறைவனை உருவத்திருமேனியில் தியானித்து ஆவாகித்து வழிபட வேண்டிய முறைகளை ஆகம நூல்கள் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறுகின்றது. அந்த உருவத் திருமேனியை வைத்து வழிபட வேண்டிய தலம் - அதாவது (ஆலயம்) எத்தகையதாய் அமைய வேண்டும் என்பதை ஆகம நூல்கள் மிக சிறப்பாக கூறியிருக்கின்றது. இறைவன் உருவத்திருமேனியில் நின்று அடியார்களுக்கு அருள்புரியும் இடம் ஆலயமாகும். ஆ-(ஆன்மாக்கள்) - லயம் (ஒடுங்குதல்) என்று பொருள்படும் அதாவது ஆன்மாக்கள் இறைவன் சந்நிதியை அடைந்து, பக்தியுடன் ஒடுங்கும் தன்மையைப் பெறுவதால் ஆலயம் என்று பெயர் வழங்கப் பெற்றது.

இவ்வாறாக ஆகமவிதிப்படி ஆலயத்தை அமைத்து அவரவர் விரும்பும் உருவத்திருமேனியை ஸ்தாபித்து மஹாகும்பாபிஷேகம் செய்து வழிபட்டு வருவதை நாம் காண்கின்றோம். அனாதிமலமுத்தராகிய சிவபெருமான் அநாதிமல பக்தர்களாகிய ஆன்மாக்கள் மீது கொண்ட கருணையினால் அனுக்கிரகம் செய்ய சர்வதேவதா ஸ்வரூபமாகிய கும்பத்தில் பூசித்து அபிஷேகம் செய்தலே கும்பாபிஷேகமாகும்.

இதனை பிரதிஷ்டை,திருக்குட நன்னீராட்டு, குடமுழுக்கு என்று கூறுவார்கள் கும்பாபிஷேகமானது 12 வருஷங்களுக்கு ஒரு தடவையாவது நடைபெற வேண்டுமென்பது விதியாகும். இவ்வாறு செய்யப்படும் பிரதிஷ்டா மஹாகும் பாபிஷேகத்தை 'அநாவர்த்தனம்' 'ஆவர்த்தனம்','புனராவர்த்தனம்' 'அந்தரீகம்' என நான்கு வகையாக சிவாகமங்கள் எடுத்து கூறுகின்றன.

1. அநாவர்த்தனப் பிரதிஷ்டை என்பது ஆலயம் இல்லாத இடத்தில் புதிதாக ஆகமமுறைப்படி ஆலயம் அமைத்து அங்கு புதிதாக ஒரு மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வதேயாகும்.

2. ஆவர்த்தனப் பிரதிஷ்டை என்பது முன்பு இருந்த ஆலயம் முற்றாய் அழிந்துவிட்டால் அவ்விடத்தில் மறுபடியும் ஓர் ஆலயத்தை ஆகம விதிப்படி அமைத்து கும்பாபிஷேகம் செய்வதாகும்.

3. புனராவர்த்தனப் பிரதிஷ்டை என்பது நித்திய நைமித்திய கிரியைகள் முறைப்படி நடைபெற்றுவரும் ஆலயங்களில் விமானம்,கோபுரம், மண்டபம், பிரகாரம் , ஆலய விக்ரகங்கள், வர்ணம் தீட்டுதல் ஆகியவற்றில் எவையேனும் வெடித்தோ , பிளந்தோ அல்லது விக்ரகங்களில் அங்கக் குறைவு , வர்ணப் பூச்சு மங்கியிருத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் பாலஸ்தாபனம் செய்து பழுதடைந்த கட்டடங்களை முன்போல் அழகாகவும் பலம் வாய்ந்ததாகவும் திடமானதாகவும் ஆகமவிதிப்படி அமைத்து வர்ணம் பூசி புனருத்தாரணம் செய்வதே புனரா வர்த்தன பிரதிஷ்டை என நூல்கள் கூறுகின்றன.

புனராவர்த்தாரனப் பிரதிஷ்டை நிகழ வேண்டுமாயின் பாலஸ்தாபனம் செய்யாது ஜீர்ணோத்தாரணம் செய்வதில்லை. ஜீர்ணோத்தாரணமென்பது பழுதடைந்த வற்றைத் திருத்தி அமைத்தலாகும். பாலஸ்தாபனம் என்பது நித்திய நைமித்திய கிரியைகள் நடைபெற்று வரும் ஓர் ஆலயத்திலே திருத்தவேலைகள் செய்யப்பட வேண்டிய ஓர் தேவை ஏற்பட்டால் அல்லது குறிப்பிட்ட பன்னிரண்டு வருட கால கட்டம் கடந்து விட்டால் அங்கு புனராவர்த்தன பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும். அதற்காக அங்குள்ள மூலமூர்த்தியில் உள்ள தெய்வ சாந்நியத்தை கலா கர்ஷனம் முதலிய கிரியைகளின் மூலம் கும்பத்திலும் அல்லது சித்திரத்திலும் ஆவாகனம் செய்து பின்னர் மூர்த்தியை ஆலயத்தின் வேறொரு இடத்தில் புதிதாக ஆகமமுறைப்படி அமைக்கப்பெற்ற பாலாலயத்தில் தற்காலிகமாக ஓர் குறிப்பிட்ட கால எல்லைக்குமட்டும் ஸ்தாபித்து அங்கு அபிஷேகம் செய்து தெய்வ சாந்நியத்தை மீண்டும் ஆவாகனம் செய்து வைப்பதையே பாலஸ்தாபன கும்பாபிஷேகம் என்பார்கள்.

4. அந்தரீகபிரதிஷ்டை என்பது ஆலயத்திலுள் மரணம் நிகழுதல் , கள்வர் முதலிய ஆசார குறைவுடையோர் நுழைதல் , வர்ணாசிரமதர்மம் தவறிப் பிரவேசம் நிகழ்தல் போன்ற காரணத்தால் செய்யப்பட வேண்டிய கும்பாபிஷேகமாகும். இந் நான்கு வகையான பிரதிஷ்டைகளில் அந்தரீக பிரதிஷ்டைக்கு சுப முகூர்த்தநிர்ணயம் கிடையாது என்றும் இப்பிரதிஷ்டைக்குரிய கிரியைகளை எவ்வெச்சமயங்களில் எவ்வெவ்வாறு பிராயச்சித்தவடிவாக நடைபெறவேண்டுமோ அவற்றை அவ்வவ்வாறு அனுசரித்து கிரியைகளைச் செய்ய வேண்டும்.

ஓர்பூரணமான மஹாகும்பாபிஷேகம் நிகழ்வதற்குரிய கிரியைகளை பற்றியும் அவற்றின் தன்மைகள் பற்றியும் நோக்குவோம். இவற்றுள்

1. முகூர்த்த நிர்ணயம்
2. ஆசார்யவரணம்
3. அனுக்ஞை
4. திரவ்யசுத்தி
5. திரவ்யவிபாகம்
6. கணபதிஹோமம்
7. நவக்ரகஹோமம்
8. ரஷோக்னஹோமம்
9. திசாஹோமம்
10. கிராமசாந்தி
11. பிரவேசபலி
12. வாஸ்துசாந்தி
13. யந்திரபூஜை
14. கோபூஜை
15. ஜலாதிவாசம்
16. தானியாதிவாசம்
17. நயனோன்மீலனம்
18. கிராமபிரதஷனம்
19. சயனாரோகனம்
20. மிருத்சங்கிரணம்
21. அங்குரார்ப்பணம்
22. ஆசார்யரஷாபந்தனம்

23. பிரசன்னாபிஷேகம்
24. பிரசன்ன பூஜை
25. கடஸ்தாபனம்
26. கலாகர்ஷணம்
27. ஷணயாத்திராஹோமம்
28. கும்பம்யாகசாலபிரவேசம்
29. யாகபூஜைஹோமம்
30. தூபிஸ்தாபனம்
31. தீபஸ்தாபனம்
32. யந்திரஸ்தாபனம்
33. பிம்பஸ்தாபனம்
34. அஷ்டபந்தனம்
35. தைலாப்யங்கம்
36. பிம்பசுத்தி
37. ஸ்பர்ஷாகுதி
38. மஹாபூர்ணாகுதி
39. யாத்திராதானம் கிரகபிரீதி
40. கும்பஉத்தாபனம்
41. வீதிபிரதக்ஷணம்
42. கும்பாபிஷேகம்
43. தசதர்சனம்
44. சிவாச்சார்ய உற்சவம்
45. ஆசீர்வாதம்
46. எஜான் உற்சவம்
47. மஹாபிஷேகம்
48. மண்டலாபிஷேகம்
49. திருக்கல்யாணம்

என்பன கும்பாபிஷேகத்தின் போது நிகழும் முக்கிய கிரியைகள் ஆகும். ஜலாதிவாசம், தான்யாதிவாசம், நயனோத்மீலனம், கிராமபிரதஷணம், சயனாரோகனம், நாமகரணம் முதலிய கிரியைகள் புதிய மூர்த்தி பிரதிஷ்டை செய்யும் போது மட்டுமே நடைபெறும் ஏற்கனவே பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்திகளுக்கு இக்கிரியை செய்வதில்லை. இக்கிரியைகள் அநாவர்த்தன பிரதிஷ்டையின் போது முக்கியமாக நடைபெறும்.

# பேரின்பத்திற்கு வழி

*Dr.A.Gangadaran,*
*Attorney-at-Law*
*Justice of the Peace,*
*(All Island) Sri Lanka*

**வே**தத்தில் உள்ள ஒரு கதையை இன்று உங்களுக்குச் சொல்கிறேன். இந்துக்களின் புனித சாஸ்திரங்கள் வேதங்கள், இலக்கியக் கருவூலம் அது. அதன் இறுதிப் பகுதியே வேதாந்தம் அதாவது வேதங்களின் முடிவு. இந்தப் பகுதி வேதங்களின் கொள்கைகளை விளக்க முயல்கிறது. முக்கியமாக இது நமது இப்போதைய பொருளான தத்துவப் பகுதியை ஆராய்கிறது. இது மிகப் பழைய சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளது. இது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

ஒருவன் ஒரு பெரிய யாகம் செய்ய விரும்பினான். இந்து மதத்தில் யாகத்திற்கு முக்கியத்துவம் அதிகம். யாகங்களில் பல வகை உண்டு. யாகக் குண்டங்களை அமைத்து அக்கினியில் பல பொருட்களைச் சமர்ப்பிப்பார்கள். பல்வேறு மந்திரங்களை ஓதுவார்கள். யாகத்தின் முடிவில் அந்தணர்களுக்கும் ஏழைகளுக்கும் தானம் அளிப்பார்கள். ஒவ்வொரு யாகத்திற்கும் ஒவ்வொரு வகையான தானம் உண்டு.

குறிப்பிட்ட ஒரு யாகத்தின் முடிவில், யாகம் செய்பவன் தன் சொத்து முழுவதையும் தானம் செய்துவிட வேண்டும். யாகம் செய்ய விரும்பிய இந்த மனிதன், பெரிய பணக்காரன், ஆனால் கருமி, இருப்பினும் மிகக் கடினமான இந்த யாகத்தைச் செய்து பெரும் புகழை அடைய வேண்டும் என்று விரும்பினான். இந்த யாகத்தை செய்து முடித்த அவன், தன் சொத்து எல்லாவற்றையும் தானம் செய்வதற்குப் பதிலாக, குருடும், நொண்டியும், கிழடுமான, இனிமேல் பாலே கொடுக்க இயலாத பசுக்களாகப் பார்த்துத் தான் தானம் செய்தான்.

அவனுக்கு நசிகேதன் என்று ஒரு மகன் இருந்தான். அவன் சிறுவன், அறிவு நிறைந்தவன். தன் தந்தையின் இந்த தானங்களை கண்ட அவன், அதன் விளைவாக அவருக்கு நேரக்கூடிய பழிவாங்களைப்பற்றிச் சிந்தித்து, தன்னையே தானமாக்கிக் கொண்டு இதற்குப் பரிகாரம் தேட எண்ணினான். எனவே தன் தந்தையிடம் சென்று என்னை யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள்? என்று கேட்டான். அவர் எதுவும் சொல்லவில்லை அவன் விடாமல் இரண்டாம் முறையாக, பின்னர் மூன்றாவதாக இதே கேள்விகளைக் கேட்டான். இந்த நச்சரிப்பைப் பொறுக்க முடியாத தந்தை, ''உன்னை எமனுக்குக் கொடுக்கிறேன்'' என்று கூறினான்.

அந்த சிறுவன் நேராக எமலோகத்திற்குப் போய்விட்டான். அப்போது எமன் அங்கு இல்லை. எமன் வரும்வரையில் அவன் அங்கேயே காத்திருந்தான். மூன்று நாட்களுக்குப் பிறகு வீடு திரும்பிய எமதர்மன் நசிகேதனைப் பார்த்து ''ஓ பிராமணா! நீ என் விருந்தாளி, மூன்று நாட்களாக என் வீட்டில் பட்டினியாக இருந்திருக்கிறாய். நான் உன்னை வணங்குகிறேன். உன்னைப் பட்டினி போட்டதற்குப் பிரதியாக நீ கேட்கும் மூன்று வரங்களை நான் கொடுக்கிறேன். என்றான்.

என் தந்தைக்கு என் மேல் உள்ள கோபம் தணிய வேண்டும் என்று முதல் வரம் கேட்டான் சிறுவன். பிறகு ஏதோ ஒரு யாகத்தைப்பற்றித் தனக்குத் தெரிய வேண்டும் என்று இரண்டாவது வரம் கேட்டான்.

பின்னர் வருகிறது மூன்றாவது வரம் ஒருவன் இறந்தால் அவனுக்கு என்ன நேர்கிறது? அவன் அழிந்துவிடுவதாகச் சிலரும் அவன் அழிவதே இல்லை என்று சிலரும் கூறுகின்றனர். உண்மை என்ன? இதுவே நான் கேட்கும் மூன்றாவது வரம் என்று கேட்டான்.

எமன் கூறினான் முற்காலத்தில் தேவர்கள் இந்தப் புதிருக்கு விடை காண முயன்றார்கள். இது மிக நுட்பமானது, இதைப் புரிந்துகொள்வது கடினம். வேறு ஏதாவது வரம் கேள்! இதை மட்டும் கேட்காதே. நூறு ஆண்டு ஆயுள் வேண்டும் என்று கேள், ஆடு, மாடு, குதிரைகள் பேரரசு எல்லாம் கேள் இந்தக் கேள்விக்கு விடை கூற மட்டும் என்னை வற்புறுத்தாதே. மனிதன் நுகர்வதற்குரிய எந்தப் போகத்தை நீ கேட்டாலும் நான் தருகிறேன். இந்த ரகசியத்தை மட்டும் தெரிந்துகொள்ள விரும்பாதே நசிகேதன் கூறினான்! இல்லறம் மனிதன் செல்வதால் மட்டும் திருப்தி அடையலாகாது. பணம் வேண்டும் என்றால் உங்கள் தரிசனமே அதைக் கொடுத்துவிடும். உங்கள் ஆட்சி நடைபெறும் வரையில் நாங்கள் வாழ்வது திண்ணம். மண்ணுலகில் எவ்வளவு காலம் வாழ்ந்தாலும் அழிய வேண்டியவனான மனிதன் அறிவு பெற்று, அழிவில்லாத சாவில்லாத ஒருவரைக் கண்ட பிறகு இந்த மண்ணுலகில் நீண்ட ஆயுளை விரும்புவானா? ஆடல் பாடல் முதலிய போகங்களின் கணநேர வாழ்வை உணர்ந்த யார்தான் போக வாழ்வை விரும்புவார்? சாவுக்குப்பின் நிகழ்வது என்ன என்ற இந்த ரகசியத்தை எனக்கு விவரியுங்கள். நசிகேதன் வேண்டுவது இதுதான் மரணத்தின் புதிர். இதைக்கேட்ட எமன் மிகவும் மகிழ்ந்தான்.

சென்ற இரண்டு மூன்று சொற்பொழிவுகளிலும், ஞானம் மனத்தைப் பக்குவப்படுத்துகிறது என்று நான் சொன்னேன். ஞானத்தைப் பெறுவதற்குரிய முதல் பக்குவம் உண்மையைத் தவிர வேறொன்றிலும் ஆசை வைக்கக் கூடாது. உண்மைக்காகவே உண்மையை விரும்ப வேண்டும் என்பதுதான். எமன் கொடுப்பதாகச் சொன்ன சொத்து, சகம் ஆயுள் முதலியவற்றை அந்தச் சிறுவன் விரும்பாமல் விலக்கியதைப் பாருங்கள். உண்மையை அறிவதற்காக ஞானத்திற்காக அவன் எல்லாவற்றையும் துறக்க ஆயத்தமாக இருந்தான். இவ்வாறுதான் ஞானம் வரும்.

எமனுக்கு நசிகேதனிடம் திருப்தி ஏற்பட்டது. எனவே உபதேசிக்கத் தொடங்கினான். இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று இன்ப நுகர்ச்சி மற்றொன்று பேரின்ப அனுபூதி. இவை இரண்டும் பலவகைகளில் மக்களின் மனத்தைக் கவர்கின்றன. இந்த இரண்டில்

பேரின்ப வழியைத் தேர்ந்தெடுப்பவன் ஞானியாகிறான். சிற்றின்ப வழியைத் தேர்ந்தெடுப்பவன் அழிவைத் தேடிக்கொள்கிறான். நசிகேதா, நான் உன்னைப் பாராட்டுகிறேன்.! நீ இன்பப் பொருள் ஒன்றையும் கேட்வில்லை. நான் பலவகையில் உனக்குப் போகத்தில் ஆசையூட்ட முயன்றேன். நீ எல்லாவற்றையும் எதிர்த்து வென்றாய். ஞானமே போகவாழ்வை விட உயர்ந்தது என்பது உனக்குத் தெரிந்திருக்கிறது.

அறியாமையில் மூழ்கி, போகங்களில் உழல்பவனுக்கும் மிருகங்களுக்கும் வேற்றுமை இல்லை என்பதை நீ புரிந்து கொண்டிருக்கிறாய். பலர், அறியாமையில் மூழ்கியிருந்தாலும், ஆணவத்தால் தாங்கள் பெரிய ஞானிகள் என்ற செருக்குடன், குருடன் குருடனுக்கு வழிகாட்டுவதுபோல தீய வழிகளில் அலைகின்றனர். ஓ நசிகேதா! வெறும் களிமண் பொம்மைகளால் மகிழும் குழந்தைகள் போன்ற இந்த மூடர்களின் மனத்தில் உண்மை ஒளிர்வதில்லை. அவர்களுக்கு இந்த உலகமும் விளங்குவதில்லை, அந்த உலகமும் விளங்குவதில்லை. அவர்கள் இரண்டு உலகங்களையுமே மறுத்து அதன் விளைவாகத் திரும்பத்திரும்ப என் வசப்படுகிறார்கள்.

பலருக்கு அதைப்பற்றி அறிவுரை பெறுவதற்கு வாய்ப்பு இருப்பதில்லை. பலர் அறிவுரை பெற்றாலும் அதை அறிந்து கொள்வதில்லை. ஏனெனில் அதற்கு ஆசிரியர் தகுதியுடையவராக இருக்க வேண்டும். அதுபோலவே சீடனும் தகுதியுடையவனாக இருக்க வேண்டும். ஆசிரியர் தெளிந்த ஞானம் இல்லாதவராக இருந்தால், அவர் நூறுமுறை உபதேசித்தாலும், சீடன் நூறுமுறை கேட்டாலும் ஆன்மாவை அந்த உண்மை ஒளிரச் செய்வதில்லை. நசிகேதா, உன் மனத்தை வீண் வாதங்களால் குழப்பிக்கொள்ளாதே! தூய நெஞ்சில் தான் இந்த உண்மை நன்றாக ஒளிரும்.

யாரை மிகவும் கடின முயற்சி இல்லாமல் காண முடியாதோ, யார் மறைந்திருக்கிறானோ, யார் இதயத்திற்கும் இதயமான குகையில் புகுந்திருக்கிறானோ அந்தப் பழையவனை ஊனக் கண்ணால் காண முடியாது. அவனை ஞானக்கண்ணால் பார்க்கும் ஒருவன் இன்பம் துன்பம் இரண்டையும் விட்டுவிடுகிறான். இந்த ரகசியத்தை அறிந்தவன் வீண் ஆசைகள் அனைத்திலும் இருந்து விடுபட்டு, மிக நுட்பமான ஞானக் காட்சியைப் பெறுகிறான். இதனால் அவனுக்குப் பேரின்ப காட்சியைப் பெறுகிறான். இதனால் அவனுக்குப் பேரின்ப நிலை வாய்க்கிறது. நசிகேதா, பேரின்ப வழி இது தான்! இந்த நிலையை அடைந்தவன், பாவம் புண்ணியம், கடமை அல்லாதவன், இம்மை மறுமை எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவன். இதை அறிந்தவனே அறிந்தவன்.

எல்லா வேதங்களும் யாரைத் தேடுகின்றனவோ, யாரைக் காண மனிதன் பலவகைத் துறவுகளை மேற்கொள் கிறானோ, அவரது பெயரை நான் சொல்லப் போகிறேன். அதுதான் ஓம். அழிவில்லாத இந்த ஓம் என்பது தான் பிரம்மம், அது அமரத்துவம் வாய்ந்தது. இதன் ரகசியத்தை அறிந்தவன் விரும்பியதை அடைகிறான்.

நசிகேதா நீ எதைப்பற்றி அறிய விரும்புகிறாயோ அந்த ஆன்மா பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. தொடக்கம் இல்லாததாகவும் என்றும் உள்ளதாகவும் உள்ள அந்தப் பரம்பொருள், உடல் அழிந்தாலும் அழிவதில்லை தான் கொன்றதாகக் கொலையாளி நினைப்பதும்,

தான் கொல்லப்பட்டதாக் கொலையுண்டவன் நினைப்பதும் தவறு. ஆன்மாவால் எதையும் கொல்லவும் இயலாது: எதனாலும் அதைக் கொல்லவும் இயலாது. சிறியதில் சிறியதாகவும் பெரியதில் பெரியதாகவும், எல்லா உயிர்களுக்கும் இறைவனாக விளங்கும் அவன், எல்லா உயிர்களுடையதும் இதயக் குகையிலும் உறைகிறான். பாவம் இல்லாதவன், அதே இறைவனது கருணையால் அவனை முழுப் பெருமையுடனும் காண்கிறான். (இறைவனை உணர்வதற்குக் காரணமானவற்றுள் இறையருளும் ஒன்று என்பது தெரிகிறது)

உட்கார்ந்த நிலையில் அவன் மிகத் தொலைவிலும் செல்கிறான். படுத்த நிலையில் அவன் எங்குமே போகிறான். தூய்மையான, நுட்பமான அறிவுடையவர் களைத் தவிர வேறு யார் தான் முரண்பட்ட இயல்புகளின் சங்கமமாக இருக்கின்ற இறைவனை அறியும் தகுதி உடையவர்? உடல் அற்றவனாக ஆனால் உடலுக்குள் வசிப்பவனாக, தொடப்படாதவனாக ஆனால் எல்லா பொருட்களுடனும் ஒட்டியது போல் தோன்றுபவனாக, எங்கும் நிறைந்தவனாக ஆத்மாவை யார் அறிந்து அனுபவிக்கி றாரோ, அந்த ஞானி துன்பத்திலிருந்து விடுதலை பெறுகிறார்.

வேதங்களை ஓதுவதாலோ கூர்ந்த அறிவாலோ, அதிகக் கல்வியாலோ, ஆன்மாவை அடைய முடியாது. ஆன்மா யாரைத் தேடுகிறதோ அவனே அதை அடைகிறான். அவனுக்குத் தன் மகிமையை அது காட்டுகிறது. தொடர்ந்து பாவச் செயல்களைச் செய்பவன், மனம் அமைதி பெறாதவன், தியானம் செய்ய முடியாதவன், மனம் எப்போதும் குழம்பியதாகவும் சலனம் உடையதாகவும் இருப்பவன். இவர்களால் இதயக் குகையில் ஒளிரும் ஆன்மாவை உணர்ந்து அனுபவிக்க இயலாது.

நசிகேதா இந்த உடலே தேர் புலன்களின் பொறிகளே குதிரைகள், மனமே கடிவாளம், புத்தியே தேரோட்டி, ஆன்மாவோ சவாரி செய்பவன். ஆன்மா தன்னைத் தேரோட்டியுடனும் பக்தியுடனும், அதன்மூலம் மனமாகிய கடிவாளக் கயிற்றுடனும், மீண்டும் அதன் மூலமாகப் பொறிகளாகிய குதிரைகளுடனும் இணைத்துக் கொள்ளும் போது அவன் யோகி என்று அழைக்கப்படுகிறான். அந்த நிலையில் அவன் அறிகிறான். செயல்புரிகிறான். செயல்படுகிறான். மனம் தன்வசப்படாதவன். விவேகம் அற்றவன். இவர்களின் புலன்கள், பாகனுக்கு அடங்காத இடக்குக் குதிரைகள் போல் அவர்களுக்கு வசப்படுவதில்லை. ஆனால் விவேகி, மனம் தன்வசப் பட்டவன் இவர்களின் புலன்கள் பாகனுக்கு கட்டுப்பட்டு நடக்கின்ற சாதுக்குதிரைகள் போல் அவர்களுக்கு அடங்கி நடக்கின்றன. விவேகம் உடையவன், உண்மையை நாடும் வழியையே பின்பற்றிச் செல்லும் மனம் உடையவன். எப்போதும் தூயவன் இவர்களுக்கு உண்மை விளங்குகிறது இந்த நிலையை அடைந்த ஒருவனுக்குப் பிறவியே இல்லை. நசிகேதா! இந்த நிலையை அடைவது மிகவும் கடினமானது இதன் வழி மிக நீண்டது, மிக நுட்பமான ஞானம் பெற்றவர்களே இந்த உண்மையைக் காணவோ புரிந்துகொள்ளவோ முடியும். அதற்காக நீ பயந்து விடாதே, விழித்தெழுந்து முயற்சியில் ஈடுபடு, இலட்சியத்தை அடையும் வரையில் நில்லாதே! வாள்முனையில் நடப்பது போன்று இது மிகவும் கடினமானது என்று முனிவர்கள் கூறுகின்றார்கள். புலன்களுக்கும், தொட்டு நுகர்வதற்கும், எல்லா உருவத்திற்கும் கவலைகளுக்கும் அப்பாற்பட்டவன் யாரோ மாறுதல் அற்ற முடிவற்ற, அறிவுக்கு அப்பாற்பட்ட அழவோ இல்லாதவன் யாரோ அவனை அறிவதால் மட்டுமே நாம் மரணத்திலிருந்து தப்ப முடியும்.

அடைய வேண்டிய இலட்சியம் எது என்பதை இதுவரையிலும் எமன் விளக்குவதை நாம் காண்கிறோம். எது உண்மை என்பதை அறிவதால் மட்டுமே பிறப்பு, இறப்பு, துக்கம், துன்ப துயரங்கள் என்று நம்மை ஆட்டுவிக்கும் சக்தியிலிருந்து நாம் விடுபட முடியும். இதுவே நமக்குக் கிடைக்கின்ற முதற் கருத்து.

எது உண்மை? ஒருபோதும் மாறுபடாத மனித ஆத்மாவே அது. அதுவே இந்தப் பிரபஞ்சத்திற்கு ஆதாரமாக நிற்கிறது. இதை அறிவது மிகவும் கடினம் என்றும் சொல்லப்படுகிறது. அறிவது என்பது, வெறுமனே அறிவால் புரிந்து கொள்வது அல்ல அனுபூதியே ஆகும். இந்த ஆன்மா பார்க்கப்பட வேண்டியது. உணரப்பட வேண்டியது என்று திரும்பத்திரும்ப நாம் படிக்கிறோம். ஆனால் இந்த ஊனக்கண் களால் அதைக் காண முடியாது. அதைக் காணப் பார்வை மிக நுட்பமாக வேண்டும். சுவர்களையோ புத்தகங்களையோ பார்க்கப்பயன்படும் பார்வை ஊனக்கண் பார்வையாகும். ஆனால் உண்மையைப் பார்க்க உதவும் பார்வை மிக நுட்பமானது. இந்தப் பார்வையைப் பெறுவதுதான் அந்த அறிவின் முழு ரகசியம் ஒருவர் மிகவும் தூயவராக இருக்க வேண்டும் என்றும் எமன் சொல்கிறான். பார்வையை மிகவும் நுட்பம் ஆக்கிக்கொள்ளும் வழி இது தான். பிறகு அவன் நமக்கு வேறு வழிகளையும் சொல்கிறான்.

தானே ஒளிர்பவரும் தனியானவருமான அவர் பொறி புலன்களுக்கு அப்பாற்பட்டவர் பொறிபுலன்களால் புறப் பொருட்களையே பார்க்க இயலும். ஆனால் உண்மைப் பொருளை அக நோக்கால்தான் காண முடியும். இதற்கு வேண்டிய தகுதியை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பார்வையை உள்ளே திருப்பி ஆன்மாவை அடையும் ஆவல்தான் இந்தத் தகுதி. இயற்கையில் நாம் காணும் அழகிய பொருட்கள் எல்லாம் மிக நல்லவையே என்றாலும் இறைவனைக் காணும் வழி அதுவல்ல. பார்வையை உள்ளே திருப்புவது எப்படி என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். வெளியே பார்க்க வேண்டும் என்ற கண்களின் ஆர்வத்தைக் குறைக்க வேண்டும். நெரிசலான தெருவில் நடக்கும்போது, வண்டிகளின் ஓசை காரணமாக நீங்கள் பேசுவது உங்களுடன் செல்பவருக்குச் சரியாகக் காதில் விழுவதில்லை. அவர் பேசுவது உங்களுக்குக் கேட்பதில்லை. மனம் வெளியே பார்த்தால், பக்கத்தில் இருப்பவர் பேசுவது கேட்பதில்லை அதுபோலவே நம்மைச் சூழ்ந்திருக்கும் உலகிலும் ஓசை நிறைந்திருப்பதால், அது மனதை வெளியே இழுக்கிறது. நாம் எப்படி ஆன்மாவைப் பார்ப்பது? மனத்தின் இந்த வெளிப்போக்கை நிறுத்த வேண்டும். இதைத்தான், பார்வையை உள்ளே திருப்புவது என்று சொல்கிறோம். இப்படிச் செய்தால்தான் உள்ளே திரும்புவது என்று சொல்கிறோம். இப்படிச் செய்தால்தான் உள்ளே இருக்கும் இறைவனின் மகிமையைக் காண முடியும்.

இந்த ஆன்மா என்பது என்ன? இது அறிவுக்கே எட்டாத ஒன்று என்பதைப் பார்த்தோம். இது அழிவில்லாதது. எங்கும் நிறைந்தது என்பதையும், நீங்கள் நான் எல்லோருமே எங்கும் நிறைந்தவர்கள் என்பதையும், மாற்றமில்லாதவர்கள் என்பதையும் இந்த உபநிடதத்தில் கண்டோம். இப்படி எங்கும் நிறைந்த பொருள் ஒன்றுதான் இருக்க முடியும். ஒரேபோன்ற எங்கும் நிறைந்த இரு பொருட்கள் எப்படி இருக்க முடியும்? முடியாதல்லவா? அது போல் எல்லையற்ற இருவர் இருக்க முடியாது. எனவே இருப்பது ஒரே பொருளான ஆத்மாதான். நீங்கள் நான், இந்தப் பிரபஞ்சம் எல்லாமே

ஒன்றுதான். அது பலவாகத் தோன்றுகிறது. அவ்வளவுதான். எப்படி ஒன்றாகிய நெருப்பு, உலகில் புகுந்து பலவிதங்களில் காட்சி அளிக்கிறதோ அப்படியே எல்லோருக்கும் ஆன்மாவான அந்த ஒரே ஆன்மாவும் எல்லா உருவங்களாகவும் காட்சி அளிக்கிறது.

இப்போது கேள்வி ஒன்று எழுகிறது இந்த ஆன்மா பூரணமானது, தூய்மையானது, இதுவே பிரபஞ்சத்திலுள்ள ஒரே ஆன்மா என்பது உண்மையானால், அது தூய்மையற்ற உடல், பாவ உடல் நல்ல உடல் முதலியவற்றுள் புகும் போது அதற்கு என்ன நேர்கிறது? அவற்றுள் அது எப்படிக் குறைவற்றதாக இருக்க முடியும்.? ஒவ்வொரு கண்ணின் பார்வைக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது சூரியன். என்றாலும் எந்தக் கண்களில் உள்ள குற்றமும் அதனை எந்தவிதத்திலும் பாதிப்பதில்லை. காமாலை நோயாளி எல்லாவற்றையும் மஞ்சள் நிறமாகக் காண்கிறான். அவன் பார்வைக்கும் ஆதாரம் சூரியன் தான் ஆனால் இந்தக் குறை சூரியனைப் பாதிப்பதில்லை. இதைப்போலவே ஒன்றேயான இந்தப் பரம்பொருள் எல்லாவற்றிற்கும் ஆன்மாவாக இருந்தாலும், வெளியே உள்ள துாய்மையோ, துாய்மையின்மையோ அதைப் பாதிப்பதில்லை.

கணத்திற்குக் கணம் மாறிக்கொண்டிருக்கும் நிலையற்ற இந்த உலகில் மாறுதலற்ற நிலையான ஒன்றை யார் அறிகிறானோ, உணர்வற்றதான இந்த உலகில் உணர்வுப் பொருளை யார் அறிகிறானோ, வேற்றுமை நிறைந்த இந்த உலகில் ஒன்றேயான பரம்பொருளை யார் அறிகிறானோ, அவ்வாறு அறிந்து யார் அதைத் தன்னுள்ளும் காண்கிறானோ அவனுக்கே பேரின்பம் உரியதாகும். வேறு யாருக்கும் அல்ல அங்கே சூரியன் ஒளிர்வதில்லை. நட்சத்திரங்கள் பிரகாசிப்பதில்லை மின்னல் மின்னுவதில்லை பிறகு நெருப்பிற்கு இடம் எங்கே? அவர் ஒளிர்வதால் தான் மற்றவை சுடர் விடுகின்றன. அவரது ஒளியால்தான் மற்ற எல்லா பொருட்களும் ஒளி பெறுகின்றன. மனத்தை அலைக்கழிக்கும் ஆசைகளெல்லாம் அடங்கியபின் இறக்கும் இயல்புடையவனான மனிதன் இறப்பற்றவன் ஆகிறான். பிரம்மத்தை அடைகிறான். மனத்தின் கோணல்கள் எல்லாம் நிமிர்ந்தவுடன், இதயத்தின் முடிச்சுக்களெல்லாம் அறுபட்டவுடன், இறக்கும் இயல்புடையவன் இறப்பற்றவன் ஆகிறான். இதுதான் வழி. இந்த ஆராய்ச்சி நமக்கு இன்பம் தரட்டும் நம்மைக் காக்கட்டும். நமக்கு ஆற்றலைத் தரட்டும் நமக்குள் சக்தி ஆகட்டும். நாம் ஒருவரை ஒருவர் வெறுக்காமல் இருப்போமாக! எல்லோருக்கும் அமைதி உண்டாகட்டும்! வேதாந்தத் தத்துவத்தில் இதுபோன்ற சிந்தனைகளையே நீங்கள் காண முடியும். உலகம் முழுவதும் காணப்படும் சிந்தனைகளுக்கு முற்றிலும் வேறுபட்ட சிந்தனை ஒன்றை நாம் இங்கே காண்கிறோம். பிற நூல்களைப் போலவே வேதங்களின் மிகப் பழைய பகுதிகளிலும் உண்மையை வெளியில் தேடும் முறையே இருந்தது. மிகப்பழைய நூல்கள் சிலவற்றுள் ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டது. தொடக்கத்தில் என்ன இருந்தது? உள்ளது இல்லாதது இரண்டும் இல்லாத நிலையில் இருளை இருள் மூடியிருந்த நிலையில் இவற்றையெல்லாம் படைத்தவர் யார்? தேடல் இவ்வாறு தொடங்கியது. அந்த நூல்கள் தேவதைகள், தேவர்கள் போன்ற பலவற்றைப்பற்றிப் பேசத்தொடங்கின. பிறகு இவற்றால் எல்லாம் பயனில்லை என்று அவற்றை விட்டுவிட்டன.

அந்த நாட்களில் அவர்கள் உண்மையை வெளியில் தேடினார்கள். அவர்களால் ஒன்றையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனால் பிற்காலத்தில் அவர்கள், தன்னில் தானாக விளங்கும் இந்த ஒன்றேயான பரம்பொருளை உள்ளே தேட வேண்டியதாயிற்று என்று வேதங்களில் படிக்கிறோம். விண்மீன்கள், வான்வெளி மற்றும் அண்டவெளி என்று இந்தப் பிரபஞ்சம் முழுவதும் தேடினாலும் பலன் ஒன்றும் கிடைப்பதில்லை பிறப்பு இறப்பு என்ற பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதில்லை என்பதுதான் வேதங்களின் அடிப்படைக் கருத்தாகும்.

எனவே, நமக்குள்ளே உள்ள அற்புத எந்திரத்தை ஆராய நேர்ந்தது. இந்த ஆராய்ச்சியின் விளைவாகப் பிரபஞ்சரகசியம் விளங்கத் தொடங்கியது. நட்சத்திர மண்டல ஆராய்ச்சியோ சூரியனைப்பற்றிய ஆராய்ச்சியோ, இந்தப் பலனை அளிக்கவில்லை. மனிதனை அணுவணு வாகப் பிரித்து ஆராய வேண்டியிருந்தது. அவனது உடலை அல்ல அவனது ஆன்மாவை. இந்த ஆன்மாவில் அவர்களின் பிரச்சினைக்கு விடை கிடைத்தது. அவர்கள் கண்ட விடை என்ன? உடலுக்கும் மனதிற்கும் உள்ளே அழியாத உண்மைப் பொருள் இருக்கிறது. இந்தப் பொருளுக்குப் பிறப்பும் இல்லை இறப்பும் இல்லை தானே தானாக நிற்கும் இது எங்கும் நிறைந்தது. ஏனெனில் இதற்கு உருவம் இல்லை உருவமோ வடிவமோ இல்லாதது காலம் மற்றும் இடத்தில் எல்லைப்படுத்தப்படாதது. ஓரிடத்தில் மட்டும் இருப்பது என்பது இயலாதகாரியம். எப்படி இருக்க இயலும்? அது எங்கும் இருக்கிறது. அனைவரிடமும் சமமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

மனித ஆன்மா என்பது என்ன? கடவுள் ஒருவர் உண்டு. அவரைத் தவிர பல ஆன்மாக்களும் உண்டு. தன்மையிலும் உருவிலும் எல்லா விஷயங்களிலுமே கடவுளிலிருந்து என்றும் வேறுபட்டவை, இவை என்று சொல்லும் ஒரு பிரிவினர் உள்ளனர். இது துவைதம். இது மிகமிகப் பழைய பண்படாத கருத்து.

எல்லையற்ற இறைவனின் அம்சமே ஆன்மாக்கள் என்று இன்னொரு பிரிவினர் இவர்களுக்கு விடை கூறுகின்றனர். அந்த உடலே தனியான ஒரு பிரபஞ்சம்: உடலுக்குப் பின் மனம், அதற்குப்பின் ஜீவாத்மா உள்ளது. இதுபோலவே இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே ஓர் உடம்பு இதற்குப்பின் பிரபஞ்ச மனமும் அதற்கும் பின்னால் பிரபஞ்ச ஆன்மாவும் உள்ளன. எப்படி மனித உடல் பிரபஞ்ச உடலின் ஒரு அம்சமோ அப்படியே மனித மனம் பிரபஞ்ச மனத்தில் ஓர் அம்சம் என்கிறது விசிஷ்டாத்வைதம் என்ற பிரிவு.

பிரபஞ்ச ஆன்மா எல்லையற்றது என்பது நமக்குத் தெரியும். எல்லையற்ற ஒன்றிற்குப் பகுதிகள் எப்படி இருக்க முடியும்? அது எப்படி உடைபடவோ பகுபடவோ முடியும்? எல்லையற்ற இறைவனின் ஓர் அம்சம் நான் என்று சொல்வது கவிதைநயமாக விளங்கலாம். ஆனால் சிந்திப்பவர்கள், இது முரணான பேச்சு என்று ஒதுக்கிவிடுவார்கள். எல்லையற்ற ஒன்றைப் பகுப்பது என்றால் என்ன? சிறு துண்டுகளாகப் பகுக்கவோ பிரிக்கவோ செய்வதற்கு அது என்ன பருப்பொருளா! எல்லையற்றதைப் பகுக்கவே முடியாது. அப்படி முடியுமானால் அது எல்லையற்றதாக இருக்க இயலாது. முடிவு என்ன பிரபஞ்ச ஆன்மாவாக இருப்பது எதுவோ அதுவே நீ. நீ அதன் அம்சம் அல்ல முழுமை இறைவன் ஆகிய முழுமை நீயே.

பிறகு இந்த வேறுபாடுகள் எல்லாம் என்ன? பல கோடி உயிர்களை நாம் பார்க்கிறோமே! அவை எல்லாம் என்ன?

பல கோடி நீர்த்துளிகளில் சூரியன் பிரதிபலிக்கும் போது ஒவ்வொரு துளியிலும் அதன் முழு உருவமும் தெரிகிறது. ஆனாலும் அவை பிரதிபிம்பங்கள் மட்டுமே. உண்மை சூரியன் ஒன்றே ஒன்றுதான். இப்படியே நம் ஒவ்வொருவரிலும் இருப்பதாகத் தோன்றும் ஆன்மா இறைவனின் பிரதிபிம்பமே வேறு எதுவும் அல்ல. இந்தப் பிரதிபிம்பங்களுக் கெல்லாம் ஆதாரமான உண்மைப் பொருள் ஒன்றான இறைவனே. அங்கே நாம் எல்லோரும் ஒருவரே. ஆன்மா என்ற நிலையில் உலகத்தில் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது அதுவே எனக்குள்ளும் உங்களுக்குள்ளும் இருக்கிறது. அது ஒன்றேதான். அந்த ஒன்றேதான் இந்தப் பல்வேறு உடல்களில் பல ஆன்மாக்களாகப் பிரதிபலிக்கிறது. இந்த உண்மை நமக்குத் தெரிவதில்லை. நாம் ஒவ்வொருவரும் வேறுபட்டவர்கள், இறைவனுக்கு அன்னியமானவர்கள் என்று நினைக்கிறோம். இப்படி நினைக்கும்வரை உலகம் துக்கம் நிறைந்ததாகவே இருக்கும். இது மாயை.

துயரத்திற்கு மற்றொரு காரணம் பயம். ஒருவன் ஏன் மற்றொருவனுக்குத் தீமை செய்கிறான்? தனக்கு வேண்டிய என்ற பயம் காரணமாகத்தான். தனக்கு வேண்டிய பணம் கிடைக்க மற்றவன் தடையாவானே என்ற பயம் காரணமாகத்தான். தனக்கு வேண்டிய பணம் கிடைக்க மற்றவன் தடையாவானே என்று ஒருவன் அஞ்சுகிறான். இந்த அச்சம் காரணமாக மற்றவர்களைத் துன்புறுத்திக் கொள்ளையடிக்க அவன் முற்படுகிறான். உள்ளது ஒன்றுதான் என்றால் பயத்திற்கு இடம் ஏது? என் தலையில் இடி விழுகிறது என்றால், அந்த இடி நானேதான். ஏனெனில் இருப்பது நான் மட்டும்தானே! கொள்ளை நோயும் நானே: புலியும் நானே சாவும் நானே, வாழ்வு, சாவு - இரண்டும் நானே. பிரபஞ்சத்தில் இரண்டு உள்ளது என்ற நினைப்பிலிருந்து பயம் உண்டாகிறது என்பதை நாம் காண்கிறோம்.

பிறரை நேசியுங்கள் என்ற உபதேசத்தை நாம் அடிக்கடிக் கேட்கிறோம். ஏன்? உபதேசித்துவிட்டார்கள். ஆனால் அதன் விளக்கம் இங்கே இருக்கிறது. நான் ஏன் பிறரை நேசிக்க வேண்டும். ஏனெனில் அவர்களும் நானும் ஒன்றல்லவா? நான் ஏன் என் சகோதரனிடம் அன்பாக இருக்க வேண்டும்? நானும் அவனும் ஒன்று என்பதால்தான். இந்த ஒருமை பிரிவற்ற இந்தத் தன்மை பிரபஞ்சத்தில் நிலவுகிறது. நம் காலடியில் நெளியும் மிகத் தாழ்ந்த புழுவிலிருந்து மிக உயர்ந்த பிராணிவரை உள்ள உயிரினங்களுக்கெல்லாம் உடல்கள் பலவானாலும் ஆன்மா ஒன்றுதான். எல்லா வாய்களின் மூலமும் நீ உண்கிறாய் எல்லா கைகளின் மூலமும் நீ உழைக்கிறாய். எல்லா கண்களின் மூலமும் நீ காண்கிறாய். பலகோடி உடல்களின் மூலம் ஆரோக்கிய வாழ்வை அனுபவிப்பதும் பல கோடி உடல்களின் மூலம் நோயால் துன்புறுவதும் நீ தான்.

இந்த எண்ணம் உறுதி பெற்று அனுபவமாகி இதை நாம் கண்டு உணர்ந்தோமானால், அந்த நிமிடத்திலேயே துக்கமும் பயமும் அழிந்துவிடும். எனக்கு மரணம் ஏது? எனக்கு அப்பால் வேறு எதுவுமே இல்லையே! பயம் ஒழிகின்ற அன்றுதான் முடிவற்ற இன்பமும் எல்லையற்ற அன்பும் நெஞ்சில் இடம்பெறும் பிரபஞ்சம் படைப்புக்கள் அனைத்திடமும் தோன்றும் என்று மாறாத இரக்கமும், அன்பும் அழிவற்ற ஆனந்தமும் மனிதனை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி விடுகின்றன. இவற்றிற்குப் பிரதிச்செயல் என்பது ஒன்றுமே இல்லை எந்தத் துக்கமும் அதைத் தொட முடியாது. ஆனால் இந்தப் பிரபஞ்ச சம்பந்தமான, உண்பது பருகுவது போன்ற சிறிய செயல்களுக்குப் பிரதிச்செயல்கள் கண்டிப்பாக உண்டு. நான் பிரபஞ்சத்திலிருந்து வேறுபட்டவன் இறைவனிலிருந்து வேறுப்பட்டவன் என்ற இந்தத்துவைத் எண்ணமே, இந்த இன்பதுன்பங்களுக்கு முற்றிலும் காரணம் நானே அவன் நானே இந்தப் பிரபஞ்சத்தின் ஆன்மா நான் எல்லையற்ற பேரின்ப வடிவினன் என்றென்றும் சுதந்திரமானவன் என்ற அனுபவம் உண்டான உடனே உண்மை அன்பு தோன்றும் பயம் பறந்துவிடும் துயரங்களெல்லாம் ஒழியும்.

# சமய நெறியில் பண்பாடு

பன்மொழிப்புலவர் - த கனகரத்தினம்
பி.ஏ. (இலண்டன்)
கல்வி டிப்புளோமா- இலங்கை
கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைக்காப்பாளர்

இலங்கை மக்கள் வாழ்வில் அனைத்து நிலைகளிலும் சமய நம்பிக்கை ஆழமாக வேரூன்றியுள்ளது. சமய நம்பிக்கை அற்ற மக்கள் வாழ்விற்கூட (Secular Life) சமய நம்பிக்கைகள் கொண்ட கூறுகள் காணப்படுகின்றன. சமய நம்பிக்கை அற்றவர்களும் நாட்டின் தேசியக் கொடியை மதிக்கின்றனர்; தாய் நாட்டை நேசிக்கின்றனர்; அரசியல் அமைப்புச்சட்டத்தை மதிக்கின்றனர்; இவைகளெல்லாம் சமய நம்பிக்கையின் கூறுகளாகவே அமைகின்றன. பல்லாயிரம் வருடங்களுக்கு முன் தோன்றிய சைவ சமயத்திலும் சமய நம்பிக்கையின் வலுவான வளர்ச்சியைக் காண்கின்றோம்.

சமய நெறியில் பண்பாடு நாகரிகம் என்பன பண்பட்ட கூறுகளாக விளங்கி நிற்கின்றன. இது சைவம் வைணவம். பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற அனைத்து மதங்களுக்கும் பொருந்தும். ஆனாலும் பண்பாடு என்று பிரித்துக்கூறும் போது சமய நெறியில் இல்லாத பண்பாடுகளும் உண்டு. சமய நெறியில் வளர்ந்த பண்பாடுகளே சமூக நலனைப் பேணிக்காக்க வல்லன. ஒரு சமுதாயம் நிலைபெறுவதற்கு சமுதாய உறுப்பினர்கள் தம் சமுதாயம் சுட்டிக் காட்டும் நெறிமுயைப் பின்பற்றி நடத்தல் வேண்டும். சமயம் தான் இந்த நெறிமுறைகளையும் விழுமியங்களையும் ஒழுக்கம் சார்ந்ததாக நெறிப்படுத்துகின்றது. சமயந்தான் இவற்றுள்ளும் சிலவற்றைப் புனிதத் தன்மையாக்கிச் சிறப்பிடம் வழங்குகிறது. பெற்றோருக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பது ஒரு நெறிமுறை. இது பள்ளிக்கூடங்களிலும் வீட்டிலும் கற்பிக்கப்படுகின்றது. இந்நெறிமுறையின் ஆழ் நிலைக்கருத்து ஒன்றும் உண்டு. இறைவனை மதிப்பதற்கும் வழிபடுவதற்கும் இதுசமன் என்பது அதுவாகும். இந்நெறி முறையை எல்லாச் சமயங்களும் புனிதமாகக் கருதுகின்றன அல்லவா? சமயம் சமுதாய நலனுக்கு எதிராகச் செயற்படும் போக்கைக்கட்டுப்படுத்துகிறது. ஒரு சமுதாயத்தின் அமைப்பில் கடுமையான மாற்றங்கள் ஏற்படலாம்; அவ்வாறு நிகழ்ந்தாலும் கட்டுக்கோப்புச் சிதறாமல் இருக்கச் சமயந்தான் துணை செய்கிறது. சமயம் தான் சமூகப்பிணைப்பை மிகுதிப்படுத்துகின்றது. சமயம் என்னும் நிறுவனத்தின் மிகப் பெரிய ஆற்றல்களாகச் சடங்குகள், வழிபாட்டு மரபுகள் விளங்குகின்றன. இவை சமூகப்பிணைப்பை வளர்த்துக் கொண்டிருக்கின்றன. எனவே தான், சமயம் என்பது மக்களின் வாழ்வை நெறிப்படுத்தும் ஓர் உயிரோட்டமுள்ள சமுதாய நிறுவனமாகும்.

நாயன்மார்கள் போற்றிய சமயம் சைவம். அவர்கள் அருளிய பக்திரசம் ததும்பும் பாடல்கள் கோடானுகோடி பக்தர்களது வாழக்கையின் ஊன்று கோலாக விளங்குகின்றன. அவை தூய்மை, அன்பு, நேர்மை, சுயநலமின்மை போன்ற உயர் பண்புகளைப் போதிப்பன. சமயம் அடிப்படையில் சமுதாய தீமைகளை வேருடன்களையும் சிறப்பும் பெற்று விளங்குகிறது.

சமயம் என்பது பற்றி அறிஞர்கள் பலர் பல்வேறு வரைவிலக்கணங்களைக் கூறியுள்ளனர். அவர்களுள் (Emile Durkheim) 'எமிலிதர்கைம்' என்பவர் சமயம் என்பது புனிதமான ஒன்றைப் பற்றிய நம்பிக்கைகளும் செயல்முறைகளும் அடங்கிய ஓர் ஒழுங்கமைந்த முறையாகும் என்று கூறுவர். 'டைலர்' என்பவரின் கருத்தின்படி ஆவிகளின் நம்பிக்கையிலிருந்தே தொன்மைச் சமயம் தோன்றியது என்பதாகும். 'மார்ட்டின்' என்பவரின் கருத்துப்படி ஆவிகள் சாராத ஒருவகை உயிர்ப்புத்தன்மையுடைய ஆற்றலின் பால் கொண்ட நம்பிக்கையே தொன்மைச் சமயத்தின் தோற்றத்திற்குக் காரணம் என்பதாகும். மாக்ஸ் முல்லர் என்பவரின் கருத்துப்படி இயற்கை ஆற்றல் மீது கொண்ட நம்பிக்கையே காரணம் என்பதாகும். சூரியன், இடி, மின்னல் போன்ற உயிரற்ற பொருள்களில் இருக்கும் உயிர்ப்புத்தன்மையைக்கூறும் இயற்கைக் கோட்பாடு இதுவாகும். (Naturism) தொன்மை மக்கள் இயற்கைப் பொருள்களை வழிபட்டனர் என்பது உண்மை; வேதங்களிலும் சான்றுகள் உண்டு. ஆனால் இயற்கை வழிபாட்டிலிருந்தே சமய நம்பிக்கை தோன்றியது என்பதற்கு

உறுதியான சான்றுகள் இல்லை. எனவே இதனை ஒரு கொள்கையாக ஏற்க முடியாது.

இன்றுள்ள சமய நம்பிக்கைகள் அனைத்தும் குலக்குறி நம்பிக்கையில் இருந்து வளர்ச்சி பெற்றன என தர்கைம் (Durkheim) கூறுகிறார். சமயவாழ்வின் தொடக்க நிலைகள் (The Elementary forms of Religious Life 1912) என்ற நூலில் இதனைப்பற்றி விளக்கியுள்ளார்.இந்த நம்பிக்கையிற்தான் பல நாடுகளிலுள்ள பழங்குடியினர் முன்னோர் வழிப்பாட்டைக் கொண்டுள்ளனர். இந்து சமய நம்பிக்கையிலும் முன்னோர் வழிப்பாடு சிறப்பிடம் பெற்றிருக்கின்றது. திதி (திவசம்), கொடுப்பது, அமாவாசை, பூரணை நோன்பு என்பன முன்னோர் வழிப்பாட்டின் சிறப்பிடத்தை காட்டுகின்றுது.

இன்று சமயம், மனித வாழ்வு எனும் சக்கரத்தின் மைய அச்சாக விளக்குகின்றது. இச்சமயத்தின் மையமாக புனிதத்தன்மை (Sacred) விளங்குகின்றது. தொன்மைமக்கள் ஆவியையும் இந்துக்கள் பிரம்மன் சிவன், விஷ்ணு, சரஸ்வதி போன்ற இறைவர்களையும் புனிதத்தன்மை வாய்ந்தனராகக் கொண்டுள்ளனர் இப்புனிதத் தன்மையோடு தொடர்புடையவைகளும் புனிதம் பெறுகின்றன. கோவில்கள், தீர்த்தம், வீபூதி அரசமரம், வேப்பமரம் என்பனவும் புனிதமானவையாகக் கொள்ளப்படுகின்றன.

மனிதன் ஏன் வாழவேண்டும்? எதற்காக வாழவேண்டும்? எப்படி வாழவேண்டும்? என்ற வினாக்களுக்குச் சமயம் தான் விளக்கம் அளிக்கிறது. நடைமுறை வாழ்வில் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட செயல்களுக்கு விளக்கம் காண்பதற்கும் சமயமே துணை செய்கிறது. சமயம் புனிதமானது என்ற அளவுகோல் கொண்டே மக்கள் நடத்தை முறைகளையும் அளக்கின்றனர். சமுதாய அமைப்பில் கட்டுண்டு செயல்படுகின்றனர். இவ்வகையில் சமயம் மக்களின் வாழ்வை நெறிப்படுத்துகின்றது என்ற உண்மை தெளிவாகிறது. மேன்மைகொள் சைவநீதி பொது நீதியாக உலகனைத்தையும் நெறிப்படுத்தவல்லது. அதனாலன்றோ மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்றருளினார் சேக்கிழார் பெருமாள்.

சமகாலப் பண்பாடுகளில் சமய நம்பிக்கைகள் அனைத்தையும் சமயம் என்னும் தலைப்பின் கீழ் அமைக்கலாம். இச்சமயம் சார்ந்த நம்பிக்கைகள் பண்பாட்டிற்குப் பண்பாடு வேறுபடுகின்றன. காலத்திற்குக் காலம் மாற்றம் அடைந்தும் உள்ளன. மானிடவியல் ஆய்வாளர்களின் கருத்துப்படி இவை படிமமலர்ச்சி காரணமாகக் கடவுளர்களின் நம்பிக்கையாக வளர்ந்துள்ளன.

சமய நெறி என்றதனைப் படிமமலர்ச்சி என்னும் கருத்தாக்கமாகக் கொண்டால் அது மாறக்கூடியதன்று என்பது தெளிவு. மாறினும் மிகக்குறைந்தளவு மாற்றமேபெறும். சித்தாந்த நெறி எனும் போது அது முடிந்த முடிவையே காலந்தோறும் விளக்கி நிற்கும்.

இனி பண்பாடு என்பது புவிப்பரப்பு அல்லது நாடு சார்ந்ததாக அமைவதைக் காணலாம். மொழி, இனம், சமயம், இடம் என்பன சார்ந்ததாகவும் பண்பாடுகள் அமையலாம். உதாரணமாக அமெரிக்கப்பண்பாடு மேலைத்தேயப்பண்பாடு, கீழைத்தேயப் பண்பாடு, இந்தியப்பண்பாடு, தமிழர் பண்பாடு, திராவிடர் பண்பாடு, ஆங்கிலேயர் பண்பாடு என்ற வகையில் பல்வேறு பண்பாடுகள் உள. பண்பாடு என்பது இலக்கியம் கவிதை நடனம், இசை, கோவில்கள், சடங்குகள், வேத மந்திரங்கள் தொழில்கள் போன்ற சில கூறுகளை மட்டும் கொண்டு விளங்குவது அன்று, இது மக்களின் நடத்தை முறைகளைக் கட்டுக்கோப்பான நிலையில் செயற்படுத்தும் ஒரு மிகப் பெரும் அமைப்பாகும். ஒவ்வொரு பண்பாட்டிலும் ஆயரக்கணக்கான பண்பாட்டுக் கூறுகளும் உள. பண்பாடு என்ன என்பதற்கு குரோபரும் (Kroeber) குளுக்கானும் (Kuluckohn) எழுதிய நூலில் 160 க்கு மேற்பட்ட வரையறைகள் உண்டு. இலங்கையைப் பொறுத்தளவில் 1956 ஆம் ஆண்டுக்குப் பின்னர், பண்பாட்டுத்திணைக்களமும் (புத்தசாசன கலாசார அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்) அமைச்சும் அமைக்கப்பட்டதால் இச்சொல் இன்னும் கூடியமுறையில் பிரபலமடைந்துள்ளது. பண்பாடுதான் மனிதனை மனிதனாக விளங்க வைக்கும். மனிதனிடத்தில் பண்பாடு அற்ற நிலையிலேதான் அமானுடத்தன்மை மேலெழுகிறது. பண்பாடு மனமிதனின் உள்ளத்திற் சிறந்த வாழ்க்கையை உண்டாக்குகிறது.

இலக்கியங்களில் பண்பாடுபற்றிய கருத்துக்கள் பல இடம் பெற்றுள்ளன. சங்கநூல்களில் தமிழர் பண்பாடுகளைப் பரக்கக் காண்கின்றோம். திருக்குறள் என்னும் தெய்வத்திருவள்ளுவரின் நூலில் பண்புடைமை எனும் ஒரு அதிகாரமே இடம் பெற்றுள்ளது.

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

(பண்புடைமை – 06)

எனப் பண்புடைமையின் சிறப்பைத்திருக்குறள் விளக்குகிறது; உலக இயக்கத்திற்கே பண்புடைமையின் அவசியத்தை எடுத்து விளக்குகின்றது.

சங்க நூல்களில் ஒன்றாகிய கலித் தொகையில், 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்' எனவருகிறது. உலகப்பாட்டினை அறிந்து ஒழுக வேண்டிய பண்பை அது விளக்குகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியங்கள் தமிழர் பண்பாட்டிற்குச் சான்றுகள் பல தந்து நிற்கின்றன.

பண்புடைமைக்குரிய நல்வழிகளாக பின்வரும் இரண்டு விடயங்களைத் திருக்குறள் கூறுகின்றது.

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு"

(பண்புடைமை – 02)

இக் குறள்வாயிலாக அன்புடைமை முதலிடத்தில் வைத்து விதந்து கூறப்படுகிறது. இப்பண்பினை இராமாயணம் பாரதம் ஆகிய இதிகாசங்கள், பெரியபுராணம், கந்த புராணம் போன்ற புராண நூல்கள் என்பன மேலும் விளக்கி நிற்கின்றன.

அறநூல்கள் மக்கள் மனத்தைப் பண்படுத்தற்காகவே எழுந்தன. அவற்றையும் பண்பாட்டிலக்கியம் என்பது பொருத்தமானது அறவுரைச் செல்வாக்கால் அறவோர் செல்வாக்கு நிலை பெற்றிருந்தது. சான்றோரே ஒரு நாட்டின் உயிர் நிலையாவர். தெய்வத்திருவள்ளுவரும் திருக்குறளிலே சான்றாண்மைக்குப் பின்னரே பண்புடைமை அதிகாரத்தை வைத்துள்ளமை சிந்திக்கற்பாலது. அவ்விடத்தும் திருவள்ளுவர் சான்றாண்மையில் அன்பிற்கே முதலிடம் வழங்கியிருக்கிறார். சமயநெறியில் 'அன்பே சிவம்' என்பதும் ஆராயப்படத்தக்கது. திருமூலர் திருமந்திரம் இதற்கு விளக்கம் தரும். திருக்குறளில் சான்றாண்மைக்கு வேண்டிய பண்புகளைப்பின்வருமாறு சுறியுள்ளார்.

"அன்பு நாண் ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்"

(சான்றாண்மை – 03)

அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து பண்புகளும் சால்பு என்பதைத் தங்கியுள்ள தூண்களாகும். இத்தகைய சான்றாண்மையில் பண்டைத்தமிழ் நாடு செழித்திருந்தது. சான்றோர் வழியில் பண்டைத்தமிழர் வாழ்ந்தனர். அதனால் வாழ்வில் இன்பமும் அமைதியும் ஆறுதலும் பண்பும் நிறையும் நிலைத்திருந்தன.

பண்டைப் பெரியோர் தம்வாழ்வில் குறையிருக்குமோ எனத் தன்னாய்வு செய்து திருந்தி வாழ்ந்தனர். மாணிக்க வாசகர் திருவாசகத்தில் வரும் பாடல் இதனை எமக்கு விளக்கின்றது.

"நெறியில்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறு நெறிகள சேராமே திருவருளே சேரும் வண்ணம்
குறியொன்று மில்லாத கூத்தன் தன் கூத்தை எனக்கு
அறியும் வணம் அருளிவாறு ஆர்பெறுவார் அச்சோவே"

பண்பில் உயர்ந்த வாழ்வு வாழ்பவரும் தம்குறைகண்டு வாழும் பண்பைக் கைக்கொள்ளல் வேண்டும். முன்னாளில் வாழ்ந்த தமிழ் மக்களின் குணநலன்கள் பலப்பல. விருந்தோம்பல் போன்ற அரிய பண்பாட்டில் அவர்கள் சிறந்து விளங்கினார்கள் தெய்வத்திருவள்ளுவரும்.

'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு'

(திருக்குறள்- விருந்தோம்பல் 01)

என விருந்தோம்பலை இல்லறத்தின் முக்கிய கடனாகக் கூறுகின்றார். பெரிய புராணத்தில் வரும் இளையான் குடிமாற நாயனார் போன்றோரின் புராணவரலாறுகளும் விருந்தோம்பற்பண்பை விளக்கி நிற்கின்றன. பாரதப் போருக்கு அழைக்கப்பட்ட தமிழ்மன்னன் ஒருவன் போரிற் கலந்து கொள்ளவில்லை; அவன் போரிலே தலைப்பட்டவர்க்குச் சோறூட்டும் அறத்தொண்டை மேற்கொண்டான். இவ்வரலாறுகள் விருந்தோம்பற் பண்பின் சிறப்பை விளக்குகின்றன.

பழந்தமிழர் கடவுள் உண்மையில் உறுதியுடையவர்கள் சமய நெறி நின்றார்கள் இவர்கள் கடவுளைக் கந்தழி என்னும் பெயரால் வாழ்த்தினார்கள்.

'கொடிநிலை கந்தழி வள்ளியென்ற
வடு நீங்கு சிறப்பின் முதல்வன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே'

(தொல் புறத்திணை இயல் - 33)

எனப் பழம் பொருள் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் கூறுகிறது. கொடிநிலை சூரியன்- கந்தழி-அக்கினி; வள்ளி – சந்திரன் என மறைமலை அடிகள் விளக்கம் தருகிறார்;

பண்டைத்தமிழர் கடவுளைக் கந்தழி என்னும் பெயரால் வணங்கினார்கள். கந்து என்பது கல்லாலேனும் மரத்தாலேனும் செய்யப்பட்டது. கட்டற்ற ஒன்று கந்தழி என விளக்கந் தருவாருமுளர், அழுக்காறு, அவா, வெகுளி முதலிய கட்டுக்கள் கடந்து விளங்கும் இன்ப அன்பே கந்தழி எனும் கடவுளாகும். இதனையே மாணிக்கவாசகரும் மாறிலாப்பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடைய அன்பே, என அருளிச் செய்தார். சிந்துவெளிநாகரிகம் சிவவழிபாட்டின் பழமையையும் லிங்கவழிப்பாட்டின் சிறப்பையும் நிறுவிநிற்கிறது.

இனி பண்பாடு என்பதற்குச் சமூகவியற்படியும் மானிடவியற் படியும் பொருள் கூறுவது முக்கியமாகும். பொதுவாகப் பண்பாடு எனும் சொல் ஓவியம், இசை, சிற்பம், தத்துவம் போன்ற விடயங்களைக் குறிக்கும். ஆனால், சமூக விஞ்ஞானப்படி பண்பாடு என்றால் அறிவு, நம்பிக்கை, கலை, நியாயம், நீதி, வழக்கம் வேறு நற்குணங்களோடு கூடிய பழக்கம் ஆகிய எல்லாவற்றையும் அடக்கும். பண்பாட்டின் முக்கியத்துவத்தை அறிதல் நிகழ்கால விஞ்ஞான அபிவிருத்திகளில் ஒன்றாகும். நீரில் வாழும் ஒருவன், தான் நீரில் வாழ்வதாக அறிவதுதான் அவனுடைய கடைசிச்கண்டு பிடிப்பாகவிருக்கும். அவன் ஏதாவது ஒரு காரணத்தால் தரைக்குக் கொண்டு வரப்பட்ட பொழுதிலேதான் நீரில் வாழ்வதாக அவனுக்கு உணர்ச்சி உண்டாகிறது; மிக நீண்ட காலந்தொடக்கம் தனது சமூகமும் பழக்க வழக்கங்களும் வேறு சமூகத்துடனும் பழக்க வழக்கங்களுடனும் மோதும்போது மட்டுமே மனிதன் தனது பண்பாட்டின் மகிமையை அவனால் அறிய முடிகின்றது. இன்று புலம் பெயர்ந்து பலநாடுகளில் வாழும் தமிழர், சைவர்கள் ஆகியவர்களின் வாழ்வில் கண்ட அனுபவமும் இதுவேயாகும்.

சமூகவியலாரும் மானிடவியலாரும ஆற்றல், திறமை, வழிபாடுகள், பழக்க வழக்கங்கள் இலக்கியக்கலை என்பன ஒரு சமூக அங்கத்தவன் பெற்றுக் கொண்ட உரிமைகள் என்பதை ஏற்றுக் கொள்வர். பண்பாட்டில் இருபகுதிகள் உண்டு. (1) உலகாயதப்பண்பாடு (2) ஆன்மீகப்பண்பாடு அவையாகும். பொருள் பண்டங்கள் என்பன உலகாயதப்பண்பாட்டில் அடங்கும். கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை ஆகியன உலகாயதப் பண்பாட்டுப் பண்புகளாம். மானசீக முறையில் மனிதனது உள்ளத்தில் நிகழ்கிற எண்ணம், மொழி, வழிபாடு, நம்பிக்கை, பழக்கவழக்கங்கள் என்பன ஆன்மீகப் பண்பாட்டில் அடங்கும்.

பழக்கம் பண்பாட்டின் முக்கிய அமிசம். பழக்கம் மாற்றமடைந்தால் பண்பாட்டிலும் மாற்றம் உண்டாகலாம். மனிதனுடைய பழக்கத்தைக் கட்டுப்படுத்தும் நீதிகள் சமூகத்திற்கு சமூகம் வேறுபடலாம். திருமணத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளையும் சட்டதிட்டங்களையும் உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். ஒரு தார விவாகம். பலதாரவிவாகம் போன்ற சமூக நீதிகள் அச்சமூக அங்கத்தவர் கூட்டத்தின் விருப்பம் அல்லது தீர்மானத்தின்படி நடப்பவை. ஆனால், சமூக சம்மதத்தோடு இச்சட்டம் மாற்றம் பெறலாம். சமயம் அத்தகையதொரு சமூகக் கூட்டு நிறுவகம். பண்பாட்டு வளாச்சிக்குச் சமயமும் சமயப்பின்னணியும் மிகவும் முக்கியமானவை. சமயக்கிரியைகள் பழக்க வழக்கங்கள் சமூக அங்கத்தவர்களிடையே ஒற்றுமை, சமாதானம் என்பனவற்றை நிலைநாட்டின, சமயம், இலக்கிய, சிற்பக்கலை வளர்ச்சிக்கும் துணை செய்கிறது. இதற்கு உலகத்தில் எந்தச் சமூகத்திலிருந்தும் உதாரணங்களைக் காட்டலாம். ஒரு சமயத்தில் பழக்க வழக்கம், உணர்ச்சி, நம்பிக்கை ஒழுங்கு என்ற நான்கு விடயங்கள் காணப்படுகின்றன. சமயம் என்ற பரிசுத்தபண்டமும் அதனோடு சம்பந்தமான நம்பிக்கையும் அநுபவங்களும் ஒன்று கலக்கின்றன. அவற்றைப் பின்பற்றுபவர்கள் ஒரு நல்லொழுக்கமயமான வழிபாட்டைப் பெறுவதற்குச் சமயம் வழிநடத்தும்.

பண்பாட்டுக்கூறுகளிடையே நிலவும் பிணைப்பைப் பண்பாட்டு ஒன்றியம் (Integration of Culture) எனப்பண்பாட்டு மானிடவியலார் கூறுவர். வலிமையான ஒன்றியத்தைக் கொண்ட பண்பாடுகளில் பண்பாட்டு மாற்றம் குறைவாக நிகழும். வலிமையற்ற ஒன்றியத்தில் மாற்றங்கள் விரைந்து நிகழும், மதமாற்ற விடயத்தில் இக்கருத்து முக்கியமானதாகும். மடகாஸ்கர் தீவுமக்கள் மீது குடியேற்ற மக்கள் கிறிஸ்தவத்தைத் திணிக்க முயன்றனர். ஆனால். தோல்வியே கண்டார். அவர்களது பண்பாட்டு ஒன்றியம் மிகவும் வலிமையாக இருந்ததே அதற்குக் காரணம் என்கிறார் இலிண்டன். (Ralph Linton)

இந்த அடிப்படையில் கந்தபுராண கலாசாரம் யாழ்ப்பாணத்தில் நிலைபெற்றிருந்தது. கந்தபுராணம், படிப்பவர்களையும் கேட்பவர்களையும் புனனெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கும். அம்மட்டில் அமையாமல் மேலாம் நன்னெறி ஒழுகச் செய்யும். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினையும் பயக்கும். இந்திரராகிப் பார்மேலின்பமுற்று இனிது மேவி, சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வதற்கு உறுதுணையானது கந்தபுராணம் என இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கந்தபுராண கலாசார நூலில் குறிப்பிட்டுள்ளார். பண்டிதமணி

அவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின வாரிசாக 'அண்மைக்காலத்தில் வாழ்ந்தவர். சித்தாந்த சாகரமாய் பண்டிதமணியாய் விளங்கி – சைவத்திற்கும் தமிழிற்கும் பெருந்தொண்டாற்றிய பேராசான் ஆவர். கந்த புராணகலாசாரத்தைக் கட்டி வளர்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் மாணாக்கராகிய செந்திநாதையர் அவர்களது கலாசாரப்பணி பற்றிப் பண்டிதமணி அவர்கள தமது கந்தபுராண கலாசாரம் என்ற நூலில் விவரித்துள்ளார். அவர் செந்திநாதையர்பற்றிக் குறிப்பிடுகையில் செந்தினாதையர் கந்தபுராண கலாசாரத்தில் (பண்பாட்டில்) முழுகித்திளைத்தவர்; கந்த புராண நவநீதம் என்னும் நூலும் செய்திருக்கின்றார். அவர் யாழ்ப்பாணக் கலாசாத்தின் ஒரு பிரதி நிதி எனக் குறிப்பிடுகிறார்.

மேலும் யாழ்ப்பணாக்கலாசாரம் ஆங்கில கலாசாரத்தைக் கபளீகரம் செய்தது. பெரிய ஆக்க வேலைகளுக்கு அடிப்படையாக அத்திபார வேலைகளுக்கு வழிசெய்திருக்கின்றது" என்றும் எழுதியிருக்கிறார். சைவசித்தாந்தம் இலக்கணமாயின் கந்த புராணம் அதற்கு இலக்கியமாகும். கந்தபுராண கலாசாரம் அருஞ்சந்தர்ப்பத்தில் ஒரு நாவலரைத் தந்தது. அன்றி நாவலர் எடுத்த முயற்சிகளுக்குத் தோன்றாத் துணையாய் அநுகூலமுஞ் செய்தது. கந்தபுராணப்படிப்பு நாவலர் காலத்திலே உச்ச நிலையை அடைந்தது. அவருக்கு ஒரு மருகர் உரை சொல்லுதற்கென்றே பிறந்தவர். அவர் தான் வித்துவ சிரோமணி பொன்னம் பலபிள்ளை. அப்பொழுது சைவாலயங்கள் தமிழும் சைவமும் வளரும் சர்வகலாசாலைகள் ஆயின. இந்த முறையில் கந்தபுராணகலாசாரம் பண்பாட்டு ஒன்றியமாக இருநதமையாற்றான் யாழ்ப்பாணத்தில் கிறித்தவமும் வேரூன்ற முடியாமற் போனது.

சமயநெறியில் வளர்ந்த பண்பாடு, பண்பாட்டுக்கூறுகள் சிறப்பு பெரியது. பண்பாட்டு ஒன்றியம் வளர்ந்தாற்றான், மதமாற்றம், சீரிழிவு என்பனவற்றைத் தடுக்க முடியும். இலக்கிய நூல்கள் காட்டும் பண்பாடு மாத்திரமன்றி சமூகவியல், மானிடவியல் முறையில் ஆய்வு செய்யினும் சமயநெறியியல் வளர்ந்த பண்பாடுகள் மக்கள் சமுதாய வாழ்வுக்கு வளமளிப்பனவாக விளங்குகின்றன. சித்தாந்த கலாசாரம் கந்தபுராணம் கலாசாரம் என்ற பண்பாடுகள் தாம் புலம் பெயர்ந்த மக்களின் ஒன்றிணைந்த வாழ்விலும் ஒளி வீசி நிற்கின்றன. மேலும் இவை எமது சமய நெறியிற் பண்பாடுகளை கட்டிக்காத்துப் பேணல் வேண்டும் என்னும் முனைப்பான போக்கையும் வளர்த்து வருகின்றன.

மேன்மை கொள் சைவநீதி வழிவந்த பண்புகள் விளங்குக உலகமேலாம்.

**உசாத்துணை நூல்கள் :**


01. திருக்குறள்
02. கந்தபுராணம்
03. கந்தபுராணம் கலாசாரம் - பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
04. கந்தபுராணச் சொற்பொழிவு – பண்டிதை தங்கம்மா அப்புக்குட்டி
05. பெரிய புராணம்
06. கலித்தொகை
07. தொல்காப்பியம்
08. பண்பாட்டு மானிடவியல் - சீ. பக்தவத்சல பாரதி
09. செந்தமிழ்ச் செல்வி
10. சிவஞானபோதம்
11. திருமந்திரம்
12. திருவாசகம்
13. இந்தியப் பாண்பாடும் தமிழரும் - எஸ். இராமகிருஷ்ணன்
14. தமிழர் வரலாறு நாகரிகம் பண்பாடு
15. தமிழர் பண்பாடு – எஸ். வையாபுரிப்பிள்ளை.

# PEACE IS POSSIBLE



Prem Rawat. also known by the honorary title Maharaji, speaks, to people around the world about the possibility of knowing inner peace and contentment.

Some people trust in leaders, but people don't trust in themselves -Why? When we , the citizens of this earth , start to trust in ourselves and the changes we want to bring, when we start to trust that truly, truly, we want world peace then it won't take one day to establish .........

**-Maharaji -**

On September 12, 2002 Maharaji delivered the keynote address at the United Nations Conference Centre in Bangkok, Thailand. He dealt with the theme at the core of the United Nations mandate ............. **Peace.**

Following is an excerpt from his keynote address:
"Know thyself" has echoed through the ages. This simple statement has been revised and updated but has never lost its charm or intrigue. We all in our own ways want to better ourselves be it in our career, our family, our friends, our skills - whatever our chosen endeavour be.

However one cannot forget one's sell Knowledge of the self is also important ..... to some indeed paramount. Knowledge of the self begins with the self Your universe resides within you, waiting to be discovered. What does it take ? It takes a sincere desire, an earnest thirst, understanding is a wonderful surprise. That'which didn't make sense all of a sudden does.

'The absence of war' Maharaji says 'is not peace'. It is people - it is us who start the wars. When differences become so great and intolerance reaches epic proportions wars will happen. When I fail to see another being as I see myself, wars

will happen. When the causes and reasons become greater than the sanctity of peace wars will happen. And when ever war begins outside, it will have begun on the inside first. And the war on the inside is far more dangerous, because it is that may never be quenched. It can rage on, rage on, rage on, and rage on. In the battle outside at least you will hear a noise, but in the battle inside you may not hear a beep. The battle outside has strategies, the battle inside may be just going on with nobody even negotiating. This is your time on the face of this earth. This is your opportunity to live.

"When peace begins within me and has taken hold of me, when I have allowed it to blossom, then peace is also possible for me on the outside too. Then peace is Possible because I have felt it."

"Peace is not about words". It is about feeling. For a thirsty person saying "Water, water, water, water" will not quench the thirst. They need water. And not only they need water, they actually need to feel that their thirst has been quenched before they can say " Ah that feels good Thank you". We have forgotten the simplicity. "The search for peace is not a quest for the millennium or the next. For as long as their had been people on the face of this earth, the one thing they all admired is peace-They have gone to great lengths to have peace in their lives. And peace comes when you can begin to look within. Peace comes when you can begin to appreciate this existence".

"Peace" he says "does not belong to any religion'. Peace does not belong to any country or society. The address for peace has been given again and again throughout history. Peace resides within the heart of human beings within you and me".

A long time ago, the bar was set for mankind that peace is important. A formula was given. 'Peace and Prosperity'. We have forgotten the word Peace and remembered Prosperity. The formula is not going to work without Peace. We have gone to the moon, but we have been unsuccessful in establishing peace on earth. We have developed mass destruction. Creating them becomes an art form with billions of dollars spent on research. But when it comes to Peace, we just wave over our hands and say 'Peace, peace, peace'. We need to understand what peace is and where it can be found. Is peace when the neighbour stops fighting? Is peace a monastery ? At top of the ocean? On top of a mountain ? At the bottom of the ocean? No. Peace is within every human being.

Human beings are like unlit lamps that need to be lit. If you want world peace it does not begin with the world It begins with every individual. It is people who need peace. Not the crows. Not the monkeys not the giraffes. We are the ones

who hunger for peace. We are the ones who need peace in our lives. 'If peace is within me how do I get it? First truly understand that it is within you. Accept the possibility of peace being inside of you. If we keep believing that peace is somewhere else we will never find it.

The peace he talks about is innate that it can be felt in the middle of war. It is the freedom that can be enjoyed by a prisoner inside of jail. Nobody can take it away from you. It is dependent only on you, not on the outside circumstances. You carry that peace within you wherever you go whatever those circumstances may be. That is the peace I am talking about. That fundamental peace you must feel every day. Peace is not something to feel once and then say 'okay that's it. Peace needs to be felt every single day every moment if possible.' And you have to be the judge of whether you feel it. Nobody else can tell you 'Now you are Peaceful' it is okay.

Ignorance is mankind's biggest failure. The saying is "Ignorance is bliss" it is not bliss. Be enlightened in this lifetime. Whatever it takes. This is your potential and you should fill it. You are blessed beyond what you know. It is time to discover every blessing you have been given so you can be thanlkful so you can be fulfilled.

"Learn who you are, understand that peace is within you. Celebrate that you exist. Don't wait for your birthday. Celebrate every breath that comes into you every day you are given. Find Peace in your life. Search for it. Wherever you find it good. If you can't find it I can help you I have a way to go inside".

Maharaj's message is extremely simple, extremely easy to learn. Maharaji offers a practical way to experience the feeling that is inside of you. It can help us lead more fulfilled lives, what ever our circumstances might be.

For further information:
www.maharaji.org
www.thekeys.maharaji.net
www.withinu.org

*Nalini Kaneshayogan*
***Attorney-at-Law &***
***Notary Public***

# சட்டத்தின் அடிப்படை சமயமே

**V.S.MAHALINGAM J.P.U.M**
**Justice of the Peace & Unofficial Magistrate**
**Attorney-at-Law, Notary Public &**
**Commissioner for Oaths**

சட்டம், சமயம் ஆகிய இரண்டினையும் வெவ்வேறாக பிரித்து வரையறுக்க முடியாது. சமயக்கருத்துக்களே காலப்போக்கிலே சட்ட வலுபெற்று சட்டங்களாயின. ஆரம்ப காலத்தில் மனிதன் தனக்கு மேலான சக்தி உண்டென நினைத்து வழிபட்டு அந்த வழிபாடு மூலமாக உருவங்கள் அமைக்கப்பட்டு காலப்போக்கிலே அவை சமயமாக மாறின. சமயமும் சட்டமும் நல்ல சிந்தனைகளையும், கருத்துக்களையும் உணர்த்துகின்றன. இவ் இரண்டும் பொது அம்சமாகிய மனசாட்சி, நீதி, நியாயம் என்பவற்றை போதிப்பது மட்டுமன்றி வலியுறுத்துகின்றதும் கூட. இவை இரண்டிற்கும் பாரிய வித்தியாசமின்றி, கூடுதலான அளவு ஒற்றுமையே காணப்படுகின்றது. இவ் இரண்டும் ''பொய் சொல்லாதே'', ''திருடாதே'', ''இன்னோர் உயிரை பறிக்காதே'', ''பிறர்பொருளை அபகரிக்காதே'' போன்ற பஞ்ச சீல கொள்கைகளை போதிக்கின்றது.

ஆனாலும் சட்டமானது மேலதிகமாக ''கொலை செய்யாதே'' ''கொள்ளை அடிக்காதே'' இவைகளை செய்தால் தண்டிக்கப்படுவாய், சிறை வாசகமும், தூக்கு கயிறும் உனக்கு பரிசாக வழங்கப்படும் என எச்சரிக்கினறது. ஆதலால் சட்டத்துக்கு அத்திவாரமும் மூலவேரும் சமயம்தான். சமயம்தான் சட்டத்தினை உருவாக்கியது. சமயமானது பஞ்ச சீலக்கொள்கைகளை மீறினால் ''நீ துன்பப்படுவாய்'' கடவுளினால் என்றோ எப்போதே தண்டிக்கப்படுவாய் கடவுளின் தீர்ப்பு என்றே ஒருநாள் உனக்கு கிடைக்கும் இல்லையேல் ''மறுப்பிறப்பிலாவது கஷ்டப்படுவாய்'', ''நகரத்தில் கிடந்து துன்புறுவாய்'' என்றே போதிக்கின்றது.

சமயத்தினை மதிப்பவன் நிச்சயம் சட்டத்தினையும் மதித்தே தீருவான். இதனால்தான் நீதிமன்றங்களில் பைபிளின் மேல் கைவைத்து சத்தியம் செய்து சாட்சியம் அளிக்கின்றோம். அதாவது நீதிமன்றத்தில் ''நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையினைத் தவிர வேறு ஒன்றுமில்லை'' எனக் கூறி சத்தியம் செய்கின்றோம். இதனால்தான் பைபிளில் கைவைத்து சத்தியம் செய்தபின் ''பொய் சொன்னால் தண்டிக்கப்படுவாய் என்ற அச்சத்தினையும் பயத்தினையும் உருவாக்குகின்றது'' நீதியினை பெறும் மார்க்கமே சட்டமாகும். ''இச் சட்டத்தின் முன் யாவரும் சமம். ஆயிரம் குற்றவாளிகள் தப்பிச்செல்லலாம். ஆயினும் ஒரு நிரபராதி தண்டிக்கப்பட கூடாது''. என்ற புனித தத்துவமும் இச்சட்டத்தினுள் அடங்கியுள்ளது.

ஆனால் சட்ட நடைமுறைகளில் உள்ள சில ஓட்டைகளினால் சிலவேளை குற்றவாளி தப்பி சென்று விடலாம். ஆனால் நிரபராதி ஒருவர் தண்டிக்கப்பட கூடாது என்று வலியுறுத்துகின்றது சட்டம். மனுநீதி கண்ட சோழன் பற்றி அறிந்திருப்பீர்கள். அவ் மன்னனின் மைந்தன் தேரோட்டி செல்லும் போது'' தேர்ச்சில்லில் அகப்பட்டு

கன்றினை இழந்த பசு ஆராய்ச்சி மணி அடித்தது. நீதி கேட்ட போது தன் மகனையே தேர்காலில் நசித்து கொன்ற சம்பவத்தினை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். சாதாரண பிரஜையாக இருந்தாலும் பெற்ற மகனாக இருந்தாலும் ''சட்டத்தின் முன் யாவரும் சமம்'' என்ற அருமையான கருத்தினை சட்டம் உணர்த்தி நிற்கவில்லையா?

சமயத்தினை ஆயுர்வேத மருத்துவத்துக்கும் சட்டத்தினை ஆங்கில மருத்துவத்துக்கும் நாம் ஒப்பிட்டு நோக்கலாம். அதாவது ஆயுர்வேத வைத்தியம் நீண்டகாலத்தின் பின்பு நிவாரணம் அளிக்கும் ஆங்கில மருத்துவம் உடனடி நிவாரணியாக செயற்படும். இவ் வேளையிலே உங்களுக்கு நீண்ட கால நிவாரணியா? அல்லது உடனடி நிவாரணியா தேவை என்பதனை நீங்களே தீர்மானிக்க வேண்டும்.

கிருஷாந்தி கொலை வழக்கு பற்றி கேள்வியுற்றிருப்பீர்கள். பரீட்சை விட்டு வீடு திரும்பிய மாணவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி துடிக்க துடிக்க கொலை செய்தார்களே, அது மட்டுமன்றி அவரை தேடிச் சென்ற தாய், தம்பி, பக்கத்து வீட்டுக்காரர் அனைவரையும் துடிக்க துடிக்க கொலை செய்யப்பட்ட போது சட்டம்தான் அவர்களுக்கு மரணதண்டனை வழங்கியது. அது மாத்திரமன்றி ஒரு கல்லில் இரண்டு மாங்காயினை விழுத்தியது போல, இந்த தண்டனையினை பெற்ற குற்றவாளிகள் நாம் மட்டும் தான் குற்றவாளிகளா? செம்மணி புதைகுழியில் 600 பேர் புதைக்கப்பட்டார்களே அதற்கு யார் குற்றவாளிகள் என கேள்வி எழுப்பி இன்னோர் உண்மையினையும் வெளிக்கொணர்ந்தார்களே, இவ் உண்மை வெளிவந்தது சட்டத்தினால் என்பது புலனாகின்றது. செம்மணி புதைகுழி வழக்கு விசாரணை கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

அடுத்து பம்பாய் அழகி ஜோன்றீற்றா தேன் நிலவினை கழிக்க இலங்கை வந்தபோது காக்கைதீவு கடற்கரையில் கயவர்களினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட போது உடனடி நிவாரணியாக மரணதண்டனை கொடுத்தது சட்டம்தான். சில வேளை சமயவாதிகளும் சமயத்தின் பேரால் நஞ்சூட்டப்பட்டு சமுதாய அழிவினை மேற்கொள்ளும் போது சட்டம்தான் அச்சமயத் ஸ்தலங்களை காப்பாற்றியது என்பது தெளிவாகும். இந்தியாவில் பாபர் மசூதி இடிக்கப்பட்டு முஸ்லீம்களுக்கும் இந்துக்களுக்கும் பெரியதோர் இரத்தக்களரி ஏற்பட இருந்தபோது அதனையும் தடுத்து நிறுத்தியது இச்சட்டமே.

சமயத்தின் பேரால் பல்வேறு மோசடிகள் செய்து பல்வேறு பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொன்ற பிரேமானந்தா போன்ற போலிச்சாமிகளுக்கும் ஆசாமிகளுக்கும் நீண்ட கால சிறைவாசம் அனுப்பி வைத்ததும் இந்த சட்டம்தான்.

இந்திய சுதந்திரத்துக்கு வித்திட்ட அகிம்சாவாதி அண்ணல் காந்தி கோட்சே இந்துமத வெறியினால் சுட்டு கொள்ளப்பட்டது போன்ற சம்வங்கள் எமது சமயத்துக்கு ஏற்பட்ட இழுக்கும் பின்னடைவும் என்றே கூறலாம்.

அண்மையில் ஜூன் மாதம் 6ம் திகதி 350 தமிழர்கள் லொட்ஜ்களில் இருந்து நடுநிசிவேளையில் தட்டி எழுப்பப்பட்டு உடை மாற்றவும், காலைக்கடன் கழிக்கவும் இடமளிக்காமல் வவுனியாவில் கொண்டு விடப்பட்டார்களே. இவ்வேளையில் சமயவாதிகளும், ஆன்மீகவாதிகளும் மனச்சாட்சியுள்ளோரும் அவர்களுக்காக ஆதங்கப்பட்டார்களே ஒழிய மதத்தின் பேரினால் எதுவும் சாதிக்க முடியவில்லை. இவ் வேளையிலே விழித்து கொண்டது சட்டம். கலாநிதி சரவணமுத்து பாக்கியசோதியினால் உடனடியாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை வழக்கில் ''லொட்ஜில் இருந்து கூட்டிசெல்லப்பட்ட 350 தமிழர்களுக்கும் உடனடியாக கொழும்பில் உள்ள லொட்ஜிக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட வேண்டும்'' என்ற

உயர் நீதிமன்ற தீர்ப்பினால் அவர்கள் பட்ட துன்பத்துக்கு உடனடி நிவாரணம் வழங்கப்பட்டது மனதுக்கு சந்தோசத்தினையும் அளித்தது. தூங்கிக் கொண்டிருந்த உலக நாடுகள் பலவும் விழித்து கொண்டது. இதற்கு சர்வதேச ரீதியில் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டது. இலங்கையில் மனித உரிமை மீறல் சம்பந்தமாக விசாரிக்க வேண்டும் எனக் கூக்குரலுவும் எழுப்பியது. இதன் பின்பு அரசும் அதற்காக வருத்தம் தெரிவித்தது. இனிமேல் இவ்வாறன சம்பவங்கள் நடைபெறமாட்டாது என அரச உயர்பீடமும் வாக்குறுதி அளித்தது.

இவைகளை எல்லாம் உற்று நோக்கும் போது சமயத்தினையும் சட்டத்தினையும் ஒழுங்காக கடைப்பிடித்தால் நாட்டில் துன்பம், துயர்கள் நீங்கி நல்லாட்சி நிலவும் மக்கள் சாந்தியும் சமாதானத்துடனும் வாழ்வார்கள். என்பது தெளிந்த உண்மையாகும்.

**நன்றி**

# சைவ வாழ்வும் ஆன்மீகமும் தற்காலச் சமுதாயத்திற்கு அவற்றின் பொருத்தப்பாடு

~ கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

சைவம், மனிதவாழ்வு மூன்று நிலைகளில் அமையக் காண்கின்றது. அவையாவன:- இம்மை வாழ்வு, மறுமை வாழ்வு, மோட்ச வாழ்வு ஆகும். இம்மையும் மறுமையும், பிறப்பு, இறப்புடனும் இன்ப துன்ப அனுபவங்களுடனும் தொடர்புடையன. மோட்ச வாழ்வு என்பது மரணமிலாப் பெருவாழ்வு அது பேரின்ப அனுபவத்துடன் இணையப் பெற்றது எனச் சாத்திர நூல்கள் கூறும். ''வாழ்க்கை வாழ்வதற்கே'' என்பது உலகியல் சார்ந்த கொள்கை. அதனை எப்படியும் வாழலாம் என்பதில் சைவத்திற்கு உடன்பாடில்லை. மனிதர்கள் தம் வாழ்வினை இப்படித்தான் வாழ வேண்டும் என்பதனை வரையறை செய்து, வையத்துள் வாழ்வாங்கு வாழவாழ்தல், மண்ணில் நல்ல வண்ணம் வாழ்தல் என்பவற்றின் மூலம் மனித வாழ்வின் உன்னதத்தை அடைந்து, ஈற்றில் மரணமிலாப் பெருவாழ்வினை எய்துவதற்கான நெறிமுறைகளையும் சைவம் வகுத்துத் தந்துள்ளது. அந்த வகையில் சைவம் ஒரு சமயம், ஒரு தத்துவம் என்பதுடன் ஒரு வாழ்க்கை நெறியாகவும் அமைந்துள்ளமை நோக்கற்பாலது. வாழ்க்கைக்கு உலகியல் பேறுகளுக்கு வேறாக முடிவான பெரும்பேறு ஒன்றும் உள்ளது. அதுவே ஆன்மலாபம் எனும் முத்தி இன்பம். அதனை அடைய வேண்டுமாகில், இம்மை, மறுமை வாழ்வுகளைச் செம்மையாக வாழ்ந்து காட்டுதல் இன்றியமையாததாகும்.

**மனித்தப் பிறவி**

''மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'' என்கிறார் அப்பரடிகள். எமக்குக் கிடைத்தற்கரிய மனிதப் பிறவி கிடைக்கப் பெற்றமை, சிவநெறியில் நாம் வாழ்வதற்குக் கிடைக்கப்பெற்ற அரிய வாய்ப்பு. சிவபெருமான், எம்மீது கொண்டுள்ள அளப்பருங் கருணையே இதற்குக் காரணம்.

''என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே'' என்ற தேவார அடியை அடிக்கடி நினைவிற் கொள்ள வேண்டும். இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். இறைவனை விசாரித்து, அவன் விரும்பியவற்றில் ஈடுபடுதலும் விலக்கியவற்றை விலக்கி விடுதலும் ஆகிய செம்மை வாழ்வினை, நாம் வாழ்ந்து காட்டுதலே, இறைவனுக்கு நாம் காட்டும்

நன்றியாகும். செம்மை வாழ்வு என்பது ஆன்மீக வாழ்வு.
''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.'' என்பது நாவலர் பெருமான் வாக்கு.

இதிலிருந்து மனிதப்பிறவி எமக்குத் தரப்பட்டதன் நோக்கத்தை அறிந்து கொள்ளலாம். நாம் கடவுள் நிலையை அடைவதே வாழ்வின் குறிக்கோள். அதற்காகவே கடவுள், எமக்கு மனித உடலையும், கருவி கரணங்களையும் வழங்கியுள்ளமை எம்மால் உணர் தற்பாலாது. அந்த நோக்கத்தை மறப்பவர், உலக ஆசாபாசங்களில் மூழ்கி, தாமும் துன்பங்களுக்குள்ளாகி, ஏனையோரையும் துன்பங்களில் மூழ்கித் தத்தளிக்கச் செய்கின்றனர். இம்மை வாழ்க்கையை நரகமாக்கி விடுகின்றனர். மறுமையிலும் துன்பங்கள் தொடர்வதற்கு வித்துக்களை விதைத்தும் விடுகின்றனர். இந்த வாழ்க்கை கிடைக்கப்பெற்றதன் ஒரே நோக்கமான ஆன்ம ஈடேற்றம் பெறுதலையும் இழந்து விடுகின்றனர்.

**ஆன்மீக வாழ்வு**

சைவம் எமது சமயம், சைவசித்தாந்தம் அதன் தத்துவம். பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் உண்மையை விளக்குவது சைவசித்தாந்தம். பசு என்பது உயிர், மனித உயிர் ஆனது ஆணவம், கன்மம், மாயை என்னும் பாசத் தளைகளினால் கட்டுண்டிருக்கும் போது பசு என்ற பெயரைப் பெறுகின்றது. அந்த நிலையில் மனிதன் மனித நிலையிலிருந்து கீழிறங்கி, மனிதப் பண்புகளை விலக்கி, மிருகப் பண்புகளை மிகுதியாகப் பெற்றுக் கொள்கிறான். பற்றுக்கள் வழி செல்ல நேரிடுகிறது. உலகப் பற்றுக்கள் அதிகரிக்க அதிகரிக்க, சமூகங்களில் கொடுமைகள் பெருகுகின்றன.
பதி என்பது கடவுள். கடவுளுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை அறிந்து கொள்வதால் ஆன்மீகத்தின் உண்மை நிலையைத் தெரிந்து கொள்ளக் கூடியதாயிருக்கும். கடவுள் அநாதியிலேயே உயிரோடு அத்துவிதப்பட்டிருக்கிறது. உயிரானது தன்னோடு உடனாயுள்ள பரம்பொருளை அறிந்து அதனோடு ஒன்றுபட்டு அதனால் கிடைக்கப் பெறும் வாழ்க்கை அனுபவங்கள் யாவர்க்கும் நன்மை பயப்பனவாய் அமைகின்றன.

''அத்துவிதமாவது இரண்டற்ற இருபொருட் கூட்டரவு. இறைவனுக்கும் உயிருக்குமுள்ள கூட்டரவு நித்தியமான கூட்டரவு''- பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை.

அப்படியிருந்தும், உயிர், பதியோடு இணைய மறுத்து, ஆணவம் முதலிய பாசப் பொருள்களுடன் அத்துவிதப்பட்டிருக்கின்றது. இந்த அவல நிலையையே இன்று, உலகில் நிதர்சனமாகக் காண்கிறோம். இன்று, மனிதர்கள், உலகியல் பற்றுக்களில் அதிக நாட்டங்களும் ஈடுபாடுகளும் கொண்டுள்ள அதே வேளை ஆன்மீக வறுமையில் சிக்கி, உலக அமைதியைக் கெடுக்கும் நிலைமைகளை உருவாக்கியும் வருகின்றனர்.

பற்றுப்பாசங்களைப் படிப்படியாக விட்டுவிட்டால், மனிதன் பதியுடன் அத்துவிதப்பட்டு விடுகிறான். கடவுள் நிலையை எய்துதலை நோக்கி நடைபோடுகிறான். ஆன்மீக வாழ்க்கை

கைகூடுகிறது. ஆன்மீக வாழ்வு மலருவதற்கு, மனிதரில் உள்ளார்ந்து அடங்கியிருக்கும் ஆன்மீகம் வெளிப்பாடாக வேண்டும். மனிதன் இயல்பாகவே ஆன்மீக வளம் கொண்டவன். ஆன்மீக வளம் பயன்படுத்தப்படாமல், மனிதனுள் உறங்கிக் கிடப்பதற்குக் காரணம் அவனிடமுள்ள அறியாமையேயாகும். அறியாமைக்குக் காரணம் ஆணவமலம். மனிதன் ஆணவத்துடன் கட்டுண்டு, இருக்கும் வரை, ஆன்மீகப்பண்புகள், விழுமியங்கள் மனித வாழ்வில் புறக்கணிப்புக்குள்ளாகியே வரும் நிலை காணப்படும். ஆன்மீக சாதனையும் நிகழ இடமில்லாமல் போய்விடும். ஆன்மீக அனுபவத்திற்குத் தடையாக இருப்பது பாசத்துடனான தொடர்பு. அத்தொடர்பினின்று நீக்கம் பெற்றுவிட்டால், மனிதன் பதியோடு தொடர்புடையவன் ஆகிவிடுகிறான். அறியாமை நீங்கப்பெற்று அறிவொளி பிரகாசிக்கின்றது. ஆன்மீக வாழ்வு மனிதனில் கைவரப் பெறுகிறது. கடவுள் நிலையை அடைவதே வாழ்வின் இலட்சியம். ஆன்மீகம் நம் உள்ளே இருக்கிறது என்பதை உணர வேண்டும். ஆன்மீக சாதனைகள் யாவும் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துகின்றன.

தூய்மையான உள்ளத்திலேயே கடவுள் அனுபவம் வந்தமையும், ''மனதுக்கண் மாசிலன் ஆதல்'' என்னும் நிலைமையே மனத்தூய்மை. உண்மையொளி மனதில் தோன்றினால், நல்ல எண்ணங்கள், சிந்தனைகள், உணர்வுகள் தோன்றும். ''உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகில் வாக்கினிலே ஒளி உண்டாகும்.'' என்கிறார் மகாகவி பாரதியார். அதன் வழி செயலிலும் ஒளியுண்டாகும். ஆன்மீக வாழ்வு என்பது உலகப்பற்றினை நீக்கி, கடவுளில் அன்பு செலுத்தி, செம்மை வாழ்வு வாழ்வதாகும். எல்லோரும், துன்பங்களிலிருந்து விடுதலை அடையவும் இன்புற்று வாழவும் விரும்பி, முயற்சிக்கின்றனர். இம்முயற்சிகள் கைகூட வேண்டுமாகில், ஒவ்வொருவரும் தம்முள் அடங்கிக் கிடக்கும் ஆன்மீகத்தை வெளிப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

'' இறைவனிடமிருந்து கிடைத்த சரீரத்தை இறைவன் கருத்தறிந்தே பயன்படுத்த வேண்டும்'' பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை.

இந்தச் சரீரம் இருக்கும்போது தான், உயிரை வளர்க்க முடியும். ''உடம்மை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'' என்கிறார் திருமூலர். உயிரின் வளர்ச்சியின் பொருட்டே எமக்கு இந்தச் சரீரம் இறைவனால் உபகரிக் கப்பட்டது என்பதை உள்ளந்தோறும், இறைவனின் கருத்துப் புலப்படும்.

''உயிரை வளர்த்தலானது உயிர் தன்னோடு அத்துவிதப்பட்டிருக்கும் இறையோடு உயிராகிய தானும் அத்துவிதப்படுவதற்கு வழி செய்தலாகும்'' - பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை.

உடம்பை, உயிர் வளர்த்தலுக்காகவே இறைவன் உதவியது போன்றே, இந்த உலகத்தையும் மற்றும் போகங்களையும் நமக்கு இறைவன் வழங்கியது ஆன்மீகத்தை வளர்ப்பதற்காகவே என்பதை நாம் உணர்ந்து கொண்டால், உலகில் சமாதானம், சாந்தி, அமைதி போன்ற நல்லனவெல்லாம் நிலவும் என்பது உறுதியாகிவிடும். ஆன்மீகம் மனிதனின் அக ஒழுக்கத்தை நன்நிலைப்படுத்துகின்றது. அதன் மூலம் மனிதனின் புற ஒழுக்கமும் மேன்மை பெறுகின்றது.

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' ஔவை வாக்கு

ஆன்மீகச் சாதனைகள் உலகியல் வாழ்க்கையைச் சீர்ப்படுத்துகின்றன. மனித வாழ்க்கைத்தரம் இந்த அடிப்படையிலேயே கணிப்பீடு செய்யப்பட வேண்டும்.

**ஆன்மீகத்தின் வெளிப்பாடு**

ஆன்மீகம் மனிதனின் அகத்திலிருந்து வெளிப்பாடாகிறது. அன்பு, உண்மை, நீதி, அறம், கருணை, அழகு, சாந்தி, நல்லொழுக்கம், நன்மை, செம்மை ஆக ஆன்மீகம் வெளிப்பாடாகின்றது. ஆன்மீகம் இவ்விழுமியங்களை உள்ளடக்கியுள்ளது.

மனிதனுள் ஆழ்ந்து கிடக்கும் ஆன்மீகத்தை வெளிப்படுத்துவது சமயம், ஆன்மீக விழுமியங்களாக வெளிப்படும் ஆன்மீகம், மனிதரை நல்வழிப்படுத்தவும், மனித வாழ்வைச் செம்மைப்படுத்தவும், மனித சமூக வாழ்க்கை நலனோடு இணைந்து செல்லவும் உறுதுணையாகின்றன. சமயத்தையும் மனித வாழ்வையும் பிரித்து நோக்காமல், சமயமும் வாழ்வும் ஒன்றாய் இணைந்து நிற்றலையே சைவம் வேண்டி நிற்கிறது. அவ்வாறு அமைவதன் மூலமே, மனிதன் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வநிலை அடைய முடியும். வழியும் முக்கியம் அடைவும் முக்கியம் என்பது சைவத்தின் நிலைப்பாடாகும். வழியாக உள்ளது வாழ்வாங்கும் நல்ல வண்ணமும் வாழ்தல்; அடைவு மோட்சம் அல்லது முத்தியின்பம் என்னும் பேரானந்தம்.

சைவசமய ஆன்மீக வாழ்வையும் உலகியல் வாழ்வினை மேம்படுதவாழ்வையும் இணையச் செய்து, மனித்த அரும்பணி யாற்றியவர்கள் நாயன்மார்கள் ஆவர். அவர்கள் சிவம் பெருக்கியவர்கள். அன்பே சிவம்; நீதியே சிவம்; உண்மையே சிவம்; நன்மையே சிவம்; அழகே சிவம்; எனச் சிவத்திற்குப் பொருளும் விளக்கமும் தந்தவர்கள். சைவத்தை மக்கள் மயப்படுத்தியவர்கள். அவர்கள் ஆரம்பித்து நடத்திய பக்தி இயக்கம் வெற்றி கண்டமைக்குக் காரணம், சமயமும் சமூகமும்; ஆன்மீகமும் உலகியலும் இணைந்தும் இசைந்தும் விளங்கியமை யேயாகும். இந்த இணைப்பில் இசைவின்மை ஏற்படும் போதெல்லாம் தனிமனிதனிலும் சரி, சமூகத்திலும் சரி, உலகிலும் சரி, குழப்பங்கள், கொந்தளிப்புக்கள், அமைதியின்மைகள், அனர்த்தங்கள், வன்செயல்கள் தவிர்க்க முடியாதனவாய் வந்துவிடுகின்றன.

மனத்துாய்மை, மொழித்துாய்மை, செயல்தூய்மை என்பவற்றைச் சைவசமயம் வலியுறுத்துகின்றது. மன அடக்கம், புலனட்டக்கம் என்பன மனிதனை மனிதத் தன்மைகள் கொண்ட மனிதனாக்குகின்றன.

காமம், குரோதம், உலோபம், மதம், மாற்சரியம், மோகம் என்பன மனிதனுக்குள் உறைகின்ற ஆறு பகைகள் ஆகும். இவை மனித நல்லொழுக்க வாழ்வைக் கெடுப்பவை. மனிதனை மிருக குணங்களுடன் செயற்பட வைப்பன.

''காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றின் நாமங் கெடக்கெடும் நோய்'' - திருக்குறள்.

இப்பகைகளுக்கு இடங்கொடாது, அவற்றை வெற்றி கொண்டு வாழ்வதே சமய வாழ்வு - ஒழுக்க வாழ்வு ஆகும். சமய வாழ்வு -

மிளிரும். அன்பு, நீதி, உண்மை, நன்மை, அழகு, செம்மை என்பன வெளிப்பாடாகும். இவை யாவும் சிவம் என்னும் கடவுளின், பரம் பொருளின் வடிவங்கள். இந்த வடிவங்களைப் போற்றி வாழ்பவர்கள் சிவத்தைப் போற்றித், துதித்து, வழிபட்டு வாழ்பவர்கள் ஆகின்றனர். அவர்கள் சிவசம்பந்தம் உடையவர்கள். அதனால் உண்மைச் சைவர்கள் எனப்படுகின்றனர்.

''நிதியை நீட்டி நீதி செய்பவர்கள், சீவன் குறுகிச் சிவன் ஆவார்கள், நீதியோடு சம்பந்தஞ் செய்கிறவர்கள், சிவத்தோடு சம்பந்தஞ் செய்கிறார்கள். அவர்களே சைவர்கள். நீதிக்குச் சைவம் என்பது மற்றொரு பெயர்'' - பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'' சைவமே நீதி, நீதியே சைவம் என்பது உணர்தற்பாலது. உலகத்தவர் நீதிமான்கள் ஆகும்போதே, உலகில் நிரந்தர அமைதி நிலவும்.

**நல்லொழுக்கம் பேணுதல் சைவ ஆன்மீக வாழ்வின் உயிர்நாடி**

சைவசமயம், மனிதர்கள் நல்லொழுக்கம் பேணி வாழ வேண்டும் என்பதில் சிரத்தையாக உள்ளது. சைவவாழ்வு என்பது வாழ்வைச் சிவமயப்படுத்தல் ஆகும். அதாவது ஆன்மீக மயப்படுத்தல். வாழ்வில் நல்லொழுக்கம் பேணும்போதே வாழ்வு சிவமயம் ஆகிறது. அன்பும் அறமும் வாழ்வின் பண்பும் பயனும் என்பது வள்ளுவர் கருத்து.

கடவுள் உண்டு என்பதில் உறுதியாய் இருத்தல் ஆன்மீகம். நல்லொழுக்கத்தை பேணுவதற்கு இந்த உறுதிப்பாடு உந்துசக்தியாக உள்ளது. கடவுளில் வைத்திருக்கும் பயபக்தி காரணமாகப் பலர் நல்லொழுக்கம் மேற்கொண்டு வருகின்றனர்.

கடவுளில் நம்பிக்கையில்லாதோர், மனச்சாட்சியின்படி நடந்து நல்லொழுக்கம் பேண முடியும் என்பர். எது சரி, எது பிழை என்பதை மனச்சாட்சி சொல்லும் என்கின்றனர். ஒரு காலத்தில் ஒருவர் கைலஞ்சம் பெறுவதை, அவரின் மனச்சாட்சி அங்கீகரிக்கவில்லை. பின்னொரு காலத்தில் சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக, அதே ஆள் கைலஞ்சம் பெறுவதை, நியாயித்துத், தமது மனச்சாட்சியை சரியென ஏற்றுக்கொள்ளும்படி செய்கிறார். நீதி என்றும் மாறாது; நியாயம் சந்தர்ப்பம் சூழ்நிலை வேறுபாட்டினால் மாறுந்தன்மையது.

''மனச்சாட்சி கால வேறுபாட்டில் வித்தியாசமுறுதலும் இருவரிடத்தில் அது சமகாலத்திலேயே மாறுபடுவதுங் காணலாம். ஆகையால், மனச்சாட்சி என்பது முற்றுமுழுதாகவே நம்பத்தகாதவொன்றாம். நல்லொழுக்க நெறி சமய அனுசரணையில் மாத்திரம் தங்கியிருக்கும். அதனால் அதைப் பேணும் நோக்கில் கடவுளுண்மை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.'' (சைவமகத்துவம் என்னும் நூல் - க.சிவபாதசுந்தரம்)

''உலகை ஒன்றாகக் காண்பதே காட்சி'', ''யாதும் ஊரே யாவரும் கேளீர்'', ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'', ''தீதும் நன்றும் பிறர்தர வாரா''
இம் மகா வாக்கியங்கள் ஆன்மீகம் சார்ந்தவை. இவை ஆன்மீக ஒருமைப் பாட்டுணர்வின் வெளிப்பாடுகள். வாழ்வில்

நல்லொழுக்கம் பேணப்படுவதற்கு ஆன்மீக ஒருமைப்பாட்டுணர்வு வழிப்படுத்துகின்றது.

**விழுமியங்கள் நல்லொழுக்கத்தின் ஆதாரத் தூண்கள்:**

அன்பு, நீதி, உண்மை, கருணை, மனிதநேயம், அஹிம்சை என்பன கடவுளின் வடிவங்கள். நல்லொழுக்கத்தின் ஆதாரத் தூண்கள் இவையாகும். மனித விழுமியங்களைப் பேணி நடத்தல் நல்லொழுக்கமாகும். விழுமியங்கள் அடிப்படை மனித உரிமைகள்; மனித அடையாளங்கள். தம்மை உயர் பிறவிகள் என அடையாளப்படுத்தும் விழுமியங்களை இழத்தல், தாழ்நிலைக்கு இட்டுச் செல்வதற்கு அனுமதிப்பதற்கு ஒப்பாகும். மனித விழுமியங்களே, நல்லொழுக்க வாழ்விற்குப் போஷணையாகின்றன. நல்லொழுக்க வாழ்வை வளம்படுத் துகின்றன. அதன் வழி மனித வாழ்க்கைத்தரம் சிறப்பும் மேன்மையும் அடைகின்றது.

எமக்கு எம்முடைய உயிரினும் மேலான மதிப்பையும் பெறுமானத்தையும் கொண்டு விழுப்பம் தருபவை எவையோ, அவை விழுமியங்கள்.

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்'' - திருக்குறள்

சைவ வாழ்வுக்கு விழுப்பம் தருவது ஒழுக்கம். சைவ வாழ்வு என்பது ஒழுக்க வாழ்வு. அது ஆன்மீகம் தழுவியது. அதனால் சைவ வாழ்வு தன்னலமற்றதும், பிறர்நலம் ஓம்புவதும், எவர்க்கும், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலால், தீங்கு நினைக்காததுமான ஓர் உன்னத பண்பாட்டு வாழ்வாக அமைகின்றது. பண்பாடு எனுஞ் சொல். பண்படுத்தல் என்பதிலிருந்து பிறந்தது. மனத்தைப் பண்படுத்தல், பேச்சைப் பண்படுத்தல், செயலைப் பண்படுத்தல் என்றவகையில் பண்பாடு மிளிர்கின்றது.

''பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்'' கலித்தொகை. பாடு என்பதன் கருத்து முறைமை, உலக ஒழுக்கம் ஆகும். பாடு என்பது பண்பு என்ற பொருளை உடையது எனப் புறநானூறு கூறுகின்றது. ''பாடறிந்தொழுகல்'' என்பது பிறர் இயல்பை அறிந்து நடத்தல். உலகத்தோடு பொருந்தி வாழ்தல், உலக ஒழுக்கம் அறிந்து அதற்கேற்ப ஒழுகல் பண்புடைமை ஆகும். பண்புடைமை என்பது சான்றாண்மை. ''பண்புடையோர் பட்டுண்டு உலகம்'' என்கிறது வள்ளுவம். ''உலகம் என்பது உயர்ந்தோர்மேற்று'' என்பதிலிருந்து ''உலகம்'' என்பதன் உண்மையான பொருள் என்ன என்பது தெரிகின்றது. பண்பு என்பது ஒழுக்கம். பண்புடையார் நல்லொழுக்கமுடையார் ஆவர்.

* **விழுமிய வாழ்வு, சைவ வாழ்வு**

- கடவுளை விசாரித்து வாழ்தல்
- அன்புநெறி, நீதி வழுவா நெறிமுறை என்பவற்றில் நின்று வாழ்தல்
- பழிக்கஞ்சி வாழ்தல்
- வாழ்வாங்கு வாழ்தல்
- சமூகத்தில் பொருத்தப்பாட்டுடன் வாழ்தல்
- ஆன்மீகம் தழுவி வாழ்தல்
- மனிதத்தன்மைகளுடனான மனிதனாக வாழ்தல்
- பிறர்நலம் பேணி வாழ்தல்

தூயவாழ்வு வாழ்தல்
- பாடறிந்து ஒழுகுதல்

*** மாறும் தற்காலச் சமுதாயமும் ஆன்மீகத் தேவையும் அதன் பொருத்தப்பாடும்**

தற்காலத்தில் மனித சமுதாயம் பல்வேறு விசைகளின் தாக்கங்களினால் மாற்றங்களுக்கு உள்ளாகிவருவதை அவதானித்துள்ளோம். ஆன்மீகம் என்பது உண்மை; எனவே அறிவற்றது; மாற்றமடையாதது. உலகில் வாழ்க்கை மாறக்கூடியது.

தற்கால உலகில், மனிதர்கள், உலகியல்சார் செல்வ விருத்தி, வாழ்க்கை வசதிகள் என்பவற்றில் முன்னெப்பொழுதும் இல்லாதவகையில் அதிதீவிர வளர்ச்சி கண்டுள்ளனர். இதற்கு, விஞ்ஞான தொழினுட்ப அபிவிருத்தியில் துரித வளர்ச்சி பெற்றுள்ளமையே காரணம். மாறாக, மனித ஒழுக்கம், மனித தர்மம், ஆன்மீகம், மனித நடத்தைகள் என்பன கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அதன் விளைவு, தனிமனித வாழ்க்கையிலும், சமூகங்களிலும் நிம்மதி, அமைதி, சாந்தி, சமாதானம், மனிதநேயம், நீதி என்பன குன்றிவருதலும்; வன்முறைக் கலாசாரம், ஊழல்கள், ஒழுக்கச் சீர்கேடுகள், நடத்தைப் பிறழ்வுகள், சட்டங்களை அவமதித்தல் முதலிய ஈனச் செயல்கள் வெகு வேகமாகப் பெருகிவருதலும் ஆகும். மனித நல்லுறவுகள் தனிவாழ்விலும், பொதுவாழ்விலும் சீர்குலைந்து வருகின்றன. இதனால், மன அழுத்தங்களும், நெருக்குதைகளும் மனிதரை வாட்டி வதைக்கின்றன. மன ஆரோக்கியம் பழுதுபட்டால் உடல் ஆரோக்கியமும் பழுதுபடும் நிலையை எய்தும். இவை இரண்டும் பழுதுபட்டால் மனிதன் பழுதுபட்டு விடுகின்றான். முடிவில் முழுச் சமுதாயமுமே பழுதுபட்டு விடுகின்றது. இந்த அபாயநிலையை நாம் இன்று எதிர்நோக்குகின்றோம்.

‘‘ உள்ளம் பெருங் கோயில், ஊனுடம்பு ஆலயம்’’ என்ற சைவநிலைப்பாடு மதிப்பிறங்கியுள்ளது. தினமும் செய்தித் தாள்களைப் புரட்டிப் பார்த்தால், வன்முறைச் சம்பவங்கள், கொலைகள், ஆட்கடத்தல்கள், போர், பாலியல் வல்லுறவு, சிறுவர் துஷ்பிரயோகங்கள், திருட்டுக்கள், மனித உரிமைகள் மீறல், போதைப் பொருட் பாவனைகள், கள்ளக் கடத்தல்கள், சட்டங்களை மீறல், வீதி விபத்துக்கள், ஊழல் சம்பவங்கள், கெடுபிடிகள், மிரட்டல்கள், கொள்ளைகள், விவாக ரத்துக்கள், ஏமாற்றுதல்கள், விபச்சார விடுதிகள், இலஞ்ச விவகாரங்கள், இயற்கை அனர்த்தங்கள், சுரண்டல்கள் என்பன பற்றிய செய்திகளே, செய்தித் தாள்களின் பெரும்பகுதியை ஆக்கிரமித்து கொண்டிருக்கின்றன. இவை யாவும் மனித வாழ்க்கையில் சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் பாதுகாப்பையும் நல்லுறவையும் பாதிப்படையச் செய்கின்றன.

மனித வாழ்க்கையின் நிம்மதிக் குலைவுக்கும் அமைதியின்மைக்கும் காரணங்களாக வேறும் பல பிரச்சினைகள் உள்ளன. கொடிய நோய், வேலையின்மை, செய்யும் தொழிலில் திருப்தியீனம், தொழிலில் நட்டமேற்படுதல், இயற்கை அழிப்புக்கள், பொருந்தா வாழ்க்கை முறைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். புலம் பெயர்ந்து வாழ்தல் கூடச் சிலருக்குப்

பிரச்சினைகளாக இருக்கலாம். பெற்றோரைப் பிள்ளைகள் அலட்சியம் செய்கின்றனர். தாய்தந்தையரின் சொத்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் பிள்ளைகளுக்குள் ஆர்வம், அவர்களின் சொற்கேட்டு, முதிர்ந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதில் சிறிதளவு கூடக் காண முடியாதுள்ளது. ''பணம் பந்தியிலே, குணம் குப்பையிலே'' என்னும் நிலைமை ஓங்கி வளர்கின்றது. நேர்மை வழியைக் குறுக்குவழி மறைக்கின்றது. இன்று பலர் வறுமையில் வாழ்கின்றனர். எயிட்ஸ் போன்ற கொடிய நோய்களின் பிடிக்குள் சிக்கிப் பலர் நரக வாழ்க்கையை வாழ்கின்றனர். பலர் இன்று மனத்திற்கு அடிமைப்பட்டு, மனம்போன போக்கில் வாழ்ந்து வருகின்றார்கள். பொறிபுலன்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்கின்றார்கள். விளைவு, மனநலம் குன்றிய ஒரு மனித சமூகம் உருவாக்கம் பெறுகின்றது. இன்று எல்லாவற்றிலும் அவசரம் முதன்மைப்படுத்தப்படுகின்றது. அவசர வாழ்வில் நிம்மதி ஏது?

இவற்றினால் நிறைவான வாழ்வு, அமைதியான வாழ்வு, மகிழ்ச்சியான வாழ்வு என்பன மனித குலத்திற்கு எட்டாக்கனியாகி வருகின்றன. விரக்தி நிறைந்த, உள உடல் ஆரோக்கியம் குன்றிய, மிருக உணர்ச்சிகளுடன் கூடிய வாழ்க்கை நிலைமை மனித சமுதாயத்தில் வீறுபெற்றுக் காணப்படுகின்றது.

உலகியல் தேவைகளையும் ஆசைகளையும் நிறைவு செய்யக்கூடிய வாய்ப்பு வசதிகளைப் பெற்றுவிட்டால் மனித வாழ்வு சிறப்பாகவும் உன்னதமாகவும் அமைந்து விடும் என்று கூறிவிட முடியாது. அந்த இயலாமையை இன்று நிதர்சனமாகக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு அப்பாலும் மனிதருக்கு ஆன்மீகத் தேவைகள், பண்பாட்டுத் தேவைகள், ஒழுக்கத் தேவைகள் என்பன உள்ளன என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இத்தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படும் பட்சத்திலேயே, மனித குலத்துக்கு நிறைவான, அமைதியான, மகிழ்ச்சியான வாழ்வு சித்திக்கும் என்பது சைவத்தின் முடிந்த முடிபு. உலகமயமாதலின் தீய விளைவுகளின் பாதிப்புக்களிலிருந்து மனித சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டுமாகில் ஆன்மீகமயப்படுத்தல் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டியது அவசரமும் அவசியமுமாகும்.

# இலங்கையில் சமயரீதியான குடித்தொகையின் பிரதேசப் பரம்பல்

ஆர்.ஸ்ரீகாந்தன் சிரேஷ்ட விரிவுரையாளர்
புவியியல் துறை
கொழும்பு பல்கலைக்கழகம்

இலங்கை பல இனங்களையும், சமயங்களையும் உள்ளடக்கிய பல்லின பல்சமய சமுதாயங்களைக் கொண்டதொரு நாடாகும். மொத்தம் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியன எமது நாட்டின் பிரதான சமயங்களாயினும் மிகச் சிறிய அளவில் வேறு சில சமய நம்பிக்கை கொண்ட சமூகங்களும் பரவிக் காணப்படுகின்றன. உதாரணமாக எமது நாட்டின் பூர்வீகக் குடிகள் என கருதப்படுகின்ற வேடர்கள் தமக்கென புறம்பானதொரு சமய நம்பிக்கையினைக் கொண்டு நாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் செறிந்து வாழ்கின்றனர். இந்தியாவின் அசோக மன்னனின் மகனாகிய ம்கிந்ததேரர் இலங்கை மன்னன் தேவநம்பியதீசனை சந்தித்த காலம் முதற்கொண்டு பௌத்த சமயம் இலங்கையில் வேரூன்றி பரவத் தொடங்கியமை வரலாறு எமக்கு எடுத்துக்காட்டிய உண்மையாகும். அதேபோல் இந்தியாவில் மிகப்புராதன தோற்றப்பாட்டினைக் கொண்டிருந்த இந்து சமயம் தென்னிந்தியாவிலிருந்து இலங்கை நோக்கி ஏற்பட்ட படையெடுப்புக்களை அடுத்து குடியேறிய ஒரு பரம்பரையினரின் ஒரு அடையாளமாக தனது காலை இலங்கையில் பதித்துக் கொண்டது. இந்து சமயத்திற்குரிய நம்பிக்கைகள், வழிபாடுகள் இலங்கையில் மிகப் புராதன காலத்திலிருந்தே காணப்படுகின்றன என்பதனை ஒரு சில வரலாற்று சம்பவங்கள் சுட்டிக்காட்டி நிற்கின்ற பொழுதிலும் ஆணித்தரமான ஆதாரங்களை சோழ மன்னர்களின் இலங்கைப் படையெடுப்பின் பின்னரே நன்கு கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது. தமிழ் இலக்கிய வரலாற்றில் 'பக்தி இலக்கிய காலம்' எனப்போற்றப் படுகின்ற பல்லவர் காலத்தில் வாழ்ந்த திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார் போன்றவர்கள் இலங்கையின் பாடல் பெற்ற திருத்தலங்களாகிய திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய திருத்தலங்களை நோக்கி துதித்துப் பாடியமை சோழரின் படையெடுப்புக்களுக்கு முன்னர் இடம் பெற்றிருப்பது எமது நாட்டில் சோழர்களின் படையெடுப்புகளுக்கு முன்னரே இந்துசமய தோற்றப்பாடும் அதன் வளர்ச்சியும் இடம் பெற்றமையினை உறுதிப்படுத்தி நிற்கின்றது. இஸ்லாம் அராபியர்களின் வருகையை அடுத்து இலங்கையில் தோன்றிய மதமாகும். அராபியர்கள் கி.பி.7ம் நூற்றாண்டு முதல் தெற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் தமது வர்த்தக விரிவாக்கங்களை ஏற்படுத்திக் கொண்ட போதிலும் எமது நாட்டுடன் அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட வர்த்தக தொடர்புகள் கி.பி.14ம் நூற்றாண்டுக் காலத்தில் இடம் பெற்றதாக அறியக் கிடக்கின்றது. போர்த்துக்கீசர் இலங்கையில் 1505ம் ஆண்டு கால் பதித்த வேளையில் கோட்டை மன்னர்களுடன் எமது

வாசனைத் திரவியங்கள்,முத்துக்கள், யானைகள், சங்குகள் என்பவற்றின் அடிப்படையளவு வர்த்தகத்தினை அரா்பியர்கள் கொண்டிருந்தனர். வர்த்தகர்களாக வந்த அராபியர்களில் ஒரு சிலர் உள்ளூரில் தங்கி உள்ளூர் வாசிகளை திருமணம் முடித்து 'இஸ்லாம்' என்ற சமயத்தின் தோற்றப்பாட்டிற்கு வழிவகுத்தனர். 1505ம் ஆண்டு முதல் 1948ம் ஆண்டு நாடு சுதந்திரம் பெறும் வரையில் எமது நாட்டின் சில பகுதிகள் அல்லது சில காலங்களின் பொழுது நாட்டின் முழுப்பகுதியும் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகிய ஐரோப்பிய அன்னியர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. நாட்டை ஏறக்குறைய 450 ஆண்டுகள் ஆட்சி புரிந்த இந்த அன்னியர்களின் நோக்கங்களில் ஒன்றாக தாம் சார்ந்த சமயத்தினை எமது நாட்டில் பரப்புவது என்பதாக அமைந்திருந்தது. இந்த வகையில் ஆரம்பத்தில் நாட்டின் கரையோர பிரதேசங்களில் புகுந்து கொண்ட கத்தோலிக்க சமயத்தினை அடுத்து புரட்டஸ்தாந்து கிறீஸ்தவ சமயம் படிப்படியாக நாட்டின் கரையோரப் பிரதேசங்களிலிருந்து உள்நாடு நோக்கி நகரத் தொடங்கியது. இலங்கையில் இன்று பௌத்த மத நெறியினைப் பின்பற்றுபவர்கள் பெரும்பான்மையினராகக் காணப்பட ஏனைய மத நம்பிக்கைகள் கணிசமான அளவு எண்ணிக்கை கொண்ட சிறுபான்மையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அனுட்டிக் கப்படுகின்றன.

இச் சிறு கட்டுரையின் பிரதான நோக்கமாக இருப்பது மேலே எடுத்துக்காட்டப்பட்ட சமயங்களைச் சார்ந்தவர்கள் இட அடிப்படையில் எவ்வாறு பரந்து காணப்படுகின்றார்கள் என்பதனை இனம் காணுதலும் அவற்றின் காரணங்களைத் தேடுதலும் ஆகும். சமயரீதியான இடம் சார்ந்த பரம்பலை இனம் காணும் முகமாக 2001ம் ஆண்டு இலங்கை குடிசன புள்ளி விபர திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பின் பெறுபேறுகள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பிரயோகம் செய்யப்பட்டு விளக்கப்படுகின்றது. நாட்டின் சீரற்ற அரசியல் நிலைவரம் காரணமாக மேற்குறிப்பிட்ட வடக்கு கிழக்கு மாவட்டங்களில் 2001ல் ஒழுங்கான குடிக்கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**சமயரீதியான குடித்தொகை வளர்ச்சிப் போக்கு**

காலா காலங்களில் எமது நாட்டில் மேற்கொள்ளப்பட்ட குடிசனக் கணிப்பீடுகள் நாட்டின் தேசிய அடிப்படையிலான குடித்தொகை வளர்ச்சிப்போக்கினை எடுத்துக் காட்டுவதுடன் நின்று விடாமல் குடித்தொகைக் கூட்டமைப்பு பண்புகளையும் அவ்வப்பொழுது கணிப்புக்களில் உள்ளடக்கி அவற்றின் போக்குகளைப்பற்றி தெரிந்து கொள்வதற்கும் உதவியுள்ளன. அந்த வகையில் குடித்தொகைக் கட்டமைப்பு பண்புகளில் ஒன்றாகிய சமயமும் நீண்டகாலமாகவே குடிசனக் கணிப்புக்களில் உள்ளடக்கப்பட்டு விபரங்கள் பெறப்பட்டு வருகின்றன. சமயரீதியாக குடித்தொகையின் எண்ணிக்கையினைப் பெற்றுக் கொள்வது அண்மைக்காலங்களில் அரசின் சமயரீதியான அரசியற் கொள்கைகளை வகுத்தமைத்துக் கொள்வதற்கும் சமயரீதியாக உருவாக்கப்பட்டுள்ள அமைச்சிற்கு / திணைக்களத்திற்கு அதன் நடவடிக்கைகளை கொண்டு நடாத்து வதற்கான நிதி ஒதுக்கீட்டினைச் செய்வதற்கும் சமய அடிப்படையிலான கலாச்சார பாரம்பரியங்களைப் பேணி சமயங்களுக்குரிய சிறப்பு விழாக்கள், சமயச்சடங்குகள் என்பனவற்றை பாரபட்சமன்றி மேற்கொள்வதற்கும், சமயப் பெறுமானத்தை எடுத்துக் காட்டுவதற்கும், இன்றியமையாதனவாக இருக்கின்றன.

இலங்கையில் சமயரீதியான குடித்தொகையின் வளர்ச்சிப்போக்கில் உள்ள மாற்றங்களை அட்டவணை இலக்கம் 1 - 1881 - 1981 காலப்பகுதியினை உள்ளடக்கிய நூறுவருடங்களுக்கு காட்டி நிற்கின்றது.

இந்த அட்டவணையின் அடிப் படையில் இலங்கையில் 1881 க்கும்- 1981க்கும் இடைப்பட்ட நூறு வருட காலத்தின் போது பௌத்த சமயத்தினர் ஏறக்குறைய 6 மடங்காலும், இந்துக்கள் ஏறக்குறைய 3.8 மடங்காலும், இஸ்லாமியர்கள் ஏறக்குறைய 5.7 மடங்காலும், கிறிஸ்தவர்கள் ஏறக்குறைய 4.2 மடங்காலும் அதிகரித்துக் காணப்படுகின்றனர். ஆனால் இந்த அதிகரிப்பில் கால அடிப்படையிலான வேறுபாடு எல்லா சமயத்தவர்களிடையேயும் காணப்படுகின்றது. உதாரணமாக 1881 முதல் 1931 வரையிலான 50 ஆண்டுக் காலப்பகுதியின் பொழுது பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய சமயத்தினர் ஏறக்குறைய 2 மடங்கு அதிகரித்துக் காணப்பட இஸ்லாமியர்களின் அதிகரிப்பு அளவு 1.8 மடங்காக இருப்பதனைக் காணலாம். மறுபுறத்தில் 1931க்கும் 1981க்கும் இடையில் இந்துக்களின் அதிகரிப்பால் எதுவித மாற்றத்தினையும் அவதானிக்க முடியாத அதே வேளையில் பௌத்தர்களும் இஸ்லாமியர்களும் 3 இற்கும் சற்றும் கூடிய மடங்கினாலும் கிறிஸ்தவர்கள் 2.1 மடங்கினாலும் அதிகரித்துக் காணப்படுகின்றனர். இந்நிலை எமக்கு எடுத்துக் காட்டுவது என்னவெனில் நாட்டில் 1930களை அடுத்த தசாப்தங்களில் இந்துக்களின் குடித்தொகை அதிகரிப்பு சீரானதொரு போக்கினைக் கொண்டு காணப்பட குறிப்பாக பௌத்தர்களினதும், இஸ்லாமியர்களினதும் குடித்தொகை அதிகரித்ததொரு போக்கினை காட்டிநிற்கின்றது என்பதாகும்.

சமய அடிப்படையிலான குடித்தொகை மாற்றத்தினைக் காட்டிநிற்கும் மற்றொரு அளவை வருடாந்த குடித்தொகை வளர்ச்சி வீதம் ஆகும்.

அட்டவணை இல.1ன் அடிப்படையில் நாட்டில் 1881க்கும் 1981க்கும் இடையில் பௌத்தம், இஸ்லாம் சமயங்களைச் சார்ந்தவர்களின் வருடாந்த சராசரி குடித்தொகை வளர்ச்சி வீதம் பெரும்பாலும் சமமானதாக முறையே 1.8,1.74 என காணப்படுகின்றது. அதே போல் இந்து, கிறிஸ்தவ சமயத்தை சார்ந்தவர்களின் வருடாந்த சராசரி வளர்ச்சி வீதம் பௌத்த, இஸ்லாம் சமயத்தவர்களின் வளர்ச்சி வீதத்தினைவிட குறைவாக முறையே 1.36, 1.45 என காணப்படுகின்றது. எனினும் கால அடிப்படையில் நோக்கும் பொழுது பௌத்தம் இஸ்லாம் சமயங்களைப் பின்பற்றுபவர்களின் வருடாந்த சராசரி வளர்ச்சி வீதத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. உதாரணமாக 1881 - 1931 க்கும் இடையில் 1.31, 1.17 என காணப்பட்ட பௌத்த இஸ்லாம் சமயத்தவர்களின் வளர்ச்சிவீதம் 1931க்கும் 1981க்கும் இடையில் முறையே 2.31, 2.34 என அதிகரித்து காணப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இஸ்லாமியர்களின் வளர்ச்சி வீதம் சரியாக இருமடங்கால் அதிகரித்திருப்பதனை இங்கு கண்டு கொள்ளலாம். அதே வேளையில் இந்துக்களின் குடித்தொகை வளர்ச்சியில் கால அடிப்படையில் எந்தவித வேறுபாடும் அவதானிக்கப்படவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட இரு காலப்பகுதிகளிலும் அவர்களின் வளர்ச்சி வீதம் 1.37 ஆக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கிறீஸ்தவர்களைப் பொறுத்தமட்டில் இரு காலப்பகுதிகளிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படவில்லை. முதற் கட்ட

காலப்பகுதியில் 1.32 ஆக இருந்த அவர்களின் வருடாந்த சராசரி வளர்ச்சி வீதம் இரண்டாம் கட்ட காலப்பகுதியில் 1.57 ஆக சிறிய தொரு அதிகரிப்பினை காட்டி நிற்கின்றது.

**சமய ரீதியான குடித்தொகையின் பிரதேசப்பரம்பல்**

2001ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குடிசன கணிப்பீட்டின் அடிப்படையில் ஒழுங்கான முறையில் குடிக்கணிப்பு செய்யப்பட்ட வடக்கு கிழக்கின் ஒரு சில மாவட்டங்களைத் தவிர்ந்த ஏனைய மாவட்ட தரவுகளின் அடிப்படையில் இங்கு சமயரீதியான குடித்தொகையின் பிரதேசப்பரம்பல் நோக்கப்படுகின்றது. 2001ல் 80 சதவீதத்திற்கு மேல் பௌத்த சமயத் தவர்களைக் கொண்ட மாவட்டங்களாக களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, குருநாகல், அனுராதபுரம், பொலநறுவை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்கள் காணப்படுகின்றன. பௌத்தர்களை மிக உயர்ந்த வீதத்தில் உள்ளடக்கிய மாவட்டமாக அம்பாந்தோட்டை மாவட்டம் விளங்குகின்றது. 96.87 சதவீதமான மக்கள் இம் மாவட்டத்தில் பௌத்த சமயத்தைச் சார்ந்தவர்களாக உள்ளனர். இதே வேளையில் வடக்கு கிழக்கிற்கு வெளியே பௌத்த சமயத்தவர்கள் மிகக் குறைவாக உள்ள மாவட்டமாக நுவரெலியா மாவட்டம் விளங்குகின்றது.அதேவேளையில் வடக்கு இகிழக்கிற்குள் பௌத்த சமயத்தவர்கள் கூடுதலாக உள்ள மாவட்டமாக அம்பாறை மாவட்டம் திகழ்கின்றது. மேற்குறித்த இரு மாவட்டங்களிலும் பௌத்த சமயத்தவர்கள் ஏறக்குறைய 39 சதவீதத்தினராக உள்ளனர்.

இந்துக்கள் வடக்கு கிழக்கில் உள்ள சகல மாவட்டங்களிலும் மிகவும் செறிந்து வாழ்கின்ற போதிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் அவர்கள் 80 சதவீதத்திற்கும் கூடிய தொகையினராக உள்ளனர். வடக்கு கிழக்கிற்குள் அம்பாறை மாவட்டத்தில் அவர்கள் சிறுபான்மையினராக ஏறக்குறைய 17 சதவீதத்தினை உள்ளடக்கி காணப்படுகின்றனர். வடக்கு கிழக்கிற்கு வெளியே இந்துக்கள் அதிக எண்ணிக் கையில் வாழும் மாவட்டம் நுவரெலியா ஆகும். 2001ல் இம் மாவட்டத்தில் இந்துக்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 51 சதவீதமாக இருந்தது. வடக்கு கிழக்கிற்கு வெளியே 1 சத வீதத்திற்கும் குறைவாக இந்து சமயத்தவர்கள் வாழும் மாவட்டங்களாக அம்பாந்தோட்டை, பொலநறுவை, அநுராதபுரம், குருநாகல் ஆகிய்ன விளங்குகின்றன. இவற்றில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2001ல் 0.27 சதவீத இந்துக்களே வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் உள்ள சகல மாவட்டங் களிலும் பரவலாக வாழ்ந்து வரும் சமயப் பிரிவினர் இஸ்லாமியர்கள் ஆவார். 2001ம் ஆண்டில் வடக்கு கிழக்கிற்கு வெளியே எந்த ஒரு மாவட்டத்திலும் இவர்கள் 2 சதவீதத்திற்கு குறைவாக காணப்படவில்லை. வடக்கு கிழக்கில் உள்ளடங்கும் மாவட்டங்களில் அம்பாறை மாவட்டத்தில் இச்சமயப் பிரிவினரே ஏனைய சமயத்த வர்களை விட உயர்ந்த அளவில் காணப்படுகின்றனர். 2001ம் ஆண்டில் இப்பிரிவினர் மாவட்டத்தில் ஏறக்குறைய 42 சதவீதத்தினராக காணப்பட்டனர். வடக்கு கிழக்கிற்கு வெளியே இஸ்லாமியர்கள் குறைந்த எண்ணிக்கையில் வாழும் மாவட்டங்களாக அம்பாந்தோட்டை, மொனராகல, நுவரெலியா, மாத்தறை, இரத்தினபுரி, என்பன விளங்குகின்றன. 2001ம் ஆண்டில் மொனராகல மாவட்டத்தில் இஸ்லாமியர்களின் வீதாசாரம் 2.06ஆகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. புத்தளம் மாவட்டத்தில் இவர்கள் 2001ம் ஆண்டில்

18.95 சதவீத பங்களிப்பினைக் கொண்டவர்களாக உயர் வீதாசாரம் ஒன்றினைப் பேணி வருகின்றனர்.

கத்தோலிக்க சமயத்தவர்கள் அம்பாந் தோட்டை மாவட்டத்தினைத் தவிர ஏனைய சகல மாவட்டங்களிலும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ சமயத்தினரைவிட உயர்ந்த எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். பொதுவாக இச்சமயத்தவர்களின் செறிவான பரம்பல் நாட்டின் கரையோர மாவட்டங்களிலேயே பெரிதும் அவதானிக் கப்படுகின்றது. கரையோர மாவட்டங்களிலும் கம்பஹா, புத்தளம் மாவட்டங்களில் இவர்களின் செறிவு உயர்ந்த அளவில் காணப்படுகின்றது. உதாரணமாக 2001 ஆம் ஆண்டில் மேற்குறித்த இரு மாவட்டங்களிலும் கத்தோலிக்க சமயத்தவர்களின் பங்களிப்பு முறையே 20.37, 32.66 ஆகக் காணப்பட்டது. 2001ம் ஆண்டில் மொனராகல, அம்பாறை, அனுராதபுரம், பொலநறுவை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, அம்பாந்தோட்டை, காலி, மாத்தறை, கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் இவர்களின் செறிவு 2% இத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது. இலங்கையில் அம்பாந்தோட்டை மாவட்டத்திலேயே இவர்கள் மிகவும் குறைவான எண்ணிக்கையில் வாழ்கின்றனர். வடக்கு கிழக்கில் உள்ளடங்கும் மாவட்டங்களில் மன்னார் மாவட்டத்தில் கத்தோலிக்க சமயத்தவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க ஒன்றாக உள்ளது.

சமயரீதியான குடித்தொகையின் பிரதேசப் பரம்பலில் அவதானிக்கப்படக்கூடிய மற்றொரு அம்சம் சிறுபான்மை சமயங்களாகிய இஸ்லாம், இந்து, கிறிஸ்தவம் ஆகிய சமயங்களைச் சார்ந்தவர்கள் பெருமளவில் நகரப் பகுதிகளில் வாழ்வதனையும் முதன்மைச் சமயங்களாகிய பௌத்தச் சமயத்தைச் சார்ந்தவர்கள் கிராமப்புறங்களில் வாழ்வதும் ஆகும். குறிப்பாக இஸ்லாமிய சமயத்தவரிடையே இந்நிலைமை தெளிவாக அவதானிக்கப்படக்கூடியதாக உள்ளது. உதாரணமாக கொழும்பு மாவட்டத்தில் ஏறக்குறைய 55 சதவீதமான பௌத்தர்கள் நகரங்களிலும், முறையே 93, 92, 80 சதவீதமான இந்துக்கள், இஸ்லாமியர்கள் கிறிஸ்தவர்கள் நகரங்களிலும் வாழ்வது இங்கு குறிப்பிடத்தக்கது. வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் இந்துக்கள் கணிசமான எண்ணிக்கையில் கிராமங்களில் வாழ்கின்றனர். இஸ்லாமியர்களைப் பொறுத்த மட்டில் அம்பாறை மாவட்டம் பெரும்பாலும் மேற்கூறிய நடைமுறைக்கு விதிவிலக்காக உள்ளது. இம்மாவட்டத்தில் 72%மான இஸ்லாமியர்கள் கிராமங்களிலேயே வாழ்கின்றனர்.

இலங்கையில் சமய அடிப்படையிலான பிரதேசப்பரம்பலைத் தீர்மானிப்பதில் சில காரணங்கள் செல்வாக்கு செலுத்துகின்றன. வரலாற்று பாரம்பரியம் இனங்களின் பிரதேசச் செறிவு பொருளாதார நடவடிக்கைகளின் தன்மை, என்பன இவற்றில் குறிப்பிடத்தக்கனவாகும். வரலாற்று ரீதியாக பௌத்தமத்தினைப் பின்பற்றும் சிங்கள மக்கள் நாட்டின் தென் மேற்கு மேற்கு தெற்குப் பிரதேசங்களில் தமது செறிவினைப் பதித்திட பெரும்பாலும் இந்துக்களாக இருக்கும் தமிழர்கள் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களை தமது பாரம்பரிய பிரதேசங்களாக அமைத்துக் கொண்டனர். பெரும்பாலும் விவசாயத்தினை தமது வாழ்வாதாரத் தொழிலாக கொண்ட இவ் விரு சமயத்தினரும் கிராமப்புறங்களையே தமது வதிவிடமாக கொண்டிருந்தனர். இஸ்லாமியர்கள் வர்த்தக நோக்கத்தின் அடிப்படையில் பெரும்பாலும் நகரப் பகுதிகளை தமது வாழ்விடமாக அமைத்திட போர்த்துக்கேய டச்சுக்காரர்களின் செல்வாக்கினால் உருவாக்கப்பட்ட கத்தோலிக்க புரட்டஸ்தாந்து சமயத்தவர்கள் அவர்கள் ஆட்சி புரிந்த கரையோரப் பகுதிகளில் தமது செறிவினை ஏற்படுத்திக் கொண்டனர் எனலாம். இவ்விதமாக இலங்கையில் சமயக் குடித்தொகையின்

பிரதேசப் பரம்பலில் வரலாறு, தொழில் முயற்சிகள் இனம் ஆகிய காரணிகள் முதன்மைக் காரணிகளாக தொழிற்படுகின்றன எனலாம்.

**அட்டவணை இல. 1**

**சமய அடிப்படையிலான குடித்தொகை**

**குடிக்கணிப்பு வருடங்கள் (1881 - 1981) (ஆயிரங்களில்)**

| சமயம் | 1881 | 1891 | 1901 | 1911 | 1921 | 1931(1) | 1946 | 1953 | 1963 | 1971 | 1981 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பௌத்தம் | 1698.1 | 1877.0 | 2141.4 | 2474.2 | 2769.8 | 3266.6 | 4294.9 | 5209.4 | 7003.3 | 8536.8 | 10288.3 |
| இந்து | 593.6 | 615.9 | 826.8 | 938.3 | 982.1 | 1166.9 | 1320.4 | 1610.5 | 1958.4 | 2238.6 | 2297.8 |
| இஸ்லாம் | 197.8 | 212 | 246.1 | 283.6 | 302.5 | 354.2 | 436.6 | 541.5 | 724.0 | 901.7 | 1121.7 |
| கிறீஸ்தவம் | 268.0 | 302.1 | 349.2 | 409.2 | 443.4 | 518.1 | 603.2 | 724.4 | 884.9 | 1004.3 | 1130.6 |
| ஏனையவை | 2.3 | 0.7 | 2.4 | 1.1 | 0.8 | 1.0 | 2.3 | 11.9 | 11.4 | 8.2 | 8.3 |
| மொத்தம் | 2759.8 | 3007.0 | 3565.9 | 4106.4 | 4497.9 | 5306.8 | 6657.4 | 8097.7 | 10582.0 | 12689.6 | 14846.7 |

மூலம் : குடிசன புள்ளிவிபரத் திணைக்களம், புள்ளி விபரக் கையேடு 1997.

# Of Religious Identities and Nationalists Fervour

**Minna Thaheer**
**Program Manager Peace Related Activities**
**Consortium of Humanitarian Agencies,&**
**Visiting Lecturer,**
**Dept of History and International Relations,**
**University of Colombo**

*The last sun of the century sets amidst the blood-red clouds of the west and the whirlwind of hatred.*
*The naked passion of self-love of nations, it its drunken delirium of greed, is dancing to the clash of steel and the howling verses of vengeance...*
*Let your crown be of humility, your freedom, of the soul...*
*And know that what is huge is not great and pride is not ever lasting...*

Rabindranath Tagore, "The Sunset of the Century"-

There is an arresting warning from the poet composed on the eve of the 20th century of the dangers in the model of the modern nation-state. Tagore, the composer of two national anthems of India and Bangladesh, had shared many concerns of worshiping the god of nationalism. It is 'nationalism' according to him (and the later thinkers of his like) that fanned the rise of religious intolerance. The notion that religions were territorial specific and unsuited to the spirit of nations was what made 'nationalism' supersede religions in compartmentalising people into different nations that was the source of modern conflicts.

At the dawn of a new leadership in the country the past and present distinctions of the religious and the secular, the emotional and the rational, or nationalist and communalist needs to be addressed in shaping the political tendencies of the day.

A conceptual clarity of religion as faith and religion as a social demarcator of identity is helpful. While religion as faith can be a matter of personal belief, religion as a social demarcator of identity, aims specifically at boundaries with other communities. Tagore's criticism of the forcefulness of the nationalism of the modern state also hints of religions' role in it. The danger of letting religion as a social demarcator to provide meaning and scope to religion is an aspect we ought to be warned of at contemporary times.

Since the colonial days, sharing of resource and representation ie. in securing jobs, educational opportunities etc., have been based on religion as a demarcator of social difference than a matter of faith. Hence, religion often becomes more irreverent than sacred. Hence, the use of religion for use other than faith has compounded ideological differences. Being unable to keep religion out of politics caused the creation of Pakistan, challenging Indian secularism, that faces challenges of similar sorts to date. In Sri Lanka too, we find that religion as a social demarcator of identity can be made

to serve national agendas. We witness the paradox of parties based on ideologies such as socialism and communism and also groups that are broadly categorized as 'communal' using religion for their respective national agendas. It is also ironical how parties that are ideologically (at least) die-hard 'secular' have taken roles of 'communalists' without batting an eye lid. It is challenging to see the dynamics of these labels in use.

The religious communities engrossed in bitter battles constitute the differences that grips many communities including ours with identity conflicts and contested sovereignty.
The separation of religion from politics and the crafting of an imaginative, vision of nationalism has not proved helpful in resolving conflicts among communities since the nation formation days after independence. However, this 'nationalism' and 'nationalist' fervour have only aggravated conflict situations; created situations that did not help share power but help opt for secession; created situations where 'nationalism' superseded common religious identity as in the case of Bangladesh..

Hence, the role of religion a demarcator of social differences, may as a living and important factor require careful handling for prudent citizens, come what political office may.

# பின்நவீனத்துவத்தின் பின்னால்

**திருமதி பவானி முகுந்தன்**
**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**

*பின்நவீனத்துவத்தின் பெயரால் முன்னெடுக்கப்படும் சமூகச் சீரழிவுச் செயற்பாடுகளை முன்னிறுத்தி சில குறிப்புகள்*

பின்நவீனத்துவம் தொடர்பில் முன்வைக்கப்படும் மாயைகள் நிறைந்த இன்றைய காலப்பரப்பில் பின்நவீனத்துவ இயங்கு அரசியல் தளத்தை நோக்கிய கோட்பாட்டு ரீதியிலான ஆய்வுகள், ஈழத்துத் தமிழ்ச்சூழலில் தமிழில் வராமை பெரும் குறைபாடாகவே இருந்து வந்துள்ளது. இதை வாய்ப்பாக பயன்படுத்திய ஈழத்து பின்நவீனத்துவவாதிகள் பின்நவீனத்துவம் தொடர்பில் ஒரு புனிதத்தை கட்டமைக்க முயற்சிக்கின்றனர்.

பின்நவீனத்துவத்தை முன்நிறுத்தி ஆரோக்கியமான விவாதத்திற்கு உட்படுத்த வேண்டிய தேவை இன்று எமக்கு தோன்றியுள்ளது. புதிது புதிதாக எதையோ பேசி தங்களை அறிவுஜீவிகளாகவும் புத்திசாலிகளாகவும் காட்டிக்கொள்ள முனைகின்ற பின் நவீனத்துவ பிரசாரர்கள் இன்று வரை பின்நவீனத்துவம் தொடர்பான ஆரோக்கியமான விவாதத்திற்கு களம் அமைக்கவில்லை பின்நவீனத்துவம் தொடர்பான விவாதங்கள் 'பின்நவீனத்துவம் என்பது புனிதமானது' என்ற அவர்களது கற்பிதத்தை அழித்துவிடும் என்பதே அதற்கான காரணம். அதேவேளை இந்தப் பிரசாரகர்களின் பின் நவீனத்துவம் பற்றிய அரைகுறை புரிதல்களும் இதற்குக் காரணம்.

மிக அண்மைக்காலமாக ஈழத்தில் பின்நவீனத்துவம் அதிக கவனம் பெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. மேற்கிலிருந்து வருகிற சிந்தனைகளை தமிழுக்கு அப்படியே தருகின்ற நிலை அதிகரித்துள்ள காலப்பரப்பில் உலகின் புதிய சிந்தனை தளமாக பின்நவீனத்துவம் பரப்பப்பட்டு சிறந்த மாற்றாக சொல்லப்பட்டு வரும் ஈழத்து இலக்கிய சூழலில் பின்நவீனத்துவம் பற்றிய உண்மையான புரிதலுக்கான தேவை இருக்கிறது.

இலங்கையில் பின்நவீனத்துவம் தொடர்பான ஓய்ந்துப்போன அக்கறை மீண்டும் 2002ல் ஏற்பட்ட போர் நிறுத்தத்தின் விளைவான மாற்றங்களின் பின்னணியில் தோன்றியது என்பதும் இங்கு நோக்கற்பாலது. அதிகரித்த என்.ஜி.ஓக்களின் எண்ணிக்கையும் சிறு சிறுக்குழுக்களாக இளைஞர்களைக் கூட்டி பின்நவீனத்துவம் பற்றிச் சொல்லி உலகில் பிரச்சினைக்களுக்கெல்லாம் அதுதான் ஒரே தீர்வு எந்தவகையில் போதிக்கப்பட்டு போராட்ட உணர்வுகளை இளைய தலைமுறையினர் மத்தியில் இல்லாதொழிக்கும் பணியையே இந்த என்.ஜி.ஓக்கள் செய்து வந்திருப்பதையும் அவதானிக்கலாம்.

ஈழத்தில் இப்போது மீண்டும் மிக அதிகமான கவனிப்புக்குள்ளாகியிருக்கும் பின்நவீனத்துவத்தை நுனிப்புல் மேய்ந்து தாங்கள் எதையோ புதிதாய்க் கண்டறிந்து விட்டதுபோல் மற்றவர்களுக்கு குறளி வித்தை காட்டிக்கொண்டிருக்கிறார்கள் இப் பின்நவீனத்துவவாதிகள்.

பின்நவீனத்துவத்தின் சந்தர்ப்பவாத அரசியலை ஏகாதிபத்தியத்தின் சுரண்டலையும் கொடுமைகளையும் அப்படியே ஏற்றுக் கொண்டு இவை எல்லாவற்றையும் எவ்வித பிரக்ஞையும் அற்று அல்லது வேடிக்கையாய் விளையாட்டாய் பார்க்கும்

மனநிலையே பின்நவீனத்துவ மன நிலையாகும். இதை என். ஜீ. ஓக்கள் மிகுந்த அக்கறையுடன் செய்துவருவதை எமது நாட்டில் அவதானிக்க முடியும்.

*"தமிழகத்தில் பின்நவீனத்துவம் என்கிற பேரில் நடந்து ஓய்ந்த விவாதங்களிலும் குழப்பமான சிந்தனைகளிலுமிருந்து, எந்தவிதமான விளக்கமுமின்றி, அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சொற்றொடர்களைப் பொறுக்கி எடுத்துக், கட்டுடைத்தல் மீள்கட்டமைத்தல், மறுவாசிப்பு என்பன போன்ற வார்த்தைகள் செறிந்த குழப்பமான மொழி நடையில் எழுதுவதற்கு மேலாக இது வரை நமது பின் நவீனத்துவப் பிரசாரகர் எவரும் எதையுஞ் செய்யவில்லை."*

என்கிறார் பேராசிரியர். சி.சிவசேகரம்.

பின்நவீனத்துவத்தின் வரலாற்றைப் பார்த்தோமானால் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமும் சோஷலிசமும் பல பின்னடைவுகளைச் சந்தித்த இரண்டு தசாப்த இடைவெளியிற், பல முன்னாள் முற்போக்குவாதிகள், தங்களுடைய பழைய, மாக்ஸிய நிலைப்பாட்டிலிருந்து தப்பியோடுவதற்கான பாதைகளைத் தேடினார்கள். எவ்வெப் போக்குகள் அவ்வப்போது வலியனவாய்த் தோன்றினவோ, அவற்றிடையே புகலிடம் தேடினோர் பலர். எதிலும் ஒட்டாத விதமாகச் சுதந்திர சிந்தனையாளராகப் பாவனை செய்தோரும் இருந்தனர். இவர்களில் யாருக்கும் இத்தகைய தப்பித்தலுக்கு தங்களது முன்னைய அரசியற் சித்தாந்தம், அது தீவிர இடதுசாரி நிலைப்பாடாயினும் வலது சந்தர்ப்பவாதமாயினும் போதிய வசதி செய்யவில்லை. எனவே புதிய சிந்தனை முறை என்று எதையாவது பயன்படுத்தி வெளியேற முயன்றனர். அமைப்பியல், பின் அமைப்பியல், பின் நவீனத்துவம் போன்றவை சிலர் புதிதாக வரித்துக் கொண்ட குறுகிய தேசியவாத, பிரதேசவாத, சாதிய அரசியல் நிலைப்பாடுகளையும் நியாயப்படுத்த உதவின. இன்னுமொரு சாரார், வெளிவெளியாக மாக்ஸியத்தைக் கைவிட மனமில்லாமலும் நவீன சிந்தனைகளாகக் கருதப் படுகின்றவற்றை அறியாதவர்களாகக் காணப்படுவதையும் விரும்பாமலும், அமைப்பியல், பின் அமைப்பியல், பின் நவீனத்துவக் கலைச் சொற்களை மிக மேலோட்டமாகப் பயன்படுத்துவதை வழமையாக்கிக் கொண்டனர்.

பின்நவீனத்துவம் முன்வைக்கும் முக்கிய கருத்தாக்கங்களில் ஒன்று 'ஆசிரியன் இறந்துவிட்டான்' என்பது. இதன்மூலம் பின்நவீனத்துவம் பிரதிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து ஏனைய அனைத்தையும் புறக்கணிக்கிறது. எந்த ஒரு கூற்றும் பல்வேறுபட்ட வாசிப்புகட்கு ஆளாகலாம் என்பது புதிய உண்மையல்ல. ஆயினும், 'ஆசிரியன் இறந்துவிட்டான்' என்ற பிரகடனத்தின் மூலம், ஒரு படைப்பை வாசித்து விளங்கிக் கொள்வது முற்றாக வாசகனின் கையிலே உள்ளது என்ற வாதம் மனிதரிடையே கருத்துப் பரிமாறலின் அனுபவத்தையே மறுப்பதாகும். ஒரு நூலின் மீது ஒரு வாசகன் தனது எண்ணங்களைத் தனக்கு வேண்டிய விதமாக ஏற்றி வாசிக்க முடியும் என்பது சரியா? ஏற்புடையதா? அப்படியானால், ஈசாப்பின் ஓநாயும் ஆட்டுக்குட்டியும் கதையில் வருகிற ஓநாய், ஆட்டுக்குட்டியின் மறுமொழிகளைத் தனக்கு ஏற்றபடி வாசிப்புக்கு உட்படுத்திய விதமும் நமக்கு நியாயமானதாக இருக்க முடியும். எந்த விடயமும் பற்றி முன்கூட்டியே தனது முடிவுகளைத் தீர்மானித்துக் கொண்ட ஒருவர், தனக்குக் கிடைக்கும் தகவல் எதையும் அதற்கேற்றபடி வாசிக்க முடியும் என்றும் அவ்வாசிப்பு செல்லுபடியானது என்றுங் கொள்வோமானால், ஜேர்மன் /பாசிசமோ வெள்ளை நிறவெறியோ இனவெறியோ தேசிய மேலாதிக்கமோ மதவெறியோ, வரலாற்றைத் தான் விரும்பியவாறு வாசிப்பதில் நாம் தவறு சொல்ல இடமில்லை இத்தகைய வாசிப்பு, 'ஆசிரியனின் சாவை' மட்டுமல்லாமல் பிரதியின் குரூரமான சிதைப்பையும் உள்ளடக்கியதாகிறது.

ஒரு இலக்கியப் படைப்பு என்பது ஒரு எழுத்தாளர் அவனது அனுபவம் அவ் அனுபவம் குறித்த அவன் பார்வை அவனது

படைப்புத்திறன் இவற்றின் கூட்டு உருவாக்கமேயாகும். படைப்பு உருவான பிறகு அது ஒரு பருண்மைத்தன்மை பெற்று அதற்கென்று ஒரு தனித்துவத்தை நிறுவிக் கொள்கிறது.அவ் இலக்கியப் படைப்பை வாசிக்கிற வாசகன் அப்படைப்பாளியின் அனுபவங்கள், பார்வைகள் மீது எதிர்வினை கொள்கிறான். இவன் எந்த அடிப்படையில் அதை எதிர் கொள்ள முடியும் தனக்கென்று உள்ள அனுபவம் பார்வைகளின் அடிப்படையிலேயே அதை எதிர்கொள்ள முடியும் எதிர்கொள்கிறான். அப்படி எதிர்கொள்ளும் போது படைப்பாளனின் அனுபவம் பார்வையும் வாசகனின் அனுபவம் பார்வையும் சேர்ந்து மூன்றாவது ஒரு அனுபவப் பார்வை உருவாகிறது. இது தான் இயல்பாக நிகழ்வது.

ஆனால் பின்நவீனத்துவம் இதில் படைப்பாளனின் பாத்திரத்தை அவன் அனுபவத்தை பார்வை வெளிப்பாட்டை முற்றாக மறுக்கிறது. அதைப் படைப்பு என்பதாகக் கூட அணுகத் தேவையில்லையெனச் சொல்லி அதை வெறுமனே பிரதி என்பதாகவே அணுகச் சொல்கிறது. அதற்குரிய தனித்துவத்தையும் அது வாசகன் மேல் செலுத்தும் தாக்கத்தையும் கூட நிராகரிக்கிறது. அதை வெறும் நிகழ்வாக மட்டுமே பார்த்து அதை வாசகன் தன் விருப்பத்திற்கு வாசித்துச் செல்கிறான் எனவே எழுத்தாளன் அங்கு இறந்து விடுகிறான் என்கிறது.

இதன் மூலம் சமூகத்தில் இலக்கியப் படைப்புகளின் படைப்பாளிகளின் சிந்தனையாளர்களின் விமர்சகர்களின் பங்கை அது நிராகரிக்கிறது. அதாவது ஒட்டு மொத்த சமூக இயக்கம் சமூகச் செயல்பாடுகள் அதில் சிந்தனையாளர்களின் பங்கு ஆகியவற்றை அர்த்தமற்ற தாக்கும் பின் நவீனத்துவம் இலக்கியப் படைப்புகளையும் அவ்வாறே ஆக்குகிறது.

பின்நவீனத்துவம் என்ன சொல்கிறது. பகுத்தறிவே பயங்கரம், தருக்கமே வன்முறை எனவே இவ்விரண்டின் அத்திவாரத்திலும் கட்டப்படும் அறிவியலே ஆபத்து என அனைத்தையும் நிராகரித்து, இனி அறிவியல் நோக்கிலான அணுகு முறையே வேண்டாம் என்கிறது. விஞ்ஞானத்தின் முரண்களையும் நெருக்கடிகளையும் பழமைவாதம் தனக்கேற்ற விதமாகத் திரித்து விளக்கி வந்துள்ளது. ஒவ்வொரு விஞ்ஞானக் கொள்கையும் பொய்ப்பிக்கப்படும் போதும் நெருக்கடிக்கு ஆளாகும் போதும் விஞ்ஞானமே பொய் என்று கூக்குரல் இடுகிற ஒரு கூட்டத்தார் எப்போதுமே இருந்துள்ளனர் டாவினின் பரிணாமக் கொள்கையின் குறைபாடுகள் அடையாளங் காணப்படும் ஒவ்வொரு முறையும், மனிதன் கடவுளால் நேரடியாகச் சிருஷ்டிக்கப்பட்டான் என்பதற்கான ஆதாரமாக அவர்கள் அக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவார்கள். உண்மை இதற்கு மாறானது. நெருக்கடிகளின் பயனாகப் பரிணாமக் கொள்கை டாவினால் முன்வைக்கப்பட்ட எளிய வடிவில் இல்லாமல் இன்னுஞ் செறிவான முறையில் விருத்தி பெறுகிறதே ஒழிய, டாவின் கண்ட அடிப்படையான உண்மையை மறுக்கும் விதத்திலான நெருக்கடி எதுவும் இல்லை.

மேற்குறிப்பிட்ட விடயங்களில், விஞ்ஞானம் தொடர்பாகவே எத்தகைய வலிந்து பொருள் கொள்ளும் வாசிப்புக்கள் நேர்ந்துள்ளன என நாம் காணலாம். எனவே, தகவல்களிற் குறைபாடுந் தெளிவீனமும் கருத்துப் பரிமாறலின் பிரச்சினைகளும் உள்ள இடங்களில் வலிந்து பொருள்கொள்வதற்கான வசதி மிகவும் உண்டு. அவ்வாறு நிகழ்வதால் அது ஏற்புடையதாகி விடுமா என்பதே மீண்டும் இங்கு எழுகிற கேள்வி

“கட்டுடைத்தல்” என்பதன் பேரால் எல்லாவற்றையும் கலைத்துப் போட்டு மாற்று எதையும் உருவாக்காமல் விட்டு வெறுமையை முன்னிறுத்தும் பின்நவீனத்துவம், உருவாகும் எதையும் இதே கட்டுடைத்தல் என்கிற அணுகுமுறையால் கலைத்துப் போட்டு மாற்று எதுவும் உருவாகவிடாமல் தடுக்கும் காரியத்தை மட்டுமே செய்கிறது. மாற்றுக்களை முன் வைப்பது பின் நவீனத்துவத்தின் வேலையல்ல. கலைத்துப் போடுவது கட்டவிழ்ப்பது மட்டுமே அதன் வேலை. மற்ற பணிகளை பிறர் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று வாதிடுகிறது பின்நவீனத்துவம்.

இதன் ஆபத்து என்னவென்றால் வரலாற்றுத் தன்மையோடும், காலச் சூழலோடும் பிரச்சனையை அணுகி, காலத் தேவைக்கேற்ப வரலாற்றுக் கடமையை ஆற்றுவதற்குப் பதிலாக மக்களைவிட்டு சூழலை விட்டுப் பிரித்து கட்டுடைத்தல் என்பதை தனிப்பட்ட சுயேச்சையான சார்பற்ற நடவடிக்கையாகப் பார்க்கிறது பின்நவீனத்துவம். அத்தோடு ஒன்றைக் கட்டுடைப்பது மற்றொன்றைக் கட்டமைப்பதற்காகவே என்கிற இயக்க இயல் புரிதலை செயல்பாட்டை புறமொதுக்கிவிட்டு கட்டுடைத்தல் ஒன்றுக்கு மட்டுமே முக்கியத்துவம் தந்து கட்டமைத்தல் செயலை மறுக்கிறது. இவ்வாறு செய்வதன் மூலம் மனித முயற்சிக்கு எதிராக இருந்து அம் முயற்சிகளுக்கு சமாதி கட்ட முயல்கிறது. மனிதர்களை செயல் அற்றவர்களாகவும் வெறுமைக்கும் விரக்திக்கும் உள்ளாக்கும் காரியத்தையே பின்நவீனத்துவம் செய்து வருகிறது. இதன் பின்னணியில் ஒளிந்திருக்கும் அரசியலை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சாதாரண மக்களின் ஆதிக்க எதிர்ப்பு நடவடிக்கைகளை முடமாக்குகிற காரியத்தையே இப்பின்நவீனத்துவம் செய்து வருகிறது. பின் நவீனத்துவம் நேரடியாக சாதாரண மக்களை அணுகி அவர்களை முடமாக்கும் காரியத்தைச் செய்யவில்லை. அது அதற்கு தேவையுமில்லை. மாறாக, மக்களிடையே கருத்துருவாக்கப் பணியைச் செய்து வருகிற முன்னோடிகளை மக்களை திரட்டிப் போராடுகிற ஆற்றல் மிக்க ஊழியர்களை அப்படிப்பட்ட சக்திகளை முடமாக்கிப் போட்டால் போதும். மக்கள் வழிகாட்டல் ஏதுமின்றி தானாய் முடமாகிப் போவார்கள். எனவே அப்படிப்பட்ட காரியத்தை, அதாவது கருத்து ரீதியில், தத்துவார்த்த ரீதியில், முடமாக்கும் காரியத்தையே செய்து வருகிறது இப்பின்நவீனத்துவம். இலங்கையில் அதிகரித்துள்ள தன்னார்வ நிறுவனங்களும் அவை பரப்பும் சிந்தனைகளும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. பின்நவீனத்துவத்தை முன்னின்று பரப்பும் சில என்.ஜி.ஓக்களின் அண்மைக் கால நடவடிக்கைகள் இதை தெளிவாகக் காட்டும்.

அவை செய்யும் மிக முக்கிய பணி வரலாற்றை மறுப்பது, அதை மக்கள் மத்தியில் பரப்ப வரலாறு என்ற ஒன்றே இல்லை என்பதை சொல்ல பல சிறுநூல்களை அச்சிட்டு அதை இலவசமாக விநியோகிப்பது, அதன்மூலம் மனித வாழ்க்கையில் வரலாற்றின் பாத்திரத்தை ஒழிப்பது. வரலாற்றை ஒழித்துவிட்டால் அடக்கி ஒடுக்கப்பட்டோம் என்பதோ மக்கள் புரட்சிகள் செய்து உரிமைகளை வென்றெடுத்திருக்கிறார்கள் என்பதோ புதிய தலைமுறைக்கு தெரியாது, இதன் மூலம் போராட்ட மனநிலை அழிக்கப்படுவதுடன் நவகாலனியாக்கத்தை எதுவித மறுப்புமின்றி ஏற்றுக் கொள்ளச் செய்வது.

பின்நவீனத்துவம் எப்போதும் போராட்ட உணர்வுகளையும் அதனை நோக்கிய புரட்சிகர வடிவ அமைப்புகளையும் நிராகரித்தே வந்துள்ளது. அது பொது எதிரிக்கு எதிராக ஒன்றுபடும் போக்குக்கு எதிரான செயல் கொண்டதாகவே உருப்பெற்றது. இதனாலேயே பின்நவீனத்துவத்தையும் அதன் அரசியல் சார்நிலையை ஆய்வு செய்தவர்கள் பின்நவீனத்துவம் மிகவும் பிற்போக்குத்தனம் கொண்ட, ஏகாதிபத்திய சிந்தனை என்று கூறினார்கள்.

பின்நவீனத்துவம் என்பதே எதுவும் புதுக்கருத்து அல்ல பெயர்தான் புதுசே தவிர கருத்துக்கள் எல்லாம் பழமையானவைகளே. கான்ட், டெய்டெக்கர், நீட்சே முதலானோர் முன்வைத்த கருத்து முதல்வாத இருண்மைவாத பகுத்தறிவு எதிர்ப்புக் கண்ணோட்டங்களையே பின்நவீனத்துவம் முன் வைக்கிறது. இவையெல்லாம் ஏற்கனவே காலத்தால் நிராகரிக்கப்பட்ட கருத்துக்கள். எனவே பின்நவீனத்துவம் என்பது புதியதாக எந்த கருத்தையும் முன் வைக்கவில்லை.

அறிவை கேள்விக்குள்ளாக்குவதாகவோ அல்லது அதை அர்த்த மற்றதாகவோ கூறி மனித அறிவைக் கொச்சைப்படுத்தும் பின் நவீனத்துவம் மனித வாழ்வுக்கும் அறிதலுக்குமான தொடர்பை மறுதலிக்கிறது. அறிவு அர்த்தமற்றது என்றால் அந்த அறிவு சார்ந்து நடைபெறும் வாழ்தல் அர்த்தமற்றது அதாவது வாழ்வே அர்த்தமற்றது அதை வாழ்ந்து கொண்டிருப்பதே வீண், எனச் சொல்கிறது பின்நவீனத்துவம்.

ஆதிக்கத்தின், அதிகாரத்தின் பிடியிலிருந்து விடுபடமுடியும் என்கிற நம்பிக்கையில்தான் அது சார்ந்த வரலாற்று இயக்கவிதிகளின் அடிப்படையில்தான் மனிதன் அமைப்பாகிறான். போராடுகிறான். இதைவிட்டு இந்த ஒடுக்குமுறையிலிருந்து மீள வேறு ஏதும் மாற்று வழி உண்டா? இல்லை. அப்படிப்பட்ட மாற்றுப்பாதை எதையும் பின்நவீனத்துவம் முன் வைக்கவில்லை.எல்லா முயற்சிகளையும் கொச்சைப்படுத்துவதும், அர்த்தமற்றதாக்குவதுமான காரியத்தையே பின்நவீனத்துவம் செய்து வருகிறது. இதன் மூலம் மனித குலத்தை எந்தத் தத்துவத்தின் மீதும் பிடிப்பற்றவனாக்கி, எதன் மீதும் நம்பிக்கை கொள்ளச் செய்யாது, எல்லாத் தத்துவங்களின் மீதும் அவநம்பிக்கை கொள்ளச் செய்வதும் அதன்மூலம் மனிதச் செயல்பாட்டை முடமாக்குவதும் எதன் மீதும் அக்கறையற்றவனாக்குவதுமான காரியத்தையே பின் நவீனத்துவம் செய்து வருகிறது.

இதன் வழி தற்போதுள்ள இருப்பை மாற்ற முயலும் மனித முயற்சிக்கு அது முட்டுக்கட்டை போடுகிறது. இருக்கிற நிலையே தொடர்ந்து நீடிக்க அது மறைமுகமாகச் செயலாற்றுகிறது. இதன்மூலம் அது ஆதிக்க சக்திகளுக்கே சேவை புரிவதாக, அமைந்து விடுகிறது.

பின் நவீனத்துவத்தை விவாதிக்க கலந்து பேச மறுக்கின்ற இவர்கள் பின் நவீனத்துவம் தொடர்பில் முன் வைக்கப்படுகின்ற விமர்சனங்களுக்கு பதிலளிப்பது கூட கிடையாது. தமிழகத்தில் ஏற்பட்ட ஒரு சலசலப்பின் விளைவாக உருவான பின் நவீனத்துவத்தை அப்படியே தூக்கிக் கொண்டு திரியும் இவர்களுக்கு அதன் சில சொல்லாடல்கள் தவிர வேறெதுவும் பின் நவீனத்துவம் தொடர்பில் தெரியாது அதைத் தாங்கள் மட்டுமே பேசிக்கொள்வதன் மூலம் புதியவற்றைப் பேசும் இலக்கிய வாதிகளாக தங்களை காட்டிக்கொள்ள முயலும் சிலர் பின் நவீனத்துவம் பற்றிய மயக்கங்களை மக்கள் மத்தியில் உருவாக்கியிருக்கிறார்கள்.

எல்லாம் தெரிந்தவர்களாக பின் நவீனத்துவத்தை அதி உன்னத தத்துவம் என பரப்புரை செய்பவர்களின் பிரச்சாரங்களையும் அவர்களின் முகமூடிகளை கிழிக்கவும் பின் நவீனத்துவம் தொடர்பிலான மாயைகளை கட்டவிழ்க்கவும் முயன்று அதில் வெற்றியும் கண்டிருக்கிறது இந்நூல்.

ஆரோக்கியமான விவாதத்திற்கான ஒரு தேவை இருக்கின்ற நிலையில் அதற்கு பின் நவீனத்துவவாதிகள் தயாராக இல்லாத நிலையில் பின் நவீனத்துவத்தின் உண்மை நிலையை எடுத்துக் காட்ட வேண்டிய தேவை ஒரு சமூகப் பொறுப்பாகும்.

பின்நவீனத்துவத்துவம் பற்றிய தெளிவும் அறிவும் மிகக் குறைவாக இருக்கின்ற இலக்கியச் சூழலில் பின்நவீனத்துவ மயக்கங்களிலேயே சிலர் இலக்கிய வாதிகளாக வலம் வந்துகொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. மாயைகள் களையப்பட வேண்டியதும் உண்மைகள் உணரப்படவேண்டியதும் இன்றையக் காலத்தின் தேவை.

# சமயம் காட்டும் வாழ்வு நெறி

**திருமதி ம.பத்மநாதன்**
ஓய்வு பெற்ற ஆசிரியை

இறைவன் அருளை ஆன்ம பக்தர்கள் நோற்ற தவங்களும், ஆற்றிய தொண்டுகளும் போற்றுவதற்குரியன, தொண்டுகள் எல்லாம் மனித குலத்துக்குச் செய்ய வேண்டும் என்பதையே இறைவன் மிகவும் விரும்புகிறான்.

உலகில் வாழ்பவர்கள் ஒழுங்கும் கட்டுப்பாடும் உடையவர்களாகவும், நலமாகவும் வாழ்வதற்கு வழிகாட்டுவது சமயம். மேற்கூறியவற்றை புறத்தில் மாத்திரம் பெற்றால் போதாது. அகத்திலும் ஏற்படுத்த வேண்டும். இதற்கு உறுதுணையாக கந்தபுராணம், இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம், சிந்தாமணி என்பவற்றுடன் நாயன்மார்கள் சந்தானகுரவர்கள், ஆழ்வார்கள் ஆகியோரின் வாழ்க்கையும் பாடல்களும் அமைகின்றன.

வேதாகமங்களில் கூறப்படும் வீடுபேற்றை அடைவதற்குரிய நான்கு படிகளாக அமைவன சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இந்த நான்கு நிலைகளையும் சிறப்பாக நால்வர் பெருமக்களும் எமக்குக் காட்டியுள்ளனர். நாவுக்கரசு நாயனார் சரியை நெறி, சம்பந்தப் பிள்ளை கிரியை நெறி, சுந்தரர் யோக நெறி, மணிவாசகர் ஞான நெறி இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொரு வருக்கும் சிறப்பாகச் சொல்லப்பட்டாலும் நால்வரும் நான்கு நெறிகளிலும் நின்று முத்தியடைந்திருக்கின்றார்கள். உதாரணத்துக்கு அப்பர் சுவாமிகளின் வாழ்க்கையை எடுத்துப் பார்த்தால் அவரது பாடல்களில் நான்கு நெறிகளையும் காணலாம்.

சரியை 'நிலைபெறுமா றெண்ணுதியேல்'
கிரியை 'காயமே கோயிலாக'
யோகம் 'உயிராணவமிருந்து'
ஞானம் 'ஞானத்தால் தொழுவார்'
என்பவற்றால் விளங்கிக் கொள்ளலாம்.

இனி முன்வாழ்ந்த பெரியோர்களையும் தற்போது வாழ்கின்ற பெரியோர்களையும் மதித்து, போற்றி வழிபடவேண்டும் என்பதையும் காட்டியுள்ளனர். சம்பந்தப் பெருமான் திருக்களத்திமலைக்குச் சென்றபோது அங்கு கண்ணப்ப நாயனாரின் திருவுருவத்தை வீழ்ந்து வணங்கினார். திருவதிகைளை அடைந்த போது அங்கு அப்பர் சுவாமிகள் உழவாரத் தொண்டு செய்த இடம் என்பதால் அங்கு மிதிக்க அஞ்சி புறத்தே சித்தவட மடத்தில் தங்கினார். மணிவாசகப் பெருமான் ''கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை'' என்ற பாடல் மூலம் கண்ணப்ப நாயனாரின் அன்பினைப் போற்றிப் பாடினார்.

இதே போல் திருவைந்தெழுத்துக்கும் சிவசின்னங்களுக்கும் மதிப்புக் கொடுத்து எம்மையும் அவ்வழி செலுத்தினர். திலகவதி அம்மையார் திருநீறு கொடுத்து அப்பரின் சூலைநோயை நீக்கினார். சம்பந்தப்பிள்ளை திருநீறு பூசி பாண்டியனுக்கு ஏற்பட்ட வெப்புநோயை நீக்கினார். சுந்தரர் ''முழுநீறு பூசிய மூவருக்கு அடியேன்'' என்றும் மணிவாசகர் ''திருநீறணிகிலாத வரைக் கண்டால் அம்மா நான் அஞ்சுமாறே'' என்னும் ஔவைப் பாட்டி ''நீறில்லா நெற்றி

பாழ்'' என்றும் பாடியுள்ளார். இதேபோல் திருவைந்தெழுத்தும் பல இடங்களில் போற்றப்படுகின்றது.

சுந்தரர் வாழ்க்கை மூலம் முன் வினைப் பயன் நடைபெறும் பாங்கு துல்லியமாக விளங்குகின்றது. அத்துடன் முன்னோர் எல்லாவற்றையும் ஓலையில் எழுதிவைப்பார்கள் என்பதையும் அத்தகைய ஓலையை வைத்துக் கொண்டு இறைவனே கிழவனாக வந்து வழக்குப் பேசி வெற்றியடைவதையும் காண்கிறோம். அநபாயச்சோழர் கேட்ட மூன்றுகேள்விகள் ''மலையினும் பெரியது எது?'' ''உலகினும் பெரியது எது?'' ''கடையினும் பெரியது எது?'' என்பவற்றுக்கு விடையாக திருக்குன்றில் இருந்தே அருண்மொழித் தேவர் விடை எழுதுகின்றார். அதாவது:-

''நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது''
''காலத்தினாற் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது''
''பயன்தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது''

எனவே இவையாவும் சமயரீதியாகவும் நீதியின் அறத்தில் அடிப்படையில் மனிதகுலம் வாழ வழிகாட்டுகின்றன.

இனி ''தீதும் நன்று பிறர்தரவாரா'' என்பது சான்றோர் வாக்கு தாம்தாமே செய்த நல்வினை, தீவினைகளால் நன்மையும் தீமையும் வினைகின்றன என்பதே உண்மை ''செய்வானும், செய்வினையும், சேர்பயனும்,? சேர்ப்பவனும் உய்வான் உளன் என்றுணர்'' என்பது சாஸ்திர உண்மை. உழைப்பவனுக்கே ஊதியம் உரியது. எனவே எமக்கு துன்பம் வருவது நாம் செய்த தீவினைப் பயன்தான் என்பதை உணரவேண்டும்.

ஔவைப்பாட்டி அறநெறி பற்றிக் கூறும்போது நம்மிடம் இருக்கவேண்டியது புண்ணியம், போக வேண்டியது பாவம் என்று உறுதியாகக் கூறுகின்றார்.

''புண்ணியமாம் பாவம் போம்
போன நாள் செய்த அவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்
எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத்தோர் சொல்லும்
தீ தொழிய நன்மை செயல்''

புண்ணியத்தால் இன்பமும் பாவத்தால் துன்பமும் ஏற்படும் ஆகையால் எமது வாழ்வு சிறக்க புண்ணியத்தையே செய்தல் வேண்டும்.

கந்தபுராணத்தில் காசிபமுனிவர், மாயை ஆகியோரின் பிள்ளைகள் சூரன், சிங்கன், தாரகன் இவர்களுக்கு காசிபர் வித்தியாரம்பம் செய்யும் போது உலகத்தில் சிறந்த பொருள் தருமம் என்று உபதேசித்தார்.

''தருமம் என்றொரு பொருள் உளது தாவிலா
இருமை இன்பமும் எளிதில் ஆக்குமால்
அருமையில் வரும் பொருள் ஆகும் அன்னதும்
ஒருமையினோர்க்கலால் உணர்தற் கொண்ணுமோ''

எனவே தருமத்தையே வாழ்வில் முக்கியமாகக் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்கிறார். கசச்சியப்ப சிவாச்சாரியார் இதை உலகில் உள்ள யாவருக்கும் கூறியதாகவே கொள்ள வேண்டும். அத்துடன் ''தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை'' என்பதில் உண்மையும் உணரப்படுகிறது.

பெரியபுராணத்தில் மனுநீதி கண்ட சோழ மன்னனின் நீதி தவறா, உண்மையாண நேர்மையான அரசாட்சி கூறப்படுகிறது. அத்துடன் மனஉறுதியையும் உலகிலுள்ள எல்லா உயிர்களையும் ஒரே நோக்கில் பார்ப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

'ஒருமைந்தன் தன்குலத்துக்குள்ளான்
என்பது முணரான்
தருமந்தன் வழிச் செல்கை கடன் என்று
தன்மைந்தன்
மருமந்தன் தேராழி உற ஊர்ந்தான்
மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ
மற்றெளிதோதான்'

தருமம் தவறாது, தருமத்தின் வழிச் செல்வதே தனது கடமை என்று உணர்ந்து, தனக்குப் பின் தன்குலத்தைக் காக்கவேண்டிய ஒரே மைந்தனை வீதியில் கிடக்கவைத்து தானே தேரைச் செலுத்திச் சென்றான். இதன் மூலம் ஒரு நாட்டின் தலைவன் தருமம், நீதி, நேர்மை, இரக்கம் எல்லா உயிர்களிடத்தும் அன்பு இவற்றைக் காத்து வந்தால் நாடு செழிக்கும் என்பது காட்டப் படுகிறது.

நாமும் சமயம் கூறும் உண்மைகளை பின்பற்றி வாழ்ந்து பேரின்பப் பெருவாழ்வு பெற்று உய்தி பெறுவோம்.

# HURDLES AND PROBLEMS OF CULTURAL COEXISTENCE

*S.M.N.S.A. Marsoom*
*Attorney-at-law*

The society is created out of tumultuous interactions between individuals. hence the birth place of cultures is the meeting point interaction among human being.

In our opinion, in the very early era of creation of man, culture was born as soon as for the first time a human being talked to another. The developed cultures are the soft wares of civilizations and the divine religions have always been the greatest impetus and consolidators of cultures and civilizations.

Without any doubt, cultures and civilizations are based on specific philosophical foundations. The culture of every nation is its identity and the civilization of each period is its identity.

A number of relations and equation can be perceived between various cultures and civilizations. This present article attempts to elaborate the relations and equations between civilizations.

There might be some differences and estrangements between cultures and civilizations and there might be some organizations and bodies that are not contrastable and hence they keep aloof from any kind of interaction or mutual impact. Every culture and civilization is an integrated system within itself-on the basis of its ingredients - but in comparison to other cultures and civilizations it may be irreleavant, disconnected and disintegrated.

It is possible that the cultures and civilizations may be connected and related (together with each other with some others) connection and relationship may be divergent and confrontational (negative) or convergent and lenient (positive). There are two kinds of confrontational relations, it may be accompanied with a process of continues confrontation leading to distance and incresing alienation of the civilizations or it may lead to disintegration and

decline and as a result the fall of the two confronting civilizations or may lead to the domination of one over the other. For instance the stronger, youngers and more dynamic civilization and culture may dominate the other. The convergent relations too, due to the interaction between the civilizations, lead to the parallel evolution of the two civilizations or to their integration and perpetuation in the form of the emergence of a new culture and civilization.

In brief various aspects of the relations and interactions between civilizations and cultures may be demonstrated in the diagram given below.

Classification of Relationship between cultures and civilizations

- Difference and lack of contact
- Relations and contact
  - Confronting and Conflicting
    - Estrenyement
    - Fall or subjugation
  - Interaction and Lenience
    - Continuation and Evolution
    - Change and Emergence

**Reasons for Necessity of cultural coexistence.**

There are a number of reasons for practical materialization of contacts between a culture and civilization with another one. However the main reason for the necessity of coexistence among cultures is the same main reason justifying the necessity of social life of all individuals some of these reasons, especially with reference to the contemporary elements are discussed below.

1. From the viewpoint of the Quran all men and woman have been created form a single male and a female. Bible also confirms the same. The diversity and multiplicity of the nations and communities is accidental and it is only virtue that is considered "O mankind ! we created you from a single (pair) of a male and a female, and made you into nations and tribes, that ye may know each other (not that ye may despite each other). Verily the most honored of you in the sight of God has full knoweldge and is well acquainted (with all things)". (49:13).

Evidently, virtue which is a source of affection and humbleness towards the bondsmen of God, will never cause superiority, arrogance and haughtiness. The Quaranic, divine priciple is the firmest foundation for understanding and peaceful interaction among human be ings regardless of belief and affliation to various citizen and civilization.

2. Despite cultural diversity and differences and even confrontation among some of them, their similarities and commonalities are much more than their differences and distinctions. Besides man's single root, common human values, similar human feelings and religious beliefs - particularly among the followers of Abrahamic religions - are some of the common grounds for dialogue and a life accompanied with peace and sincerity.

Seeking justice and benevolence, perfectionism and inclination towards security, which are the common ideals of man, are achievable only in the light of understanding and relations among human beings. Moreover the value-free and idelogy-free arenas such as pure science are quite ample where man can cooperate, interact and exchange views and share experiences.

3. The same reasons necessitating social life of all human individuals from the beginning of the creation are still valid as the reasons necessitating contemporary man's coexistence. In fact, man's requirements in the past due to the simplicity of his life were elementary and simple, but today those requirements have become very complicated, necessitating firmer relations more interaction and broader contacts.

4. The intellectal, and scientific products of man are not exclusive property of any nation or country.

Theosophy, knoweldge, science and industry are the common heritages of the children of Adam and must be exchanged among them so that all of them use them commonly. Any scientific phenomenon is the outcome of lengthy, complicated process. If today a scientist through research and study discovers a fact or invents an industrial item, his achievement is the continuation of the efferts and research of thousands of scientists of other nations and countries in the past and present.

Today's scientist is himself a product of the history of science, which is itself the product of the entire mankind. The perpetuation and continuation of science and its evolution depends on the interaction and exchange, while today's scientif jealously and in dustrial monopoly of the west is against the human fairness. It is this very monopoly and jealousy that will overpower the west. History bears testimony that the ancient west is indebted to the ancient East and the modern West is indebted to the modern East-the modern East which appeared with the advent and

spread of Islam. Let us give an example of the history of Civilization vol.1 of 1 will Durant :

It is now atleast six thousand years since the emergence of written history and during half of this period the Near East has been the center of human affairs and issues. By the vague term Near East we mean the entire Southwest Asia located in the South Russia and the Black Sea and West of India and Afghanistan. Or more broadly, we also include Egypt in this area, for this territory since times immemorial has been connected to the East and together have built the labyrinth of Oriental Culture and Civilization. In this scene, whose precise demarcation is not possible and where various peoples and cultures have lived, agriculture, trade, domestication of animals, production of cart, mathematics and medicine, geometry and astronomy, Calender and hours, alphabet and script (calligraphy), paper and ink, book, library and school, literature and music, commerce and architecture, enameled pottery, luxurious horses, monotheism and monogamy, cosmetics and jewellery, income tax, chess etc. Were introduced for the first time and grew and European and American cultures were borrowed from this very culture during the recent centuries through Greece and Rome.

The Arians were not themselves the inventors and creators of civilization, rather they borrowed it from Babel and Egypt : likewise the Greet were not the builders of the edifia of civilization, for what they have borrowed from others is more than what they themselves have contributed Greece is just like an illegitimate inheriter who has owned the three million old treasury of knowledge and art rendered to it through war booties and trade from the Near East. Through studying the Near East history and respecting it, we will be repaying our debt to the real founders of the European and American Civilizations.

Today some parts of the human heritage are at the hands of the Easterners while some others lie with the Westerners. However, the Easternurs have many valuable items in the invaluable heritage of their ancesters which are needed by the westerners. Bilateral need of the nations and cultures is among the serious reasons for relationship, interaction and peaceful coexistence among nations. Interaction and cooperation is never possible in an atmosphere of jealousy, envy and vengeance.

5. Ignorance is a cause of struggle and struggle in turn prepares the grounds for war. It is always this ignorance that causes man to deny the truth, fight against it and reject the rights of others. However, now the era of ignorance, struggle and war has become to an end. Man has put the period of his infancy behind and the time of his maturity and rationally has come. He is carrying a backpage as big as the history of violent confrontations and bloodsheds. The consolidation of the foundations of international peace and security is the main mission of mature man. Today a number of perils threaten man's collective life. The protection of environment and preservation of natural resourses are among other factors underlining the necessity of peaceful coexistence among all human beings.

6. The increasing, rapid spread of information and communication technology (ICT) is another reason rather a cause, underlying the necessity of cultural coexistence and this necessity is not an optional choice or and elective necessity. Information technology will be useful for the peaceful coexistence among the nations as far as it is not applied for aggression, domination or imposition of other's ideas.

Modern Media such as CNN & BBC etc are the real enemies for cultural coexistence since they are capable to induce any war at any time absorbing their pro capitalist standing.

There are also some sociological and psychological reasons hampering positive, rational humans interaction among cultures and civilizations or at least some of them have been considered as hurdles in the way of positive interaction. Some of these will be discussed below.

**Hurdles in the way of peaceful coexistence of cultures**

1. Monopoly, domineering and expansionism of some civilizations and cultures is among the greatest hurdles in the way of peaceful coexistence of human societies.
   Ex : Thinkers like Samuel Huntington write articles on 'the necessity of the US leadership in the world' It is to emphasize on 'Veto power' It is a very dangerous hurdle for peaceful coexistence ?

2. Monopoly : Considering oneself the possessor of absolute truth and others wrong is another hurdle in the way of peaceful coexistence among cultures.

3. Employing national values as a tool against other nations and states as well as the expansionism of the politicians is another hurdle in the way of cultural interaction and cooperation.

4. The impact of psychological facters is not less than that of historical and socialogical ones. The bitter chronic memories in the collective consceience of the nations from the dark periods of religious, cultural conflicts constitute one of these factors.
Ex : Cross wars between Arabs and Christians.

5. Another psychological point is commitment and loyality to one's culture and national - religious values, while remaining committed to peaceful coexistance.

6. Lack of knoweldge of the followers or numbers of cultures and civilizations of each other and the destructive misunderstandings.

7. Unfortunately baseless xenophobia and perceived animosities against others have become prevalent tradions now, which is one of the negative outcomes of geographical divisions and division of the world on the basis of nation - states instead of civilizations. The creation of perceived enimies and capitalizing on them is a prevalent method among the politicians to achieve their goals.

Ex : Saddham Hussein was promoted by the US with the slogen of Arab nationalism to achieve the present polical base in the middle east making Saddham as a tool once as a friend of US, later as an artificial enemy according to their necessity.

8. The philosophical, epistmolo gical differences between the foundations of some cultures have become another pretext for the apponents of peaceful coexistence and cooperations between religions. Cultures and civilizations to the flames of divisions.

This article attempts to analyse the overall hurdless with the background of several dimensions whereas it tries to make aware how the international political climate reflects our local political, sociological and ethical views.

Any conflict between communities in any country is influences by the world super powers who enjoy the privileges of veto power which is authorised by the UN, violating the norms and values of International Law.

The concept of Globalization must be carefully analysed by local intellectuals when they design the political, social and economic mechanism of the countries creating constrctive barriers against the domination of such imperial powers over our local administration. However the lack of knoweldge to design a resisting domestic mechanism would affect the liveliehood of each and every citizen of a country and it is ensured that lack of such capacity would result hurdles and problems towards the way of cultural coexistence.

**Endnote :**

* will Qurant, history of civilization, Vol 1, Chapter 1,p,141.

# நீதி நெறிமுறை தரும் சமயவாழ்வு

மேனகா கேசவன்
இடைநிலை ஆண்டு
இலங்கைச் சட்டக் கல்லூரி

சமய நம்பிக்கைகளை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடங்கி இன்று வரை மனித சமுதாயம் எங்கெல்லாம் வாழ்ந்து வந்துள்ளதோ அங்கெல்லாம் மனித வாழ்வியலோடு மிகவும் வேரூன்றியுள்ளன. ஆரம்ப காலத்தில் சமூகங்களை ஓர் கட்டுக்கோப்புக்குள் ஒழுங்கு நெறி முறைகளில் நெறிபிறழாது, நியம, விழுமியங்களிலிருந்து விலகிச் செல்லாது, கட்டிக்காத்த பெருமை சமயங்களைச் சாரும் என்றால் மிகையாகாது. ஒரு சமுதாயம் உயர்ந்த நிலையில் இருந்தால் தான் அந்த நாடே முன்னேறும். இதற்கான வழி வகைகளை மட்டும் சமய நெறிகள் சுட்டி நில்லாமல் அதிலிருந்து விலகும் போது அதற்குரிய விளைவுகளையும் சுட்டிக்காட்ட தவறவில்லை. இங்கு உயர்ந்த நிலை என்பது செல்வம், அந்தஸ்து மூலம் உயர்வதனை சுட்டி நிற்கவில்லை, மாறாக மனித நிலையில் மனித மேம்பாட்டை அடைதலையே உயர்ந்த நிலை குறித்து நிற்கின்றது.

தற்கால சமூகத்தில் சமுதாய விழுமியங்கள், நியமங்கள் என்பவற்றை பல சட்ட உருவாக்கங்கள், நீதிமன்றங்கள், அவற்றை எடுத்துரைக்க வழக்கறிஞர்கள் என பல்வேறுபட்டவர்கள் ஒருங்கிணைந்து பேண முயற்சித்தாலும் அவர்களினால் முழுமை பேண முடியாது உள்ளமை ஒன்றும் வியப்பில்லை.

இன்றைய நவீனத்துவம் சென்றடையாத தொன்மைக் காலத்தில் இவ் அளப்பரிய பணியை ஆற்றியது அக்கால சமயங்களே. அவற்றின் தொடர்ச்சியையும் இன்றைய சமுதாயத்தில் காணலாம். மக்கள் தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை இறைவனிடம் சென்று முறையிடுவதும் அவனே தீர்த்து வைப்பான் என்று நம்புவதும் இன்று வரை மக்கள் மத்தியில் இடம்பெறும் ஓர் நிகழ்வாகவும் தொடர்கின்றது. ஆரம்பகால புராண, இதிகாசங்களும் இவற்றையே அணி செய்கின்றது. உதாரணமாக திரௌபதியின் துகில் நீக்கும் போது அவள் “கண்ணா!” என்று இறைவனிடம் சரணடைய அவளுக்குத் துகில் கொடுத்தான். சித்திரிப்பை இங்கு குறிப்பிடலாம்.

மனுதர்மசாஸ்திரம், அர்த்தசாஸ்திரம், திருக்குறள் போன்ற இலக்கியங்களில் மக்கள் தங்கள் விழுமியங்கள், கடமைகளிலிருந்து தவறினால் அவர்களுக்குரிய தண்டனையை வழங்கும் மரபுகளை காணமுடியும். இவற்றுள்

மனுதர்மசாஸ்திரம் சமூக வேறுபாட்டை பிரதிபலித்தாலும் இந்துக்கள் மத்தியில் அவை நீதி நூலாக கருதப்படும் மரபுகள் இன்றும் காணப்படுகின்றது. இவற்றில் ஒருவன் தன் கடமையிலிருந்து தவறினால் அவனுக்கு எவ்வளவு தண்டப்பணம் அறவிடுவது தொடர்பான குறிப்புக்களையும் காணலாம்.

இவ்வாறாக ஒருவன் செய்யும் செயலே அவனுக்குரிய பயனாக அமையும் என்பதனை சிலப்பதிகாரத்தில் 'முற்பகல் செய்திடினும் பாண்டிமாதேவி அது பிற்பகலே விளையுமடி.....' (நாட்டார் கூத்து பாடல்) என்று கண்ணகி கூற்றாக வரும் அடிகள் ஒருவனுக்குரிய தண்டனை உடனே கிடைக்கும் என்பதனைச் சுட்டி நிற்கின்றது. மேலும் மக்கள் மத்தியில் 'அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்' என்ற நம்பிக்கையும் இன்றும் தொடர்ச்சியாக காணப்படுகின்றது.

புராண மரபுகளில் ஒருவனுடைய நல்ல, தீய செயல்களுக்கேற்ப அவனுக்கு முறையே சொர்க்கம், நரகம் தீர்மானிக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது. அந்த வகையில் கருடபுராணம், தேவி பாகவதம் போன்ற இலக்கியங்களில் இவற்றினை நாம் அறிய முடிகின்றது. அந்த வகையில் கொடிய பாவச்செயல்களைச் செய்த ஒருவன் கொதிக்கும் எண்ணைப் பாத்திரத்தினுள் போடப்படுவோன் என விளக்கிச் சொல்கின்றது. இதனை இன்றும் எமது ஆலயங்களில் 'சித்திர புத்திரனார்' கதைப்படிப்பினுடாக அறிய முடிகின்றது.

சமண, பௌத்த மதங்களின் கொள்கைகளிலும் இவற்றை நாம் விளங்கிக் கொள்ளலாம். பௌத்தமதத்தில் 'பஞ்சசீல' 'அட்டசீல' கொள்கைகள் மூலம் ஒருவன் சமுதாய விழுமியங்களிலிருந்தும் நியமங்களிலிருந்தும் விலகுவது தண்டிக்கப்படும் குற்றமாக குறிப்பிடப் படுகின்றது. சமணத்துறவிகளால் பாடப்பட்ட 'நாலடியாரில்' இவை தொடர்பான மேலதிக விடயங்களைப் பெற முடியும்.

இவை அனைத்திற்கும் மேலாக அன்று தொட்டு இன்று வரை மக்கள் மத்தியில் இருந்துவரும் கன்ம மறுபிறப்பு கொள்கை கூட மக்களை வழிநடத்திச் செல்லும் மார்க்கமாகவே உள்ளது. அதாவது ஒருவன் இன்றைய உலகில் நலமுடன் வாழ்வதற்கு அல்லது வலுவிழந்து போவதற்கு அவனுடைய முற்பிறவியில் செய்த வினை காரணம் என்று நம்பப்படுகின்றது. இப் பிறப்பில் நல்லது செய்தால் மறுபிறப்பில் சிறந்த வாழ்க்கை வாழ முடியும் என்ற சிந்தனையினை இன்றும் மக்கள் மத்தியில் காணலாம். இது ஒருவனை அகரீதியாகவே நன்னடத்தைக்கு இட்டுச் செல்வதனை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

இவை அனைத்திற்கும் அப்பால் இறைவனையே நீதவானாக கருதி தங்கள் குறைகளை ஒப்புவிக்கும் வழக்கம் இன்றுமுண்டு. அந்தவகையில் இறைவனையே நீதிக்கு கர்த்தாவாக கருதி வரும் மரபின் தொடர்ச்சியாகவே யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள சங்கிலி மன்னின் அரண்மனைக்கு அருகாமையில் இருந்து அருள்பாலிக்கும் 'சட்டநாதர்' எனும் பெயருடைய இறைவன் 'நல்ல நாயகி' அம்மனுடன் இருந்து நீதிபரிபாலித்து வருவதான ஐதீகம், இவற்றின் தொடர்ச்சியும் நீட்சியும் எனலாம்.

இன்னும் இன்றும் ஊர்மக்கள் மத்தியில் மரநிழல்களின் கீழ் காணப்படும் வைரவர் போன்ற கிராமியத் தெய்வங்களின் மீது 'இழைகட்டுதல்' எனும் மரபு காணப்படுகிறது. அதாவது இங்கு இழைகட்டுதல் என்பது ஒருவருடைய பொருள் களவு போனால் அதனை திரும்பிப் பெறவும், பொருளை எடுத்தவன் தண்டிக்கப்படுவான் என மேற்கொள்ளப்படுவதாகும்.

ஊர் மக்கள் மத்தியில் 'சத்தியம்' செய்யும் முறையும், அவர்கள் தங்களுடைய நீதியை நிலைநாட்டும் ஓர் முறையாக வெளிப்படக் காணலாம். இதன் தொடர்ச்சியினையே இன்று நீதிமன்றங்களில் கட்சிக்காரருடைய விசாரணையின் போது இந்துக்கள் உண்மையாகவும் உறுதியாகவும் வாய்மொழி மூலம் சத்தியம் செய்வதனையும் கிறிஸ்தவர்கள் தமது புனித நூலாகிய விவிலிய நூலின் (Bible) மேலும் செய்யும் மரபைக் காணக்கூடியதாக உள்ளது.

சமுதாய நலனுக்கு எதிராக செயற்படும் போக்கைக் கொண்ட ஒருவரை சமுதாயத்திலுள்ள அமைப்புக்களான காவல்துறை, நீதிமன்றம், மத்தியஸ்த சபை போன்றன ஏற்படுத்தப்பட்டு அறிவுரை கூறுதல், தண்டனை வழங்குதல் என செயற்படும் போது சமயம் இவை அனைத்தினையும் கடந்து புதிய பரிமாணத்துடன் செயற்படுகின்றது. அதாவது மனித ஆற்றலுக்குட்படாத இயற்கையை மீறிய ஆற்றல் ஒன்றுள்ளது என வலியுறுத்தி நன்மை செய்வோருக்கு நன்மை விளையும் என்றும் அவர்களுக்கு சிக்கல் ஏற்படும் போது தெய்வீக ஆற்றல் மூலம் காப்பாற்றப்படுவார். மாறாக தீமை செய்வோர் தொடர்ந்து இன்னல்களையும், பாவங்களையும் சந்திப்பார் என்ற கருத்துக்களூடாக மக்களை நெறிபிறழ்வு நிலைக்குத் தள்ளாமல் நல்ல நிலையில் இருக்க வழிவகுக்கின்றது.

எனவே தொகுத்துக் கூறும் போது சமயமானது சமுதாய உறுப்பினர்களுக்கும் சமுதாயத்திற்கும் அவசியமான நெறிமுறைகளையும், விழுமியங்களையும், நியமங்களையும் சுட்டிக்காட்டுவதோடு அதனை கண்டிப்புடன் ஏற்றுச் செயற்பட வைப்பதிலும் பெரும்பங்காற்றுகின்றது. இவற்றையெல்லாம் சமயம் ஒழுக்கம் சார்ந்த விடயமாக அறிவுறுத்தி அவற்றுக்கு முதன்மை கொடுக்கின்றது. ஆரம்பகாலம் தொட்டு சமயம் செய்த பணியை இன்று நாம் ஓரளவேனும் செய்வதற்கு முயல்கின்றோம். ஆகவே இத் தொழிலில் நாம் மிகவும் சிரத்தையுடனும், நீதிநெறி தவறாதும் செய்வதற்கு கடமைப் பட்டுள்ளோம்.

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

# அறுபத்துநான்கினுள் ஓர் உன்னதமாம் இசைக்கலை (வரலாற்று நோக்கு)

ஷர்மிளதர்ஷினி சிவஞானம்,
இலங்கை சட்டக்கல்லூரி முதலாம் வருடம்,
கலைப்பீடம் இரண்டாம் வருடம்
கொழும்பு பல்கலைக்கழகம்

''நாதவிந்து கலாதி நமோ நமோ
வேதமந்திர
விஸ்வரூபா நமோ நமோ''

என அருணகிரிநாதரும்
''நாதனுர் மணிசம் சங்கரம் நமாமி''
என தியாகராஜ சுவாமிகளும் குறிப்பிடுவது இறைவன் நாத பிரமமாய் உள்ளவன் அந்த நாதமே இசைக்கு அடிப்படையாகின்றது. என்பதாகும் கலைகளில் எக்கலையானாலும் அக்கலைகளை ஆரம்பித்து வைத்த பெருமை இறைவனையை சாரும். இந்து மதத்தின் வளர்ச்சி என்பது பொது வாகவே கலைகளோடு தொடர்பு பட்டு காணப்படுகின்றது. கலைகளை தெய்வத்துடன் தொடர்புபடுத்தி பார்ப்பது இந்து மக்களுடைய வழமையாகும் இன்பக்கலையின் முடி எனப்போற்றப்படும் இவ் இசையானது மனிதர்களை மட்டுமன்றி விலங்குகளையும் வசப்படுத்தும் ஆற்றல் பெற்றது. இறைவனை மகிழ்விக்க ஆலயங்களில் பஞ்சதோத்திரம் உருக்கமாக ஓதப்படுகிறது. அத்தோடு குழல், யாழ், வீணை, தாளம் முதலிய இசைக்கருவிகளும் இணைந்து கொள்ளும் போது அங்கு பேரின்ப ஒலியே தோன்றும்.

ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் தனியிடம் பெறுவது இசைக்கலையே எல்லோரையும் ஒரு முறை சற்று திரும்பிபார்க்க வைத்துவிடும் காந்த சக்தியே இசை. இசைக்கலையானது புதிதில் தோன்றிய ஒன்றுமில்லை, இடையில் தோன்றியதுமில்லை ஆரம்பகாலந்தொட்டே இந்து மதம் என்று தோன்றியதோ அன்றே இசைக்கலையும் தோன்றியது. சிந்து வெளிகாலம் தொடக்கம் இன்றுவரை இசைக்கலை வளர்ச்சி அடைந்து வந்ததற்கான சான்றுகள் உண்டு.

இசைக்கலையைப் பற்றி உலகப் புகழ்பெற்ற அறிஞர் சேக்ஷ்பியர் ''ஆத்மார்த்த சங்கீத உணர்ச்சியில்லாத மனிதன் இனிமையான சந்தங்களுக்கு சங்கீத உணர்ச்சியில்லாத மனிதன் இனிமையான சந்தங்களுக்கு இசைவாக அசையாத மனிதன் சதிகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் இடமளிப்பவன் அவனது ஆத்மாவின் அசைவுகள் நல்லரவைவிட மந்தமானவை'' என்கின்றார். அத்தோடு காளிதாசரும் ''நவரத்தினமாலை'' (நவரத்தினமாலை) என்ற தோத்திரத்தில் இசையைப்பற்றி சிறப்பாக விளக்கி உள்ளார்.

இந்து சமய தெய்வங்கள் பலவற்றுடன் இசைக்கருவிகளும் தொடர்பு பட்டுள்ளன. சிவன் - உடுக்கை, கிருஷ்ணன் - வேங்குழல், சரஸ்வதி - வீணை, நந்திதேவர் - மத்தளம், பிரம்மா - தாளம் என்பன காணப்படுவதும் தெய்வங்களே இசைக்கு மூல ஆதாரமாக விளங்குவதால் இசை ஒரு தெய்வீக கலையாக காணப்படுகின்றது. இவ்விசையில் ஏழு ஸ்வரங்கள் உண்டு இவை பராசக்தியின் வீணையிலிருந்து எழுந்ததாக கூறப்படுகின்றது. இக்காலத்தில் கோயில் வாத்தியங்கள் பெரும்பாலானவை

அருகிப்போக நாதஸ்வரமும், தவிலுமே இன்றுவரை நிலைத்துள்ளன. திருக்கோயில்களில் விசேட தினங்களிலும் விழாக்காலங்களிலும் சர்வவாத்தியங்களும் இசைக்கப்பட வேண்டும் என காமீக ஆகமம் கூறுகின்றது. சங்கும் மணியும் பண்டைய காலந்தொட்டே கோயில் கிரியைகளில் இடம்பெறுகின்றது.

சகல பூஜைகளிலும் மணி பயன்படுத்தப்படுகின்றது. அத்தோடு மாரியம்மன கோயில்களில் உடுக்கை பறை ஆகிய இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன. எனவே பண்டைய காலம் தொட்டு இன்றுவரை இசை மனித வாழ்க்கையில் ஓர் அம்சமாகவே காணப்படுகின்றது. இவ்விசையானது காலத்துக்குக் காலம் புதிய அமைப்பை பெற்று கோயில்களிலும் ஏனைய இடங்களிலும் சிறப்பாக காணப்படுகின்றது.

இந்து சமயத்தின் தொன்மையான நூலான வேதமும், பழமையான நூலான பாணனீயமும் இசைபற்றி கூறும் ஆரம்ப நூல்களாக காணப்படுகின்றன. வேதங்களில் பல்வேறு ஸ்வரங்கள் அமைத்து ஓதப்படுவதாக கூறப்படுகின்றது. இவ்வொலி வேறுபாடுகளை உதார்த்தம், அனுதார்த்தம், ஸ்வரிதம் என மூன்று வகையாக பாகுபடுத்தியுள்ளார்கள். சங்கீதத்தில் ஆரோகணம், அவரோகணம் என்பவை வேதத்தில் சொல்லப்பட்ட உதார்த்தம் அனுதார்த்தம் என்பவையே ஆகும். உலக சிருஷ்டி எப்போது ஆரம்பித்ததோ அப்பொழுதே ஸ்வரங்களும் தோன்றி விட்டன. இருக்கு வேதத்தின் எட்டாம் மண்டலமான பிரகாதம் முழுவதும் இசைப்பாடல்களாக உள்ளன. வேதங்களில் சாமவேதம் ஓசை நயத்துடன் பாடுவதற்கென்றே தொகுக்கப்பட்டதாகும். இவ்வேதத்தில் இடம்பெறும் கானங்கள் என்ற பகுதியில் ராகங்கள் இன்னவை என குறிப்பிடுவதுடன் இசையையும் விளக்கிக் கூறுகின்றது. சாமம் என்றால் இசை என்றும் இருக்கு என்றால் பாட்டு எனவும் பொருள்படும்.

இசையின் ஆரம்பம் நாகரீகக் காலங்களிலும் இருந்துள்ளது. என்பதை மொஹஞ்சதாரோ,ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களான புல்லாங்குழல், மத்தளம் என்பவற்றினையும் கொண்டு அறிய முடிகின்றது. இச்சான்றானது வேதகாலத்திற்கு முன் கிடைத்த சான்றாகும். ஆனால் முதலாவதாகக் கிடைத்த இலக்கிய சான்றாக வேதமே அமைகின்றது. தென்னிந்திய காலங்களான சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம் அதற்கு பின் வந்த காலங்களிலும் நாம் இசைக்கலையின் வளர்ச்சியை நோக்கலாம்.

சங்ககாலத்தில் இசை இறைவனுக்கே அர்ப்பணிக்கப்பட்டதாக இருந்திருக்கின்றது. அதாவது பட்டினப்பாலை, பரிபாடல் ஆகிய நூல்களில் கடவுள்களை போற்றும் பழந்தமிழ் இசைப்பாடல்கள் காணப்படுகின்றது. அதாவது குரல், துத்தம், கைக்கிழை, உழை, இளி, வளரி, தாரம் என்பவையே தமிழுக்குரிய ஏழு இசைகளாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே சங்ககாலத்தில் ஐவகை நிலத்தாரும் அந்தந்த நிலத்திற்குரிய பண்களை கையாண்டனர்.

''செறிதொடி முன்னகை கூப்பிச்செல்வேன்
வெறியாடு மகளிரொடு செறித்தாய்க்
குழலகல, யாழ் முரல, முழுவதிர,
முரசியம்ப
விழாவறா வியல் ஆவணத்து''

என்ற சங்ககால பாடல் இசை இறைவனுக்கு அர்பணிக்கப்பட்டதை வலியுறுத்துகின்றது.

பழந்தமிழ் இசைபற்றி அறிய சிலப்பதிகாரம் அதன் உரை நூல்களுமே பெரிதும் உதவுகின்றன. சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதை இசைக்கு இலக்கணம் கூறுகின்றது. அத்தோடு கி.பி 4 - 6 வரையான காலப்பகுதியில் இசைக்கு இருண்டகாலம் என்பர். இக்காலப்பகுதியில் சமண, பௌத்த மதங்களின் செல்வாக்கு

அதிகரித்தமையால் இசை வசையற்று அருகி மறைய தொடங்கியது. இருந்த போதிலும் காரைக்கால் அம்மையாரின் பாடல்கள் மீண்டும் பக்தி பாடல்கள், தமிழிசை வளர கைகொடுத்து உதவின இக்காலத்தில் வாழ்ந்த மூன்று ஆழ்வார்களும் இன்கவிபாடும் பரம கவிகள் என அழைக்கப்பட்டனர்.

இசை வரலாற்றில் பல்லவர்காலம் தெய்வீக இசை தோற்றம் பெற்ற பொற்காலமாக திகழ்கின்றது. தேவார பாடல்கள் இக்காலத்திலே தோன்றின. தேவார முதலிகள் அவைதீகமதங்களின் பிடியிலிருந்து மக்களை விடுவிக்க இசையை ஒரு கருவியாக பயன்படுத்தினர். இசையிலே மக்களுக்கு இயல்பாகவே இருந்த விருப்பை உணர்ந்து அதன் மூலம் தமிழிசையும் பரப்பினர். தேனிலும் இனிய தேவார பதிகங்களை பாடிக்கொண்டு அடியார் புடைசூழ பல தலங்கள் தோறும் யாத்திரை செய்தனர். இதுவரை அகப்பாட்டாகவே இருந்தது. இந்த இசை இக்காலத்தில் கடவுள் உணர்ச்சியை புலப்படுத்தும் தெய்வீக இசையாக மாற்றம் பெற்றது.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் பல்வேறு உறவு முறைகள் மூலம் இறைவனை பாடியும் வண்டு, கிளி முதலியவற்றை இறைவனுக்கு தூதுவிடுவதாக பாடியும் வந்துள்ளனர். இவர்களில் மணிவாசகருடைய திருவெம்பாவை, அம்மானை, கோத்துமிபாட்டு, பூவல்லி பாட்டு, குயில் பாட்டு என்பனவும் இசைக்குரிய பாடல்களே ஆகும். இதே போலவே ஆழ்வார்களும் இறைவனை போற்றிப்பாடிய பாடல்களை தேவகானம் என்பர். இவ்வாறாக நாயன்மாரும், ஆழ்வார்களும் தோன்றி சைவ, வைணவம் தழைத்தோங்க வழி சமைத்ததோடு இசைக்கலையையும் வளர்த்தனர்.

''காதலாகிக்கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்நெறிக்குய்ப்பன''

என இசையின் வடிவாய்க்கண்டு இறைவனை துதித்தனர் மேலும்,

''சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்'' என அப்பரும்

''பண் ஆர் தரு மழையாய் உயர்
பொருளால் இறைவனாய்'' என சம்பந்தரும்

இசைவடிவான இறைவன் புகழைப் போற்றிப் பாடினர்.

பல்லவ மன்னர்களில் 1ம் மகேந்திரவர்மன் இசைவளர்த்தோர் வரிசையில் தனியிடம் பெறுகின்றான். ''இசை பாக்களே எனது செல்வமும், வாழ்வும்'' என்று தன் கல்வெட்டில் பொறித்து வைத்து உள்ளான். இவன் வீணை மீட்டுவதில் பெரும் ஆற்றல் வாய்ந்தவன். இவனின் கையிலிருந்த வீணை ''பரிவாதினி'' எனப்பெயர் பெற்றது. அத்தோடு பல்லவாரம் குகைக்கோயில் கல்வெட்டில் இவன் தன்னை ''சங்கீர்ண ஜாதி'' என குறிப்பிட்டுள்ளது. சதுஷ்டம், திஸ்ரம், மிஸ்ரம், கண்டம், சங்கீர்ணம் என்ற தாள வகையில் இறுதியாக உள்ள சங்கீர்ணம் என்ற தாள வகையில் இறுதியாக உள்ள சங்கீர்ணம் என்பதை புதிதாக கண்டு அதன் வகைகளையும் ஒழுங்குகளையும் அமைத்தவன் என்பதே இதன் அர்த்தமாகும்.

திருமெய்யம் என்ற ஊரிலுள்ள சிவன் கோயிலில் அமைந்துள்ள சிற்பத்தில் யாழ் உருவம் காணப்படுகின்றது. மகேந்திரவர்மன் காலத்தில் பெருங்கோயில்கள் யாவற்றிலும் இசைவெள்ளம் பெருக்கெடுத்தோடியது என்பர்.

''கோல விழாவின் அரங்கேரி கொடியிடை
மாதர்கள் மைந்தரோடும்''

என்ற சம்பந்தரின் தேவார அடிகளிலிருந்து ஆண்களும், பெண்களும் அக்காலத்தில் கோயில்களில் கலந்து பாடினர் என்பது புலனாகின்றது.

பல்லவ மன்னர்களுள் இராஜசிம்மனும்இசையில் பெரும் வித்தனன் என்பதை ''வாத்திய வித்தியாதரன்'' ''வீணநாரதன்'' என்ற அவனது

விருதுப்பெயர்கள் மூலம் அறியக்கூடியதாய் உள்ளது. இவன் கலைகளில் பெரும் பற்றுடையவன் என்பதற்கு காஞ்சிகைலாசநாத கோயிலே சான்றாகும். இங்குள்ள சிற்பங்கள் அணைத்திலும் இசை, நடனகலை இழையோடுவதை காணலாம்.

2ம் நந்திவர்மன் காலத்தில் காஞ்சி முத்தாலீஸ்வரர் கோயில் இசை, நடனகலையை வளர்க்க 44 கூத்திகள் இருந்தனர் என கல்வெட்டு கூறுகிறது. இதே போல் மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் திருவெல்லம் சிவன் கோயிலில் திருப்பதிகம் ஓதப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன.

சோழர்காலத்தில் தேவார பெருமைகளை நாடெங்கிலும் பரவ செய்த பெருமை சோழமன்னர்களையே சாரும். இக்காலத்தில் தேவாரங்களுக்கு பண் அமைத்து பாடப்பட்டது. ஓதுவார் மூர்த்திகளை ஆலயங்கள் தோறும் நியமித்து இசையை வளர்க்க சோழமன்னர்களே காரணமாக இருந்தனர். ராஜராஜசோழனின் தஞ்சை பெருங்கோயிலின் கல்வெட்டில் இக்கோயிலில் நாள்தோறும் திருப்பதிகம் ஓத 48 பெண்கள் தமிழகத்திலிருந்தும், பல இடங்களிலிருந்தும் குடியேற்றப்பட்டனர். இவர்களே ''பீடாரர்'' என அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அத்தோடு உடுக்கை கொட்டி மத்தளம் வாசிக்க இருவரும் ஆடல் பாடலியற்ற 400 சேரிபெண்களும் கோயிலை அடுத்து இருப்பிட வசதி அமைத்து குடியேற்றப்பட்டதாகவும் அறியமுடிகிறது.

ராஜராஜன் நம்பியாண்டார் நம்பியின் உதவியோடு தேவார பதிகங்களை திருமுறையாக தொகுத்து கோயில்கள் தோறும் ஓதும் வண்ணம் ஏற்பாடு செய்தான். இதனால் இக்காலத்தில் திருமுறைகள் ஓதும் முறை செல்வாக்கு பெறலாயின.

இராஜேந்திர சோழன் தந்தையைப் போலவே தேவாரபண்களை வளர்த்தான் என்றும் அவனது சங்கை கொண்ட சோழச்சக்கரவர்த்தி நாள்தொறும் ஓத தேவாரமண்டபம் ஒன்றை கட்டுவித்தான் என அறியமுடிகிறது. இதேபோல 2ம் குலோத்துங்கன் பெரிய புராணம் பாட காரணமாய் இருந்தான். இவனது தேவியரில் ஒருத்தி ''ஏழிசைவல்லவி'' என்ற பட்டப்பெயரை கொண்டவள்.

சோழமன்னர்கள் திருமுறைகளை பாதுகாக்கவும், திருப்பதிகம் பாடவும், எழுதவும் என விசேட மண்டபங்களை தோற்றுவித்து இசையை வளர்த்தனர். இம்மண்டபத்தை திருக்கைகோட்டி மண்டபம் என பெயர்பெற்றது. எனவே சோழ மன்னர்களது பணிகளாலும் இக்கால மக்களின் பக்தி உணர்ச்சியினாலும் இசைக்கலை மிக உன்னத நிலையை பெற்றிருந்தது என இச்சான்றுகள் மூலம் அறியலாம்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் காணப்படும் இசைத்தூண்கள் ஆலயங்கள் இசையுடன் இணைந்துள்ளதை உணர்த்துவதாக உள்ளது. குப்தர் காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்களில் இசைக்கலை சிறப்புற்று இருந்தது என்பதை அங்கு கண்டெடுக்கப்பட்ட நாணயங்களில் சமுத்திரகுப்தன் வீணை வாசிப்பது போன்ற நிலையும், இவனது இசையினை இலக்கியங்கள் போற்றுவதிலிருந்தும் இக்கால இசைக்கலையின் வளர்ச்சியினை அறிய முடிகின்றது.

பகவத்கீதையில் ''வேதங்களில் நான் சாமவேதம்" என்கின்றார். கட உபநிடதத்தில் நசிகோதன் யமனிடம் ஆன்மா பற்றிக்கேட்க யமன் உனக்கு நான் இசைக்கருவிகளையும் பெண்களையும் தருகின்றேன் நீ சென்று ஆட்சி செய் என கூறியதாக காணப்படுகின்றது. மண்டூர் குருமிய கல்வெட்டாலும் இசை தொடர்பான விடயங்கள் காணப்படுகின்றன.

இதற்கு பின்வந்த ஐரோப்பிய காலங்களில் அருணாச்சல கவிராயர், முத்துசுவாமி தீட்சிதர், தியாகராஜ சுவாமிகள், சியாமாசாஸ்திரிகள், மாரிமுத்துப்பிள்ளை ஆகியோர் கீர்த்தனைகளை இயற்றி இசையை வளர்த்தனர். இவ்வாறு இசைக்கலையானது

காலங்களின் அடிப்படையில் வளர்ச்சியடைந்து ஓர் உன்னதநிலையை அடைந்தது.

இலங்கையின் இசைவளர்ச்சிக்கு வித்திட்டவராக விபுலானந்த அடிகளார் காணப்படுகின்றார். இவருடைய ''யாழ்'' என்ற நூல் இவருடைய இசையார்வத்தை காட்டியது. இன்று இசையை ஒரு பாடமாக எடுத்து அதற்கு முன்னுரிமை கொடுத்து கற்பிக்கின்றனர். இவ்விசைக்கு என்றுமே முற்றுப்புள்ளி கிடையாது. அது தன் பாதையில் அதற்கும் அசைவற்று சுயமாக வளர்ந்து வருவது கண்கூடு.

இசைக்கலையை பொறுத்தவரை இன்னும் ஆலயங்களை மையமாகக் கொண்டு காணப்படுகின்றது. இசையைக்கண்டு நூல் பூண்டு, விலங்குகள் கூட தலைசாய்க்கின்றன. ''இசையால் வசமாகா இதயமேது'' என்பது இதனால்தானோ. ''ஏழிசையாய் இயற்பயனாய்'' விளங்கும் சிவன் தட்சிணாமூர்த்தியின் வடிவமாக இசைவடிவாக காட்சி தருகின்றான். கலைகளில் இசைக்கலையே உன்னதகலை என்பது எந்த விதத்திலும் ஐயமில்லை இது ஓர் உன்னத கலையே.

2007 ஆம் ஆண்டுக் கட்டுரைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற ஆக்கம்

# சட்டத்தின் அடிப்படை சமயமே

இ.பிரியதர்ஷினி
முதல் நிலை ஆண்டு

சமயம் என்னும் பதம் வழிகாட்டி என்னும் அர்த்தத்தினை புலப்படுத்துவதாக உள்ளது. சட்டம் சமயத்தின் பால் ஒழுகி தன்னை சீர்செய்துகொள்கிறது. சட்டத்தின் எல்லா நோக்கத்திற்கும் உள்ளடக்கத்திற்கும் சமயமே வழிகோலாய் நிற்கிறது. இதனை இந்து சமயம், இஸ்லாமிய மதம், பௌத்தம், கிறிஸ்தவம் ஏன் எத்தனை மதங்கள் காணப்படினும் எல்லா சமூகங்களிலும் சமயம் முக்கியம் பெறுகிறது. சமூகம் எந்தமதத்தினை குறித்த ஒரு சமூகம் பின்பற்றுகிறதோ அந்த அடிப்படையிலேயே சமூகத்தின் சட்டங்களும் தொகுத்து வகுக்கப்படுகின்றது.

''தென்னாடுடைய சிவனே போற்றி, என் ஆண்டவருக்கும் இறைவா போற்றி, இடமே சூழ்க எல்லோரும் வாழ்க''

என இந்து மதத்தில் கூறப்படுகிறது. எல்லோரும் நலமுடன் வாழவேண்டும் என்ற அடிப்படை கருத்தே சட்டத்தின் முக்கிய நோக்கமாக காணப்படுகிறது.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதியான சிவனை முழுமுதற் கடவுளாக கொண்டு இந்துமதம் காணப்படுகிறது. வேதங்கள், உபநிடதங்கள், ஆகமம், இதிகாசங்கள், புராணங்கள் தர்ம சாஸ்திரங்கள், திருமுறைகள், ஆழ்பார்பாடல்கள் என்பன இந்து சமய கருத்துக்களை விதத்துரைக்கும் அரிய பொக்கிஷங்களாக கூறப்படுகின்றன.

கர்மநியதி என்பது இந்து சமயத்தின் முக்கியமான கோட்பாடாகும். கர்மபலனுக்கு ஏற்பவே ஒருவன் நல்ல பலனையோ அல்லது தீயபலனையோ அனுபவிப்பான். ஒவ்வொரு சிந்தனையும் சொல்லும் செயலும் நித்திய தெய்வீக துலாகோலில் நிறுத்தப்படுகிறது. கர்மம் செயல் மட்டுமல்ல செயலின் விளைவுகளையும் கூறுகிறது. சட்டத்தின் நோக்கமும் ஆக்கமும் இந்த அடிப்படையிலேயே காணப்படுகிறது. சமயத்திற்கு முரணான செயல் அதாவது ஒருவன் தீங்கு அல்லது குற்றம் செய்வானாயின் அதற்கான பலனை அனுபவித்தே தீர வேண்டும் என்பது கர்மத்தின் சாரம். அது போலவே சட்டத்தில் தவறு அல்லது குற்றம் என வரையறுக்கப்பட்டவற்றை ஒருவன் செய்வானாயின் சட்டத்தின் அடிப்படையில் தண்டிப்பதே சட்டத்தின் நோக்கமும் ஆகும்.

''எதை விதைக்கின்றாயோ அதையே அறுவடை செய்கின்றாய்'' என்னும் பகவத்கீதையின் கிருஷ்ணரின் உபதேசம் இக்கருத்தினையே குறித்துக்காட்டி நிற்கிறது.

இந்து சமயமானது செயல்களை மூன்று வகையாக பிரிக்கிறது. மானசீகம் (மனச்செயல்), வாசிகம் (வாய்செயல்), காமிகம் (உடற்செயல்) என்பன அவையாகும். நாம் உடலில் மட்டும் வேலைசெய்வதில்லை. மனத்தாலும் வேலை செய்கின்றோம் எனவே அந்த ஏழு நல்ல செயலுக்கோ குற்றச் செயலுக்கோ நிச்சயமாக மனத்தின் பங்கும் அவசியம். இந்த அடிப்படை இலங்கை குற்றவியல் சட்டக்கோவை குடிபோதை, கடும்பொறுப்பு, பித்துநிலை தொடர்பான குற்றங்களை வரையறை செய்வதில் அடிப்படையாக கொண்டிருப்பதை காணலாம். அதாவது எந்த ஒரு குற்றசெயலும் குடிபோதையை எடுத்துக் கொண்டால் மது அருந்தி வாகனம் ஒட்டுதலானது இலங்கையில் குற்றமாக கருதப்படும். எனினும் தான் அருந்தியது மதுபானம்தான் என்றும் அதனால் நிலை தடுமாற்றம் வரும் என்றும் அறியாது செய்யப்படினின் அக்குற்றச் செயலுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. எனவே சட்டத்தின் குற்றம் தொடர்பான விடயங்களில் குற்றமனம், குற்றச்செயல் என்பவற்றை வரையறுக்க சமயத்தின் அடிப்படை நோக்கப்படுகிறது.

இந்து சமயத்தில் பஞ்சமாபாதங்களாக கொலை, திருட்டு, பொய்பேசுதல், புலால் உண்ணுதல், பாலியல் வல்லுறவு என்பன கூறப்படுகிறது.

இவற்றில் புலால் உண்ணுதலை தவிர்ந்த ஏனைய நான்கும் சட்டத்தின்படி குற்றச்செயல்களாகும். பொய் பேசுவதினூடாக பிறரை ஏமாற்றுகின்றோம். ஏமாற்றுதல் என்பதும் குற்றமாக கணிக்கப்படுகிறது.

''பொய் பேசுபவனுக்கு பொறியும் கிடையாது'' என்னும் முதுமொழி இங்கு நினைவுகூரத் தக்கது.

''பரோபகார புண்யாய
பாபாய பரபீடணம்''

என பகவத்கீதை சொல்கிறது. அதாவது உதவி செய்வதால் எமக்கு மேன்மையே கிடைக்கிறது. பிறருக்கு துன்பம் விளைவிப்பதால் பாவமே நேர்கிறது என்பது இதன் விளக்கமாகும்.

அதாவது சமுதாயத்தின் நலனுக்காகவே சட்டம் உருவாக்கப்படுகிறது. சமூக நலன் தொடர்பான எல்லா கருத்துகளும் ஊற்றெடுப்பது சமயத்தில் இருந்துதான் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். தர்மசாஸ்திரங்களை எடுத்துக் கொண்டோமானால் மனிதன் விலங்குகளாக மாறாமல் மனித தன்மையோடு வாழ்ந்து மனிதகுலத்தை மேம்படுத்தும் பலம் இந்து சமயத்திற்கு உண்டு. தர்மசாஸ்திரங்கள் விதிநூல்களாக கொள்ளப்படுகின்றன. தனிமனிதனும், சமூகமும் கடைப்பிடிக் கவேண்டிய விதிகளை எடுத்து விளக்குவனவாக இவை உள்ளன. சனாதனதர்மம், மானவதர்மம், ராஜதர்மம், ஸ்திரிதர்மம் என தர்மசாஸ்திரத்தில் பல பிரிவுகள் கூறப்பட்டுள்ளன. அதாவது புருஷ தர்மத்தில் பிறர்மனை நோக்குதல் ஒரு குற்றமாக கூறப்பட்டுள்ளது. அதுவே விவாகரத்து கோருவதற்கான திருமணக் குற்றத்தின் ஒன்றான சோரம் சட்டத்தின்

கண் குற்றமாகும். எனவே சமயத்தின் அடிப்படையிலே சட்டத்தின் ஆக்கமும் காணப்படுகிறது என்பது தெள்ளத் தெளிவாகிறது.

இந்து சமயத்தை பொருத்தவரை திருமணம் புனிதமானதாகவும் அதில் மனைவி அறவாழ்வில் கணவனுக்கு துணையாக இருக்க வேண்டும் எனக் கூறுகிறது.

``சந்ததி தொடர்பு அற்றுப்போகாமல் இருக்க கிரகஸ்த தருமத்தை மேற்கொள்வாய்'' என தர்மசாஸ்திரம் உரைக்கிறது. இந்துசமயத்தின் இதிகாசங்களின் ஒன்றான இராமயணம் தர்மத்தை கடைபிடித்தல், நேர்மை வழிநடத்தல், என்ற கருத்துக்களை தெளிவாக உரைப்பதோடு'' ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கலாசார பண்புகளையும் சமயம் உணர்த்தி நிற்கிறது. இலங்கை இந்தியா மட்டுமல்ல. சர்வதேச ரீதியில் இரு தாரமணம் (டீபையஅல) குற்றமாகவே கணிக்கப்படுகிறது. இஸ்லாமிய நாடுகள் இதற்கு விதிவிலக்கு. எனவே சமயமே சட்டத்தின் அத்தனை அடிப்படை கருத்துக்கும் நோக்கத்திற்கும் வழிகாட்டியாக நின்று சட்டத்தை வகுக்கிறது.

இந்து சமய கடவுள்களில் சிவனின் வாகனமாக பசுகருதப்படுவதால் பசுவை ஒரு புனிதப்பொருளாக இந்துக்கள் வழிபடுகின்றனர். இந்தியாவில் இச்சமய நியதி ``பசுவதை தடுப்புச்சட்டம்'' என்பதன் ஊடாக சட்டத்தில் உட்புகுத்தப்பட்டிருப்பதை காணலாம்.

'சர்வே ஜன சுகினோ பவன்ந்து'

என்பதே வேதங்களின் சாரமாகும். எல்லா உயிர்களும் இன்புற்றிருக்கட்டும் என்பதே இதன் விளக்கமாகும். சமூகத்தில் சட்டமானது நீதியையும், ஒழுங்கையும் நிலையும் நிலைநாட்டுவதற்காகவே உருவாக்கப்பட்டது. இதனூடாக அனைவருக்கும் பாதுகாப்பு அளிப்பதுடன் சட்டத்தினால் நன்மையும் உண்டாகிறது. இந்த அடிப்படையும் சமயத்தில் இருந்தே பெறப்பட்டிருக்கிறது.

அல்லாஹ் ஒருவனே இறைவன் என இயங்கும் இஸ்லாமிய சமயத்தின் அடிப்படையும் அன்பை வலியுறுத்துவதாக காணப்படுகிறது. பிறரைநேசித்தல், பிறருக்கு துன்பம் விளைவிக்காது இருத்தல் என்பன மட்டுமல்லாமல் கொலை, திருட்டு என்பன பாவங்களாய் கொள்ளப்படுகின்றன. திருக்குர்ஆன் என்னும் புனிதநூல் இஸ்லாமிய சமயம் பற்றி எடுத்துரைக்கிறது. இஸ்லாமிய நாடுகளை பொறுத்தவரை குர்ஆனில் சொல்லப்படும் பெரும்பாலான விடயங்கள் நேரடியாக சட்டமாக்கப் பட்டுள்ளன. சவூதி அரேபியாவை பொருத்தவரை திருக்குர்ஆன்' னே அதன் அரசியலமைப்பாக காணப்படுகிறது. இலங்கையில் விசேடசட்டமாக ``முஸ்லிம் சட்டம்'' காணப்படுகிறது. அதாவது முஸ்லிம்சமூகம் இச்சட்டத்தின் படியே ஆளப்படுகின்றனர். வகூப், முஸ்லிம் திருமணச்சட்டம், வழியுரிமைச்சட்டம் என்பன திருக்குர்ஆனின் கூறப்பட்ட விடயங்கள் நேரடிச்சட்டமாக காணப்படுகிறது.

'ஒன்றே கடவுள் ஒருவனே தேவன்' என்னும் வாசகத்தை சாரமாக கொண்ட கிறிஸ்தவ சமயத்தை எடுத்து நோக்குவோமானால், சமயமே சட்டத்தின் அடிப்படை என்பது மேலும் தெளிவாகும். புனித பைபிளின் வாரங்கள் பிறரை நேசித்தல், தவறை மன்னித்தல் என்பனவற்றை சிறந்த மனிதனுக்கு

இருக்கவேண்டிய பண்புகளாய் உரைக்கின்றது.

Donoghue Vs Stevenson என்னும் ஆங்கில வழக்கில் கிறிஸ்தவ மத கருத்தான ''அயலவனை நேசி'' என்னும் பாசத்தை மேற்கோள் காட்டியே வழக்கு தீர்க்கப்பட்டது. எனவே சட்டத்தில் ஏற்பாடு இல்லாவிட்டாலும் சட்டவிடயங்கள் தொடர்பில் சமயக்கருத்தான நீதியும் ஒப்புரவும் இங்கு நோக்கப்படுகிறது.

இலங்கையின் ''நம்பிக்கை பொறுப்பு கட்டளைச் சட்டம்'' சமயக்கருத்தான விசுவாசம், நம்பிக்கை என்னும் அடிப்படையிலேயே முற்றுமுழுதாக உருவாக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகும் எனவே சமயத்தின் கருத்துக்களே சட்டத்தினை ஏற்படுத்துகிறது.

எனவே தொகுத்து நோக்கின் எல்லா சமயங்களும் 'அன்பையே வலியுறுத்து கின்றன. எங்கோ ஊற்றெடுத்து பெருகி வெள்ளமாய் வரும் நதிகள் இறுதியில் கடலில் சங்கமிப்பதுபோல சமயங்களின் கருத்துக்களும் இறைவனை அடைதலே நோக்கமாக கொண்டுள்ளன. சமயங்கள் மனிதனின் வாழ்க்கை நெறியையும் நியதிகளையும் விதைந்துரைக்கின்றன. சமூகமானது தனிமனிதனை உள்ளடக்கிய பரந்த எண்ணக்கருவாகும். எனவே தனிமனிதனை அங்கத்துவமாக கொண்ட சமூகம் நிச்சயமாய் மனிதனின் பண்புகளை கொண்டேகாணப்படும். மனிதன் பின்பற்றும் சமயமே சட்டத்தினை உருவாக்க வழி கோலுகிறது. சமயத்தினை அடிப்படையிலே சட்டத்தின் உள்ளடக்கம் தொகுத்து வரையறை செய்யப்படுகிறது என்பது தெள்ளத்தெளிவான முடிவு ஆகும்.

# சட்டமும் அரசியலும்

# பயங்கரவாதம் என்றால் என்ன?

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்

'பயங்கரவாதம்', 'பயங்கரவாதிகள்' என்ற சொற்கள் அண்மைக் காலங்களில் பயங்கரமான முக்கியத்துவம் அடைந்துள்ளன. ஆனாலும் சட்டப்படி அச் சொற்களுக்குப் போதுமான அர்த்தம் கற்பிக்கப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியாக உள்ளது. அதனால் ''பயங்கரவாதிகள்'' யார் என்பதில் மயக்கம் ஏற்பட்டுள்ளது.

2001ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் திகதி அமெரிக்க நியூயோர்க் நகர இரட்டைக் கோபுர அழிப்பும் அதன் போது மரணித்த சுமார் 4000 பேர்களின் அகால மரணமும் பயங்கரவாதம் என்ற சொல்லை அண்மைக்காலங்களில் முக்கியத்துவம் அடைய வைத்தன எனலாம். அச்சம்பவம் நடந்த உடனேயே அமெரிக்க ஜனாதிபதி பயங்கரவாதத்திற்கு எதிரான போரினைத் தான் தொடங்கப்போவதாக அறிவித்தார். அப்பொழுதிலிருந்து பார்க்கும் இடமெல்லாம் பயங்கரவாதம் தலைவிரித்தாடுவதாகப் பல நாட்டுத் தலைவர்கள் அறிவித்து வருகிறார்கள். ஒரு நாட்டின் தலைமைப்பீடம் தமக்கு எதிராக யாரேனும் தலையெடுத்தால் உடனே அவர்களைப் பயங்கரவாதிகள் என்று அடையாளம் காட்டுவது இன்றைய உலகில் ஒரு அரசியல் நாகரீகமாக இருந்து வருகிறது.

ஆனாலும் பயங்கரவாதம் என்றால் என்ன? பயங்கரவாதி என்றால் அவர் யார்?

சட்ட வல்லுனர்கள் இதுவரையில் ஏற்புடைத்தான ஒரு பதிலை முன்வைத்துள்ளதாகத் தெரியவில்லை. குற்றமுடைய வன்முறை (Criminal Violence) வேறு, பயங்கரவாதம் வேறு என்கிறார்கள். அரச வன்முறை வேறு, பயங்கரவாதம் வேறு என்கிறார்கள். ஆனாலும் பயங்கரவாதம் என்றால் என்ன என்பதில் எந்த ஒரு கருத்தொருமைப்பாட்டையுஞ் சட்ட வல்லுனர்கள் வெளிக்கொண்டு வந்துள்ளதாகத் தெரியவில்லை.

இலங்கையிலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்று ஒன்று உள்ளது. 1979ம் ஆண்டின் 48ம் இலக்கச் சட்டம் அது. 2001ஆம் ஆண்டு செப்டம்பர் வரமுன்பே பயங்கரவாதச் சிந்தனைகளுக்கு எங்கள் தலைவர்கள் இடமளித்திருந்தார்கள். ஒரு காலத்தில் எங்களுக்கு வேண்டாதவர்களை கம்யூனிஸ்டுக்கள் என்று குறிப்பிட்டோம். பின்னர் நக்ஸ்சலைட்டுகள் என்றோம். இப்பொழுது பயங்கரவாதிகள் என்கிறோம். அதனால் தான் போலும் மேற்படி சட்டத்தில் ''பயங்கரவாதம்'' என்ற சொல் வரையறை செய்யப்படவில்லை!.

ஆனாலும் 2000ம் ஆண்டின் பிரித்தானிய பயங்கரவாதச் சட்டம் இந்தக் கைங்கரியத்தைத் தன்னால் இயன்ற மட்டில் பின்வருமாறு பூர்த்தி செய்துள்ளது. ''பயங்கரவாதம் என்ற சொல் இந்தச் சட்டத்தில் பின்வரும் செயலை அல்லது செயல் புரிவதற்கான அச்சுறுத்தலைக் குறிக்கும். அதாவது அப்பேற்பட்ட செயலானது:

i. (அ) எவரேனும் ஒருவர் சம்பந்தமாக ஏதேனும் ஆபத்தான வன் முறையினை விளைவித்தால்

(ஆ) ஏதேனும் ஆதனம் சம்பந்தமாக ஏதேனும் ஆபத்தான நஷ்டத்தை விளைவித்தால்

(இ) விளைவிப்பவரின் உயிர் தவிர யாரேனும் ஒருவரின் உயிருக்கு ஆபத்துண்டாக்கினால்

(ஈ) பொதுமக்களின் அல்லது அவர்களுள் ஒரு பகுதியினரின் உடல் நலத்திற்கு அல்லது பாதுகாப்பிற்கு ஆபத்தான இடையூறை விளைவித்தால்.

(உ) இலத்திரனியல் ஒழுங்கமைப் பொன்றுடன் ஆபத்தான முறையில் தலையீடு செய்வதாகவோ அல்லது அதைத் தகர்ப்பதாகவோ அச்செயலானது அமைந்தால் அவை பயங்கரவாதச் செயல்கள் ஆவன.

ii. அப்பேர்ப்பட்டபுரிசெயல் அல்லது அச்சுறுத்தல் அரசாங்கத்தைப் பாதிப்பதாகவோ பொது மக்களையோ அவர்களுள் ஒரு பகுதியினரையோ பீதி கொள்ளச் செய்வதாகவோ அமைந்திருந்து அத்துடன்

iii. மேற்படி புரிசெயல் அல்லது அச்சுறுத்தலானது ஏதேனும் ஒரு அரசியல் சமய அல்லது கருத்தியல் மேம்பாட்டைக் குறிவைத்து நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தால்அவை பயங்கர வாத நடவடிக்கைகள் ஆவன."

அமெரிக்க நூலாசிரியர்கள், அரசாங்கத்தையோ, சமுதாயத்தையோ அச்சுறுத்தும் அல்லது வற்புறுத்தும் நோக்கில் பயத்தையும் பீதியையும் உண்டாக்கும் வண்ணம் செய்யப்படும் வன்செயல் அல்லது அதற்கான அச்சுறுத்தலே பயங்கரவாதச் செயல்கள் என்று குறிப்பிடுகிறார்கள்.

அப்படியானால் பொதுவாக நாட்டில் நடக்கும் வன் செயல்களுக்கும் பயங்கரவாதச் செயல்களுக்கும் இடையே என்ன வித்தியாசம் என்ற கேள்வி எழுகின்றது.

உதாரணமாகப் பிக்பொகட் அடிக்க வந்த ஒருவனை பஸ்ஸில் பிரயாணம் செய்வோர் அடையாளம் காண்கின்றனர். அவனை மடக்கிப் பிடிக்க எத்தனிக்கின்றனர். அவனோ கத்தி ஒன்றைக் காட்டி ‘‘கிட்ட வராதே! வந்தால் குத்துவேன்’’ என்கின்றான். கண்டக்டர் அவனை நோக்கி முன்னேறுகிறார். அவரைக் குத்திக் கொன்றுவிட்டு ஓடிவிடுகிறான். பிக்பொக்கட் அடிக்க வந்தவன். அவ்வாறு கொன்ற ஒருவனின் செயல் பிரித்தானியச் சட்டத்திற்கு கீழ் பயங்கரவாதச் செயலா?

ஒரு செயலானது விளைவிப்பவரின் உயிர் தவிர யாரேனும் ஒருவரின் உயிருக்கு ஆபத்துண்டாகினால் அது பயங்கரவாதச் செயல் என்று பிரித்தானியச் சட்டம் கூறுகிறது. அப்படியானால் பிரித்தானியாவில் மேற்படி பிக்பொகட் அடிப்பவன் பயங்கரவாதியாக அடையாளம் காணப்படமுடியுமா? முடியாது. ஆனால் குற்ற விபரிப்பு இப்பேர்ப்பட்டவனையும் உள்ளடக்குவதாகத்தான் அமைந்திருக்கிறது.

இதன் நிமித்தமோ என்னமோ மேற்படி இரண்டு மேலைத்தேசங்களும் சில இயக்கங்களை பயங்கரவாத இயக்கங்கள் என்று சில காலத்திற்கு முன்பிருந்தே அடையாளம் காட்ட விரைந்தனர். இந்த இயக்கங்கள் எதைச் செய்தாலும் அது பயங்கரவாதமே என்று சொல்லாமல் சொல்லி வைத்தார்கள். அத்துடன் வெடிபொருள் வைத்திருப்பது, மக்களை பணயக் கைதிகளாக்குவது போன்ற சில குற்றச் செயல்களைப் பயங்கரவாதச் செயல்கள் என அடையாளம் காட்ட முற்பட்டனர். இவை முன்னமே அந்தந்த நாட்டின் வழமையான சட்டத்தின் கீழ் குற்ற நடவடிக்கைகளாக ஏற்றுக்கொள்ளப் பட்டவை.

ஆகவே எப்படி ஒரு செயலைப் பயங்கரவாதச் செயல் என்று அடையாளம் காண்பது?

உற்று அவதானித்தால் புரியும், பயங்கரவாதம் என்பது மனதில் இருப்பதொன்றையே குறிப்பிடுகின்றதே தவிர செயற்பாட்டைக் குறிப்பிடுவதாகத் தெரியவில்லை. ஒரே செயல் பார்ப்பவர்கள் மனதைப் பொறுத்து வெறுங் குற்றச் செயலாகவோ பயங்கரவாதச் செயலாகவோ அர்த்தம் கற்பிக்கப்படுகிறது.

கொலையாளி ஒருவரின் கத்திக்கு ஒருவர் பலியாகின்றார். சத்திரசிகிச்சை நிபுணர் கையிலும் நோயாளி ஒருவர் வெட்டப்பட்டு இறக்க நேரிடுகின்றது. இருவரின் கத்திகளுமே இறந்தவர்களை வானுலகம் அனுப்புகின்றன. ஆனாலும் கொலையாளி குற்றவாளி. வைத்திய நிபுணர் நிரபராதி. இருவரும் இன்னொருவரை வெட்டியே மற்றவர் இறந்தாலும் கொலையாளிக்குத் தீங்குளம் (தீங்கு + உளம் = Mens Rea) இருந்தது. மற்றையவருக்கு அது இருக்கவில்லை. இங்கு செயலைப் புரிந்தவர்களிடையே வெவ்வேறு மனோபாவங்கள் இருந்துள்ளதைச் சட்டம் ஏற்றுக் கொள்கின்றது.

ஆனால் பயங்கரவாதச் செயல் எனும் போது செயலைப் புரிபவனிலும் பார்க்க அவன் செய்யும் செயலிலும் பார்க்க, சட்டம் இயற்றுவோரின் மனோநிலையே ஒரு செயல் பயங்கரவாதச் செயலா இல்லையா என்பதை நிர்ணயிக்கின்றது. அதாவது செயல்கள் ஒரே மாதிரியாக இருப்பினும் சட்டமியற்றுவோரும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோருமே எது பயங்கரவாதம், எது சாதாரண குற்றச் செயல் என்பதை நிர்ணயிக்கின்றார்கள். இதில் விசித்திரம் என்னவென்றால் சட்டம் இயற்றுவோர் ஒரு முக்கியமான எடுகூற்றுக்கு (Premise) அல்லது இடுகோளுக்கு (Presumption) இடம் அளித்துள்ளார்கள். அதாவது வன்முறையை ஒரு நாட்டின் அரசு மட்டும் பாவிக்கலாம். மற்றவர்கள் பாவிக்கமுடியாது என்பதே அது.

இங்கு ஜனநாயக அரச முறையின் குறைபாடு தெற்றெனத்தெரிகிறது. அதாவது ஜனநாயகம் என்பது ஒரு நாட்டின் கூடிய மக்களின் மத்தியில் இருந்து அக்கூடிய மக்களின் நலனுக்காக அக் கூடிய மக்கள் தெரிவு செய்யும் பிரதிநிதிகள் நடாத்தும் ஒரு அரசாளும் முறை. மக்கள் யாவரும் ஒரே இனமாகவோ ஒரே மதத்தினராகவோ வேறு ஏதும் ஒரு குறிப்பிட்ட பொதுத் தகைமையினையோ கொண்டிருந்தால் இந்த வழிமுறை நன்மையைக் கொண்டுவரும். ஆனால் பல்லின, பல்மத, பலவித பேதங்களையுடைய மக்கள் வாழும் நாட்டில் எந்த அளவுக்கு ஜனநாயக அரசியல் முறை சகலருக்கும் நன்மை பயக்கும் என்பது ஆராயவேண்டிய விடயம். இதற்காகத்தான் சட்ட வல்லுநர்கள் அப்பேர்ப்பட்ட சூழலையுடைய ஜனநாயக நாடுகளில் அடிப்படை மனித உரிமைகள் அரசியல் யாப்பில் கட்டாயமாக இடம் பெறச் செய்ய வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்கள். அதாவது சிறுபான்மையினரின் அடிப்படையுரிமைகள் சட்டத்தால் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது அவர்களின் ஆணித்தரமான கருத்து.

சட்டத்தில் இவையெல்லாம் உட்புகுத்தப்பட்டும், சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றவர்கள் ஏனோ தானோ என்று பாராமுகமாக இருக்கத்தலைப்பட்டால் என்னவாகும்? அதுவும் அரசியற்பலம், படைப்பலம், ஆட்பலம் ஆகியன ஒரு இனத்தைச் சேர்ந்தவரிடம் இருக்க அவர்களின் அச்சம், அசூயை, வெறுப்பு இன்னொரு இனத்தின் மேல் காட்டப்பட்டால் என்னாவது? அரசே வன்முறைமீது தனியுரிமை கொண்டாட உரித்துடையவர்கள் என்ற அவர்களின் வாதப்படி இன்னொரு இனத்தைச் சேர்ந்தவர்களின் இன ஒழிப்புக்கு ஏதுவாக அவர்கள் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு, அம்மக்கள் தற்பாதுகாப்பிற்காகவோ (Selfdefence), சடுதியான ஆத்திரத்தினாலோ (Sudden provocation) ஒரு மண்வெட்டியை உயர்த்தினாலும் அச்செயலைப் பயங்கரவாதம் என்று அவர்கள் பெயர் சூட்ட இடமளித்துவிடும் அல்லவா? அப்பொழுது

சுதந்திரப் போராட்டங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளாகப் பெயர் மாற்றப் பட்டுவிடுவன. நாட்டின் அரசபடைகளின் வன்செயல்கள் யாவும் தேசப்பற்றென்ற நற்சாட்சிப்பத்திரம் பெற, அவற்றினால் இன்னலுறும், அவதிப்படும் மக்களின் பதட்ட அலறல் கூடப் பயங்கரவாதம் என ஆகிவிடும். அரச படைகளின் ஆபத்தான மனித உரிமை மீறல்கள் கூட பயங்கரவாதத் தடுப்பு என்ற பெயரில் நாட்டுப்பற்றாளர் நற்செயல்கள் ஆகிவிடுவன.

பயங்கரவாத எதிர் நடவடிக்கைகள் (Counter Terrorism) என்ற சொற் பிரயோகத்திற்கு அண்மைக்காலங்களில் அமெரிக்க ஜனாதிபதி ∴புஷ் அவர்களே நற்சாட்சிப்பத்திரம் வழங்கி வருகிறார். இதன் அர்த்தம் என்னவென்றால் பயங்கரவாத நடவடிக்கைக்கு மாற்று நடவடிக்கை அரசபடைப் பயங்கரவாதமே என்பது.

சட்ட மாணவர்கள் ஹமுராபிக் கோவை (Code of Hammurabi) என்பது பற்றி கேள்விப்பட்டிருப்பார்கள். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன் சட்டம் இயற்றிய ஹமுராபி கைக்குக்கை, காலுக்கு கால், பல்லுக்குப் பல், உயிருக்கு உயிர் என்ற விதத்தில் அரசனானவன் குற்றம் புரிவோர் சம்பந்தமாக மாற்று நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்க வேண்டும் என்றார். அதாவது உன்கையை ஒருவன் முறித்தால் அரசன் முறித்தவன் கையை முறிக்கவேண்டும். அதுதான் முறை, அப்படித்தான் சட்டம் அமைய வேண்டும் என்று கூறி அவ்வாறே பூர்வீகக் குடிகள் நடந்தும் வந்தார்கள். கண்டிய அரசன் ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன் காலத்தில் அப்பேர்ப்பட்ட தண்டனைகளிலும் பார்க்கக் கொடிய தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஆனால் அறிவில் மேம்பட்ட 21ம் நூற்றாண்டில் ஒரு மாற்றம் வேண்டாமா? இன்றைய கால அறிவுச் சூழலின்படி ஏதாவது ஒரு தீச்செயலுக்கு ஏதுவாக இருந்த காரணிகளைக் கண்டறிந்து அவற்றை இல்லாதாக்குவதுடன் குற்றஞ் செய்தவனைத் திருத்துவதுதான் இன்றைய பாணி, இன்றைய காலச்சிந்தனை. அப்படியானால் பயங்கரவாதம் எனப்படும் வன்முறை நடைமுறை ஏன் எழும்பியது என்று கண்டறிய வேண்டியது இன்றைய அறிவுச்சூழலின் முக்கியமான ஒரு ஆராய்வு. ஆனால் எந்த அரசும் அதை ஆராய்வதாகத் தெரியவில்லை. அமெரிக்க அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அந்தக் கேள்விக்கே இடமில்லை. ஏன் என்றால் உலகின் பெருவாரியான பங்கரவாதச் செயல்களுக்கு காரணகர்த்தாவே தொடர்ந்து அரசாற்றிய அமெரிக்க அரசாங்கங்களே. இதை நான் கூறவில்லை. அமெரிக்க அறிஞர்களே இதைக் கூறுகிறார்கள். இவ்வாறு அந்நாட்டில் கூறமுடியும் என்பதே அந்த நாட்டின் சிறப்பம்சம். வேறு நாடுகளில் அப்படிக் கூறுபவர்களை வெள்ளைவானில் வந்து கடத்திச் சென்று விடுவார்கள்!

சதாம் ஹுசேனைத்தட்டிக் கொடுத்து எழுப்பி விட்டார்கள் அமெரிக்க அரசாங்கத்தினர். அவரை தமக்குத் தேவையில்லாத போது அவருக்குப் பயங்கரவாதி முத்திரை குத்தி அவரை அழிக்க வழிவகுத்தவர்களும் அவர்களே. ஆகவே வன்செயல்களுக்கு வித்திட்டவர்கள் வளர்ந்து வந்திருக்கும் மரத்தின் விதைகளை ஆராய முற்படமாட்டார்கள்.

இலங்கையை எடுத்துக்கொண்டால் இங்கும் அப்பேர்ப்பட்ட நிலைமையில் மாற்றம் இல்லை என்று தெரியவரும். ஒற்றுமையாக ஓரணியின் கீழ் ஆங்கிலேயர் காலத்தில் வாழ்ந்து வந்த பல் இன, பல் மத, பல்வேறு மக்கள் மத்தியில் வேறுபாடுகளை உள் நுழைத்து, பெரும்பான்மையோர் என்று அரசாங்க அதிகாரத்தில் இருந்தவர்களின் இனத்த, மதத்தவர்களை வேறுபடுத்தி அவர்கள் சார்பில் சிறுபான்மையினரை ஜனநாயக வாக்கின் அடிப்படையில் பிரித்தொதுக்கி, கல்வி அல்லது தொழில் மேம்பாட்டிலேயே காலாதிகாலமாகக் கரிசனை காட்டி வந்த வடக்கு கிழக்கு மாகாண மக்களை ஏமாற்றி, இடர் உறச் செய்து, வன்முறை காட்டி, வன் செயல்களைக் கட்டவிழ்த்து அவர்களை அல்லற்படுத்திய தொடர் அரசாங்கங்கள் இன்றைய வன்முறைகளு

க்குத் தாங்களே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை உள்ளூர உணர்ந்தாலும் அதை ஏற்றுக் கொள்கிறார்கள் இல்லை. அரச பயங்கரவாதத்தின் பிரதிபலிப்பே மக்கள் வன்முறைகள், இயக்க வன்முறைகள், ஏன் பாதாள கோஷ்டிகளின் வரம்பற்ற வன்முறைகள் என்பதை ஏற்க மறுக்கிறார்கள்.

அதனால்தான் அடிப்படையற்ற விதத்தில் அதிரடிச் சட்டங்கள் உருவாக்கி, அரச வன்செயல்களையும், தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் இதுவரை காலம் கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகளையும் வன்செயல்களையும் மூடி மறைத்து பயங்கரவாதம், பயங்கரவாதிகள் என்ற நாமங்களுக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளத் தலைப்பட்டுள்ளார்கள் ஆட்சியில் இருப்பவர்கள்.

இன்றைய தமிழ் இளைஞர்களின் வன்முறைக்கு பல காரணங்கள் உண்டு. ஒன்று, இரண்டை இங்கு பார்ப்போம். முதலாவதாக, தொடர்ந்து நடைபெற்று 1958, 1961, 1977, 1979, 1983 ஆகிய வருட இனக்கலவரங்களுக்குப் பின்னணியில் யார் நின்று அவற்றை இயக்கி வைத்தார்கள் என்பது கண்டறியப்படவில்லை. அக்கலவரச் சம்பவங்களுக்கு எவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவுமில்லை. ஒரு கல்லூரியினுள் குழந்தைகள் யாரோ நபர்களினால் தொடர்ந்து இம்சைக்கு உட்படுத்தப்பட்டு அதன் அதிபர் அவர்களை அடையாளம் காணவில்லை என்றால் அதிபருக்கும் அந்த நபர்களுக்கும் இடையில் ஏதோ ஒரு ரகசிய ஒப்பந்தம் இருக்கவேண்டும் என்று குழந்தைகளின் பெற்றோர்கள் நினைப்பதில் தவறு ஏதும் இல்லை. இலங்கையில் நடந்தவற்றிற்கு உதாரணமாக அரசாங்க அதிபாதுகாப்பு சிறைச்சாலை ஒன்றினுள் குட்டிமணி போன்றவர்களிற்கு ஏற்பட்ட துர்கதிக்கு பொறுப்பான சூத்திரதாரிகள் யார் என்று கண்டறிய நாட்டின் அரசாங்கத்திற்குத் திராணி இருக்கவில்லை. திறமை இருக்கவில்லை. நேர்மை இருக்கவிலலை. ஆகவே தொடர்ந்து வந்த இலங்கை அரசாங்கங்கள் இனப் படுகொலைகளை வரவேற்றன என்றே கொள்ள வேண்டியிருக்கிறது. பிந்துனுவவயில் 27 தமிழ் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.அரசாங்க அதிகாரிகளின் பொறுப்பில் இருந்த போது. அதற்குப் பொறுப்பானவர்கள் இன்றும் வெளியில் இருந்து நையாண்டி செய்கின்றார்கள் நம்மைப் பார்த்து. எவருமே குற்றவாளிகளாகக் காணப்படவில்லை. இதற்கு உச்ச நீதிமன்றங்கூட உடந்தை என்று கூறலாம்.

அரச படைகளின் ஊடாகவும் அரச அசுர சட்டங்கள் ஊடாகவும் மக்களை இம்சைக்கு உட்படுத்துவது, அதற்கு அஹிம்சை முறையில் எதிர்ப்புத் தெரிவித்தால் மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விடுவது, சத்தியாக்கிரகங்களை ஒடுக்குவது, சாத்வீகப் போராட்டங்களைக் கொச்சைப் படுத்துவது இது தான் நாங்கள் சுதந்திரம் பெற்ற பின் முதற் காலகட்டத்தில் நடந்தேறிய நாடகங்கள். 1976ல் முதிர்ந்த தமிழ்த் தலைவர்கள் சேர்ந்து இந் நாட்டில் பிரிவினை அன்றி வேறு வழியில்லை என்று வட்டுக்கோட்டையில் பிரகடனம் செய்தபின் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தத் தலைப்பட்டதும் அதை முறியடிக்க வன்முறைகளில் அரசு ஈடுபட்டு அதனால் சுதந்திரங் கோரும் மக்களை ஒடுக்க முடியாது என்று கண்டதும் கடந்த பத்து வருட காலத்தில் அவர்கள் சுதந்திர தாகத்தை ஒடுக்கப் பயங்கரவாதம் என்ற போர்த் தந்திரத்தை வெகுவாக உபயோகித்து வருகின்றனர்.

பயங்கரவாதம் என்பது மனதில் உள்ள ஒரு அழுக்கு. குற்றம் புரிந்தவர்கள் தம் குற்றத்தை மூடி மறைக்க உபயோகிக்கும் போர்க் கலவை அது. அந்த அழுக்கை இன்றைய அரசாங்கங்கள் பல பெருமளவில் தமது உள்ளங் கையில் சுமந்து வருகின்றன. தமக்கு வேண்டாதவர்களைப் பயங்கரவாதிகள் என்று அடையாளம் காட்டுவதே இன்றைய அரசியல் சாணாக்கியம். அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகள் இலங்கைக்குக் கற்றுத்தந்த நவீன போர்த்தந்திரம் இது. சர்வதேச மக்கட் பாதுகாப்புச் சட்டங்கள், ஐக்கிய நாடுகளைக் கட்டுப்படுத்தும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள்,

சாசனங்கள் எல்லாம் இருந்தும் இந்தப் போர்த் தந்திரம் பல நாடுகளால் ஒப்பேற்றப்பட்டு வருகின்றது. மக்களைப் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்திவிட்டால் அவர்களின் கோரிக் கைகளைப் பிரச்சினைகளை ஆராய வேண்டிய கடப்பாடு அரசாங்கங்களுக்கு இல்லாமற் போய்விடும். தாம் மனித நேயத்துடன், மனிதாபிமானத்துடன் நடக்கவில்லை என்பதை இதனால் மூடி மறைத்துவிடலாம். இது தான் அவர்களின் சாணக்கியம்.

மனித உரிமைகளை பற்றிய சர்வதேச உலகலாவிய விளம்பலானது தொடக்கத்திலேயே அதன் முன்னுரையில் பின்வருமாறு கூறுகின்றது.

''ஒடுக்கு முறைகளுக்கும் நியாயமற்ற கொடுங்கோன்மைக்கும் எதிராக மக்கள் எழுந்து வன் செயல்களில் ஈடுபடாது தவிர்ப்பதற்கு நாடுகளின் சட்டத்தால் மனித உரிமைகள் பாதுகாத்துப் பரிபாலிக்கப்பட வேண்டும்." (Vide Preamble to the Universal Declaration of Human Rights).

இதற்குக் காரணம் 1789ம் ஆண்டின் பிரான்சியப் புரட்சி கொடுங்கோல் ஆட்சிக்கெதிரான மக்களின் நியாயமான எழுச்சியே என்று அன்றைய சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர்.

இலங்கையின் அரசியல் யாப்பு நிபுணர்களில் ஒருவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான டெஸ்மன்ட் ∴ பெர்ணான்டோ அவர்கள் அண்மையில் பின்வருமாறு கூறினார்.

''தனிநாடு கோருவது என்பதைக் குற்றமாக்கும் இலங்கை அரசியல் யாப்பின் 6 வது திருத்தம் அவ்வாறு கோருவதைத்தடுக்க அதன் பொருட்டு ஆதனப்பறிமுதல், பதவிப் பறிமுதல் போன்ற தன்டனைகளை வழங்கியிருப்பது, சர்வதேச மனித உரிமைகள் விளம்பல் ஆவணத்தின் 19ஆவது ஷரத்துக்கு முரணானது."சர்வதேச சட்ட ஆவணங்களுக்கு முரணாகவே எங்கள் 6ஆவது அரசியல் யாப்பு திருத்தச் சட்டம் அமைந்துள்ளது என்று கருத்துச் தெரிவித்துள்ளார் திரு.பெர்ணான்டோ அவர்கள்.

அடுத்த காரணந்தான் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் சிறுபான்மையினருக்கு அடிப்படைச் சலுகைகள் சிலவற்றை வழங்கும் அரசியல் உடன்பாடுகளை ஏற்படுத்தி அதன் பின்னர் அவற்றை உதறித் தள்ளி வந்தமை. பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம், டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தம் ஆகிய இரண்டுமே கிழித்தெறியப்பட்டன. இன்று போர் நிறுத்த உடன்பாட்டைக் கூட கிழித்தெறிய வேண்டும் என்று கோரப்படுகிறது. இந்தச் சூழலில் நியாயத்திற்கு இலங்கையில் இடமில்லை என்ற நிலைப்பாடே சிறுபான்மையின மக்களின் மனதில் மேலோங்கி நின்று வருகிறது. உணர்ச்சி மிக்க இளைஞர்கள் இதனால்தான் கொதித்தெழுந்துள்ளார்கள்.

அரச பயங்கரவாதத்தை முன்னெடுக்கும் அரசாங்கங்கள் ஒரு முக்கிய சட்டக் கருத்தை மனதில் நிலை நிறுத்திக் கொள்ளவேண்டும். அது தான் ஜனநாயக நாடுகளுக்கான விகிதசமானக் கோட்பாடு (The Principal of Proportionality). அதாவது ஜனநாயக அரசாங்கம் ஒன்றிற்கு எதிராக எவரேனும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அந்த நடவடிக்கைகளுக்கு விகித சமமான முறையிலேயே மாற்று நடவடிக்கைகள் அப்பேர்ப்பட்ட அரசாங்கத்தால் எடுக்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் அசமனான கொடூரமான மாற்று நடவடிக்கை வன்முறை நிலைமையை மேலும் மோசமடையச் செய்யக்கூடாது. ஆகவே முன்னர் சத்தியாக்கிரகம் இருந்த தலைவர்களை அடித்துத் துன்புறுத்தி சிறையில் அடைத்ததும் விகித அசமான நடவடிக்கையாகும். இன்று மாவிலாறை மடை திறவாது மூடியமைக்காக சூழவிருக்கும் மக்கள் யாவரையும் இடம் பெயரச் செய்து மந்தைகள் போல் விரட்டியடித்துப் பட்டினி போட்டு வருவதும் விகித அசமான நடவடிக்கையே.

இலங்கையில் நடப்பது அரச பயங்கரவாதமே அன்றி வேறில்லை என்பதை எப்பொழுது உலக நாடுகள் உணர்கிறார்களோ அன்று தான் நாட்டில் அமைதியும் சமாதானமும் பிறக்க ஏதுவான சூழல் அமையும். அதற்கிடையில் எத்தனை மரணங்கள், எத்தனை பட்டினிச் சாவுகள், எத்தனை ஆட்கடத்தல்கள், எத்தனை இடமாற்றங்கள், எத்தனை வன் செயல்கள், எத்தனை நட்டங்களை மக்கள் அனுபவிக்கப் போகின்றார்களோ தெரியாது. பெருமனைப் பயங்கரவாதம் விரைவில் நீங்க யாவரும் பற்றுடன் பிரார்த்திப்போமாக!.

# பிரிவிடல் சட்டம்

*Mrs.S.Ellengovan,*
*District Judge Magistrate*
*Mallakam*

இலங்கையில் 1799ம் ஆண்டு உருவாக்கப்பட்ட பிரகடனத்தின் பிரகாரம் உரோம டச்சுச் சட்டம் பொதுச்சட்டமாக் கப்பட்ட போது, பிரிவிடல் சட்டமும் அதில் உள்ளடக்கப்பட்டது. பின்னர் பிரிவிடல் வழக்குகளின் நடவடிக்கை தொடர்பான 1863ம் ஆண்டின் 10ம் இலக்க பிரிவிடல் சட்டமும் 1977ம் ஆண்டின் 21ம் இலக்க பிரிவிடல் சட்டமும், 1997ம் ஆண்டின் 17ம் இலக்க பிரிவிடல் திருத்தச் சட்டமும் ஆக்கப்பட்டன.

பிரிவிடல் வழக்கானது சொரியல் பங்காளர்கட்குரியது என்பதோடு, சொரியல் ஆட்சியை முடிவுறச் செய்யவும், பிரிக்கப்பட்டதும், நிந்தமாக்கப்பட்டதுமான பாகங்களை சொரியல் பாகங்கட்கு பதிலாக பெறுவதுமாகும். இது ஒரு உரிமை நிறுவல் வழக்கு அல்ல. (**Reivindicatio action**) குடியியல் நடவடிக்கை முறைக் கோவையில், வழக்கு என்பது ஒரு தவறுக்கெதிரான நிவாரணம் அல்லது அதனைக் தடுத்தல், ஒரு உரிமை மறுக்கப்படுவது, ஒரு கடப்பாட்டை நிறைவேற்ற மறுப்பது, ஒரு கடமையைச் செய்யத் தவறுவது, ஒரு தீங்கு விளைவிப்பது என்பன இதற்குள் அடங்கும். ஆனால் ஒரு பிரிவிடல் வழக்கு ஒரு தவறின் மேல் உருவாக்கப்படுவதில்லை. இது சொரியல் ஆட்சியினால் உண்டாகும் வசதியீனத்திற்கெதிராக நிவாரணம் பெறுவதற்கான ஒரு வழக்காகும். தகுந்த நியாயாதிக்கம் உடைய நீதிமன்றில் அதன் ஆதிக்கத்தினதும் அதிகாரத்தினதும் ஊடாக அல்லது அதன் தலையீட்டைக் கோரி ஒரு பிரிவிடல் வழக்கானது நிவாரணம் அல்லது நிவர்த்தியை பெறுவதற்கான ஒரு விண்ணப்பமாகும்.

<u>Abaya Sundara V.Babuna 26 NLR 459</u> என்ற வழக்கில் பிரிவிடல் வழக்கானது குடியியல் நடவடிக்கை முறைக் கோவையின் 5ஆம் பிரிவின் கீழ் ஒரு வழக்கெழு காரணத்தின் மேல் அன்றி 6ஆம் பிரிவின் கீழான வழக்கெழு காரணத்தினாலாகும் எனத் தீர்க்கப் பட்டுள்ளது.

பிரிவிடல் வழக்கில், வழங்கப்படும் இறுதிப் பிரிவிடல் தீர்வை ஆனது கட்சிக்காரர்கட்கு ஒரு புதிய உரித்தை உருவாக்குகின்றது.

'Absolutely good against other persons'
<u>Sedri V.Theeyadas 53 NLR 63</u>
'எல்லா நபர்கட்கும் எதிராக ஒரு முற்று முழுதான நல்ல தீர்ப்பு'
பிரிவிடல் வழக்கின் இறுதித் தீர்வை கட்சிக்காரர்கட்கிடையே, அவர்கட்கிடையே

அவர்கட்கிருந்த உரித்தை அவர்கட்கிடையே விளம்புவதோடு, எவருக்கும் எதிராக புதியதொரு உரித்தை முழுமையாக உருவாக்குகின்றது.

Leelaratne V.Nikulas 68 CLW III

பிரிவிடல் வழக்கில், வழக்கெழு காரணம் என்பது ஒரு சொரியல் பங்காளருக்கு குறித்த ஆதனத்தில் உள்ள உரித்தை நிந்தமாகப் பெறுவதற்குரிய ஒரு உட்கிடையான உரிமையாகும். அல்லது ஆதனத்தினை விற்று வருவதில் தனது பங்கைப் பெறும் உரிமை ஆகும்.

Lebbe V.Marikkas

பிரிவிடல் வழக்கு ஒரு விசேடமான வழக்கு. அதன் கட்சிக்காரர்கள் யாவரும் வழக்காளிகளாகவே கருதப்படுவர்.

ஒவ்வொரு எதிராளியும் ஒரு வழக்காளி யாகவே கருதப்படுவார் என

Assena Marikkar V.Usuba Lebbe 12 NLR 102 இல் தீர்க்கப்பட்டுள்ளது.

இக்கூற்று, Lebbe V.Mohamed என்ற வழக்கிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

1977ம் ஆண்டின் 21ம் இலக்க பிரிவிடல் சட்டம் பிரிவு 2(1)ன் பிரகாரம்

எங்கேனும் எந்த ஒரு ஆதனமானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொரியல் பங்காளருக்கு சொந்தமான விடத்து, ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் குறித்த ஆதனத்தை பிரிவிடல் செய்ய அல்லது விற்பதற்கு வழக்கு தாக்கல் செய்யலாம்.

1997ம் ஆண்டின் 17ம் இலக்கச் சட்டம் பிரிவு 2

எந்த ஒரு ஆதனமானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோருக்கு பொதுவில் சொந்தமாக இருந்து அவரது அல்லது அவர்களுடைய உரித்தானது ஏதாவது சீவிய உரித்து இன்னொருவருக்கு இருந்தாலும், குறித்த ஆதனத்தை பிரிவிடல் செய்ய அல்லது விற்பதற்கு வழக்கு தாக்கல் செய்யலாம்.

சொரியல் பங்குகளைத் தீர்மானிப் பதற்காகவே முக்கியமாகத் தாக்கல் செய்யப்படுவதாக இருந்தாலும் இவ்வழக்குகளில் ஆதனம் சம்பந்தமாக எழும் பிணக்குகளும் தீர்த்து வைக்கப்படும். சொரியல் பங்காளர்கட்கிடையில் உள்ள பிணக்குகள் மட்டுமல்லாது பங்காளர்கட்கும் வெளி ஆட்கட்கும் இடையில் உள்ள பிணக்குகளும் தீர்க்கப்படுகின்றன. இதனால் இவ்வுரித்தானது முழு உலகையும் கட்டுப்படுத்தும். It binds the whole world.

பிரிவிடல் வழக்கானது விசேடமானது என்பதுடன் அதன் நடவடிக்கையும் விசேடமானது தான்.

பிராது, குடியியல் நடவடிக்கைமுறைக் கோவையின் தேவைப்பாடுகளுடன், பின்வருவனவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

1. ஆதனத்தின் பெயர், பரப்பளவு பெறுமதி
2. ஆதனத்தின் விவரணம், அதன் எல்லைகள், மாதிரிப்படம் என்பன இணைக்கப்படல் வேண்டும்.
3. ஆதனத்திற்கு உரித்தான உரித்துக் கோரும் திருத்தங்கள் எவையேனும் செய்த நபர்களின் பெயர், முகவரிகள்.
4. கட்சிக்காரர்களின் உரிமை வந்தடைந்த முறை பட்டோலை (Pedigree) விபரத்துடன்.
5. வழக்காளி வழக்கு நடைமுறையில்

(Pending) இருக்கும் போது இறக்க நேரிட்டால், சட்டப்பிரதிநிதியின் நியமனம் மெமொறாண்டம் (1997ம் ஆண்டின் 17ம் இலக்க திருத்தச்சட்டத்தில் உள்ளபடி) பொதுவாகவே பிரிவிடல் வழக்குகள் தாமதப்படுத்தப்படுவது வழக்கம். இதனை இல்லாமல் செய்வதே இதன் நோக்கம்.

6. வழக்குடன் முடிவுறா வழக்கு பதிவதற்கான விண்ணப்பங்கள் மூன்று பிரதிகள் (Lis pendens) காணிப்பதிவாளருக்கு முகவரி யிடப்பட்டு இணைக்கப்பட வேண்டும்.

லிஸ்பென்டன்ஸ் பதிவு செய்யப்பட்டு, திருப்பி வந்தபின் சட்டத்தரணி 12ஆம் பிரிவின் கீழ் பிரகடனம் (Declaration) தாக்கல் செய்ய வேண்டும். எவரையாவது கட்சிக்காரராகச் சேர்க்க வேண்டுமாயின் சேர்க்க வேண்டும்.

லிஸ்பென்டன்ஸ் பதிவு செய்வது இரண்டு நோக்கங்கள் கொண்டது. முதலாவது, ஆவணங்களைப் பதிவு செய்த கட்சிக்காரர்கள் அனைவரும் வழக்கு பற்றி அறிய வருகின்றனர். இரண்டாவது சொரியல் பங்குகளை வாங்க நினைப்போர் அவ்வாதனம் தொடர்பாக பிரிவிடல் வழக்கு நடைமுறையில் இருக்கின்றதென்பதை அறியக்கூடியதாய் இருக்கின்றது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்டதும் வழக்காளி பூர்வாங்க அளப்பனவுக்குரிய மதிப்பிடப்பட்ட செலவுத் தொகைகளை நீதிமன்றில் வைப்பிலிட வேண்டும். இப்பணம் கட்டத்தவறின், வழக்கு தள்ளுபடி செய்யப்படலாம். பிரிவிடல் வழக்குகளில் மிக முக்கியமான நடவடிக்கை பூர்வாங்க அளப்பனவு ஆகும்.

அளப்பனவு ஆணை திருத்திய சட்டத்தின் 16ஆம் பிரிவின் கீழானதாகும். அளப்பனவு குறித்த திருத்தச் சட்டத்தின் 17ஆம், 18ஆம் பிரிவுகளின் படியாகும். உரிமை கோருபவர்கட்கான அறிவித்தல் மிக முக்கியமானதாகும்.

எல்லா பிரிவிடல் வழக்குகளிலும், பூர்வாங்க அளப்பனவு ஆணை, பிராதின் பிரதியுடன், நீதிமன்ற பட்டியலில் (Panel of Licensed Surveyors) உள்ள உத்தரவு பெற்ற நில அளவையாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

<u>Uberis V.Jeyawardana 62 NLR 217 of 218</u> என்ற வழக்கில்.

Basnayage C.J Stresssed to the District Judges as follows:

Judges of the first instance should give their personal attention to the formulation of the terms of the commission issued in proceedings for the partition of land and not leave it to be done mechanically by a member of the clerical staff attached to the Court. A Commission is an instrument issued by the Court and should receive its careful consideration and specially in detail what the Surveyor is required to do.

அளப்பனவு ஆணை அனுப்பப்படும் போது மேலதிகமாக அறிவித்தல் பிரதிகளும் சட்டத்தில் 2ஆம் அட்டவணையில் உள்ளபடி அணைக்கப்பட வேண்டும். இவ்வறிவித்தல், எதிராளி அல்லாது எவர் ஒருவர் அல்லது அவரின் முகவர் பூர்வாங்க அளப்பனவின் போது சமூகமளித்து ஏதும் உரிமை கோரினால் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு குறித்த நில அளவையாளரினால், கட்சிக்காரரல்லாத ஆனால் உரிமை கோரும் நபருக்கு அறிவித்தல் வழங்கப்படும் போது பெறுபவரிடமிருந்து அறிவித்தல் பெற்றதாக எழுத்தில் இடப்பட்டு ஒப்பம் வாங்க வேண்டும். அவ்வாறு அறிவித்தல் பெற்றால் சட்டப்படி அழைப்புக்கட்டளை சேவித்ததாக கருதப்பட்டு, மேலதிக அழைப்புக்கட்டளை தேவையில்லை.

15 (1) ஆம் பிரிவின் கீழ் அளப்பனவு செய்யப்படும்போது குறித்த ஆதனத்தினை அளந்து நிர்ணயிக்கப்படாத எல்லைகளை

நிர்ணயித்து இலேசில் அகற்றவோ அழிக்கவோ முடியாதபடி எல்லைக்கற்களை அடையாளமாய் இடவேண்டும்.

அளப்பனவு ஆணை அறிக்கை உரிய விபரங்களுடன், அளப்பனவு படத்துடனும் (Survey Plan) அனுப்பி வைக்கப்பட வேண்டும். அளப்பனவு ஆணையாளரை சாட்சியமளிக்க கூப்பிடலாம் என அதிகாரம் அளிக்கப்பட்டு இருந்தாலும், 18 (2) ஆம் பிரிவின் கீழ், மேற்குறித்த அறிக்கையானது மேலதிக நிரூபணம் இன்றி சாட்சியமாக உபயோகிக்கலாம்.

**உரிமைக்கோரிக்கை பிரிவு 19**

அ. எதிராளி தனது உரிமைக் கோரிக்கையை குறித்த ஆதனத்தில் தனக்குள்ள உரித்து, பங்கு, நலன் பற்றிய தன்மை, அளவு பற்றி தாக்கல் செய்யலாம்.

ஆ. பிராதில் குறிப்பிட்டவற்றில் மறுக்க வேண்டியவற்றை மறுத்து, தனது உரிமை வந்தடைந்த முறையை பட்டோலையுடன் இணைக்க வேண்டும்.

இ. வழக்கில் கட்சிக்காரர்கள் அல்லாத ஆனால் தனது அறிவுக் கெட்டியவரை ஏதும் நலன் உரித்து சோந்தை உள்ளவர்களின் பெயர் முகவரிகளை வெளிப்படுத்தல் வேண்டும்.

ஈ. குறிப்பிட்ட ஆதனத்திலும் பார்க்க பெரிய ஆதனம் பிரிவிடல் செய்யப்பட வேண்டுமாயின் 5ஆம் பிரிவினை பின்பற்றி அவ்வாதனத்தை அளக்க அளப்பனவு ஆணை அணைக்க வேண்டும். லிஸ்பென்டன்ஸ் பதிய வேண்டும். பிரகடனமும் பதிய வேண்டும்.

உ. வழக்கு முடிவுறாதிருக்கும் போது எதிராளி இறந்தாலும், சட்டப்பிரதிநிதி நியமனம் செய்து மெமொராண்டம் அணைக்க வேண்டும்.

Soyza V.Silva [2000] 2 SLR 235 இவ் வழக்கில்,

19(2) ஆம் பிரிவின் கீழ் எதிராளி பெரிய ஒரு ஆதனத்தை பிரிவிடல் செய்யுமாறு கோரும்போது பிரிவிடல் சட்டத்தின் 4ஆம், 5ஆம், 6ஆம் உப பிரிவுகளில் உள்ளவற்றை பின்பற்ற வேண்டும் என கட்டாயப்படுத்துகின்றது. எதிராளி - எதிர்மனுதாரர் இங்கு வழக்காளி காட்டிய ஆதனத்திலும் பார்க்க பெரிய ஆதனத்தை பிரிவிடல் செய்ய கோரினால் ஆனால் 19 (2) ஆவது பிரிவின் கீழான தவிர்க்க முடியாத நடவடிக்கையைப் பின்பற்றவில்லை.

மேலும் 19 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றாது விடுதல் சட்ட முரணானது எனவும் தீர்க்கப்பட்டுள்ளது.

**கட்சிக்காரர்களைச் சேர்த்தல் பிரிவு 20**

நில அளவையாளரிடம் எந்த ஒரு உரிமை கோருபவரும், பூர்வாங்க அளப்பனவின் போது அறிவித்தல் பெற்றுக் கொண்டால், அவர் தன்னைக் கட்சிக்காரராக சேர்த்துக் கொள்ளுமாறு கோரலாம்.

எதிராளியினால் வெளிப்படுத்தப்படும் நபர் எதிராளியாலேயே அறிவித்தல் அனுப்பப்பட வேண்டும். அவர் விரும்பினால் மன்றில் தோன்றி தன்னைச் சேர்த்துக்கொள்ளுமாறு விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவரை சேர்க்கலாம். அவ்வாறு எவரும் விண்ணப்பம் செய்யத்தவறின், சேர்த்துக் கொள்ளப் படமாட்டார்.

பிரிவிடல் வழக்குகளின் தீர்வைகள் (Decree in Rem) முழு உலகையும் கட்டுப்படுத்துவன. It binds the whole world எனவே கூடிய வரை கட்சிக்காரர்கள்

அனைவரும் வழக்கில் சேர்க்கப்பட வேண்டும்.

69ஆம் பிரிவானது, நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் எந்த நேரமும் செலவு கட்டும் நிபந்தனைக்கமைய வழக்கில் ஒரு கட்சிக்காரரை சேர்ப்பதற்கு அதிகாரமளிக்கின்றது.

Wijesehera V.Wijesuriya 44 NLR 455

பிரிவிடல் வழக்கொன்றில், நீதிமன்றமானது, இறுதித் தீர்வை வழங்கும்வரை கட்சிக்காரர்கட்கு இடைபுகுவதற்கான உரிமையை மறுக்கக்கூடாது. அவ்வாறு இடைபுகுவதற்கான விண்ணப்பத்தை அனுமதிக்கும் போது, நீதிமன்றுக்கு நீதியும் ஒப்புரவுமாயிருக்கின்ற நிபந்தனையை விதிக்க அதிகாரம் உண்டு.

வழக்கிடைத் தீர்வை (Inter Locatory Decree) வழங்கிய பின் எவராவது இடைபுக விண்ணப்பித்தால், மன்று பிணை வழங்குமாறு கட்டளையிடலாம்.

Kiri Banda V.Weerappu Chettiya 50 NLR 490

பிரிவிடல் வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது, ஒருகட்சிக்காரரின் உரிமை, உரித்து, நலன் விற்கப்பட்டால், வாங்கியவர் வழக்கில் அக் கட்சிக்காரரின் இடத்திற்கு பதிலீடு செய்வதற்கு உரித்துடையவர் ஆவார். செலவு கட்டிய பின் அவ்வாறு சேர்க்கப்பட்டவர் அதுவரை நடந்த நடவடிக்கைகட்கு கட்டுப்பட்டவர்.

பிரிவிடல் வழக்கானது விளக்கத்திற்கு நியமிக்கப்படும் போது குடியியல் நடவடிக்கை முறைச் சட்டத்தின் கீழ் விளக்கத்தை நடத்த வேண்டும். நீதிமன்று ஒவ்வொரு கட்சிக்காரரின் உரித்தையும் நுணுகி ஆராய வேண்டும். உண்மையான உரித்தாளர் யார் என்பதைத் தீர்மானிப்பது நீதிபதியின் கடமை.

Layard CJ in the Mather V.Thamotharampillai 6 NLR 246.

Summarized the duties of the Judge in a partition action.

வழக்கிடைத் தீர்வை பிரிவு 26 விளக்க முடிவில் தீர்ப்பு வழங்கப்படும்.

தீர்ப்பின் பிரகாரம் வழக்கிடைத் தீர்வை பதியப்படும் (Inter Locatory Decree)

பிரிவிடல் தீர்வை (பிரிவு 26) யும் குடியியல் நடவடிக்கை முறை 188ஆம் பிரிவு தீர்வையும் ஒரே மாதிரியானவை.

Peeisinghe V.Ratnaweera.62 NLR 572. என்ற வழக்கில்

நீதிமன்றமானது இரண்டு தீர்வைகளை இரண்டு கட்டங்களில் வழங்குகின்றது. பிரிவிடல் வழக்குகளில் ஒன்று 26ம் பிரிவின் கீழான வழக்கிடைத்தீர்வை Interlocatory Decree இரண்டு இறுதித் தீர்வை 36ஆம் பிரிவின் கீழ் இவை இரண்டும் இறுதியானதும் முற்றுமுழுவதுமான விளைவைக் கொண்டுள்ளன. ஆனால் இவை இரண்டும் எந்த மேன்முறையீட்டுக்கும் மீளாய்வுக்கும் உட்பட்டவை.

வழக்கிடைத் தீர்வை வழக்குகளில் ஒவ்வொரு கட்சிக்காரர்களினதும் உரிமைகளைத் தீர்மானிக்கின்றது. உதாரணமாக பிரிக்கப்படும் ஆதனத்தில் 1/3 பங்குக்கு உரித்துடையவர் என பிரகடனப்படுத்தப்படலாம். இறுதித் தீர்வையில் தனது சொரியல் பங்குக்கான குறித்த ஆதனத்தில் குறிப்பிட்ட பகுதியைப் பெற முடியும்.

26 (2) ஆம் பிரிவின் கீழ் நீதிமன்று,

1. ஆதனத்தை பிரிவிடல் செய்வதற்கான கட்டளை.
2. ஆதனத்தை முழுமையாகவோ பகுதியாகவோ விற்பதற்கான கட்டளை.
3. ஒரு பகுதியை விற்பதற்கும் ஒரு பகுதியை பிரிவிடல் செய்வதற்குமான கட்டளை.
4. ஒரு குறிப்பிட்ட நபரின் பாகம் மட்டும் பிரிக்கப்பட்டு எல்லை வைக்கப்படல்.
5. குறிப்பிட்ட பாகம் ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கு பொதுவில் இருக்கவிடல்.
6. எந்தப் பாகமும் வழங்கப்படாமல் இருக்கவிடல்.

26 (2) ஆம் பிரிவின் கீழ் உகந்த கட்டளை ஆக்க அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரிவிடல் வழக்கில் பிரிவிடல் அல்லது விற்பனைக்கு கட்டளையிடப்பட்ட பின்னர் இறுதி அளப்பனவு ஆணைக்கு கட்டளையிடப்படும் (Final Partition Plan) இவ்வாணையானது பூர்வாங்க அளப்பனவு செய்த ஆணையாளருக்கு அல்லது தேவைப்படின் வேறு ஆணையாளருக்கு அனுப்பப்படும்.

48ஆம் பிரிவானது இறுதிப்பிரிவிடல் வழக்கிடைத்தீர்வை என்பன, மேல் நீதிமன்றம் அநீதி இழைக்கப்பட்டது என திருப்திப்பட்டால், புறம் தள்ளலாம்.

இவை பற்றிய வழக்குகள்
Somawathy V.Madawela (1983) 2 SLR 15
Piyasena Perara Vs.Margret Perera (1984) 1 SLR 57

எனினும் ஒரு கட்சிக்காரருக்கு அழைப்புக்கட்டளை கிடைக்காவிடில்

ஒரு கட்சிக்காரர் பராயமற்றவராய் இருந்து வழக்குப் பாதுகாவலர் நியமிக்கப்படாவிடில், ஒருவர் இறந்துவிட்டால், அவரின் இடத்திற்கு பதிலீடு செய்யப்படாதுவிடில்,

ஒருவர் சமூகமளித்து உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்து, விளக்கத்திற்கு சமூகமளிக்காதுவிடில்.

பாதிக்கப்பட்ட நபர், மனு, சத்தியக்கூற்று அணைத்து விண்ணப்பிக்கலாம். இவரது விண்ணப்பத்தை மன்று பரிசீலிக்கலாம்.

இது சம்பந்தமான வழக்கு

(1978 - 79) 2 SLR 191
1986 - Calr 530

மேலும் பிரிவிடல் வழக்கானது முழு உலகையும் கட்டுப்படுத்துவதனால் நீதிமன்றம், கட்சிக்காரரின் உரிமையை நன்கு ஆராய்ந்து தீர்ப்பு வழங்க வேண்டும்.

# CATEGORIES OF BODILY INJURY SPECIFIED IN THE PENAL CODE

*Palitha Fernando*
*Additional Solicitor General*
*Lecturer, Sri Lanka Law College*

Officer bearers of the Hindu Maha Sabha of the Sri Lanka Law College requested me to write an article for publication in their publication "Nakkeram" I accepted the invitation simply because I could not disappoint them. Editor of the Hindu Maha Sabha, Vithya Ambigalbagan never let me rest until I wrote the article and gave it to her. I am extremely thankful to her as I would not have given my mind to the area I have discussed in this article if not for her. However constrains on time prevented me from doing a deep research into the subject. I shall endeavour in the very near future to publish a more detailed research on the same subject.

Provisions of the Penal Code make special reference to three types of bodily injury. The term bodily injury is used as against the term injury as injury[1] in terms of the Penal Code means illegal harm caused to one's property, mind and reputation as well

The types of hurt specifically referred to in the Penal Code are :

(a) hurt sufficient in the ordinary course of nature to cause death;
(b) hurt likely to cause death;
(c) hurt endangering life.

Though specific reference is made in the Penal Code provisions only to the above mentioned categories of bodily injury, quite often Forensic Pathologist who testify in courts refer to necessarily fatal injuries. A necessarily fatal injury, as the word denotes would be an injury, the inescapable consequence of which would be death. A simple example of such a bodily injury that comes to my lay mind is an act by which the head is severed from the body. No amount of skilled medical attention could save the life of the victim as far as medical science has advanced so far Section 294 of the Penal Code provides that a person commits the offence of murder where he causes death by doing an act with the intention of causing death. The intention of a person is identified from the results of his acts.

1. Section 43of the Penal code

A normal person is said to intend the natural consequences of his acts. Thus a person who inflicts bodily injury that is necessarily fatal would be guilty of the offence of murder, unless he could invoke the provisions of the exceptions set out in section 294 of the Penal Code or the General Exceptions in terms of the Penal Code.

The issue becomes more complicated however, where the bodily injury caused is not necessarily fatal but is fatal in the ordinary course of nature as referred to in section 294 of the Penal Code, or is hurt likely to cause death as referred to in section 293 of the Penal Code.

These are two types of bodily injury are not necessarily fatal so that the intervention of medical assistance can prevent death ensuing. Third limb of section 294 provides that a person, who causes bodily injury sufficient in the ordinary course nature and causes death, commits the offence of murder. On the other hand a person who causes bodily injury likely to cause death and thereby causes death would be guilty only of the offence of culpable homicide not amounting to murder. In this context, it would be necessary to note that injuries fatal in the ordinary course of nature and bodily injuries referred to as injuries likely to cause death are both injuries from which death could result. It is equally possible on the other hand those persons who sustain such injuries could survive to testify before court. This is the feature that distinguishes those two categories from the injuries commonly referred to as necessarily fatal injuries. Some times attempts have been made to describe an injury fatal in the ordinary course of nature as bodily injury that would result in death if left to nature without medical attention. In my view even an injury likely to cause death should be an injury that would result in death if left to nature. However, the distinction between the two types of injuries should be based on the chances of survival with the intervention of medical assistance.

The distinction between bodily injuries sufficient in the ordinary course of nature to cause death and injuries likely to cause death is important from a legal point of view as the offence for which an accused could be convicted depends on the nature of the bodily injuries inflicted by him.

In the case of **Rex v. Mendis**[2], Justice Gratien, sought to distinguish between the two types of injuries on the basis that an injury fatal in the ordinary course a nature is an injury where there is great antecedent probability of death. His Lordship has sought to describe an injury only likely to cause death as an injury from which there is only mere likelihood of death.

2. 54 NLR 177

The decision of court on the evidence as to whether the injury in question is an injury fatal in the ordinary course of nature or whether it is an injury that could be recognized as an injury likely to cause death depends entirely on the evidence of the medical expert. The issue that the medical expert should assist court to decide upon would be the chances of a normal person surviving after suffering the same injuries that have been sustained by the victim.

What matters could be taken into consideration in expressing a view on that issue is some thing the medical expert will have to elaborate upon. 'While testifying the medical expert will not only be requested to express an opinion on the probability of death bust also will be required to set out the reasons for his opinion. Taking into consideration the expert opinion, court will have to decide whether the bodily injury in question would be an injury sufficient in the ordinary course of nature to cause death or whether it is bodily injury likely to cause death.

If court decides that the bodily injury caused by the accused can be defined as bodily injury fatal in the ordinary cause of nature and that the victim died as a result of such injury, unless the accused could bring it within one of the General or special exceptions, the accused would be guilty of the offence of murder. If on the other hand all the above mentioned conditions have been satisfied, save the death of the victim, that is if the victim has survived, the accused would be guilty of attempted murder.

If however, on the basis of the evidence of the Forensic Pathologist the Court decides that the bodily in jury was only bodily injury likely cause death an the victim had died as a result of the bodily injury, unless the accused can come within one of the special or general exceptions, the accused will be convicted of culpable homicide not amounting to murder. If however all the above mentioned conditions are satisfied and the victim has not died, the accused would be guilty only of attempted culpable homicide not amounting to murder.

We can now turn to the third category of hurt specifically referred to in the Penal Code; hurt endangering life, reference is made to this category of injury in section 311 of the Penal Code that defined grievous hurt. Thus a person, who inflicts an injury that is categorized as an injury endangering life, could be convicted of the offence of grievous hurt and not of attempted murder or attempted culpable homicide. Therefore, what should strike one's attention immediately is that an injury endangering life as referred to in the Penal Code should be an injury the gravity of which is lesser than the other

injuries described as injuries fatal in the ordinary course of nature and injuries likely to cause death. As stated earlier one clear character that distinguishes an injury endangering life with the other two categories of injuries is that an injury that endangers life would not result in death even without medical attention. However, as a result of the injury the patient's life may be endangered as a result of some condition that may arise as a result such injury. Dr. A. B. Seneviratne consultant JMO Kandy with whom I discussed this issue gave me the example of a person who is unconscious due to an injury and the danger of that person dying of asphyxia exists. However, even without any medical attention the probability of the patient recovering cannot be excluded. Where a person suffers a bodily injury it would not be possible to categorise it as an injury only endangering life, if left to nature, the victim would succumb to the injury. If so it would be either an injury likely to cause death or an injury fatal in the ordinary cause of nature depending on the probability of death even with medical attention.

It is observed that this is some confusion about the exact nature of a bodily injury that could be designated an injury endangering life. This prompted the College of Forensic Pathologists to have a symposium on this specific issue at one of the annual scientific secessions of the College. In my view it is necessary that this issue be considered by a special body of experts drawn from the Legal and Medical Professions so that appropriate legal provisions could be enacted to avoid any confusion surrounding the method of identification of an injury endangering life as contemplated in section 31 1 of the Penal Code.

# அடிப்படை உரிமைகளும் மீறல்களும்

செ.செல்வகுணபாலன்
உதவிச் சட்டவரைஞர்

அடிப்படை உரிமைகளாவன தற்போது நடைமுறையிலுள்ள 1978ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் IIIம் அத்தியாயமான 'அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும்' என்பதில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளாகும். இவ்வுரிமைகள் அனைத்தும் அனைத்துலக மனிதஉரிமைப்பிரகடனத்தில் வெளிப் படுத்தப்பட்டுள்ள உரிமைகளில் சிலவாகும். இலங்கை அரசியலமைப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளில் இரண்டு உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் மட்டுமே பூரணத்துவமானவையாகும். அவ்வுறுப்புரிமைகளாவன 10 மற்றும் 11 ஆகும். இவ்வுறுப்புரைகளை மாற்ற அல்லது திருத்த பாரா்ளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையும் மக்கள் தீர்ப்பும் பெறப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்துகின்றது.

**மதத்தை அல்லது நம்பிக்கையைப் பின்பற்றும் சுதந்திரம்**

மதம் தொடர்பாக மூன்று உறுப்புரைகள் ஏற்பாடு செய்கின்றன. அவையாவன:

ஆளொவ்வொருவரும் தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராக அல்லது மேற்கொள்வதற்கான சுதந்திரமுட்பட, சிந்தனை செய்யும் சுதந்திரம் உட்பட மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம்,மத சுதந்திரம் என்பவற்றுக்கு உரித்துடையராதல் வேண்டும்:-
(உறுப்புரை 10).

இலங்கைக் குடியரசில் பௌத்த மதத்திற்கு முதன்மைத்தானம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் எல்லா மதங்களுக்கும் காப்புறுதி செய்யும் அதே வேளையில் பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணிவளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும். (உறுப்புரை 9).

ஒவ்வொரு பிரசையும் தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து, பகிரங்கமாகவேனும் அந்தரங்கமாகவேனும் தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வழிபாட்டிலும் போதனையிலும் அனுசரிப்பிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரத்திற்கு உரித்துடையவர்.

{(உறுப்புரை 14 (1) (உ)}

இங்கு அவதானிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சம் 10ஆம் உறுப்புரையில் கூறப்பட்ட விடயங்கள் பூரணத்துவமானவையாவதுடன் ஆட்கள் அனைவருக்கும் ஏற்புடைய தானவையாகும். ஆனால் 14ஆம் உறுப்புரையில் கூறப்பட்ட விடயங்கள் பிரசைகளுக்கு மட்டும் உரித்தாவதுடன் மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவையாகும். மட்டுப்பாடுகளுக்காக பொது ஒழுங்கு, சுகாதாரம் சமூக பாதுகாப்பு என்பவற்றின் அடிப்படையில் சட்டம் அல்லது ஒழுங்கு விதிகளை உருவாக்கி அவற்றின் பிரயோகத்தை கட்டுப்படுத்தலாம். எனவே மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம் முழுமையானது ஆனால் அதனை பிரயோகிக்கும் உரிமை மட்டுப்பாட்டிற்கு உட்பட்டது.

**கிறிஸ்ரியன் சகனய தொறடுவ வழிபாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்)**[1] தொடர்பான உயர் நீதிமன்ற தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டது. சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம் என்பன ஒவ்வொரு ஆளுக்குமுரிய உரிமையாக மட்டும் பிரகடனப்படுத்தப் படவில்லை. மாறாக அத்தகைய உரிமைகள் ஆளுடைய விருப்பில் ஏதேனும் மதத்தை அல்லது நம்பிக்கையை கொண்டிருப்பதற்கு அல்லது சேர்த்துக் கொள்ளுவதற்கான உரிமையையும் உள்ளடக்குவதாக வரையறை செய்யப்பட்டுள்ளது. எனவே ஒருவர் தனது மதத்தை அல்லது நம்பிக்கையை தெரிவு செய்வதில் எவ்வித தடையும் இருத்தலாகாது. ஒவ்வொரு வருக்குமான அடிப்படைத்தெரிவு ஏதேனும் முறையற்ற செல்வாக்கு, கவர்ச்சி அல்லது மோசடி என்பவற்றுக்கு அப்பாற்பட்டு முழுமையான சுயாதீனமானதாக இருத்தல் வேண்டும்.

இலங்கையில் அரசியலமைப்பு மதத்தைப் பரப்புவதற்காக (propagate) அடிப்படை உரிமையை உத்தரவாதம் செய்யவில்லை. இங்கு ஒவ்வொரு பிரஜைக்கும் என்ன உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளதெனில் தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து, பகிரங்க மாகவேனும் தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வழிபாட்டிலும் போதனையிலும் அனுசரிப்பிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரத்திற்கு உரித்துடையவர். மாறாக பரப்புவதற்கு அல்ல.

பிரேமலால் பெரேரா எதிர் வீரசூரியா[2] வழக்கில் அரசாங்க புகையிரத திணைக்கள ஊழியர் ஒருவர் தேசிய பாதுகாப்பு நிதிக்காக செலுத்துபவர் ஆட்சேபிக்காதவிடத்து அத்தகைய செலுத்துகைக்காக கழிப்பனவு ஒன்றை செய்கின்ற அதிகாரத்தை வழங்குகின்ற சுற்றுநிருபத்தை எதிர்த்து தனது அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றது என முறைப்பாடு செய்தார். ஏனெனில் அவ்வாறு சேர்க்கப்படும் பணம் போருக்கான ஆயுதங்களை கொள்வனவு செய்யவும் மனித உயிர்களை அழிக்கவும் பயன்படுத்தவுள்ளதாக கூறினார். இது தான் பின்பற்றும் பௌத்த மத கோட்பாட்டிற்கும் நம்பிக்கைக்கும் முரணானது என வாதிட்டார். உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் சுற்றுநிருபத்தில் தேவைப்படுத்தப்பட்டவாறு மனுதாரர் ஆட்சேபனையைத் தெரிவிப்பதன் விளைவாக தேசிய பாதுகாப்பு நிதியத்திற்கான செலுத்துகையை தவிர்த்திருக்கலாம் என்பதுடன் செலுத்தத் தவறுகைக்கு எதிராக தண்டனை விதிக்கும் ஏற்பாடுகள் எதுவும் சுற்றுநிருபத்தில் காணப்படவில்லை என்பதாலும் அதனால் மனுதாரர் முழுமையான மத சுதந்திரத்தை அனுபவிக்க முடியும் எனத் தீர்க்கப்பட்டது.

### சித்திரவதை மீதான சர்வதேச பொருத்தனைகள்
### (International Treaties on Torture)

மனித உரிமைகள் தொடர்பான எல்லாப் பிரகடனங்களும் அத்துடன் உரிமைகள் பற்றிய எல்லாத் தேசிய சட்டங்களும் சித்திரவதை, கொடூரம், மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்தல் அல்லது தண்டனை என்பவற்றைத் தடை செய்கின்றன. 1975ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் சேர்த்துக் கொள்ளப்பட்ட சித்திரவதை, மற்றும் கொடூரம் மனிதாபிமானமற்ற அல்லது தரக்குறைவான நடாத்தல் அல்லது தண்டனைக்குள்ளாக்கப்படுவதிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாப்பதற்கான பிரகடனம் சித்திரவதை என்பது வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்ட உடல், உள ரீதியான கடுமையான தாக்கம் அல்லது துன்பம் என வரையறை செய்யப்பட்டுள்ளது. மேலும் சித்திரவதையானது புலன்விசாரணையின் போது பகிரங்க அலுவலர்கள் குறித்த நபரிடமிருந்து அல்லது மூன்றாம் நபரிடமிருந்து தகவலை அல்லது குற்ற ஒப்புதலை பெறுவதற்காக, அல்லது குறித்த நபரால் புரியப்பட்ட செயலுக்காக அவரை தண்டிப்பதற்காக அல்லது அச்சுறுத்தும் நோக்கத்திற்காக செய்யப்படுகின்றது எனவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னர் 'ஆளெவரும் சித்திரவதை அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்தலுக்கு அல்லது தண்டனைக்கு உட்படலாகாது' என்ற வாசகம் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் உறுப்புரை 5 இலும், குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச பொருத்தனை உறுப்புரை 7 இலும், மனித உரிமைகள் மீதான ஐரோப்பிய சமவாயத்தின் உறுப்புரை 3 இலும் இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 11 இலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச பொருத்தனை உறுப்புரை 6 இன்படி குற்றம் புரியப்படும் போது வலுவில் இருக்கின்ற சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக கடுமையான குற்றங்களுக்கு மட்டும் மரணதண்டனை விதிக்கப்பட வேண்டுமெனவும் 18 வயதிற்குட் பட்டவர்களுக்கு மரண தண்டனைத் தீர்ப்பு எதுவும் விதிக்கப்படலாகாது எனவும் கர்ப்பமுற்ற தாய்மாருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படலாகாது எனவும் பிரகடனம் செய்கின்றது. இலங்கையின் உள்நாட்டுச் சட்டங்களிலும் இத்தகைய ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

ஏற்கனவே காணப்பட்ட சமவாயம் போதாது என்பதனால் சித்திரவதையை தடுப்பதற்கென விசேடமாக கொண்டு வரப்பட்டதே சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தை அல்லது தண்டனை மீதான சமவாயம் ஆகும். இது 1984ஆம் ஆண்டு டிசெம்பர் 10ஆம் திகதி நியூயோர்க்கில் கையெழுத்திடப்பட்டது. இலங்கை இவ்வாவணத்தை 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி இச்சமவாயத்தை ஏற்றுக் கொண்டது. இச்சமவாயத்தின் உறுப்புரை 2 சமவாயத்தின் ஒவ்வொரு உறுப்பு நாடுகளையும் தமது நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட ஆள்புல நிலப்பரப்பில் சித்திரவதைச் செயல்களைத் தடுப்பதற்கு வினைத்திறனான சட்டவாக்க, நிர்வாக, நீதி மற்றும் வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தேவைப்படுத்துகின்றது.

இதற்கிணங்கவே 1994ஆம் ஆண்டு 22ஆம் இலக்க, சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது

இழிவான நடாத்தல் அல்லது தண்டனைக்கு எதிரானசமவாயச்சட்டம் உருவாக்கப்பட்டது.

மேலும் இச்சமவாயத்தில் காணப்படும் முக்கிய உறுப்புரைகளை ஆராயலாம். எவரேனும் ஆள் சித்திரவதைக்குள்ளாக்கப்படக் கூடும் என நம்புவதற்கு நியாயமான அடிப்படை உண்டு எனில் அரச தரப்பானது அந்நபரை வேற்று நாட்டுக்கு திருப்பி அனுப்புதலோ அல்லது வெளியேற்றுதலோ ஆகாது - (உறுப்புரை 3). ஒவ்வொரு நபரும் தனது நாட்டில் தனக்கு எதிராகப் புரியப்பட்ட சித்திரவதை தொடர்பாக முறைப்பாடு செய்ய உரித்துடை யவராவதுடன் அத்தகைய முறைப்பாட்டாளர் குறித்த முறைப்பாட்டினால் அல்லது கொடுக்கப்பட்ட சான்றினால் அச்சுறுத்தல் அல்லது தவறாக நடாத்தப்படாமல் இருப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும். (உறுப்புரை 13).

### சித்திரவதைக்கு எதிரான குழு
### (COMMITTEE AGAINST TORTURE)

இக்குழுவானது சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தை அல்லது தண்டனை மீதான சமவாயத்தின் உறுப்புரை 17இன் கீழ் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். இதில் மனித உரிமை விடயங்களில் அங்கீகரிக்கப்பட்ட தகைமையைக் கொண்டவர்களும் சிறந்த ஒழுக்கம் கொண்டவர்களுமான பத்து உறுப்பினர்கள் உறுப்பு நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் நான்கு வருடங்கள் பதவிக்காலத்தைக் கொண்டிருப்பார்கள்.

ஒவ்வொரு அரசும் இச்சம வாயத்திற்கு உறுப்பு நாடாக வந்ததிலிருந்து ஒரு வருடத்தினுள் இச்சமவாயத்தை அமுல் செய்வதில் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் செயலாளர் ஊடாக இக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை இவ்வாறான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும. இது தொடர்பான பொதுவான கருத்துரைகளை குழு தொடர்புடைய அரசுக்கு தெரிவிக்கும்.

இதற்கு மேலதிகமாக உறுப்புரை 22இன்படி ஒரு அரசு இவ்வுறுப்புரையின் கீழ் தனிப்பட்டவர்களினால் செய்யப்படும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கான பிரகடனம் ஒன்றைச் செய்திருப்பின் அரசின் செயலினால் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர் இக்குழுவிற்கு கோரிக்கை விடமுடியும். மாறாக பிரகடனம் செய்யாத நாட்டிலிருந்து எந்த கோரிக்கையையும் குழு டிபாறுப்பேற்கள் கூடாது. பிரகடனம் செய்த நாட்டிலிருந்து கோரிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் குழு அதனை அரச தரப்பின் கவனத்திற்கு கொண்டுவருதல் வேண்டும். அத்துடன் அரசு 6 மாதங்களுள் அவ்விடயம் தொடர்பான எழுத்துமூலமான விளக்கம் அல்லது கூற்றினையும் அதற்கான நிவாரணம் பற்றியும் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் குறித்த விடயம் சர்வதேச புலன்விசாரணையில் இருந்தால் அல்லது கிடைக்கக்கூடிய உள்நாட்டு நிவாரணம் அனைத்தும் பெறாவிடின் இக்குழுவிற்கு செல்லமுடியாது. கோரிக்கை இரகசியமாக பரிசோதிக்கப்படுவதுடன் குழு தனது நோக்குகளை அரசுக்கு தெரிவிக்கவேண்டும். இலங்கை அரசு இவ்வுறுப்புரையைப் பிரகடனம் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இலங்கை யிலிருந்து தனிப்பட்டவர்கள் சித்திரவதை மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தை அல்லது தண்டனை தொடர்பாக கோரிக்கை ஒன்றை இக்குழுவிற்குச் செய்யமுடியாது.

உறுப்புரை 20இன்படி இச்சம வாயத்தின் உறுப்பு நாட்டின்

நியாயாதிக்க எல்லைக்குள்ளாக சித்திரவதை தொடர்பாக நம்பத்தகு தகவல் சித்திரவதைக்கு எதிரான குழுவிற்கு கிடைக்கப்பெறின் அது தொடர்பாக அக்குழுவானது, குறித்த நாட்டிற்கு அத்தகவலைப் பரிசோதிப்பதற்கும் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும் அவதானிப்புக்களை குழுவிற்கு சமர்ப்பிக்கவும் செய்வித்தல் வேண்டும். மேலும் குழு இரகசியமாக விசாரணை நடாத்த ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களை குறித்தொதுக்கலாம். இதற்கென அந்நாட்டிற்கு செல்ல அந்நாட்டின் ஒத்துழைப்பைப் பெற ஆவன செய்தல் வேண்டும். இவ்வுறுப்புரையில் குறிப்பிடப்பட்ட விடயங்களனைத்தும் இரகசியமாக செய்யப்பட வேண்டும். குழுவின் அறிக்கையானது குறித்த அரசின் கலந்துரையாடலின் பின்னர் குழுவின் ஆண்டறிக்கையில் வெளியிடப்படலாம்.

**இலங்கை அரசியலமைப்பும் உள்நாட்டுச் சட்டவாக்கமும்**
(SRILANKA CONSTITUTION & LOCAL LEGISLATION)

இலங்கையைப் பொறுத்தவரை இலங்கை அரசாங்கத்தினால் ஏற்கப்படும் சர்வதேச ஆவணங்கள் தொடர்பில் அவை அவ்வாறே உள்நாட்டுச் சட்டமாக வருவதில்லை. அவற்றுக்குப் பயன்கொடுப்பதற்காக சட்டவாக்க, நிர்வாக, நீதித்துறை நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். இதனாலேயே சித்திரவதை தொடர்பாக உள்நாட்டுச் சட்டம் உருவாக்கப்பட்டது. இலங்கையின் அரசியலமைப்பின் உறுப்புரை 11பின்வருமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது:- 'ஆளெவரும் சித்திரவதை அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்தலுக்கு அல்லது தண்டனைக்கு உட்படலாகாது' அரசியலமைப்பில் அடிப்படை உரி மைகளும் சுதந்திரங்களும் எனும் அத்தியாயத்தில் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட இவ்வுரிமையானது பூரணமான உரிமை யாகும். அத்துடன் ஆட்கள் அனைவருக்கும் உரித்துடைய உரிமையாகும்.

எமது உயர் நீதிமன்றம் அமல் **சில்வா எதிர் கொடித்துவக்கு**(3) வழக்கில் பின்வருமாறு கூறியது."உறுப்புரை 11இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்வுரிமையானது கட்டாயமானது. இது ஒவ்வொரு ஆளையும் இன்னொருவர் மீது சித்திரவதை, கொடூரம் அல்லது மனிதாபிமானமற்ற நடத்தலை தடைசெய்கின்றது. இந்த அடிப்படை உரிமை எவ்வித மட்டுப்பாடுகளும் கட்டுப்பாடுகளும் அற்ற பூரண உரிமையாகும். இந்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஆளும் அவர் குற்றவாளியோ அல்லவோ இவ்வுரிமைக்கு உரித்துடையவர். அரசின் அங்கமான பொலிஸ் இவ்வுரிமையை பாதுகாக்க, முன்னேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனக் கூறியது.

அரசியலமைப்பில் வெளிப்படையாகவோ அன்றி உட்கிடையாகவோ சித்திரவதை என்றால் என்ன என வரைவிலக்கணப்படுத்தப்படவில்லை. இதற்கு மாறாக சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்தல் அல்லது தண்டனைக்கு எதிரான சமவாயச்சட்டம் சித்திரவதை என்றால் எவரேனும் ஆளுக்கு உடல் அல்லது உள ரீதியாக கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற செயலாகும் அச்செயல் பின்வரும் நோக்கங்களுக்காக செய்யப்படுகின்றது.

1. அத்தகைய நபரிடமிருந்து அல்லது மூன்றாம் நபரிடமிருந்து தகவலை அல்லது குற்ற ஒப்புதலை பெறுவதற்கு,
2. நபரினால் புரியப்பட்ட செயலுக்கு தண்டிப்பதற்கு,
3. குறித்த நபரை அல்லது மூன்றாம்

நபரை அச்சுறுத்துவதற்காக செய்யப் படுகின்றது.

சித்திரவதை தொடர்பான சமவாயச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, சித்திரவதை செய்வது மட்டுமல்ல சித்திரவதை செய்ய தூண்டுவது, உதவுவது, சதி செய்வது ஆகிய அனைத்தையும் குற்றமாக எடுத்துக்காட்டியிருப்பதுடன் இத்தகைய குற்றங்களுக்கு மேல் நீதிமன்றத்தால் விளங்கப்படுவதுடன் ஆகக் குறைந்தது ஏழு வருடங்கள் சிறைத் தண்டனையும் ஆக்க குறைந்தது ரூபா 10,000 அபராதமும் விதிக்கப்படக் கூடியதாகும். இங்கு மேல் நீதிமன்றம் மேற்குறிப்பிடப்பட்ட குற்றத்திற்கு குற்றவாளியாகக் காணும் ஒருவருக்கு மேலே குறிப்பிட்ட தண்டனையை விடக் குறைவான தண்டனையை விதிக்க அதிகாரம் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் குற்றத்தின் தன்மையைக் காட்டுவதாக இக்குற்றங்கள் பிடியாணை யின்றி கைது செய்யப்படக்கூடியவையாகவும் பிணை வழங்கப்பட முடியாதவையாகவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. எனவே விசேட சந்தர்ப்ப சூழ்நிலைகளில் மட்டுமே மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பிணை வழங்கப்படக்கூடியதாக உள்ளது.

இச்சட்டத்தின் கீழ் புரியப்பட்ட குற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக யுத்தம், நாட்டின் அரசியல் நிலை, அவசரகால நிலை, உயர் அதிகாரி அல்லது பகிரங்க சபைகளின் கட்டளைகள் என்பவற்றைக் காரணம் காட்டமுடியாது. இதனால் நியாயமான கட்டளைகளுக்கு மட்டுமே பகிரங்க அலுவலர்கள் கீழ்ப்படிய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**மிர்மல் பெனாண்டோ எதிர் சரத் பெரேரா**[4] வழக்கில் மனுதாரரை பொலிஸார் சேட்டையும் பாதணியையும் கழற்றும்படி கட்டாயப்படுத்தினர். அவர் வேலை செய்யும் இடத்தில் அவருக்கு கீழ் வேலை செய்யும் ஊழியர்கள் முன்னிலையில் தாக்கப்பட்டார். இங்கு நீதிமன்றம் இத்தகைய செயல்கள் மனுதாரரை இழிவுபடுத்துவதாக கொண்டதுடன் இதன் விளைவாக அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக் கப்பட்டது.

2. Per Wijetunga J. - Samarasinghe v. Air Lanka Ltd. [1996] 1 SLR 259 at 276


The lack of awareness of Supreme Court decisions on the part of public administrators was observed from an empirical study conducted by the author in 2004[3]. A structured questionnaire was sent to a sample of one hundred senior public administrators at the level of Head of Department, including Secretaries to Ministries. This choice of sample was made with a view to ensure that the majority of respondents to the questionnaire would have some degree of exposure to the Supreme Court in their official and/or personal capacity. The questionnaire survey received fifty responses from a total of one hundred questionnaires sent. This accounts for a 50% response rate. One part of the questionnaire was devoted to ascertaining a feedback on the effectiveness of the judgments of the Supreme Court through the indicators depicted below:




***Source : Survey Data***




***Source : Survey Data***

3. 'An Assessment of the Contribution of the Judiciary towards Good Governance : A Study of the Role of the Supreme Court of Sri Lanka' - research sponsored by a fellowship for a young researchers from the Sri Lanka Foundation in collaboration with the Friedrich Stifting (FES)

The above empirical data shows that there is a lack of awareness of the Supreme Court decisions on the part of decision makers. This has rendered the judgments ineffective. For the public service to be responsive to judicial pronouncements there must be sufficient awareness of the latter by the former which is sadly lacking. It would be interesting to find out how many of decision makers in the public service take an interest to update themselves of the latest decisions in fundamental rights cases. Even public servants who are respondents in cases are often not fully conversant of the decisions against them. This is because the public service has failed to give importance to awareness of Supreme Court decisions which is a fundamental flaw. Although there are Efficiency-Bar Examinations which are mandatory for promotions in various types of services in the public sector including all-island services and provincial services, the testing of the knowledge of public servants on fundamental rights cases is very insignificant. Constitutional and Administrative Law is incorporated in the syllabus of some EB exams but whether it is tested sufficiently with emphasis on case law is in doubt. Hence, the repetitive violations of fundamental rights. This can be avoided if due consideration is given to awareness centered approach.

For the judgments of the Supreme Court to be effective there must be knowledge of and due consideration given by decision makers to the relevant case law during the decision making process. Even in instances where the service minutes of respective services don't provide for situations, guidelines can be derived from the case law. Some Court decisions are explicit in laying down rules to be followed in appointments, promotions etc. While others provide guidelines.

The author has selected the following three cases to demonstrate how respetitive violations have occurred despite the holdings of the Supreme Court.

Perera & Another V. Cyril Ranatunga, Secretary Defence & Others[4] is noteworthy case where the Supreme Court emphasized the need for transparency in interview processes by holding that due publicity to schemes of promotion and, applicable criteria must be given in advance for the benefit of candidates. In this case two petitioners challenged the promotion of several Authorized Officers of the Department of Immigration and Emigration as Senior Authorized Officers by the Controller (2nd Respondent) overlooking them pursuant to the recommendation of the Interview Board. The interview was a viva was a viva voce

4. [1993] 1 SLR 39

and a marking scheme had been adopted by the Board to evaluate candidates on the basis of seniority and merit under several heads of assessment. The Court held that marking schemes adopted for the purpose of assessing candidates must be adequately publicized in advance and duty and fairly applied at the interview. 'It is very desirable that all the criteria relevant to promotion should be publicized in advance so that all candidates have equal opportunities of advancing their claims.'[5]

In Perera V. Monetary Board of the Central Bank [6] the Court inter alia found fault with the Respondents for failure to give Publicity to the Scheme of Recruitment. In this case the Scheme of Recruitment which was in existence had been significantly modified and the modifications had not been publicized which was held to be unsatisfactory. 'Publicity would, among other things, have enabled the petitioners and anyone concerened, to see for themselves how justifiable was the modified scheme and how just was its application.' [7]

In Piyasena V. The People's Bank[8]the Court reiterated its holding in the above two cases that all the criteria relevant to promotions etc. should be publicized. 'To hold otherwise would permit a scheme of promotion to be secretly varied, from year to year, by successive interview boards, to the detriment of employees' morale and performances'[9]

Several judgments have articulated the need for transparency where appointments, promotions, dismissals etc. of public officers are concerned. Criteria for selection must be disclosed in advance. Undisclosed criteria leave room for accusations regarding selections. The above cases amply demonstrate the repetitions in violations of fundamental rights in similar circumstances which Could have been avoided had due attention been paid to the case law. The case law is abundant with holdings on similar and even identical situations relating to State sector employment.

Hence the author recommends that a proper mechanism be adopted to circulate the Supreme Court judgements within the public service. Importance, similar to Public Administration Circulars should be placed on these judgments. Also the public servants' knoweldge on the case law relating fundamental rights violations must be adequately tested at EB examinations.

Fundamental rights cases provide a set or benchmarks for State sector employment. Hence the need of their awareness among all public sector employees. There are instances where the Court has had to repeat its pronouncements over and on over again. Repetitions in violations not only contribute toa colossal waste of money on litigationbut also contribute towards employees losing faith and confidence in the public service. Therefore, awareness is vital to enhance the impact of fundamental rights cases in the public service.

---

5. [ibid.pg. 47 - Per Fernando]
6. [1994] 1 SLR 152
7. ibid.pg.175-Per Amarasinghe J.
8. [1994] 2 SLR 65
9. ibid.pg 69 - Per Fernando J.]

# குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தின் சில அம்சங்கள்

# Some Aspects of the Prevention of Domestic Violence Act

**A.Sarveswaran**
**Senior Lecturer**
**Faculty of Law**
**University of Colombo.**

## அறிமுகம்

அகவாழ்வான இல்வாழ்க்கை என்பது, ஒரு அறமாக இல்லறம் எனப்படுகின்றது. இது களவியல், கற்பியல், மணவியல் என வகுக்கப்பட்டுள்ளது. இவற்றை அடையும் வழிகளாக இல்லறம் மற்றும் துறவறம் ஆகிய இரண்டும் இருந்தாலும், இந்து மத கடமைகள் அனைத்தையும் முழுமையாக நிறைவேற்றி இறைவனை அடையும் வழியாக இல்லறமே உள்ளது. இந்து மத வாழ்க்கை முறையும் குடும்ப அமைப்பை அடிப்படையாகக் கொண்டதாகவே உள்ளது. முழுமுதற் கடவுளான சிவன், பார்வதியுடனும் ஏனைய கடவுள்களுடனும் சேர்ந்து குடும்ப அமைப்பில் தோற்றம் தருவதும் இதனை எடுத்து விளக்குகின்றது.

ஔவையார் 'இல்அறம் அல்லது நல்அறம் அன்று' என்பதன் மூலம் மனைவியுடன் சேர்ந்து வாழும் குடும்ப வாழ்வே சிறப்புடைய வாழ்வென்பதை உணர்த்து கின்றார். இதனையே 'காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' என்கின்றார். வள்ளுவரும் 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது' என்பதன் மூலம் அன்புடனும் அறத்துடனும் வாழ்வதே இல்வாழ்க்கையின் பண்பும் பயனும் என்கிறார். பாரதியார் கவிதைகள் பலவற்றின் உட்கருத்தாகவும் சமத்துவமும் அன்பும் நிறைந்த இல்லறமே உள்ளது. 'மாங்கல்யம் தந்துனானே மமஜீவன ஹேது நா' என்ற சுலோகத்துடன் திருமாங்கல்யம் அணிந்து பதினாறும் பெற்று பல்லாண்டு வாழ்கவென உற்றாரும் உறவினரும் வாழ்த்த இணையும் வாழ்வானது, பலருக்கு பாதியிலே கருகும் பயிராகுவதற்கான காரணங்களிலொன்றாக குடும்ப வன்முறை உள்ளது. குடும்ப வன்முறையில் ஈடுபடுகின்ற பலர் தங்களுடைய வீரத்தையும் சினத்தையும் பலவீனமான குடும்ப அங்கத்தவர்களிடம் காண்பிக்கும் வீரர்களாக உள்ளனர். வள்ளுவர் இவ்வாறான வீரர்களுக்காக 'செல் இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல் இடத்துக் காக்கின் என் காவாக்கால் என்?' என்கின்றார்.

குடும்ப வன்முறை என்பது குடும்ப கட்டமைப்பிற்குட்பட்ட ஒரு விடயமாக

பலராலும் கருதப்பட்டது. இதன் காரணமாக குடும்ப வன்முறையால் பெரிதும் பாதிக்கப்படுபவர்களான பெண்களிற் பலர் குடும்ப வன்முறை எந்தளவு கொடுமையானதாக இருந்தாலும் அதனை ஏற்றுக் கொண்டு வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களில் சிலர் வாழ்வதிலும் பார்க்க சாவதே மேலென தற்கொலை மூலம் தம் வாழ்வை பரிதாபகரமாக முடித்துக் கொண்ட சம்பவங்களும் உண்டு. இப் பரிதாபகரமான நிலையிலிருந்து பாதிக்கப்படுபவர்களைப் பாதுகாக்க, குடியியல் மற்றும் குற்றவியல் சட்ட கட்டமைப்பின் சில அம்சங்களைப் பயன்படுத்தக் கூடியதாக இருந்த போதிலும், இலகுவானதும் பயனுள்ளதும் விசேட மானதுமான சட்டக் கட்டமைப்பொன்றை வழங்குவதற்காக தனியான சட்டமொன்றை ஆக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவ் வகையில் ஆக்கப்பட்டதே 2005ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டமாகும்.

குடும்ப வன்முறையென்பது வெறுமனே குடும்பமென்ற வரையறையினுள் குடும்ப அங்கத்தவர்களை மட்டும் பாதிக்கும் ஒரு விடயமல்ல. சமுதாயத்தின் அடிப்படை அலகுகளான குடும்பங்கள் வன்முறை நிறைந்தவைகளாக உள்ள போது, அவை வன்முறை நிறைந்த சமுதாயத்தைத் தோற்றுவிக்கின்றன. எனவே, குடும்ப வன்முறையை இல்லாதொழிப்பது குடும்ப நலனுக்காக மட்டுமன்றி சமுதாய நலனுக்கும் அவசியமானதாகின்றது.

**குடும்ப வன்முறை**

குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தின் நீள் தலைப்பானது, எவையேனும் குடும்ப வன்முறைச் செயல்களைத் தடுப்பதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட விடயங்களுக்குமானதொரு சட்டம் என்கின்றது. இச் சட்டத்தின் நோக்கங்க ளுக்காக ‘குடும்ப வன்முறை’ என்பது, வீட்டுச் சூழலினுள் அல்லது வெளியே புரியப்பட்டதும், பாதிக்கப்பட்டவருக்கும் சம்பந்தப்பட்டவருக்குமிடையேயான (பாதிக்கப்பட்டவர் தொடர்பாக குறித்த உறவு முறையிலுள்ளவர்) தனிப்பட்ட உறவு முறையிலிருந்து எழுந்ததுமான குற்றத் தவறு அல்லது உணர்வு ரீதியான துஷ்பிரயோகம் ஆகும்![1] குடும்ப வன்முறை சம்பந்தப்பட்ட குற்றத் தவறுகள் என்பது, தண்டனைச் சட்டக் கோவையிலுள்ள கொலை, தற்கொலை புரியத் தூண்டுதல், குறைப் பிரசவத்தை ஏற்படுத்துதல், பிள்ளைகளை கொடுமைப்படுத்துதல், பாரதூரமான காயத்தை விளைவித்தல், முறையின்றி தடுத்து வைத்தல், பலாத்காரம் பிரயோகித்தல், தாக்குதல், பாலியல் தொந்தரவு, ஆட்கடத்தல், பாலியல் வல்லுறவு, தடுக்கப்பட்ட உறவுமுறையில் உறவு கொள்ளுதல், பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்,[2] அச்சுறுத்தி அபகரித்தல், குற்றமுறையான அச்சுறுத்தல் மற்றும் இக் குற்றத் தவறுகளைப் புரிவதற்கான முயற்சிகள் போன்றவைகளை உள்ள டக்குகின்றது.[3] உணர்வு ரீதியான துஷ்பிரயோகம் என்பது, பாதிக்கப் பட்டவருக்கு எதிராகப் புரியப்பட்ட கொடூரமான, மனிதாபிமானமற்ற, கீழ்த்தரமான அல்லது இழிவுபடுத்தும் பாரதூரமானதொரு நடத்தையாகும்.[4]

இச் சட்டத்தின் கீழான பாதுகாப்புக் கட்டளையானது சம்பந்தப்பட்டவருக்கு (பிரதிவாதி) எதிராகவே பெறப்படலாம். சம்பந்தப்பட்டவர் என்பது, பாதிக்கப்பட்டவரின் வாழ்க்கைத் துணை, முன்னைய வாழ்க்கைத் துணை, கூடிவாழும்துணை ஆகியோரையும்,

1 பிரிவு 23
2 தண்டனைச் சட்டக் கோவையின் அத்தியாயம் XVI இலுள்ள எல்லா குற்றத் தவறுகளும் அடங்குகின்றன.
3 அட்டவணை 1
4 பிரிவு 23

மற்றும் பாதிக்கப்பட்டவர் அல்லது அவரின் வாழ்க்கைத் துணை, முன்னைய வாழ்க்கைத் துணை அல்லது பாதிக்கப்பட்டவருடன் கூடி வாழும் துணை ஆகியோரின் தந்தை, தாய், பாட்டன், பாட்டி, மகன், மகள், பேரன், பேத்தி, ஒன்று விட்ட சகோதரன், ஒன்று விட்ட சகோதரி போன்ற உறவுமுறையில் உள்ளடக்குகின்றது.(5) இச் சட்டத்தின் கீழான பாதுகாப்பைப் பொதுவாகப் பெண்கள் பெறுவதாக இருந்தாலும், இச் சட்டத்திலுள்ள 'பாதிக்கப்படுபவர்' மற்றும் 'பிரதிவாதி' ஆகிய சொற்பதங்கள் தனியொரு பால்நிலை சார்ந்ததாக இல்லாது பால் நிலை சமத்துவம் கொண்டதாக பெண்களுக்கும் ஆண்களுக்கும் பொருந்துவதாக உள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

**விண்ணப்பஞ் செய்தல்**

குடும்ப வன்முறைச் செயலால் பாதிக்கப்பட்டவர் அல்லது பாதிக்கப்படுகின்றவர் அல்லது பாதிக்கப்படும் சாத்தியமுள்ளவர், அக் குடும்ப வன்முறையைத் தடுப்பதற்கான பாதுகாப்புக் கட்டளைக்காக நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.(6) இவ் விண்ணப்பமானது பாதிக்கப்பட்டவரால் அல்லது பாதிக்கப்பட்டவர் சார்பாக பொலிசு அலுவலரால் செய்யப்படலாம்.(7) பாதிக்கப்பட்டவர் சிறுவராகவிருந்தால் அச் சிறுவர் சார்பாக அவரது பெற்றோர், பாதுகாவலர், அச் சிறுவர் எவருடன் வசிக்கின்றாரோ அவர் அல்லது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை இவ் விண்ணப்பத்தைச் செய்யலாம்.(8) இச் சட்டத்தின் நோக்கத்திற்காக, சிறுவர் என்பது 18 வயதிற்குக் கீழ்ப்பட்டவராகும்.(9) இவ் விண்ணப்பமானது, பாதிக்கப்பட்டவர் அல்லது சம்பந்தப்பட்டவர் (பாதிக்கப்பட்டவர் தொடர்பாக குறித்த உறவு முறையிலுள்ள பிரதிவாதி) வசிக்கின்ற அல்லது குடும்ப வன்முறை புரியப்பட்ட அல்லது புரியப்படக்கூடிய இடத்திற்கான நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்தில் செய்யப்படலாம்.[10] நீதிமன்றத்துக்குச் செய்யப்படும் விண்ணப்பமானது பாதிக்கப்பட்டவரின் பெயர், முகவரி மற்றும் பிரதிவாதியின் பெயர், முகவரி என்பவைகளைக் கொண்டிருப்பதுடன் வழக்கின் சூழ்நிலைகளையும் விபரித்தல் வேண்டும்.[11] விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட செயல்களை ஆதாரப்படுத்துவதற்கான சத்தியக் கடதாசிகளையும் இணைக்கலாம். இச் சட்டத்தின் கீழ் இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளை, குறைநிரப்புக் கட்டளை ஆகிய மூன்று வகையான கட்டளைகளை நீதிமன்றம் ஆக்கலாம்.

**இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளை**

இவ்வாறான விண்ணப்பம் செய்யப்பட்டதும் உடனடியாக நீதிமன்றம் அவ் விண்ணப்பத்தைப் பரிசீலித்தல் வேண்டும்.[12] நீதிமன்றம் விண்ணப்பத்தைப் பரிசீலித்த பின்னர் குடும்ப வன்முறையைத் தடுப்பதற்கான அவசியத் தேவை மற்றும் பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அவசியம் என்பவைகளைக் கருத்திற் கொண்டு, அவசியமாயின் அவ் விண்ணப்பத்தை விசாரிக்கும் வரையில் செயற்படுவதான இடைக்கால பாதுகாப்புக் கட்டளையை ஆக்குவதுடன், அவ் விண்ணப்பத் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குப் பிந்தாத ஒரு தேதியில் அவ் விண்ணப்பம் தொடர்பான விசாரணையை நடாத்த கட்டளையிடுதல் வேண்டும்.[13] இடைக்கால பாதுகாப்புக் கட்டளையை ஆக்குவது அவசியமில்லையாயின், அவ்

---

5 மேலுள்ளது.
6 பிரிவு 2(1)
7 பிரிவு 2(2)
8 மேலுள்ளது.
9 பிரிவு 23
10 பிரிவு 2(3)
11 அட்டவணை II
12 பிரிவு 3
13 பிரிவுகள் 4(1), 4(2)

விண்ணப்பத் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குப் பிந்தாத ஒரு தேதியில் அவ் விண்ணப்பம் தொடர்பான விசாரணையை நடாத்த கட்டளையிடுதல் வேண்டும்.[14] இவ்வாறான கட்டளையொன்றை ஆக்கிய பின்னர், பிரதிவாதிக்கெதிராக பாதுகாப்புக் கட்டளையொன்றை ஆக்குவது பற்றிய அவரது கருத்தை குறிப்பிட்ட தேதியன்று தெரிவிக்குமாறு அறிவித்தல் வழங்குதல் வேண்டும்.[15]

இடைக்கால கட்டளையானது, பாதுகாப்புக் கட்டளை பற்றிய விடயம் நீதிமன்றத்தின் முன்னாலிருக்கையில் குடும்ப வன்முறையைப் புரிவதிலிருந்து பிரதி வாதியைத் தடை செய்வதுடன், வேறு பொருத்தமான தடை அல்லது நிபந்தனையையும் கொண்டிருக்கும்.[16] இடைக்கால கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து நீதிமன்றமானது திறத்தவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு அத் திறத்தவர்களுக்கு உளவள ஆலோசனையளிக்குமாறு சமூகப் பணியாளரொருவருக்கு அல்லது குடும்ப ஆலோசகரொருவருக்கு கட்டளையிடு வதுடன், திறத்தவர்களை அந்த உளவள ஆலோசனைகளுக்கு சமுகமளிக்குமாறும் கட்டளையிடலாம். பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்புக்கு அவசியமெனக் கருதினால், அக் கட்டளை அனுசரிக்கப்படுவதை கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சமூகப் பணியாளரொருவருக்கு குடும்ப ஆலோசகரொருவருக்கு, நன்னடத்தை அலுவலரொருவருக்கு, குடும்ப சுகாதார பணியாளரொருவருக்கு அல்லது சிறுவர் உரிமைகள் மேம்படுத்தல் அலுவலரொருவருக்கு நீதிமன்றம் கட்டளையிடலாம்.[17] இடைக்கால கட்டளையானது, நீதிமன்றத்தினால் இல்லாதாக்கப்படும் வரை தொடர்ந்து நடைமுறையிலிருக்கும்.[18]

**பாதுகாப்புக் கட்டளை**

நீதிமன்றமானது, பாதுகாப்புக் கட்டளை கோரும் விண்ணப்பம் தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட தேதியன்று விசாரணைகளைச் செய்த பின்னர் பாதுகாப்பு கட்டளை வழங்குவது அவசியமெனத் திருப்திப்படுமிடத்து பாதுகாப்பு கட்டளையை வழங்குதல் வேண்டும்.[19] பாதுகாப்புக் கட்டளை வழங்குவதற்கான விண்ணப்பம் தொடர்பான விசாரணையின் போதான எண்பிப்புத் தராதரமாக நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்துதல் என்பதே உள்ளது. இவ் விண்ணப்பம் தொடர்பான நீதிமன்ற விசாரணையின் போது பிரதிவாதி குடும்ப வன்முறை என்ற குற்றத் தவறைப் புரிந்துள்ளாரா? என்ற வினா எழாததால் குற்றவியல் வழக்குகள் போன்று நியாயமான சந்தேகத்திற்கப்பால் எண்பிக்க வேண்டிய அவசியம் எழுவதில்லை. நீதிமன்றமானது, பாதுகாப்புக் கட்டளை ஒன்றை ஆக்குதல் வேண்டுமா? அல்லது இல்லையா? என்பதைத் தீர்மானிக்கையில் குடும்ப வன்முறையைத் தடுப்பதற்கான தேவை மற்றும் பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான தேவை ஆகியவைகளைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.[20.]

பாதுகாப்புக் கட்டளையொன்று குடும்ப வன்முறையைப் புரிவதிலிருந்து பிரதிவாதியைத் தடை செய்வதுடன் அதற்கு மேலதிகமான அவசியமான தடைகள் மற்றும் கட்டளைகளைக் கொண்டி ருக்கலாம்[21] பாதுகாப்புக் கட்டளையொன்று அதில் குறித்துரைக்கப்பட்டவாறான 12 மாதங்களை விஞ்சாத காலப்பகுதி யொன்றுக்கு வலுவிலிருக்கும்.[22]

---

14 பிரிவு 4(1)
15 பிரிவு 4(3)
16 பிரிவு 5(1)
17 பிரிவு 5(2)
18 பிரிவு 5(3)
19 பிரிவுகள் 6, 7
20 பிரிவு 8
21 பிரிவு 10(1)
22 பிரிவு 10 (2)

நீதிமன்றத்தால் ஆக்கப்படும் இடைக்கால கட்டளையொன்று அல்லது பாதுகாப்புக் கட்டளையொன்று, பாதிக்கப்பட்டவரும் பிரதிவாதியும் வசித்த வதிவிடத்தினுள் அல்லது அதன் ஏதேனும் பகுதியினுள் பிரவேசிப்பது, பாதிக்கப் பட்டவரின் வதிவிடம், தொழில், இடம், பாடசாலை என்பவைகளினுள் பிரவேசிப்பது, பாதிக்கப்பட்டவர் தற்காலிகமாக தங்கியிருக்கும் தங்குமனையினுள் பிரவேசிப்பது, பாதிக்கப்பட்டவரின் பிள்ளையுடன் தொடர்பு வைப்பது, சேர்ந்தனுபவித்த வளங்களைப் பாதிக்கப்பட்டவர் பயன்படுத்துவதைத் தடைசெய்வது, பாதிக்கப்பட்டவருடன் எதேனும் தொடர்பு வைப்பது, பாதிக்கப்பட்டவருக்கு உதவுகின்றவருக்கு எதிராக வன்முறையைப் புரிவது, பாதிக்கப்பட்டவரைப் பின்தொடர்ந்து அவருக்கு தொல்லையை ஏற்படுத்துவது, பாதிக்கப்பட்டவருடைய பாதுகாப்புக்கு, உடல் நலத்திற்கு அல்லது சேமநலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய ஏதேனும் செயலைச் செய்வது, பாதிக்கப்பட்டவரை நிர்க்கதியாக்குவதற்காக திருமண இல்லத்தை விற்பது அல்லது கைமாற்றுவது போன்றவைகளிலிருந்து பிரதிவாதியைத் தடை செய்யலாம்.[23] இவ்வாறான தடைகளை விதிக்கும் போது நீதிமன்றம் பாதிக்கப்பட்டவரின் அல்லது பிள்ளைகளின் வதிவிட தேவை மற்றும் அந்த கட்டளையை ஆக்குவதால் பிரதிவாதிக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு ஏற்படக் கூடிய ஏதேனும் சிரமம் என்பவைகளைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.[24]

**குறைநிரப்புக் கட்டளை**

பாதுகாப்புக் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்புக்கு, உடல் நலத்திற்கு அல்லது சேமநலத்திற்கு நியாயமாக அவசியமெனக் கருதினால் நீதிமன்றமானது, பிரதிவாதியின் உடைமையிலுள்ள ஆயுதங்களைக் கைப்பற்றுமாறு பொலிசாருக்கு கட்டளையிடுவது, பாதிக்கப்பட்டவரின் ஆதனங்களை எடுத்துவர உதவுமாறு பொலிசாருக்கு கட்டளையிடுவது, பிரதிவாதியும் பாதிக்கப்பட்டவரும் கட்டாய உளவள ஆலோசனைகளுக்கு அல்லது புனர்வாழ்வு கிசிச்சைக்குச் செல்வதற்குக் கட்டளையிடுவது, பாதிக்கப்பட்டவர் வேண்டினால் புகலிடமொன்றை அல்லது தற்காலிக தங்கிடமொன்றை அளிப்பதுடன் அது பற்றிய தகவல்களை இரகசியமாக வைத்துக் கொள்வது பற்றி கட்டளையிடுவது, பாதுகாப்பு கட்டளை அனுசரிக்கப்படுவதை கண்காணித்து மூன்று மாதங்களுக்கொரு தடவை நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சமூகப் பணியாளரொருவருக்கு, குடும்ப ஆலோசகரொருவருக்கு, நன்னடத்தை அலுவலரொருவருக்கு, குடும்ப சுகாதார பணியாளரொருவருக்கு கட்டளையிடுவது, பிரதிவாதி ஆதரவளிக்கக் கடப்பாடுள்ளவருக்கு அவசர நிதியுதவியை அளிக்குமாறு பிரதிவாதிக்குக் கட்டளையிடுவது, கட்டளை நடைமுறையிலிருக்கும் காலத்தின் போது பாதிக்கப்பட்டவர் வசிக்கும் வதிவிடத்தில் அவர் தொடர்ந்து வசிப்பதை இயலச் செய்வதற்கு அவசியமான அத்தகைய கொடுப்பனவுகளை அல்லது வசதிகளைச் செய்யுமாறு பிரதிவாதிக்குக் கட்டளையிடுவது போன்ற குறை நிரப்புக் கட்டளைகளையும் ஆக்கலாம்.[25] இச் சட்டத்தின் கீழ் இவ்வாறான ஒரு கட்டளையை ஆக்குவது 1999ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க பராமரிப்புச் சட்டத்தின் கீழான உரிமைகளைப் பாதிக்காது.[26]

---

23 பிரிவு11(1)
24 பிரிவு 11(2)
25 பிரிவு 12(1)
26 பிரிவு 12(2)

**கட்டளைக்கான மாற்றங்களும் கட்டளையை மீளப்பெறலும்**

பாதிக்கப்பட்டவரால் அல்லது பிரதிவாதியினால் பாதுகாப்புக் கட்டளையை மாற்ற, நீடிக்க அல்லது மீளப்பெற விண்ணப்பஞ் செய்யப்பட்டுள்ளதுடன் அத்தகைய சூழ்நிலை மாற்றங்களுள்ளனவென நீதிமன்றம் திருப்தியடைந்தால் அக் கட்டளையானது மாற்றப்படலாம், நீடிக்கப்படலாம் அல்லது மீளப்பெறப்படலாம்.[27] நீதிவானால் ஆக்கப்பட்ட பாதுகாப்புக் கட்டளையில் அதிருப்தியடைந்தவர் மேல் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.[28]

**குற்றப்பொறுப்பு**

இச் சட்டமானது, பிரதிவாதி மீது குற்றப் பொறுப்பைச் சுமத்தும் ஏற்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், பிரதிவாதிக்கெதிராக ஆக்கப்பட்ட இடைக்கால கட்டளைக்கு அல்லது பாதுகாப்புக் கட்டளைக்கு இணங்கியொழுக அவர் தவறுகின்ற போது மட்டுமே இச் சட்டத்தின் கீழ் குற்றப் பொறுப்பு ஏற்படுகின்றது. கட்டளைக்கு இணங்கியொழுக தவறியமைக்காக நீதிவானால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவருக்கு பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத தண்டப் பணம் அல்லது ஓராண்டை விஞ்சாத மறியற்றண்டனை அல்லது இவையிரண்டும் விதிக்கப்படும்.[29] இச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பைப் பெறுகின்ற பாதிக்கப்பட்டவர் இதற்கு வேறாக குடியியல் வழக்கொன்றை அல்லது குற்றவியல் வழக்கொன்றைத் தொடுக்க முடியும்.[30]

**அசராங்க சார்பற்ற தாபனங்களின் பங்களிப்பு**

இச் சட்டத்தின் நோக்கத்தை எய்துவதற்கு அரசாங்க சார்பற்ற தாபனங்களும் பங்களிப்பைச் செய்ய முடியும். பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் அரசாங்க சார்பற்ற தாபனங்கள் நீதிமன்றத்தில் விண்ணப்பஞ் செய்யமுடியாத போதிலும், இச் சட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்கின்றவர்களுக்கு அவசியமான ஆலோசனைகளையும் ஆதரவையும் வழங்குவதன் மூலமும், இச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் பங்களிப்பை வழங்குவதன் மூலமும், இச் சட்டம் பற்றிய விழிப்புணர்வை சமுதாயத்தில் ஏற்படுத்துவதன் மூலமும், அரசாங்க சார்பற்ற தாபனங்கள் தங்களது பங்களிப்பை வழங்க முடியும்.

**முடிவுரை**

இச் சட்டமானது குடும்ப கட்டுக்கோப்பைப் பாதிக்குமா? எமது பாரம்பரியத்திற்கு, கலாச்சாரத்திற்கு அல்லது வாழ்க்கை விழுமியங்களுக்குப் பொருத்தமானதா? எமது குடும்பப் பெண்கள் எல்லோரும் இச் சட்டத்தை ஏற்றுக் கொள்வார்களா? எந்தளவுக்கு இச் சட்டம் நடைமுறைச் சாத்தியமானது? போன்ற பல்வேறு வினாக்கள் அல்லது விமர்சனங்கள் எழலாம். ஆனால் தரவுகளின் படி பாதுகாப்புக் கட்டளை கோரி அதிக எண்ணிக்கையான விண்ணபங்கள் இச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ளன. இச் சட்டமானது, குடும்ப வன்முறையால் பாதிக்கப்படுபவர்கள் எல்லோரும் எல்லா சந்தர்ப்பங்களிலும் இச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புக் கட்டளையைக் கோர வேண்டுமென்ற கட்டாயத் தேவை ஒன்றை சுமத்தவில்லை. கொடுமை விளைவிக்கின்றவர் மீது குற்றத் தவறெதனையும் சுமத்தவில்லை என்பதுடன் அவர் திருந்தினால் மீள சேர்த்து மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கான சந்தர்ப்பத்தையும் மறுக்கவில்லை. எனவே, இச் சட்டமானது குடும்ப வன்முறையால் பாதிக்கப்படுபவர்கள் அவசியமெனக் கருதினால் மட்டும் அவர்களுடைய விருப்பத் தேர்வில் பயன்படுத்தக் கூடிய பயனுள்ளதொரு சட்டமாக உள்ளதெனலாம்.

---

27 பிரிவு 14
28 பிரிவு 17
29 பிரிவு 18
30 பிரிவு 21

# காலக்கிரமத்தில் உண்டியலொன்றை வைத்திருப்பவன் காலத்தை வென்றவனா?

**(நாணயமாற்றுண்டியல் சட்டத்தின் பிரகாரம் சிறப்புரிமை பெற்றோன் பற்றியதோர் சிறிய ஆய்வு)**

~ சாந்தி செஜராஜசிங்கம் ~
சிரேஷ்ட விரிவுரையாளர்

இலங்கையில் தற்பொழுது நடைமுறையிலுள்ள நாணயமாற்றுண்டியல் கட்டளைச் சட்டம் (Bills of Exchange Ordinance இக் கட்டுரையில் நா.உ.க.சட்டம் எனக் குறிப்பிடப்படும்) 1927ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆங்கிலேய பாராளுமன்றத்தினால் அக்காலத்தில் இங்கிலாந்தில் காணப்பட்ட 1882ம் ஆண்டின் Bills of Exchange Act இனை முழுமையாகத் தழுவியதாக எமது சட்டம் அமைந்துள்ளது. ஆக மொத்தத்தில் எமது சட்டம் ஏறக்குறைய ஒன்றேகால் நூற்றாண்டிற்கு முந்திய சட்ட நிலைமையை இன்னும் பிரதிபலிப்பதாகவே உள்ளது. எந்தவித மாற்றத்திற்கும் உட்படாத ஒரு சில சட்டங்களில் இதுவும் ஒன்றாக Old is gold எனும் முதுமொழிக்கு அர்த்தம் கொடுப்பது போல் காணப்படுகிறது. இதன் விளைவாக தற்கால நடைமுறைக் கொவ்வாததும், எக்காலத்திலுமே நீதி மன்றங்களால் வியாக்கியானம் செய்யப்படாத பல பிரிவுகளை இச் சட்டம் கொண்டுள்ளது.

இருப்பினும் இச் சட்டத்தில் அடிக்கடி வலியுறுத்தப்படுவதான தொடர்மொழி உண்டென்றால் அது 'காலக்கிரமத்தில் வைத்திருப்பவன்' (holder in due course) என்பதாகும்.

நா.உ.க.சட்டத்தின் 29ம் பிரிவு காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனை வரைவிலக்கணப் படுத்தியுள்ளது என்பதைவிட அத்தகையவன் கொண்டிருக்க வேண்டிய தகுதிகளை கூறுகின்றதெனவும் சொல்லலாம். இத்தகைய காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவன் இச் சட்டத்தின் மையப்புள்ளியோ எனக் கருதுமளவிற்கு சிறப்புரிமைகள் கொண்டவனாக அல்லது வரப்பிரசாதம் பெற்றவனாகக் காணப் படுகின்றான் என்றால் அது மிகையாகாது.

காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனின் தகுதிகளை முதலில் விளக்கி, சட்டவாசகங்களால் அவன் எவ்வாறு மேலோங்கி நிற்கிறான் என்பதைப் பின்னர் கூறி, கடைசியாக தற்கால நடைமுறையில், முக்கியமாக இலத்திரனியல் வளர்ச்சியை தம்மகத்தே எடுத்துள்ள வங்கி நடவடிக்கைகளுக்கு மத்தியிலே நா.உ.க.சட்டம் எந்தளவு ஏற்புடையதான வாசகங்களை காலக் கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவன் சம்பந்தமாகக் கொண்டுள்ளது. என்பது பற்றிய எனது கருத்துக்களையும் முன்வைப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

நா.உ.க.சட்டத்தின் 29ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்பவனே காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனாவான். அதன்படி **முதலாவதாக பிரிவு 29(1)** இன்

படி, அதே பிரிவிலுள்ள உபபிரிவுகள் (a), (b)ஆகியவற்றின் நிபந்தனைகளுக்கமைவாக முகத்தோற்றத்தில் பூரணமானதும் முறையாக வரையப்பட்டதுமான உண்டியலை வைத்திருப்பவன் (Who has taken the bill complete and regular on the face of it) காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனாவான்.[1] அதன்படி உண்டியலொன்று முறையானதாக இருக்க வேண்டுமாயின் அது சட்டத்தின் பிரிவு 3(1)க்கமைய வேண்டும். அதாவது ஒருவரால் (drawer) இன்னொருவருக்கு (drawee) எழுதப்பட்டதான, வழங்குபவரால் (அ+ து எழுதப்பட்டவரான drawer ஆல்) கையொப்பமிடப்பட்டதான, விலாசமிடப் பட்டவருக்கு (Payee) கேட்கும் போது (on demand) அல்லது குறிப்பிட்ட திகதியில் குறிப்பிடப்பட்ட தொகைப் பணத்தைச் செலுத்த வேண்டுமென்பதற்கான நிபந்தனையற்ற கட்டளையொன்று காணப்படுமாயின் அது முறையான நாணய மாற்றுண்டியலொன்றாகும். பூரணமானதான உண்டியல் எனும் தேவைப்பாடு மேற்கூறியவற்றை மேலும் வலியுறுத்துவதாக உள்ளது. ஏனெனில் சட்டத்தின் 20ம் பிரிவு பூரணப்படுத்தப்படாத காகிதங்கள் வலிதான உண்டியலொன்றாக மாற்றப்டலாமெனக் கூறும் அதே வேளையில் அவ்விதமாக பூரணப்படுத்தி வலிதான உண்டியலாக மாற்றுபவன் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டே அவ்விதம் செய்யலாமெனவும் கூறுகிறது. ஆகவே அதிகாரமின்றி ஆவணமொன்று பூரணப்படுத்தப்படுகின்றபோது அது வலிதான உண்டியலாகாது. உதாரணமாக திகதியிடப்படாத அல்லது பெறுமதி எழுதப்படாத உண்டியலொன்று அவற்றை பூரணப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு உட்பட்டு திகதியையோ, தொகையையோ எழுதலாம்.

**இரண்டாவதாக பிரிவு 29(1)(a)**யின் படி கா.வைத்திருப்போன் உண்டியலானது காலவதியாவதற்கு முன்னர் அதனைப் பெற்றிருக்க வேண்டும். (became holder before it was overdue) என்பதுடன் உண்டியலுக்கு ஏற்கனவே மதிப்பளிக்க மறுக்கப்பட்டுள்ளது. (dishonoured) என்பதுபற்றிய அறிவின்றி உண்டியலைப் பெற்றிருக்க வேண்டும். காலவதியாதல் என்பது பிரிவு 36(3) இல் விளக்கப்படும்போது, கேட்கும் போது பணம் கொடுக்கற்பாலதான உண்டியல் நியாயமற்ற காலத்திற்குப் புழக்கத்தில் இருக்குமாயின் அது காலாவதியானதாக கருதப்படும் நியாயமற்ற காலம் எதுவென்பது நிகழ்வு பற்றிய வினாவாகையால் அது அவ்வவ் சந்தர்ப்பங்களுக்கமையவே தீர்மானிக்கப்பட வேண்டும். ஆயினும் நியாயமற்ற காலம் (unresonable length of time) என்பது கவணிக்கப்பட வேண்டும். தற்கால வங்கி நடைமுறைகளின் கீழ் 6 மாதங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட காசோலை அல்லது உண்டியல் Stale அல்லது பழையது என்ற அடிப்படையில் பணஞ் செலுத்தப்படாது. இத்தேவை ப்பாட்டின் அடுத்த பகுதியான மதிப்பளிக்க மறுக்கப்பட்டமை பற்றிய அறிவின்றி எடுத்தல் என்பதும் சர்ச்சைக்குரியது. உண்டி யலொன்று பணம் செலுத்தப்படுவதற்கெனச் சமர்ப்பிக்கப்பட்டு அதற்குக் கொடுப்பனது மறுக்கப்படு கின்றபோது அது மதிப்பளிக்க மறுக்கப்பட்ட உண்டியலாகும். நா.உ.க.சட்டம் உருவாக்கப்பட்ட காலத்தில் பணஞ் செலுத்த மறுக்கின்றபோது அது பற்றி வாய்மொழியாக அல்லது குறிப்பிட்ட உண்டியல் தவிர்ந்த வேறொரு காகிதத்தின் மூலம் அது பற்றி அறிவித்திருக்கலாம். ஆனால் தற்போதைய வழக்கத்தின்படி உண்டியலின் முகத்தில் மதிப்பளிக்க மறுக்கப்பட்டமை பற்றிய குறிப்பு காணப்படுவதனால் அது பற்றிதான் அறியவில்லையென ஒரு திறத்தவர் கூறுவது எவ்விதம் சாத்தியமாகும்? மதிப்பளிக்க மறுக்கப்பட்டமை பற்றிய அறிவுடன் பெற்றவன் காலக் கிரமத்தில் வைத்திருப்பவனாகக் கருதப்படமாட்டாதென Horn by V.Mclaren[2] வழக்கு கூறுகிறது.

**மூன்றாவதாக பிரிவு 29(1)(b)** இன்படி நல்ல நோக்கத்துடன் பணப்பெறுமதிக்காக உண்டியல் உரித்துக் குறைபாடுள்ளது (defect in title) என்பது பற்றி அறியாது அதைப் பெற்றவனே காலக்கிரமத்தில்

உண்டியல் வைத்திருப்பவனாகலாம். நல்ல நோக்கம் என்பது நா.உ.க.சட்டத்தின் கீழ் எவ் வேறான கருத்தையும் கொண்டிருக் கவில்லை. சாதாரணமாக எதிர்பார்க்கப்படும் bona fide test என்பதுவேயாகும். பிரதிபலன் என்பது 27ம் பிரிவின் பிரகாரம் ஆங்கிலச் சட்டத்தின் கீழ் சாதாரண ஒப்பந்தமொன்றைச் செய்வதற்குத் தேவையான பிரதிபலன் எனக் கூறப்பட்டுள்ளது. ஆகவே உரோம டச்சுச் சட்டத்தின் கீழான Justa causa என்பதனை நீக்கியதோடு, உண்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையையே பிரதிபலன் கருதுகிறதெனலாம். பிரதிபலன் பற்றி ஆங்கில நீதிமன்றங்கள் ஆராய்ந்த வழக்குகளுள் முக்கியமானவையாக Oliver V.Davis(3) Diamond V.Graham(4) ஆகியவற்றைக் கொள்ளலாம். காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவன் உண்டியலைப் பெறும் போது பிரதிபலன் கொடுத்திருக்க வேண்டுமென Nalliah V.Pure Beverages Co-Ltd (5) வழக்கில் தீர்க்கப்பட்டது.

இப் பிரிவின் தேவைப்பாடுகளுள் ஒன்றான உரித்துக் குறைபாடு பற்றிய அறிவின்றிப் பெறுதல் என்பதுவே காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனின் சிறப்புத்தன்மையை உச்ச நிலைக்குக் கொண்டு செல்கிறது. அதாவது பொதுச் சட்டத்தின் கீழ் Nemo dat quod non habet எனும் மூதுரையின் படி ஒருவர் தனக்கில்லாத தற்கிழமையை (title) இன்னொருவருக்கு மாற்ற முடியாது. இதன்படி ஒரு பொருள் அல்லது ஆதனம் மீது உரித்தில்லாதவன் இன்னொருவருக்கு அப்பொருள் அல்லது ஆதனம் மீது நல்ல உரித்தினைக் கொடுக்க முடியாது இப்பொது விதிக்கு விலக்காக காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவன் அமைந்துள்ளான். காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனின் தகுதிகளில் ஒன்றாக உரித்துக் குறைபாடுள்ளவனிடமிருந்து உண்டியலை, அது பற்றிய அறிவின்றிப் பெற்றிருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. நா.உ.க.சட்டத்தின் பிரிவு 29(2) உரித்துக் குறைபாடு பற்றி விளக்கும்போது உண்டியல் கைமாற்றப்பட்டபோது அதனை மோசடி, பயமுறுத்தல், பலாத்காரம், பயம், சட்டவிரோத காரணங்கள், சட்டவிரோத பிரதிபலன் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றின் மூலம் பெற்றிருத்தலாகும் என்கிறது.

மேற்கூறிய தேவைப்பாடுகள் அனைத்தையும் பூர்த்தி செய்து காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவன் எனும் அந்தஸ்தைப் பெற்றவனின் சிறப்புரிமைகளில் முதன்மையானது உரித்துக் குறைபாடுகளால் பாதிக்கப்படாது நல்ல உரித்தைப் பெறுதலாகும். பிரிவு 38(b) இன் படி காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவன் தனக்கு முன்னைய கட்சிக்காரரின் உரித்துக் குறைபாட்டினாலோ அல்லது அவர்களுக்குரித்தான தனிப்பட்ட எதிர்வாதங்களினாலோ பாதிக்கப்படமாட்டான். ஆகவே உண்டியலொன்றைத் திருடியவனொருவரிடமிருந்து, அவன் திருடியவனென்ற அறிவின்றி நல்லெண்ண த்துடன் பணப் பெறுமதிக்காக திருட்டுக்குட்பட்ட உண்டியலைப் பெற்றவன் காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனென்ற அடிப்படையில் நல்ல உரித்தினைப் பெறுகிறான். இங்கு சட்டம் கவலையீனமாக திருட்டுக் கொடுத்தவன் பற்றிச் சட்டை செய்யவேயில்லை.

மேலும் காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவன் தன் முன்னைய கட்சிக்காரர் எவர் மீதும் (either, drawer, drawee or indorse) தன் பெயரில் வழக்கிட முடியும். (பிரிவு 38 (a)) இதுவும் பொதுச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு விதிவிலக்காகும். ஒப்பந்தச் சட்டத்தின்படி ஒப்பந்தத்தின் கட்சிக்காரர்களுக்கே அவ் ஒப்பந்தத்தை வலியுறுத்தும் உரிமையோ, அது சம்பந்தமாக வழக்கிடும் உரிமையோ உண்டு. இதை Privity of contract எனலாம். அதன்படி உண்டியலின் கட்சிக்காரர்கள், அதை வரைந்தவர், பணஞ் செலுத்துபவர், பணம் பெறுவோர் ஆகியோராவர் (drawer, drawee and payee respectively) காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவன் என்பவன் பணம் பெறுபவனால் உண்டியல் கைமாற்றம் (ne-

gotiation) செய்யப்பட்டதானால் அதை வைத்திருப்பவனாக உள்ளானே ஒழிய அவன் உண்டியலின் ஆரம்பதிறத்தவன் அல்ல. இருப்பினும் நா.உ.க.சட்டம் இவ் அடிப்படைக் கோட்பாட்டிற்கு விதிவிலக்காக காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப் பவனுக்கு உண்டியலின் கொடுப்பனவை வலியுறுத்தவோ, பணப்பெறுமதிக்காக வழக்குத் தொடர்வதற்கோ ஆன உரிமையைக் கொடுக்கிறது.

மேலும் ஏற்கனவே கூறப்பட்ட பிரிவு 20இன்படி பூரணப்படுத்தப்படாத ஆவணமொன்று, அதாவது திகதியிடப்படாத அல்லது பெறுமதி இடப்படாத அல்லது வரைபவனால் கையொப்பமிடப்படாத ஆவணமொன்று அவற்றைப் பூரணப்படுத்து வதன் மூலம் வலிதான உண்டியலொன்றாக மாற்றப்படலாம். இச் சந்தர்ப்பத்தில் அவ்விதம் பூரணப்படுத்தியவனுக்கு அவ்விதம் செய்வதற்கு அதிகாரம் உள்ளதாக முதற்தோற்றமளவில் ஊகிக்கப்படும். ஆகவே அவ்விதம் அதிகாரம் இல்லையெனக் காட்டப்படுமாயின் உண்டியல் வலிதுட மையை இழக்கும். இருப்பினும் இப் பிரிவின் காப்பு வாசகத்தின்படி அவ்விதம் பின்னர் பூரணப்படுத்தப்பட்ட உண்டியலொன்று கைமாற்றப்பட்டு காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனின் கைகளுக்கு வரும்போது அது எல்லாத் தேவைகளைப் பொறுத்தளவிலும் வலிதான ஒன்றாகக் கருதப்படும் என்பதுடன் அவ்வுண்டியலானது நியாயமான காலத்தில் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கிணங்க நிரப்பப்பட்டதுபோல் காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப் பவனால் வலியுறுத்தப்படக் கூடியதுமாகக் கருதப்படும்.

இவைதவிர பிரிவு 21இன் பிரகாரம் உண்டியலொன்றின் கீழான ஒப்பந்தம், அவ்வுண்டியல் ஒப்படைக்கப்படும்வரை (delivery) பூரணமற்றதொன்றாக முறிக்கக் கூடியதொன்றாக கருதப்படுமென்பதுடன் ஒப்படைப்பு நிகழும் வரை உண்டியலானது வலிதுடமையையும் பெறமாட்டாது. உதாரணமாக, பூரணப்படுத்தப்பட்ட உண்டியலொன்றை ஒருவன் தன் வீட்டு மேசையில் வைத்திருப்பின், அது ஒப்படைக்கப்படாதவிடத்து அதன் மீது பெயரிடப்பட்ட பணம் பெறுவோன் பணப்பெறுமதியைக் கோர முடியாது. ஆயினும் உண்டியலொன்று காலக் கிரமத்தில் உண்டியல் வைத்திரு ப்பவனின் கைகளில் இருக்கும் போது, அவனுக்கு முன்னைய கட்சிக்காரர் ஒவ்வொருவராலும் அது வலிதான ஒப்படைப்பு செய்யப்பட்ட தென்பது முடிவான ஊகமாகும்.

மேலும் பணப் பெறுமதி பற்றிக் கூறும் 30(1)ம் பிரிவு உண்டியலில் கையொப்பமிட்ட ஒவ்வொரு திறத்தவரும் பெறுமதிக்காக அதன் திறத்தவராகின ரென்பது முதற்தோற்றமளவில் கருதப்படும். ஆகவே உண்டியலில் கையொப்பமிட்ட புறக்குறிப்போன் தான் பணப் பெறுமதிக்கு அதைப் பெற்றுக் கொண்டதாக நிரூபிக்கத் தேவையில்லை. பிரிவு 30(2) இன்னுமொரு படி முன்னேறி உண்டியலின் ஒவ்வொரு வைத்திருப்போனும் காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்போனாக முதற்தோற்றமளவில் கருதப்பட வேண்டுமென்கிறது. ஆனால் உண்டிய லானது மோசடி, பயமுறுத்தல், பலவந்தப்படுத்தல், பயம் அல்லது சட்டமுரணாக வழங்கப்பட்டது, ஏற்கப்பட்டது அல்லது பின்னர் கைமாற்றப்பட்டதென்று நிரூபிக்கப்படின் அத்தகைய நடவடிக் கைக்குப் பின்னர் நல்லெண்ணத்துடன் தன்னால் பெறுமதிக்காக உண்டியல் பெறப்பட்டதென்றும் நிகழ்வினை நிரூபிக்கும் கடப்பாடு காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனைச் சார்ந்ததாகும். இப்பிரிவு Ibrahim V.Annamma[6] வழக்கில் ஆராயப்பட்டு காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவன் சார்பான ஊகம் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டது.

மேலும் சட்டத்தின் 64ம் பிரிவின் படி உண்டியலில் திருத்தம் செய்யப்படுமிடத்து (alteration) அது உண்டியலுக்குப் பொறுப்பான திறத்தவரின் சம்மதமின்றிச் செய்யப்பட்ட முக்கிய திருத்தமொன்றாக இருக்குமிடத்து

அவ்வுண்டியலானது தவிர்க்கப்படலாம். இருப்பினும் இப்பிரிவின் காப்பு வாசகத்தின்படி காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனின் கைகளிலுள்ள உண்டியலொன்று முக்கிய திருத்தத்திற் குட்பட்டதாயிருப்பினும் அது தெளிவாகத் தெரியாவிடில், காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவன் அது திருத்தப்பட வேயில்லையெனும் அடிப்படையில் அதற்கான பணப்பெறுமதியை வலியுறுத்தலாம். இப்பிரிவு Sokalingam Chetty V. De Hoedit [6] வழக்கினால் மேலும் சிறப்பிக்கப்பட்டது.

மேற்கூறிய பிரிவுகளை ஆராய்கையில் காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனின் விசேட தன்மை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிகின்றது.

இப் பிரிவுகள் காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனின் சிறப்புரிமையைக் காட்டி நிற்கையில் நா.உ.க.சட்டத்தின் இரு பிரிவுகள் கூறும் விடயங்கள் நடக்குமிடத்து அதன் பின் காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனெனும் திறத்தவனொருவன் உருவாக மாட்டான். **முதலாவதாக,** மட்டுப்படுத்தப்பட்ட புறக்குறிப்பு (restrictive endorsement) என்பதன் விளைவுகளைக் கூறும் பிரிவு 35 (2) இத்தகைய புறக்குறிப்பு அதைப் பெறும் indorsee யைப் பொறுத்தளவில் அவன் அதற்கான பெறுமதியைப் பெறலாம் அல்லது தன் பெயரில் வழக்கிடலாமேயன்றி அவனுக்கு அவ்வுண்டியலைக் கைமாற்றும் உரிமையைக் கொடுக்காது. இதன்படி மட்டுப்படுத்த புறக்குறிப்பிடப்பட்ட உண்டியலொன்று கைமாற்றப்படின் அதன் பின்னர் அதைப் பெறுபவனெவனும் காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனென்ற அந்தஸ்தைப் பெறமாட்டான். இது Paternott V.Monimpex Hangarian Foreign Trading Co.[8] வழக்கில் வலியுறுத்தப்பட்டது.

**இரண்டாவதாக,** 'கைமாற்றப் படாதது' எனக் குறுக்குக்கோடிடப்பட்ட (not 'negotiable' crossing) காசோலை சட்டப்படி கைமாற்றத் தகுதன்மையை இழக்கின்றது. அத்தகைய காசோலையொன்று கைமாற்றப்படினும் அவ்விதம் மாற்றியவனைவிட (transferor) மேலான உரிமையை பெறுபவனுக்கு (transferee) பெற்றுத் தராதென பிரிவு 81 விதிக்கின்றது. இதன் விளைவாக இக்குறுக்குக்கோடிடப்பட்ட காசோலை கைமாற்றப்படின் அது காலக்கிரமத்தில்உண்டியல் வைத்திருப்பவன் ஒருவனை உருவாக்காது. இவ் 81ம் பிரிவு Nagoor Pitchai V.Kanapathipillai [9], Seyed Mohamed V.Ibrahim[10] ஆகிய வழக்குகளில் ஆராயப்பட்டு நல்ல உரித்தை தராதென்பது மேலும் வலியுறுத்தப்பட்டது.

இங்கு விபரிக்கப்பட்ட நாணய மாற்றுண்டியல் என்பது சட்டப்படி உரிமைகளைப் பெற்றுத்தரக் கூடிய ஆவணமொன்றாக உருவாக்கப்பட்டதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் கூறப்பட்டன. ஒன்று, பணத்தைக் கொண்டு செல்வதிலுள்ள ஆபத்தைத் தவிர்ப்பது; மற்றது பலர் சம்பந்தப்பட்ட பணப்பட்டுவாடாக்களை ஒரு சிறிய ஆவணம் பூர்த்தி செய்தல் என்பதாகும். ஆயினும் இக்காலத்திலே நாணயமாற்றுண்டியல் தன் முக்கியத்தையும் இழந்து, தான் உருவாக்கப்பட்டதற்கான காரணங்களிலிருந்தும் ஓரளவு விலகி, ஏற்றுமதி / இறக்குமதி துறையில் மட்டும் பாவிக்கப்படுகின்றதோர் ஆவணமாக மாறிவிட்டது. இந் நாணயமாற்றுண்டியல்கள் சாதாரணமாக கைமாற்றப்படுவதில்லை. இதனால் சாதாரண மக்களுக்கு 'நாணய மாற்றுண்டியல்' என்ற சொல்லே பரிச்சயமற்ற ஒன்றாக உள்ளது. தற்கால புழக்கத்திலுள்ள நாணமாற்றுண்டியல்கள் கைமாற்றப் படாததால் அவற்றில் காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவன் என்ற திறத்தவர் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பமும் எழுவதற்கு வாய்ப்பில்லை.

இருப்பினும் இவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக காசோலைகள் (Cheques) பெரிதும் முனைகின்றன. காசோலைகளும் ஒரு வகை நாணயமாற்றுண்டியலே. ஆனால் நாணய மாற்றுண்டியல்கள் எல்லாம்

காசோலைகளல்ல. காசோலைகள் கைமாற்றப்படுதல் தனிப்பட்ட நபர்களிடையேயான நடவடிக்கைகளின் போது காணப்படாத போதிலும் வர்த்தகர்களிடையே இது சகஜமான நடவடிக்கையாகக் காணப்படுகிறது. 3ம் கட்சிக் காசோலைகள் (3rd party cheque) புறக்கோட்டை மொத்த/சில்லறை வியாபாரிகளின் கொடுப்பனவு முறைகளில் முக்கிய இடம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இக்காசோலைகள் நா.உ.க.சட்டத்தின் வாசகங்கள் மற்றும் வங்கிச் சட்ட விதிகளுக்கும் உட்படல் வேண்டும். காசோலைகள் பணப் பெறுமதிக்காக வங்கியொன்றுக்கு சமர்ப்பிக்கப்படும்போது (realization) அவை மதிப்பளிக்கப்படும் போது (when it is honoured) அக் காசோலையிலுள்ள தொகை அதை சமர்ப்பித்த வாடிக்கையாளரின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் யாவரும் அறிந்ததே. மாறாக அதற்கு மதிப்பளிக்க வங்கி மறுக்கின்றபோது அது மத்திய வங்கி, பணஞ் சேர்க்கும் மற்றும் செலுத்தும் வங்கிகள் ஆகியவற்றிற்கு செலவையும் அதை சமர்ப்பித்தவனுக்கு நட்டத்தையும் ஏற்படுத்துகிறது. இவ்விதம் காசோலை மதிப்பளிக்கப்படாது திருப்பியனுப் பப்படுவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். அவற்றில் முக்கியமானது காசோலையை வரைந்தவனின் கணக்கில் பணமின்மை யாகும். இது தவிர பணக்கொடுப்பனவு வரைந்தவனால் நிறுத்தப்பட்டமை (Stop payment order), மோசடி கண்டு பிடிக்கப்படல், கையொப்பமிடப்படாமை, திகதியிடப்படாமை போன்ற காரணங்கள் காரணமாகவும் காசோலை திருப்பி யனுப்பப்படும். இக் காசோலைகளின் கொடுப்பனவு தற்போது National Cheque clearing house இனூடாக மத்திய வங்கியின் நேரடி மேற்பார்வையில் நடைபெறுகிறது. உலகளாவிய ரீதியில் இலத்திரனியல் இயந்திரங்கள், Credit card பாவனை அதிகரிப்பால் வெளிநாடுகளில் காசோலைகளின் பாவனை குறைந்து வரும்போது இலங்கையில் அது அதிகரித்து வருவது ஆச்சரியமானதே. 2006ம் ஆண்டிலே ஒரு வேலைநாளில் சராசரியாக 190,000 காசோலைகள் National cheque clearing house ஊடாக சமர்ப்பிக்கப்பட்டதாகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இது கடந்த வருடத்தைவிட 20% எண்ணிக்கையிலும் 24% பெறுமதியிலும் அதிகமாகும். ஆனால் துரதிஷ்டவசமாக இவற்றில் ஏறத்தாழ 1/3 பங்கு வங்கிகளினால் திருப்பியனுப் பப்படுகின்றன. இவ்விதம் திருப்பி யனுப்பப்படும் காசோலைகள் தற்கால நிலையிலே காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவன் ஒருவனுக்கு நா.உ.க. சட்டத்தின் கீழான அதே பாரம்பரிய உரிமைகளைப் பெற்றுத் தருமா என்பது கேள்விக்குறியே!.

2005ம் ஆண்டில் National Cheque clearing house அறிமுகப்படுத்தப் படுவதற்குமுன் காசோலைகள் வங்கிகளால் திருப்பியனுப்பப்படும் போது அவை மதிப்பளிக்க மறுக்கப் பட்டமைக்கான காரணம் காசோலையின் முகப்பில் எழுதப்பட்டு வங்கியின் திகதி முத்திரையுடன் வாடிக்கையாளருக்கு திருப்பியனுப்பப்படும். உதாரணமாக கணக்கில் பணமில்லாத போது 'refer to drawer' எனக் குறிப்பிடப்படுவது வழக்கம். தற்போது, முழுமையாகக் கணனி மயப்படுத்தப்பட்ட Imaging and Transactions System என்பதன் கீழ் காசோலைகள் திருப்பியனுப்பப்படாது, அதற்குப் பதிலாக cheque return notification அனுப்பப்படுகிறது. பெருந்தொகையான காசோலைகள் தினமும் திருப்பியனுப்பப் படுவதனால் இவை அச்சிடும் செலவு மத்திய வங்கிக்கு பெரும் செலவாக இருக்கிறது. Payments and settlement Act No.28 of 2005 இன் பிரிவு 34(2) இன்படி இந்த அறிவிப்பு அதில் குறிப்பிடப்பட்ட காசோலை சம்பந்தமானதெனக் கருதப்பட வேண்டும். இதே சட்டத்தின் பிரிவு 35(2) இன் படி அறிவித்தலிலுள்ள காசோலை தொலையும் பட்சத்தில் வாடிக்கையாளருக்கு ஏற்படும் நட்டத்தை வங்கி ஈடு செய்ய வேண்டும்.

மேலும் Debt Recoveries (special Provisions) Act No. 2 of 1990 இன் பிரிவு 25(1) படி கணக்கில் பணமில்லையென்ற அறிவுடன் காசோலை வரைபவர் குற்றப்பொறுப்புக் குள்ளக்கப்படலாம். CW Mackie & Co Ltd.

V. Translanka Investments Ltd [11] வழக்கில் இவ் அடிப்படையில் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் தினமும் திருப்பியனுப்பப்படும் பெருந்தொகையான காசோலை ஒவ்வொன்றும் சட்டமுரணான நடவடிக்கையெனத் தெரிந்தும் வங்கிகள் நடவடிக்கை எடுக்காமல் விடுவது ஏன்? வங்கித் தொழிலானது வெளிநாட்டு வங்கிகளுக்கும் உள்நாட்டு வங்கிகளுக்கு மிடையிலான போட்டிக்கு மத்தியில், ஒன்றுக்கொன்று சளைக்காமல் சேவை வழங்க முயல்கையில், தம் வாடிக்கையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வங்கிகள் தயங்குவதில் ஆச்சரியமில்லை.

காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவன் சம்பந்தமான சர்வதேச விதியினை எடுத்து நோக்கினால் Uniform Commercial Code இன் பிரிவு 3-302 படி உண்டியலொன்று விநியோகிக்கப் படும்போது அது மோசடி அல்லது திருத்தம் செய்யப்பட்டதென்பதை அறியாது, நல்ல நோக்கத்துடன் பணப் பெறுமதிக்காக, அதற்கு மதிப்பளிக்க மறுக்கப்பட்டமை பற்றியோ அல்லது அதிகாரமளிக்கப்படாத கையெழுத்து கொண்டுள்ளதென்பதைப் பற்றியோ அறியாது பெற்றவன் காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனெனக் குறிப்பிடுகிறது. இவ் அடிப்படையில் எமது சட்டமும் சர்வதேச விதிகளுக்கமைந்ததே எனக் கொண்டாலும் நடைமுறையில் அவை எப்பயனையும் அளிக்கவில்லை. வெளிநாடுகளைப் பொறுத்தவரை credit agencies என அழைக்கப்படும் கடன் வழங்கும் நிறுவனங்கள் கா.வைத்திருப்பவனென்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இவை 3ம் கட்சிக் காசோலைகளைப் பெற்றுக் கொண்டு கழிவுடன் (discount) காசோலைகளுக்குப் பணம் வழங்கியபின் அக்காசோலையை வங்கியில் சமர்ப்பிக்கும் போது அவை மதிப்பளிக்க மறுக்கப்படுவதால் காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனின் நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

ஆகவே முடிவாக நோக்கின், காசோலைகள் தவிர்ந்த உண்மையாக நா.உ.க.சட்டத்தின் பிரிவு3(1) இன் தேவைப்பாடுகளுக்கேற்ப நாணய மாற்றுண்டியல்கள் உருவாக்கப்படு வதேயில்லையென்பது ஒரு புறமிருக்க சர்வதேச வியாபாரத்திற்குப் பயன்படுத் தப்படும் உண்டியல்கள் கைமாற்றப் படுவதில்லை ஆகையால் இந்தளவில் காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவன் எனும் ஒருவனை வர்த்தக வளர்ச்சி மறைத்துள்ளது. அடுத்து, காசோலைகளை எடுத்துக் கொண்டால், மதிப்பளிக்க மறுக்கப்பட்ட காசோலைகள் மீண்டும் ஒரு முறை மட்டும் மீள சமர்ப்பிக்கப்படலாமெனினும் (re-presentment) அவை கைமாற்றப்பட முடியாது. இதனால் மதிப்பளிக்க மறுக்கப்பட்டமை பற்றிய அறிவின்றி காசோலையை ஒருவன் பெற முடியாதென்றளவில் காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனொருவன் உருவாக முடியாது. இவ் விடயத்திலும் காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவன் காலத்தை வெல்ல முடியாது. கணனி மயத்தினால் தோற்கடிக்கப் படுகிறான். ஆகவே சட்டத்தின் கருப்பொருளான நல்லெண்ணத்துடன் பணப்பெறுமதிக்காக உண்டியலைப் பெற்றவன் சட்டத்தினால் பாதுகாக்கப்படும் சிறப்புரிமையைப் பெறுகின்றானென்ற அடிப்படையில் மட்டுமே காலக்கிரமத்தில் உண்டியல் வைத்திருப்பவனை இருத்திப் பார்க்க வேண்டியுள்ளது.

**End notes**:

1. Arab Bank v Ross [1952.2.QB.216]
2. (1908) 24TL R 494
3.[1949] 2 KB 72
4.[1968] 1 WLR 1061
5. 68 NLR 311
6.[1982] 2 slr 633
7.6 NLR 348
8.58 NLR 44
9. 66 NLR 207
10. 69 NLR 489
11. (1955).2.SLR.6

# உரிமைகள்

**சி. அ. யோதிலிங்கம்**
*B.A.(Hons), M.A.*
*Attorney - at- Law*

**உரிமைகள் என்றால் என்ன?**

திருப்திகரமான குடியியல் வாழ்க்கையினையும் அரசியல் வாழ்க்கையினையும் அனுபவிப்பதற்கு மனிதர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படை நிபந்தனைகளே உரிமைகள் ஆகும்.

இதன்படி உரிமைகளை பரந்த அடிப்படையில் குடியியல் உரிமைகள் என்றும், அரசியல் உரிமைகள் என்றும் அரசியலாளர்கள் பாகுப்படுத்துகின்றனர். குடியியல் உரிமைகள் (சிவில் உரிமைகள்), பொருளாதார உரிமைகள், சமூக உரிமைகள் என்றும் மேலும் பாகுபடுத்தப்படுகின்றன.

**உரிமை என்ற எண்ணக்கருவின் வரலாற்று வளர்ச்சி**

உரிமைகள் பற்றிய சிந்தனை நீண்டகாலமாக வளர்ச்சியடைந்து வந்த ஒன்றாகும். 1215இல் கைச்சாத்திடப்பட்ட மக்னாகாட்டா (பேருரிமை பத்திரம்) ஒப்பந்தம் உரிமைகள் பற்றிய சிந்தனையின் ஆரம்பமாகக் கொள்ளப்படுகின்றது. மக்கள் மன்னனுக்கெதிராகக் கிளர்ச்சி செய்து சில உரிமைகளைப் பெற்றுக்கொண்டனர். 1688இன் உரிமைகள் பட்டயம் அடுத்த கட்ட வளர்ச்சியைக் காட்டி நின்றது. இது பாராளுமன்ற கட்டுப்பாட்டின் கீழ் அரசரைக் கொண்டுவந்தது. 1789இல் நடைபெற்ற பிரான்சியப் புரட்சி உரிமை பற்றிய சிந்தனையில் மேலும் ஒரு வளர்ச்சியை குறித்து நின்றது. மக்களாட்சி பற்றிய சிந்தனைகளும் அதிகார பிரிவினை பற்றிய சிந்தனைகளும் பிரான்சியப் புரட்சியின் தத்துவங்கள் மூலமே வளர்ச்சியடைந்தன.

1789இல் அமெரிக்க சுதந்திர பிரகடனம் பிறப்பினால் அனைவரும் சமன் என்றும் அனைவருக்கும் சம உரிமை உண்டு என்றும் குறிப்பிட்டதன் மூலம் உரிமைகள் பற்றிய சிந்தனைக்குப் பங்களித்திருந்தது. 1791இல் அமெரிக்க அரசியல் யாப்பின் முதல் பத்து திருத்தங்களாக அடிப்படை உரிமைகள் சேர்க்கப்பட்டமை அதற்கு யாப்பு அந்தஸ்தினைக் கொடுத்தது.

அதே வேளை 17ம், 18ம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞர்களும் உரிமைகள் பற்றிய சிந்தனையின் வளர்ச்சிக்கு பங்களிப்புகளைச் செய்திருந்தனர். லொக், எட்மண்ட் பேர்க் போன்ற பிரித்தானிய அறிஞர்களும் வால்டேயர், ரூசோ, மொண்டெஸ்கியூ போன்ற பிரான்சிய அறிஞர்களும் தோமஸ்பெய்ன், தொமஸ் ஜெபர்சன் போன்ற அமெரிக்க அறிஞர்களும் இவர்களில் முக்கியமானவர்களாக விளங்கினர்.

எனினும் 20ஆம் நூற்றாண்டின் நடுப்ப குதியிலிருந்து உரிமைகள் பற்றிய நவீன சிந்தனை வளர்ச்சியடையத் தொடங்கியது. இரண்டாம் உலக யுத்தத்தின்போது யூதர்களுக்கு எதிரான இனப்படுகொலையே

இவ் நவீன சிந்தனைகளுக்குக் காரணமாக விளங்கியது.

இது போன்ற இனப்படுகொலைகள் எதிர்காலத்தில் வரக்கூடாது என்பதில் உலக நாடுகள் அக்கறைப்பட்டன. உரிமைகள் பற்றிய நவீன சிந்தனையில் இரண்டு ஆவணங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

1. 1945இல் வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை பட்டயம்
2. 1948இல் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் பிரகடனம்.

இவ்விரு ஆவணங்களிலும் மனித உரிமைகள் பிரகடனமே மிகப் பிரதானமாகக் கொள்ளப்படுகிறது.

மனித உரிமைகள் பிரகடனம் 1948ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10ம் திகதி ஐ.நா.சபையின் பொதுச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப் பிரகடனத்தைப் பல நாடுகள் ஏற்றுக்கொண்டு அதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. தனி மனித சுதந்திரம், சட்டத்திற்கு உட்பட்ட பாதுகாப்பு, அடிமை ஒழிப்பு, வாழ்வுரிமை, சொத்துரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, மதவுரிமை போன்ற பல்வேறு விடயங்களை மனித உரிமைகள் பிரகடனம் உள்ளடக்கியிருந்தது. சர்வதேச ரீதியாக மனித உரிமைகளைக் கண்காணிப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையினால் சர்வதேச மனித உரிமை ஆணைக்குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது. நாடுகளில் மனித உரிமை மீறல்களுக்கு உள்ளானவர்கள் உள்நாட்டுத் தீர்ப்பில் அதிருப்தியுறின் சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிக்கலாம்.

ஐரோப்பிய நாடுகள் தங்களது நாடுகளின் மனித உரிமைகளை கண்காணிப்பதற்காக 1953 செப்டம்பர் மாதம் 08ம் திகதி ஐரோப்பிய மனித உரிமைகள் ஆணைக்குழுவை உருவாக்கி கொண்டன. அராபிய நாடுகள் 1968 செப்டம்பரில் அராபிய நாடுகளின் மனித உரிமை ஆணையம் என்ற அமைப்பை உருவாக்கி கொண்டன. ஆபிரிக்க நாடுகளின் மாநாட்டில் மனித உரிமைகளையும் அதனை கண்காணிப்பதற்கான மனித உரிமை ஆணைக்குழுவையும் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டன. ஆனால் மனித உரிமைகள் ஆணைக்குழுவை இதுவரை உருவாக்கவில்லை.

இந்தியா 1950இல் உருவாக்கிய புதிய அரசியல் யாப்பில் மனித உரிமைகள் பலவற்றை அடிப்படை உரிமைகளாகச் சேர்த்ததுடன் 1993 ஒக்டோபர் 30இல் தேசிய மனித உரிமைகள் குழுவையும் உருவாக்கியிருந்தது. அமெரிக்காவின் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு என்பனவும் இச்செயற்பாட்டில் முக்கிய பங்கினை வகித்தன.

இலங்கை 1955இல் ஐ.நா.சபையின் உறுப்பினராக சேர்ந்த வேளையே ஐ.நா.சபையின் மனித உரிமைகள் பிரகடனத்தையும் ஏற்றுக்கொண்டது. ஆனால் 1972ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது குடியரசு அரசியல் யாப்பிலேயே அடிப்படை உரிமைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. 1978 யாப்பு அதனை மேலும் பலப்படுத்தியது. 1983இல் மனித உரிமைகளைக் காண்காணிப்பதற்காக மனித உரிமை ஆணைக்குழுவையும் உருவாக்கிக் கொண்டது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங் களுக்கு அடுத்ததாகப் பெரிய பங்களிப்பினைச் செய்த நிறுவனம் சர்வதேச மன்னிப்புச் சபையாகும். லண்டனை தலைமையாகக்கொண்ட இவ்வமைப்பு உலக நாடுகள் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்களைக் குறிப்பாகக் கைதிகள் சித்திரவதை போன்ற

விடயங்களை அறிக்கையாக வருடந்தோறும் வெளியிடு கின்றது. இவ்வறிக்கை குறிப்பிடட நாடுகளுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுப்பதில் முக்கிய பங்கினை ஆற்றியிருந்தது. இதன் பணிகளுக்காக 1977ஆம் ஆண்டு இவ்வமைப்புக்கு நோபல் பரிசும் வழங்கப்பட்டது.

மனித உரிமைகள் பற்றிய சிந்தனையின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு 1966இல் கைச்சாத்திடப்பட்ட இரு பிரதான உடன்படிக்கைகள் பங்களித்திருந்தன. அவையாவன:

1. ஐக்கிய நாடுகள் சபையினால் உருவாக்கப்படட குடியியல், அரசியல் உரிமைகளுக்கான உடன்படிக்கை.

2. சமூக, பொருளாதார, கலாச்சார உரிமைகளுக்கான உடன்படிக்கை. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை 1966 டிசெம்பர் 16இல் இதனை ஏற்று அங்கீகரித்தது.

1979ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை பெண்கள் உரிமை பற்றிய பிரகடனத்தையும் 1984ம் ஆண்டு சித்திரவதைகளுக்கெதிரான பிரகடனத்தையும் வெளியிட்டது. இப்பிரகடனங்களை இலங்கையும் ஏற்று அங்கீகரித்துள்ளது. 1995ஆம் ஆண்டு பெண்கள் உரிமைகளைப் பாது காப்பதற்கான விருப்பத்தெரிவு ஆவணத்தையும் இலங்கை ஏற்றுக் கொண்டது.

இவற்றினைவிட சகல விதமான இனப்பாகுபாடுகளையும் ஒழிக்கும் சர்வதேச உடன்படிக்கை, சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை என்பனவும் முக்கிய மானவையாக உள்ளன. இவற்றினை ஏற்றுக்கொண்ட நாடுகளுக்கு சட்டக கடப்பாடுகளும் உண்டு.

இதில் குடியியல், அரசியல் உரிமைகள் தொடர்பான விருப்பத்தெரிவிடை ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதுவும் அங்கீகரிக்கப்பட்டது. இவ் ஆவணம் அதில் கைச்சாத்திட்ட நாடுகளுக்கு சட்டக்கடப்பாட்டி னையும் விதித்தது. இதன்படி நாடுகள் இது தொடர்பான சட்ட ஏற்பாடுகளையும் நிறுவன ஏற்பாடுகளையும் தத்தம் நாடுகளில் உருவாக்க வேண்டும் என விதிக்கப்பட்டது. அத்துடன் உரிமை மீறல்களுக்கு உள்ளானவர்கள் தங்கள் நாட்டு நீதிமன்றங்களின் தீர்ப்பில் அதிருப்தியுற்றால் ஐ.நா.மனித உரிமைகள் குழுவிற்கு விண்ணப்பிப்பதற்கும் அனுமதி வழங்கப் பட்டது. இது 1986 23ம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்தது. 1997இல் இலங்கை இவ் விருப்பத்தெரிவிடை ஆவணத்தில் கைச்சாத்திட்டிருந்தது.

### உரிமைகள் தோற்றம்


உரிமைகளின் தோற்றம் தொடர்பான இரண்டு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன.

1. மனிதனுக்கு உரிமைகள் பிறப்பிலேயே உரித்தாகுகின்றன.

2. உரிமைகள் மனிதருக்கு அரச சட்டங்களினால் உரித்தாக்கப்படுகின்றன.

உரிமைகள் அனுபவித்தல் தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து தனக்கும், முழு சமூகத்திற்கும் நன்மை பயக்கும் வகையில் உரிமைகளை அனுபவித்தல் வேண்டும் என்பதாகும். இதன்படி உரிமைகளை கட்டாயமாக கடமைகளுடன் தொடர்புபடுத்தி, கடமைகளை நிறை வேற்றாது உரிமைகளை அனுபவிக்க முடியாது என்பது வலியுறுத்தப்படுகின்றது. இதன்படி பார்க்கும் போது உரிமைகளும், கடமைகளும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களாக உள்ளன.

**உரிமைகளின் வகைகள்**




உரிமைகளை பின்வரும் இரண்டு வகைகளாக பாகுபடுத்தலாம்.

அ. குடியியல் உரிமைகள்
ஆ. அரசியல் உரிமைகள்

**அ. குடியியல் உரிமைகள்**

குடியியல் வாழ்க்கையினை திருப்திகரமாக அனுபவிப்பதற்கு மனிதர்களுக்கு இருக்க வேண்டிய இன்றியமையாத நிபந்தனைகளே குடியியல் உரிமைகள் ஆகும். இவை இருவகைகளாக பாகுபடுத்தப்படுகின்றன.

1. சமூக உரிமைகள்

2. பொருளாதார உரிமைகள்

**1. சமூக உரிமைகள்**

சமூக வாழ்க்கையினை திருப்திகரமாக மேற்கொள்வதற்கு மனிதர்களுக்கு இருக்க வேண்டிய நிபந்தனைகளே சமூக உரிமைகள் எனப்படுகின்றன. பின்வருவன சமூக உரிமைகளாகக் கொள்ளப்படுகின்றன.

1. வாழ்வதற்கான உரிமை.
2. கல்வி கற்பதற்கான உரிமை.
3. விரும்பிய மதத்தினை பின்பற்றும் உரிமை.
4. சிந்திப்பதற்கும், வெளிப்படுத்துவதற்குமான உரிமை.
5. ஒன்று கூடும் உரிமை
6. பேச்சுரிமை, எழுத்துரிமை
7. சமவாய்ப்புகளைப் பெறுவதற்கான உரிமை
8. குடும்ப வாழ்க்கையை அனுபவிக்கும் உரிமை
9. காரணத்தைக் கூறாமல் கைது செய்யப்படாமல் இருப்பதற்கான உரிமை
10. குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கும் வரை நிரபராதி என்ற அந்தஸத்தில் இருக்கும் உரிமை
11. காலவதியான சட்டங்களினால் தண்டிக்கப்படாமல் இருப்பதற்கான உரிமை
12. நடமாடும் உரிமை
13. பொது நடவடிக்கைகளில் பங்கு பற்றும் உரிமை
14. ஒப்பந்த உரிமை.

**2. பொருளாதார உரிமைகள்**

பொருளாதார வாழ்க்கையினை திருப்திகரமாக மேற்கொள்வதற்கு மனிதர்களுக்குத் தேவையான இன்றிய மையாத நிபந்தனைகள் பொரு ளாதார உரிமைகள் எனப்படுகின்றன.

பின்வருவன பொருளாதார உரிமைகளாக கொள்ளப்படுகின்றன.

1. வேலை செய்யும் உரிமை
2. நியாயமான சம்பளத்தினை பெறும் உரிமை
3. தொழிற்சங்கங்களை அமைக்கும் உரிமை.
4. தொழிற்சங்கங்களில் அங்கத்தவராக சேரும் உரிமை.
5. விரும்பிய தொழில் ஒன்றினை ஆரம்பிக்கும் உரிமை.
6. சொத்துரிமை
7. ஓய்வெடுப்பதற்கும் பொழுது போக்குதற்குமான உரிமை

**ஆ. அரசியல் உரிமைகள்**

அரசியல் வாழ்க்கையினை திருப்திகரமாக அநுபவிப்பதற்கு மனிதர்களுக்கு

அவசியமான இன்றியமையாத உரிமைகளே அரசியல் உரிமைகள் எனப்படும். பின்வருவன அரசியல் உரிமைகளாகக் கொள்ளப்படுகின்றன.

1. வாக்களிக்கும் உரிமை
2. தேர்தல்களில் போட்டியிடும் உரிமை
3. அரசாங்க பதவிகளை வகிக்கும் உரிமை
4. அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை
5. மனுச் செய்யும் உரிமை

**உரிமைகளை பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப் படும் வழிமுறைகள்.**

தாராண்மை ஜனநாயக அரசுகளில் பொதுவாக பின்வரும் வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

1. அடிப்படை உரிமைகள் அரசியல் யாப்பில் உள்ளடக்கல்
2. உரிமைகளை பாதுகாக்கும் அதிகாரத்தை நீதித்துறைக்கு வழங்கல்.
3. சட்டவாட்சியை உறுதிப்படுத்தல்.
4. மனித உரிமைகளைப் பாதுகாக்கும் ஆணைக்குழுக்களை நியமித்தல்.
5. ஒம்பூட்ஸ்மன் போன்ற அதிகாரிகளை நியமித்தல்.
6. சமமான பிரஜைகள், சமமான வாய்ப்புக்கள் என்ற கோட்பாட்டை நிலை நிறுத்தல்.
7. சமூகத்தில் சில பிரஜைகளுக்கு மட்டும் சட்டம் பிறப்பிக்கும் அரசாங்கத்தின் ஆற்றலை இல்லாது ஒழித்தல்.
8. சுதந்திரமானதும், பாரபட்சமற்றதுமான தொடர்பாடல் சாதனங்களை செயற்படவைத்தல்.
9. அதிகார துஷ்பிரயோகத்தைத் தடுக்கும் வகையில் அரசியல் அதிகாரம் ஓரிடத்தில் குவிவதை தடுத்தல்.
10. பொருளாதார வளங்கள் பிரஜைகளிடையே நியாயமான முறையில் பகிர்ந்து கொள்வதனை உறுதிப்படுத்தல்.
11. அரசு சமயச் சார்பற்றதாக இருத்தல்.

**1. அடிப்படை உரிமைகளை அரசியல் யாப்பில் உள்ளடக்குதல்**

தாராண்மை ஜனநாயக அரசுகள் உரிமைகளை பாதுகாப்பதற்கு பிரதானமாக இவ்வழிமுறையினையே பின்பற்றுகின்றன. மனிதர்கள் திருப்திகரமான குடியியல் வாழ்க்கையையும் அரசியல் வாழ்க்கை யையும் அனுபவிப்பதற்கு அடிப்படையாக இருக்கும் நிபந்தனைகளை அரசியல் யாப்பில் சேர்ப்பதன் மூலம் மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப் படுகின்றது.

அமெரிக்காவில் உரிமைகள் மசோதா என்ற பெயரில் அரசியல் யாப்பிற்கு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு முதல் பத்து திருத்தங்களாக அடிப்படை உரிமைகள் சேர்க்கப்பட்டன. இலங்கையில் 1972ம் ஆண்டு அரசியல் யாப்பின் மூலம் முதல் முதலாக அடிப்படை உரிமைகள் அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டன. 1978ம் ஆண்டு அரசியல் யாப்பில் அது மேலும் வலிமையாக்கப்பட்டது. இலங்கையின் அரசியல் யாப்பில் வாழ்வதற்கான உரிமை சேர்க்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

**2. உரிமைகளை பாதுகாக்கும் அதிகாரத்தை நீதித்துறைக்கு வழங்கல்.**

அரசியல் யாப்பில் உரிமைகளை எழுதி வைத்தால் மட்டும் போதாது; அவை பாதுகாக்கப்படவும் வேண்டும். அதாவது உரிமைகள் மீறப்படுகையில் அதற்கான பரிகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு தெளிவான வழிவகைகள் இருத்தல் வேண்டும். உரிமைகளை பாதுகாக்கும் அதிகாரத்தை நீதிமன்றத்திற்கு கொடுப்பதன் மூலம் இவை மேற்கொள்ளப்படுகின்றன. அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பாக

நீதிமன்றத்தில் முறையிடுவதன் மூலம் அதற்கான பரிகாரத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். 1978ம் ஆண்டு அரசியல் யாப்பின் படி உரிமை மீறலுக்கு உள்ளான இலங்கையர் ஒருவர் உயரிநீதிமன்றத்திற்கு முறையிடுவதன்மூலம் பரிகாரத்தினை பெற்றுக் கொள்ளலாம். உரிமை மீறல் நடைபெற்று ஒரு மாதத்துக்குள் மீறலுக்கு உள்ளானவர் உயர் நீதிமன்றத்தில் முறையிடுதல் வேண்டும். 2 மாதத்துக்குள் உயர் நீதிமன்றம் இதற்கான தீர்ப்பினை வழங்குதல் வேண்டும்.

முறையிடுவதற்கான ஒருமாதகாலம் போதாது என்ற குற்றச் சாட்டு தற்போது பலராலும் முன்வைக்கப்படுகின்றது.

**3. சட்டவாட்சியை உறுதிப்படுத்தல்**

சட்டத்தின் உயர்தன்மையையே சட்டவாட்சி கோட்பாடு வலியுறுத்துகின்றது. சட்டம் அனைத்திற்கும் மேலானதாக இருக்கும் அதே வேளை ஆள்வோரும், ஆளப்படுவோரும் சட்டத்திற்கு கீழ்ப்பட்டவர் ஆவர் என இக்கோட்பாடு கூறுகிறது. இக்கோட்பாட்டிற்கு நவீன பொருள் விளக்கத்தை அளித்த பேராசிரியர் டைசி சட்டம் அனைத்தையும் விட மேலானது, தனி முதன்மையானதுமாகும். என்றும் சட்டத்தின் முன்னால் யாவரும் சமமானவர் என்றும் சட்டத்தால் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்றும் குறிப்பிட்டார்.எனவே சட்டவாட்சியை உறுதிப்படுத்து வதனால் உரிமைகளும் பாதுகாக்கப் படுகின்ற நிலை ஏற்படுகின்றது. ஏனெனில் சட்டத்தில் உரிமைகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

**4. மனித உரிமைகளை பாதுகாக்கும் ஆணைக்குழுக்களை அமைத்தல்**

தாராண்மை ஜனநாயக அரசுகள் நீதித்துறைக்கு புறம்பாக மனித உரிமை ஆணைக்குழுக்களை உருவாக்குவதன் மூலமும் உரிமைகளை பாதுகாக்க முயற்சிக்கின்றன. நீதிமன்றங்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருப்பதாலும், உயர்நிலையில் உள்ள நீதிமன்றங்களை தலைநகருக்கு வெளியே தூரத்தில் உள்ள மக்கள் அணுகுவது கடினமாக இருப்பதாலுமே உரிமைகளை பாதுகாக்கும் விடயத்தில் மனித உரிமை ஆணைக் குழுக்களையும் இணைத்து கொள்கின்றன.

இலங்கையிலும் மனித உரிமை ஆணைக்குழு செயற்படுகின்றது. இதன் கிளை நிறுவனங்கள் பல்வேறு மாவட்டங்களிலும் செயற்படுகின்றன. மீறல்களுக்கு உள்ளானவர்கள் மிக இலகுவாக அணுகக் கூடியவையாகவும் இவை விளங்குகின்றன.

இலங்கை நீதிமன்றங்களின் தீர்ப்புகளிலோ அல்லது மனித உரிமை ஆணைக் குழுக்களின் தீர்ப்புகளிலோ அதிருப்தி யுற்றவர்கள். ஐ.நா.வின் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிக்கும் முறையும் தற்போது நடைமுறையில் உண்டு.

**5. ஓம்பூட்ஸ்மன் போன்ற அதிகாரிகளை நியமித்தல் (குறைகேள் அதிகாரி)**

அரச உயர் அதிகாரிகள் பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை மீறினால் அது தொடர்பாக விசாரணை செய்வதற்காக ஒம்பூட்ஸ்மன் என்ற பதவி உருவாக்கப் பட்டது.

இலங்கையில் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பின் மூலம் ஓம்பூட்ஸ்மன் பதவி உருவாக்கப்பட்டது. அரச அதிகாரிகள் பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை மீறும் போது அது தொடர்பாக விசாரணை செய்து பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதே இவரின் கடமையாகும்.

ஓம்பூட்ஸ்மன் நேரடியாகத் தீர்ப்பளிக்க முடியாமை இலங்கையில் உள்ள ஓம்பூட்ஸ்மன் பதவியின் குறைபாடாக சுட்டிக்காட்டப்படுகிறது.

**6. சமமான பிரஜைகள், சமமான வாய்ப்புக்கள் என்ற கோட்பாட்டை உருவாக்குதல்**

உரிமைகளை பாதுகாப்பதற்கு சமமாக பிரஜைகள் சமமான வாய்ப்புக்கள் என்ற கோட்பாட்டினை பின்பற்றுதல் வேண்டும் எனவும் நவீன அரசியலாளர்களால் வலியுறுத்தப்படுகின்றது. சமமான பிரஜைகள் என்பதன் அர்த்தம் இன, சமூக, வர்க்க, அரசியல் வேறுபாடுகளை கவனத்தில் கொள்ளாமல் எல்லாப் பிரஜைகளையும் சமமாக மதித்தல் வேண்டும் என்பதாகும். சமமான வாய்ப்புக்கள் என்பது மேற்கூறிய வேறுபாடுகளை கருத்தில் கொள்ளாது, எல்லாப் பிரஜைகளுக்கும் சமமான வாய்ப்புக்களை அளித்தல் வேண்டும் என்பதாகும். இலங்கையின் அரசியல் யாப்பில் அரச கொள்கையின் தத்துவங்கள் எனும் பகுதியிலும் அடிப்படை உரிமைகள் என்ற பகுதியிலும் இக்கோட்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

**7. சமூகத்தில் சில பிரஜைகளுக்கு மட்டும் சட்டம் பிறப்பிக்கும் அரசாங்கத்தின் ஆற்றலை இல்லாது ஒழித்தல்.**

ஒரு நாட்டில் பல சமூகங்கள் வாழக்கூடிய நிலை ஏற்படலாம். இவ்வாறன நிலையில் அரசானது ஒரு நடுநிலையாளனாக செயற்படுதல் வேண்டும். அவ்வாறு செயற்படுவதற்குரிய ஏற்பாடுகள் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். இல்லையேல் ஆட்சியைக் கைப்பற்று வதற்காக அரசாங்கத்தை அமைப்பவர்கள் பெரும்பான்மை இனத்துக்கு சார்பாக செயற்பட முனையலாம். அவ்வினத்திற்கு சார்பாக சட்டங்களையும் இயற்றலாம். இதனைத் தடுக்கும் முகமாகவோ இவ்வாற்றலை இல்லாதொழிக்கும் வகையில் அரசியல் யாப்பில் ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

இலங்கையில் சோல்பரி அரசியல் யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட 29 வது பிரிவு இது விடயத்தில் முக்கியமானதொன்றாக விளங்கியது. அப்பிரிவின் படி ஒரு இனத்தையோ, மதத்தையோ, சமூகத்தையோ பாதிக்கின்ற சட்டங்களை பாராளுமன்றம் இயற்றக்கூடாது.

1978ம் ஆண்டு அரசியல் யாப்பில் காணப்படுகின்ற விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை, நாட்டு மக்கள் அனைவரும் சேர்ந்து ஜனாதிபதியை தேர்ந்தெடுத்தல் போன்ற ஏற்பாடுகள் அரசாங்கத்தின் இவ்வாற்றலை குறைப்பதற்கு உதவியாக உள்ளன.

விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையினால் சிறுபான்மை இனக் கட்சிகளையும் இணைத்து கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்க் கூடிய நிலையே உள்ளது. ஜனாதிபதி தேர்தலில் எல்லா இனங்களினதும் வாக்குகள் தேவையாக இருப்பதால் ஜனாதிபதி நடுநிலையாக தொழிற்பட முற்படுவார்.

**8. சுதந்திரமான பாரபட்சமற்ற தொடர்பாடல் சாதனங்களை செயற்பட வைத்தல்.**

உரிமைகளை மக்கள் அனுபவிப்பதற்கும் அது மீறப்படுகையில் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் உரிமைகள் பற்றியும், உரிமைகள் மீறப்படுவது பற்றியும், மீறப்படும் போது எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் பற்றியும் மக்கள் அறிந்து கொள்வது அவசியமானதாகும். தொடர்பு ஊடகங் களுக்கு சுதந்திரம் இருக்கும் போதே மக்கள் இதனை அறிந்து கொள்வது சாத்தியமானதாக இருக்கும். இதனாலேயே ஜனநாயக அரசுகள் உரிமைகளைப்

பாதுகாத்தலின் ஒரு அம்சமாக தொடர்பு ஊடகங்களுக்கு சுதந்திரம் வழங்குவதை பின்பற்றுகின்றன.

**9. அதிகார துஷ்பிரயோகத்தை தடுக்கும் வகையில் அரசியல் அதிகாரம் ஓரிடத்தில் குவிப்பதை தடுத்தல்.**

அரசின் மூன்று நிறுவனங்களான சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை என்பவற்றின் அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிந்திருந்தால் அரசு சர்வாதிகார தன்மை பெற்றதாக மாறி உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படும். இதனால் வலுவேறாக்கம் கொள்கையை பின்பற்றி அரசின் மூன்று துறைகளையும் வெவ்வேறாகப் பிரித்து வெவ்வேறு தரப்பினரிடம் வழங்கி ஒருதரப்பை இன்னொரு தரப்பு கண்காணிக்கும் பொறிமுறையை உருவாக்கினால் உரிமைகள் துஷ்பிர யோகத்தை தடுக்கலாம் என கூறப்படுகிறது. இதனாலேயே அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிவதை தடுக்கும் பொறிமுறை வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது.

**10. பொருளாதார வளங்கள் பிரஜைகளிடையே நியாயமான முறையில் பிரிந்து செல்வதனை உறுதிப்படுத்தல்.**

நாட்டின் பொருளாதார வளங்கள் பிரஜைகளிடையே நியாயமான வகையில் பிரிந்து செல்வதனை உறுதிப்படுத்துவதும் உரிமைகளை பாதுகாப்பதற்கு ஒரு வழிமுறையாகும் எனக் கூறப்படுகின்றது. பொருளாதார வளங்கள் ஓரிடத்தில் குவிந்திருந்தால் ஒரு சிலர் செல்வந்தர்களாகவும் ஏனையவர்கள் பொருளாதார வசதிகள் அற்றவராகவும் இருப்பதற்கான சூழ்நிலையே ஏற்படும். நாட்டின் பல்வேறு பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதும், தனியார் பொருளாதாரத்துக்கு ஊக்குவிப்பு அளிப்பதும், பின்தங்கிய பகுதியினருக்கு விசேட வாய்ப்புக்களை கொடுப்பதும், பொருளாதார வளங்கள் நியாயமான வகையில் பிரிந்து செல்வதனை உறுதிப்படுத்துவதற்கான வழிவகைகள் ஆகும். ஜனநாயக அரசுகள் தற்போது இந்த விடயத்திலும் அதிக கவனங்களை செலுத்தி வருகின்றன.

**11. அரசு சமயசார்பற்றதாக இருத்தல்**

பல சமயத்தை சேர்ந்தவர்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் எல்லாச் சமயத்தை சேர்ந்தவர்களினதும் உரிமைகளை பாதுகாப்பதற்கு அவ்வரசு சமயச்சார்பற்றதாக இருத்தல் வேண்டும். என வலியுறுத்தப் படுகின்றது. இதன் போதுதான் அரசு நடுநிலையாளன் என்ற அந்தஸ்த்தினைப் பெற்றுக் கொள்ளும். அரசு மதச்சார் புடையதாக இருப்பின் சிறுபான்மை மதங்கள் பாதிப்படைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படலாம். தாராண்மை ஜனநாயக கொள்கை பின்பற்றும் நாடுகளில் பொதுவாக அரசு மதச்சார்பற்றதாக இருந்த போதும் மன்னராட்சி நாடுகள் பல குறிப்பாக சவூதி அரேபியா, ஜோர்தான் போன்ற முஸ்லிம் நாடுகள் மதச்சார்புடைய நாடுகளாகவே விளங்குகின்றன. தாரண்மை ஜனநாய கோட்பாட்டை பின்பற்றும் போதும் இலங்கை, நேபாளம் போன்ற நாடுகளும் மதச்சார்புடையதாகவே விளங்குகின்றன.

**உரிமைகளை பாதுகாக்க சர்வதேச சமூகம் மேற்கொள்ளும் வழி முறைகள்.**

**1. மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனம்**

1948ம் ஆண்டு ஐ.நா.சபை முக்கியமான மனித உரிமைகள் அடங்கிய சர்வதேச பிரகடனத்தை வெளியிட்டது. இதில் மக்களுடைய பிரதான அடிப்படை உரிமைகள் குறிப்பிட்டிருந்தன. 1966ம் ஆண்டு சமூக பொருளாதார உரிமைகள்

அடங்கிய இன்னொரு பிரகடனம் வெளியிடப்பட்டது. ஐ.நா.சபையின் இவ்வுரிமைகள் பற்றிய பிரகடனத்தை ஏற்றுக் கொண்ட நாடுகள் தமது நாட்டில் இதனை நடைமுறைக்கு கொண்டு வருமாறு வற்புறுத்தப்படுகின்றன. இதனை நடைமுறையில் மேற்கொள்ளாத நாடுகளுக்கு சர்வதேச அழுத்தங்களும் அதிகரிக்கின்றன.

**2. சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு**

தமது நாடுகளில் போதிய நீதி கிடைக்கதவர்கள் ஐ.நா.சபையினால் உருவாக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு விண்ணப் பிப்பதன் மூலம் பரிகாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த வகையில் பிரஜைகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கு இதுவும் வழி செய்கிறது எனக்கூறப்படுகிறது.

**3. சர்வதேச மன்னிப்பு சபை**

சர்வதேச மன்னிப்புச்சபை அரசுகள் மனித உரிமைகள் மீறப்படுவதினை கண்டிக்கும் நிறுவனமாக செயற்படுகிறது. இது காலத்துக்குக் காலம் தான் தயாரிக்கும் அறிக்கைகளில் நாடுகளின் மனித உரிமை மீறல்கள் பற்றி பல ஆதாரங்களுடன் செய்திகளை வெளியிடுகின்றது. இதன் அறிக்கைகள் சர்வதேச ரீதியில் அழுத்தம் கொடுக்கக்கூடிய ஒன்றாக இருப்பதால் நாடுகள் இவ்வறிக்கைகளுக்கு அஞ்சி மனித உரிமைகள் மீறப்படுவதை தடுக்கின்றன.

**அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான கட்டுப்பாடுகள்**

**1. கடமைகளை மேற்கொள்ளாமல் உரிமைகளை அனுபவிக்க முடியாது.**

சமூகத்தினுடைய நலன்களுக்கும் தனிப்பட்டவர்களுடைய உரிமைகளுக்கும் பங்கம் ஏற்படாத வகையிலேயே உரிமைகளை அனுபவித்தல் வேண்டும். இந்த வகையில் உரிமைகள் கடமைகளோடு இணைந்தவையாகும். கடமைகளை நிறைவேற்றாது உரிமைகளை அனுபவிக்க முடியாது. உரிமைகளும், கடமைகளும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களாக உள்ளன. உரிமைகளை அனுபவிக்கையில் பொது நலனுக்கோ, தனிப்பட்டவருக்கோ பங்கம் ஏற்படின் பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தப் பட்டவர்களுக்கு எதிராக வழக்கு தொடுக்கலாம்.

**2. நடைமுறையில் உள்ள சட்டமுறையான ஒழுங்கு முறைகள்**

நாடுகள் அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்துவதற்கு சில குறிப்பான சூழ்நிலைகளில் சட்டமுறையான ஒழுங்கு முறைகளை பின்பற்றுகின்றன. அவசரகால நிலைமை அதில் முக்கியமானதாகும். அவசரகால நிலைமை அமுலில் உள்ள காலங்களில் யாப்பு ரீதியாகவே மக்களின் அடிப்படை உரிமைகள் கட்டுப்படுத் தப்படுகின்றன.

இலங்கையில் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பு அவசரகால நிலைக் காலங்களில் தேசிய பாதுகாப்பு, இனச் சமூக வாழ்வு, மதச் சமூக வாழ்வு, தேசிய பொருளாதாரம் என்பவற்றின் நலன் கருதியும் அல்லது பாராளுமன்ற சிறப்புரிமை, நீதிமன்ற அவமதிப்பு, தவறு புரியத் தூண்டுதல் என்பன தொடர்பாகவும் அடிப்படை உரிமைகள் பிரயோகங்களை கட்டுப் படுத்தலாம். எனக்கூறுகிறது. இந்தியாவிலும் இவ்வாறான கட்டுப்பாடுகள் உள்ளன.

**உரிமைகளின் நடைமுறை முக்கியத்துவம்**

**1. அபிவிருத்தி அளவிடுவதற்கான அளவுகோலாக இருத்தல்.**

ஒரு நாட்டின் அபிவிருத்தியை அளவிடுவதற்கான அளவு கோலாக உரிமைகளும் பார்க்கப்படும் நிலை இன்று சர்வதேச ரீதியாக வளர்ச்சியடைந்து வருகிறது. ஒரு நாட்டில் உரிமைகள்

பேணப்படும் போது அங்கு ஜனநாயக ஆட்சி சிறப்பாக நடைபெறும். ஜனநாயக ஆட்சி சிறப்பாக நிகழும் போதே பொருளாதார வளர்ச்சி, சமத்துவம், அடித்தள மக்களின் மேல்நோக்கிய அசைவு என்பனவும் சாத்தியமானதாக இருக்கும். இதனாலேயே நாடுகளின் அபிவிருத்தியை அளக்கும் அளவு கோல்களில் ஒன்றாக உரிமையும் காணப்படுகிறது.

**2. வெளிநாட்டு உதவிகளை பெறுவதற்கான அளவு கோலாக இருத்தல்.**

இன்று அபிவிருத்தி குன்றிய நாடுகள் வெளிநாட்டு உதவிகளை பெறுவதற்கான அளவு கோலாகவும் உரிமைகள் கருதப்படுகின்றன. ஒரு நாடு எவ்வளவு தூரம் உரிமைகளை நடைமுறையில் அங்கீகரித்து செயற்படுகிறதோ அந்த அளவிற்கே அந்நாடுகள் வெளிநாட்டு உதவிகளுக்கான வாய்ப்பையும் பெற்றுக் கொள்கின்றன. உதவி வழங்கும் நாடுகளின் குழு ஒரு நாட்டின் உரிமைகளின் பிரயோகத்தை அடிப்படையாக வைத்தே அந்நாடுகளுக்கு உதவி வழங்க சிபாரிசு செய்கின்றது. உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புக்களும் உரிமைகளை பொறுத்தே உதவிகளை வழங்குகின்றன.

**மனித உரிமைகளும், அடிப்படை உரிமைகளும்**

மனித இருத்தலுக்கு அவசியமானதும், அவர்களின் சுய கௌரவத்தை பாதுகாப்பதுமான வாய்ப்புக்களே மனித உரிமைகள் ஆகும். இவை இயற்கை உரிமைகளினதும், குடியியல் உரிமைகளினதும் (சிவில்) கலவை ஆகும். இவை உலகிலுள்ள சகல இடங்களுக்கும் சகல மனிதர்களுக்கும் பொதுவானதாகும்.

மனித உரிமைகளில் எவற்றை அத்தியாவசியமாக பாதுகாக்க வேண்டும் என ஒவ்வொரு அரசும் தீர்மானித்து அது அரசியல் யாப்பில் உள்ளடக்கும் உரிமைகளே அடிப்படை உரிமைகள் ஆகும். இவை நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. அரசுகள் இவற்றை பாதுகாப்பதற்கு சட்ட ரீதியாகக் கடமைப்பட்டுள்ளன.

# இலங்கையில், ஆயுத மோதலினாலான உள்நாட்டு இடப்பெயர்வு

செல்வி. சாமினி சந்திரன்,
உதவி விரிவுரையாளர்,
கொழும்புப் பல்கலைக்கழகம்,
இலங்கை

ஆயுத மோதல்கள் எப்போதுமே மனித குலத்திற்கு மதிப்பளிப்பதில்லை. குறிப்பாக மோதலில் ஈடுபடும் தரப்பினர் தமது இலக்குகளை அடைவதற்கு உத்வேகம் பெறும் அதே கணம், அது விளைவிக்கும் பாதகமான தாக்கங்கள் தொடர்பில் சிந்தித்துச் செயற்படத் தவறி விடுகின்றனர். பொதுவாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இனங்காணப்படும் இயல்புகளில் ஒன்றாக உள்நாட்டினுள்ளான மோதல்களும் இடம் பிடித்து விட்ட நிலையில், இலங்கைத் தீவும் அதில் ஒன்றாக உள்ளடங்கி விடுகிறது. அவ்வகையிலே தசாப்த காலமாகத் தொடர்ந்து வரும் இலங்கையின் உள்நாட்டு ஆயுத மோதல் ஏற்படுத்திய தாக்கங்கள் பல்வகையின. அவற்றுள் ஒன்றாக உள்நாட்டிற்குள்ளான மக்களின் இடப்பெயர்வினை அடையாளப்படுத்தலாம். இலங்கைத் தீவு நீண்டகாலமாக சந்தித்து வரும் இம்மோதல் பல எதிர் விளைவுகளை தொடர்ச்சியாகச் சம்பவிக்கச் செய்த வண்ணமே நீண்டு செல்கின்றது. இந்த நீண்ட, தீர்வினை எட்டாத பயணத்தில் பங்கு கொள்ளும் மோதல் தரப்பினர் இருவருமே அடைந்த இலக்குகள் மீண்டும் ஓர் மோதலிற்கு வழிசமைப்பதாக அமைந்ததே ஒழிய, ஓர் நிரந்தரத் தீர்வினை எட்டவில்லை. பல்லின சமூகங்கள் ஜீவிக்கின்ற இந்நாட்டிலே, வெவ்வேறுபட்ட அபிலாஷைகளைக் கொண்ட மக்களின் தேவைகள், சலனங்கள் ஆயுதத்தினால் அடைந்து கொள்ள இயலாதன என்பதை, மோதலில் ஈடுபடும் தரப்பினர் புரிந்து கொள்ள விளைவதில்லை. மொத்தத்திலே, இம் மோதலானது, மக்கள் நலன் கருதிய செயன்முறை என்பதற்கு மாறாக, குறித்த மோதலில் ஈடுபடும் தரப்பினரின் நலன் கருதியது என்பது, கொடிய மோதல் ஏற்படுத்திய பாதக விளைவுகள் வெளிப்படுத்தும் உண்மை. அவற்றுள் ஓர் பிரதான விளைவாக எம்மால் அடையாளம் காணக்கூடியதே, மோதலிலிருந்து தமது உயிரைப் பாதுகாக்கும் நோக்கிலான மக்களின் சொந்த இடங்களிலிருந்தான உள்நாட்டிற்குள்ளான நகர்வாகும். தொடர்ச்சியான இம்மோதல் தேசிய எல்லை தாண்டிய வகையிலும் மக்களைப் புலம் பெயரச் செய்துள்ளது என்பதும் வெளிப்படை.

பொதுவாக 'இடம்பெயர்வு' என்பது மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாகும். அதாவது ஒரு குறித்த மக்கள் தொகையினர் வள வாய்ப்புக்களைப் பெறல், தொழிற்படையில் இணைதல், கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடல், வேலைவாய்ப்பு, கல்வி, சுகாதார, மருத்துவ வசதிகள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளுமுகமாக மீள் பரம்பலை ஏற்படுத்தும் செயற்பாட்டையே 'இடம்பெயர்வு' என அழைப்பர். அதேசமயம் 'உள்நாட்டு இடப்பெயர்வு' என்பது குறித்து நிற்பது ஒரு வகையில், மிகக் கிட்டிய தூரத்திற்கு தற்காலிகமாகவோ, தற்காலிக-நிரந்தரமாகவோ அன்றில் நிரந்தரமாகவோ இடப்பெயர்வு மேற்கொள்வதைக் குறித்து

நிற்கிறது. குறிப்பாக ஒருவர் தொழிலின் நிமித்தம் தான் வாழும் பிரதேசத்திலிருந்து மிகக் கிட்டிய தூரத்திலுள்ள நகரத்திற்கோ அன்றில் கிராமத்திற்கோ சென்று வருவதை இவ் இடப்பெயர்வுக்குள் அடக்கலாம். அதே சமயம் மற்றோர் பரிமாணமும் இதற்கு உண்டு. அதாவது, இராணுவ பரவலாக்கம், ஆயுத மோதல், இராணுவ அச்சுறுத்தல் போன்ற பல காரணங்களின் நிமித்தம் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு, இழந்து வெளியேறுவோர் சர்வதேச எல்லையைத் தாண்டாத போது 'உள்நாட்டு ரீதியான இடப்பெயர்வு' என அது கொள்ளப்படும் சர்வதேச எல்லையைத் தாண்டும் போது இடப்பெயர்வு என்பது அகதிகள் வெளியேற்றமாக மாறுகின்றது எனக் கொள்ளலாம். உலகளாவிய ரீதியில் இருபத்தைந்து மில்லியனுக்கும் அதிகமான நபர்கள் தமது சொந்த நாட்டிற்குள்ளேயே முரண்பாடு காரணமாக பலாத்காரமாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுள் அரைப்பங்கினருக்கும் மேலானோர் ஆபிரிக்காவிலும், நான்கு முதல் ஐந்து மில்லியன் வரை ஆசியாவிலும் (பெரும்பாலானோர் பர்மா, இந்தோனேசியா, ஆப்கானிஸ்தான், இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலும்) மூன்று முதல் நான்கு மில்லியன் வரை ஐரோப்பாவிலும், இரண்டு மில்லியனுக்கும் மேலானோர் அமெரிக்க நாடுகளிலும் காணப்படுகின்றனர்.

கலாநிதி, உம்ரோ சிங் சவுத்திரி (2002) என்பவரது உள்நாட்டு இடப்பெயர்வு பற்றிய விளக்கத்தை நோக்கின், ''உள்நாட்டு இடப்பெயர்வானது, மனோரீதியிலான உற்சாகமின்மையையும், சமூக-பொருளாதார ரீதியிலான பலவீனமானதோர் நிலையினையும் ஏற்படுத்துவதாகிறது. அத்துடன், அதில் வீடற்றுப் போதல் சம்பந்தமான பிரச்சினை மட்டுமன்றி, உதவியில்லாமை, நம்பிக்கையிழப்பு மற்றும் மனித உரிமை மீறப்படுதல் என்பவற்றிற்கும் உள்ளாவதனால், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் இத்தகைய துயர் நிலையானது உண்மையானதும் அவசரமானதுமான ஒன்றாகும்" என்கிறார்.

இவ்வடிப்படையில், இலங்கையில் இரு தசாப்தங்களாக நடைபெற்று வரும் சிவில் யுத்தத்தின் விளைவுகள் நீண்ட காலத்திற்கு பாரிய சுமையினை பல்வேறு வழிகளில் அழுத்திய வண்ணம் உள்ளது. அது மட்டுமன்றி, ஒரு முழுத்தலைமுறையினர் இவ் ஆயுத மோதலினால் பாதிக்கப்பட்டு விட்டனர் என்பதே மிகவும் துயர்மிகு செய்தியாகும். மேலும் பெருந்தொகையான மக்கள் வன்முறையினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டு உயிர், உடைமையையும் இழந்து, முடமாக்கலுக்குட்பட்டும், உள்நாட்டு ரீதியாக இடம்பெயர்ந்தும் உள்ளனர். பிணக்கு ஏற்பட்ட காலப்பகுதியில் அழிந்தோரின் தொகை 60,000க்கும் கூடுதலானது என்று கணிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் பிணக்கில் கடந்த பல ஆண்டுகளில் ஏதாவதொரு வகையில் நேரடியாகப் பாதிப்பிற்குள்ளான குடிமக்களின் தொகை 17 இலட்சங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதாக, இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன், நிவாரண, புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க இணைப்பு ஆணையாளர் அதிபதி அலுவலகத்தினால் 'நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கப்பாடு மீதான தேசிய சட்டகம்' என்றவாறாக தமிழாக்கம் செய்யப்பட்ட ஏடு விதந்துரைக்கிறது. தற்பொழுது கூட, பெருந்தொகையானோர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோராக இருக்கின்றனர். அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அறிக்கையின் படி, 2001ம் ஆண்டு நவம்பரில் கூட உள்நாட்டு ரீதியாக இடம்பெயர்ந்து உலருணவு பெறுவோரின் தொகை 683, 256 ஆகும். உள்நாட்டில் இடம்பெயர்ந்த குடும்பத்தினரின் வீதம் அம்பாறை மாவட்டத்திலுள்ள 40% க்கும், மன்னாரிலுள்ள 95% க்கும் இடையே உள்ளது. வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள வீடுகளில் மூன்றி லொன்றிற்கு மேற்பட்டவை சேதமடைந்தோ, முற்றாக அழிந்தோ உள்ளன. தத்தமது இடங்களிற்குத் திரும்பிச் சென்று மீண்டும் மீண்டும் இடப்பெயர்வுக்கு உள்ளானோர் அடங்கலாக, பெரும்பாலானோர் நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள், மற்றும் உறவினர்கள்

ஆகியோருடனும் வசித்து வருகின்றனர். சீரான எதிர்காலத்திற்கு சொற்பமான நம்பிக்கையே கொடுக்கும் நெரிசலான நலன்புரி நிலையங்களில் பல குடும்பங்கள் பத்து வருடங்களுக்கும் மேலாகக் காலத்தைப் போக்கி வருகின்றன.

1980களின் முதற்பகுதிகளில் முனைப்புப் பெற்ற இன விடுதலைப்போராட்டத்தினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த பிரதேசங்களிலிருந்து தவிர்க்க முடியாத நிலையில் இடம்பெயர்வினை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு உட்பட்டனர். அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் தமது சொந்த இடங்களி லிலிருந்து இடம்பெயர்ந்து பல இடங்களில் பரந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களிற் கணிசமானோர் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர். அதேபோல், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள மக்கள் உள்நாட்டிலுள்ளேயே இடம்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் நிகழ்ந்து வரும் உள், வெளி இடப்பெயர்வின் பண்புகளுக்கும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிகழ்ந்து வரும் உள், வெளி இடப்பெயர்வுப் பண்புகளிற்கும் இடையில் பாரிய வேறுபாட்டினைக் காணமுடிகிறது. அதாவது தென்னி லங்கையில் மேற்கொள்ளப்படும் இடப்பெயர்வானது, அபிவிருத்தியுடன் தொடர்புபட்டிருக்க, மற்றது, தவிர்க்க முடியாததும், பாதுகாப்பிற்காகத் தூண்டப்பட்டதுமான இடப்பெயர்வுகளாக உள்ளன.

இவ்வாறாக மொத்தத்திலே, ஆயுத மோதல் பலப்படுத்திய உள்நாட்டு இடப்பெயர்வில் முக்கியமான சமூகத்தினராகக் கருதப் படக்கூடியோர் தமிழரும் முஸ்லிம்களுமே, யுத்த நிலையும் அதனோடு இணைந்த காரணிகளின் செயற்பாட்டின் விளைவாக மேற்கொள்ளப்பட்ட இவ் இடப்பெயர்வுகளில் முக்கியமாகக் கூறப்பட வேண்டியது, வட மாகாணத்திலிருந்து முஸ்லிம் சமூகத்தினர் வெளியேற்றப்பட்டமை ஆகும். ஏறத்தாள 75,000 முஸ்லிம்கள் இம்மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து அனுராதபுரம், பொலநறுவை, புத்தளம், கொழும்பு போன்ற மாவட்டங்களிற்குச் சென்று அகதி முகாம்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வர, சற்று வசதி படைத்தோர் வீட்டினை வாடகைக்குப் பெற்றோ அன்றில் சொந்தமாக வாங்கியோ வாழ்ந்து வருகின்றனர்.

இவை தவிர, தமிழ் மக்களில் பெருமளவிலானோர் தொடர்ச்சியாக நிகழ்ந்து வரும் யுத்த அனர்த்தத்தின் விளைவாக தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் முகமாக தற்காலிக இடப்பெயர்வினைக் காலத்திற்குக் காலம் மேற்கொண்டு வந்துள்ளனர். இதன் விளைவாக மாவட்டத்திற்குள்ளேயானதும், மாவட்டத்திற்கு வெளியேயானதுமான இடப்பெயர்வுகள் முனைப்புப்பெறலாயின.

இந்த அடிப்படைகளில் நோக்குமிடத்து தொடர்ந்து வரும் கோரயுத்தம் இலங்கை மக்களின் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளில் தனது நேரடியான அல்லது மறைமுகமான தாக்கத்தினை செலுத்திய வண்ணம் இருக்கும் இந்நிலையில், பிணக்கின்போதான பாதுகாப்பின் நிமித்தம் தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேறி வரும் மக்கள் தொகை 'உள்நாட்டு இடப்பெயர்வாளர்' என்று கல்விசார் பதப்பிரயோகத்தினூடு அடையாளப்படுத்தப்பட்டு பெருகி வரும் நிலைப்பாடு நாட்டின் ஓர் செழிப்பான அபிவிருத்திக்கு உசிதமான விடயம் அல்ல. இவர்கள் தொடர்பில், அவர்களின் மீள்குடி யேற்றங்கள் தொடர்பில் அரசாங்க மட்டத்தில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வந்தாலும், ஓர் நிரந்தர தீர்விற்கான அத்திவாரங்களை தொடர்ந்து செல்லும் மோதல் பின்னடையச் செய்து வருகின்றது. எனவே நாடு அபிவிருத்தியை நோக்கி நகர்வதற்கான முஸ்தீபுகளை நகர்த்த விளைகையில், குறித்த

இம்மக்களின் நிரந்தர தீர்வு தொடர்பில் சிந்தித்துச் செயற்பட வேண்டிய நிர்ப்பந்தம் குறித்த நாட்டு அரசாங்கத்திற்குக் காணப்படும் அதேவேளை, இம்மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் இன்னல்களுக்கு பதிலளிக்க வேண்டிய கடப்பாடும், அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு இந்த மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பும் மோதலில் ஈடுபட்ட தரப்பினருக்கே உரியவை என்றாலும் மிகையாகாது.

**உசாத்துணை நூல்கள்**


1. பிரான்சிஸ் பிள்ளை, மு. (2000), 'அகதி', மானுடம்- சமூகவியல் ஏடு, யாழ்ப்பாணம்:- சமூகவியல் சமூகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

2. நிவாரணம், புனர்வாழ்வு, மற்றும் மீளிணக்கப்பாடு மீதான தேசிய சட்டகம், (2002), கொழும்பு: அபிவிருத்தி மன்றம்

3. ஜெயநிதி, க.(2004), 'உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான நெறிமுறை விதிகளும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனித நேயச் சட்டத்தின் சில முக்கிய மூல தத்துவங்களும்; நீதிமுரசு -2003, ஆட்சி - 54, முரசு - 39, கொழும்பு: சட்ட மாணவர் தமிழ் மன்றம், இலங்கை சட்டக்கல்லூரி.

4. குகபாலன், கா.(2005), 'குடித்தொகையியல் - கோட்பாடுகளும் பிரயோகங்களும்; யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

5. Internal Displacement in Sri Lanka Contribution to the IDP Project of the Norwegian Refugee Council; (2000), Sri Lanka: UNHCR Branch Office

# DEMARCATION OF HIGH SECURITY ZONES AND THE RESULTANT MASS DISPLACEMENT OF CIVILIANS IN CONFLICT AFFECTED AREAS

**By:**
**SWARNARAJAH NILAKSHAN**
**MBA (Colombo), Attorney-at-Law,**
**Dip. in Journalism (Colombo).**
**Dip.in.Dispute Resolution (BCIS/ University of Peace).**

## 1.1 Establishment of high security zones during conflicts

During times of conflicts and prevailing security threats to installations of strategic and economic importance, several governments around the world tend to establish high security zones or 'no go' zones. This phenomenon is evident in several conflicts including the Palestine-Israel, Turkey-Cyprus and former Soviet Union states. Establishment of high security zones has caused in all of these conflicts immense hardship to the native residents of the demarcated areas, resulting in their permanent displacement and affecting their livelihoods. This article focuses on the humanitarian aspect of the high security zones. Relevant scenarios from different countries and quotations and statements from the affected people have been highlighted in order to understand the pain and suffering of the displaced populations. These statements also stress the emotional attachment the displaced people had towards their native lands and the frustration and anxiety they were subjected to as a result of the denial of access to their villages.

## 1.2 Case of Loizidou V Turkey

Titina Loizidou was one of the victims who lost her native lands as a result of the Turkish occupation of parts of Cyprus dominated by Greek Cypriots. In a successful law suit she brought against Turkey in the European Court of Human Rights, Turkey was ordered to pay nearly a million US dollars as compensation to Loizidou for preventing her from enjoying her lands.

The statement made by Loizidou in the case underlines the importance of the traditional lands to the applicant Loizidou and the emotional bond that links her to her native village. Referring to her village Kyrenia, which was under the occupation of the Turkish forces since 1974, Loizidou made the following remarks[1]:

> "Kyrenia is more than just a place where I own property and to which I want to return. It is an inseparable part of myself, it lies at the very core of my being. For me Kyrenia is all those little experiences which make up a person's development,

experiences one should not be deprived of. It is the place where my family lived for generations, where I grew up, where every stone holds memories and meaning for me".

Before coming out with the rationale for her to file the action against the continuous denial of access to her property, Loizidou also highlighted the mental pain and suffering she was undergoing as a result of seeing her beautiful village being out of bounds to its natives. Describing the circumstances which led her to join the 'Women Walk Home' protest in an attempt to breach the Turkish frontlines and return to their villages, she stated:

> "Passing through the occupied part of Cyprus and seeing the Turkish troops and settlers filled me with sorrow. Everything seemed alien to me in my own country. I felt saddened humiliated and degraded by the way I had been seized and brought to Nicosia under escort. My conversation with the Turkish "policewomen" was too artificial for words, for Turkey arranges things in such a way as to ensure that there could be no real dialogue between us. I was disappointed too and frustrated that Kyrenia, so near in terms of physical distance, was yet so far, and occupied by foreign troops and settlers. It seemed very sad and ironic that the Turks should consider my peaceful act a "frontier violation" - a "frontier violation" in my own country!".

The above quotations very clearly explain the true feelings of those people who have been uprooted from their native villages for various political, military and economic reasons. While the reasons for the establishment of 'no go zones' is understandable in a political and military strategic point of view, the genuine suffering and pain such actions have caused to the civilians also become important consideration from a conflict resolution point of view.

### 1.3 Internally displaced Arab people in Israel

According to estimates of the United Nations Reliefs and Works Agency for Palestine Refugees in the Near East (UNRWA) in 1950, there were 46,000 internally displaced Palestinians out of the 156,000 Palestinians who remained within the borders demarcated as Israel by the 1949 armistice agreement.

The homes and properties of these internally displaced Palestinians were placed under the control of a government body called the Custodian of Absentees' Property in terms of the legislation that included the 1948 Emergency Regulation Concerning Absentee Property and the 1950 Absentee Property Law[2].

The Military administrative rule which was in force from 1948 to 1966 restricted the movement of Arab citizens of Israel, and with the use of absentee property legislation, it also prevented internally displaced citizens from physically returning to their properties to reclaim their homes. Under the legislation, "absentee" property owners were

required to prove their "presence" in order to gain recognition of their ownership rights by the Israeli government.

Some refugee rights groups report that Palestinians inside Israel tried to return to their villages of origin, often by sending letters to Israeli ministries. Letters were generally written by village headmen and dignitaries, and would emphasise the good relationship between the residents of the village with their Jewish neighbors, and the desire to live in peace under Israeli rule. The Israeli response to these letters however appeared to be negative.

Some villagers by the name of Ghassibiya, Bir'im and Iqrit who filed legal action before the Israeli Courts to regain their property rights were successful in their suits in the 1950s. However they were physically prevented from reclaiming their properties by military administrative authorities who refused to abide by the court rulings and declared the villages as closed military zones.

Because most internally displaced Palestinian Arab citizens of Israel were counted as absent, even though present inside the Israeli state, they are also commonly referred to as present absentees. This contradictory terminology itself stands evidence to the fact that the 'present absentees' are more or less living objects that are actually dead. The term is politically loaded as well, in that it means, these displaced people have been prevented from enjoying their properties in their own country, although they consider themselves as genuine citizens of that very same country.

It is a known fact to what extent the Arabs and Israelis are still looking at each other as permanent enemies and any confidence building or stabilisation measures in the region not producing fruitful outcome. One of the main causes of this problem could be attributed to the immense hurt feeling among the IDPs of their forcible evacuation from places of origin.

## 1.4 Internally displaced persons in Azerbaijan

The same has been experienced by the internally displaced in most of the territorial conflicts of the former Soviet Union. The fate of over 600,000 internally displaced persons in the conflict between Azeris and Armenians in Azerbaijan is another example of prolonged suffering as a result of forced displacement and denial of access to native lands. Majority of these IDPs come from territories surrounding the former autonomous region of Nagorny Karabhak which are now occupied by Armenian forces. Amnesty International commenting on the condition of these IDPs said in its newsletter as follows[3]:

> "Since the start of the conflict the government has struggled, often under difficult conditions, to address the rights and needs of displaced people. AI acknowledges these efforts, while also recognising that internally displaced people have the right to voluntary return under conditions of security and dignity. Yet displaced people also have the right to choose integration or permanent resettlement elsewhere in

> the country, a right which must be respected particularly in a context where return is extremely unlikely in the foreseeable future".

The above statement of the AI implies the practical difficulty in settling all IDPs in their original places, thus focussing on the need for resettlement and reintegration of these IDPs in other parts of the country. However, the statement does not undermine the right of the IDPs in choosing whether they wish to get back to their original places or want to be resettled elsewhere. This could be further understood in the case of the situation in Sri Lanka, where the IDPs from the Jaffna High Security Zones were demanding return to their original places rather than being resettled in alternate locations.

### 1.5 Internally displaced persons from the Jaffna High Security Zones

In the Jaffna peninsula of Sri Lanka, high security zones were established as a result of the intense fighting and security concerns faced by military establishments since 1983. The existing boundaries of the HSZs became fairly well defined by June 1990, when the war broke out between the Government forces and the LTTE after the withdrawal of the Indian Peace Keeping Forces. The establishment of the Jaffna HSZs resulted in the displacement of 65,756 members from 15,482 families. 36 Grama Sevaka Divisions were caught within the boundaries of the HSZs.

There were two cases filed before the Supreme Court by residents of the High Security Zones demanding access to their native villages[4]. The Government Agent of Jaffna was directed by the Supreme Court to make submissions on the impact of the HSZs and possible alternatives to the demand of the residents to return home.

After lengthy consultations with the petitioners and divisional secretaries, the Government Agent submitted a report to Court, detailing his findings and observations[5]. This document needs careful consideration also by the Government as it has been prepared and submitted by none other than the chief government official in the district. Relevant paragraphs provided below highlight the difficulties in coming up with an alternate plan to resettle the IDPs. Referring to the petitioner in the first case, the Government Agent states as follows:

> "His position is that he was a farmer who knows no other vocation other than cultivation. He had his own lands for cultivation which is highly productive red soil. He was getting sufficient income, he had put up a house from his income at considerable expense and was living with dignity. For no reason he had been ejected from his house and is being prevented to continue his cultivation and is made a destitute. He wants to get back to his house and to his lands and recommence cultivation and live with honour and dignity. He will not accept lands anywhere else or accept compensation[6]."

Commenting on the discussions with the petitioner in the second case, the Government Agent states:

> "His position is that there is no valid law or regulation that authorises the respondents to prohibit him and others from resettling in their own lands in the Valikamam North division. Under these circumstances, he is not agreeable to accept any alternate land elsewhere or compensation and his request is that he be permitted to go and live in his own land[7]".

Giving a general overview of the HSZ, its impact on the lives of the displaced and the emotional attachment the displaced people had to their villages, the Government Agent says[8]:

> "This High Security Zone in Valikamam North Division, legality of which is the subject matter of the two applications, covers 58.5 square kilometres of fertile red soil which was considered to be one of the most productive areas in the north in terms of yield and income. On the north it was by sea and the fishing industry was very lucrative. About 60 percent of the population had been farmers depending on cultivation and 30 percent were depending on fishing. The people stand denied of their right live in their homes, deprived to their livelihood and forced to live for the last 15 years, on the dry ration provided by the State, which is hardly sufficient to keep their soul and body together. They have their historical places of worship and sea coast to perform last rites to the departed souls. They are very much attached to their lands and any attempt to make the displacement permanent by offering alternate lands will only complicate matters."

The Government Agent also did not fail to highlight the implications for the Government as a result of the HSZs and the prolonged stay of the IDPs in welfare centres and camps. He states:

> "The Government is also compelled to look after these families by providing dry rations at a cost of Rs. 36 million per month. The District Administration is often disrupted and embarrassed by protests and demonstrations. An early resolution of this problem is highly desirable for the smooth functioning of the district administration".

In conclusion of his report, the Government Agent conveyed his suggestion to the Supreme court in the following lines:

> "Considering the above and the long term interest of the country, my suggestion is that an environment could be created and the confidence of the IDPs built for a successful negotiating process. This could only be achieved by seriously

considering the possibility of permitting resettlement in stages without compromising the security concerns and at the same time guaranteeing civilians' basic human right."

When the matter was taken up before the Supreme Court, considering the contents of the report by the Government Agent and the submissions by the counsel, the Court set out certain conditions for resettlement in the HSZs and directed the petitioners and other willing IDPs to ascertain whether they were agreeable to those conditions for resettlement. The Court also directed that immediate steps be taken to interview the persons who have indicated their willingness to resettle on the conditions that have been laid down by Court in order to be satisfied of their bona fides. The District Secretary or his representative and representatives of the security forces as may be nominated by the Secretary Defence were directed to carry out the interviews.

The four conditions laid down by Court to be agreed in writing by those who were seeking to resettle in their native lands were as follows[9]:

(i) they would submit themselves for interview by the District Secretary and representatives of the Security Forces to establish their identity, claims to the particular portion of land and other relevant particulars.

(ii) that they would form into Citizens Committees and ensure that the security forces are in no way imperilled in the area due to any armed or terrorist activity.

(iii) engage in agricultural and other activities as may be agreed upon between the persons re-settling and the relevant authorities.

(iv) not claim the dry rations provided by the State.

The matter is still before the Supreme Court amidst the recent escalation of hostilities in the North. The outcome of the case would be of particular interest to those who have been keenly waiting to see a workable formula to address the issues of the IDPs while taking into consideration the security concerns of the Government.

**Foot notes:**

[1] Relevant excerpts from the statement made by the petitioner Titina Loizidou in Case Application No. 15318/89 before the European Court of Human Rights; source – Hellenic Resources Network, www.hri.org

[2] Nihad Boake'e, Palestinian Internally Displaced Persons inside Israel: Challenging the solid structures, Badil Resource Centre for Palestinian Residency and Refugee Rights, Feb 2003

[3] The Wire, Amnesty International newsletter, Vol 37 No. 07, August 2007, page 1.

[4] The two applications bearing numbers 646/2003 and 533/2004 were filed by Mr Mavai Somasundaram Senathirajah and Mr Kasipillai Yogeswaran respectively before the Supreme Court.

[5] The Government Agent of Jaffna Mr K Ganesh was directed by the Supreme Court in the two fundamental rights applications to meet and discuss with petitioners and report back on the observations on possible settlement to the issue. After consultations with the petitioners, the Government Agent Jaffna submitted the report to the Supreme Court by letter dated 20.03.2006.

[6] Paragraph relating to Case No. 533/2004 from the Jaffna GA's report conveyed to the Supreme Court dated 20.03.2006.

[7] Paragraph relating to Case No. 646/2003 from the Jaffna GA's report conveyed to the Supreme Court dated 20.03.2006

[8] General Observations and recommendations conveyed to the Supreme Court by the Government Agent, Jaffna.

[9] The Supreme Court made the above recommendations when the case was taken up for argument on 08.05.2006. The Government Agent, together with the Divisional Secretariats, conducts interviews with displaced people from the Jaffna HSZ in order to prepare a detailed report on those who wish to accept the suggestions and resettle in their villages.

# ANTICIPATORY BAIL

*ARAVINDA R.I. ATHURAPANE*
*Attorney-at-Law*

Anticipatory Bail is a subject that caught our attention, and we talked about, in the recent past. We see even persons who think of themselves to be very powerful filing cases seeking anticipatory bail. A short discussion on the subject would be timely.

The concept of anticipatory bail entered the Sri Lankan Statute book through the Bail Act No. 30 of 1997 Sections 21 to 26 thereof contain the provisions dealing with anticipatory bail.

Where any person has reason to believe that he may be arrested on account of his being suspected of having committed or been concerned in committing a non-bailable offence he may apply for a direction that in the event of his arrest in respect of such offence he shall be released on bail. Such application must be made to the Magistrate's Court in the area and prior notice thereof should be given to the officer-in-charge of the relevant police station. The law lays down that such application must also be supported by an affidavit of the applicant (suspect).

Once Such an application is received in court it shall fix date for inquiry (a date not later than seven days from the receipt of such application) and inform of such date to the officer-in-charge of the relavant police station as well as to the applicant (suspect). On the date so fixed the Court shall inquire into the matter and must forthwith make an order on such application, recording the reasons therefore. When making such an order the court shall allow conditions to such order. (The English version of the Act uses the word "may", the official version in sinhala uses the word "shall"). Such conditions shall be as the court may think fit in the light of the facts of the particular case, including conditions as to prohibiting the applicant (suspect) from leaving Sri Lanka, or requiring the applicant to surrender his passport to court.

If such an order granting anticipatory bail has been made, even if the applicant (suspect) is arrested later, he will be entitled to be released on bail. However, where a person is released on bail in pursuance of such an order such person must make himself available, as and when required, for interrogation by police. Such person must not make any inducement, threat or promise to any witnesses. Also, such person shall not tamper with any evidence in the case or otherwise obstruct the course of justice.

The Court has power at any time to revoke or vary an order so made. This is upon application being made in that regard by the officer-in-charge of the relevant police station. It is upon summons being issued on the applicant (suspect), requiring his presence in court on a specified date, and upon inquiry that the Court can make an order revoking or varying an order granting anticipatory bail already made. The Court is bound to record the reasons for making such a revocation or variation.

Although it was by the Bail Act enacted in 1997, just ten years ago, spearheaded by Dr. G.L.Peiris, that the concept of anticipatory bail was first introduced into our law, our nearest neighbour India has had it from about 23 years prior to that. That is with the bringing in of the "Code of Criminal Procedure 1973" enacted as the Act No. 2 of 1974. The relevant section in the Indian Act is section 438.

Because in Sri Lanka there has not been a suitable exposition as to the factors that have to be considered in granting anticipatory bail, the factors applicapable in the regard in India can be made applicable, as a guide, in respect of our law too.

The factors in that regard in India are :-

1. The nature and seriousness of the accusation.
2. The nature of the evidence in support of the accusation
3. The severity of the possible punishment.
4. The character, behaviour and standing of the suspect.
5. The possibility of the suspect not presenting himself at the trial.
6. The danger of the suspect continuing or repeating the offence
7. The danger of the witnesses being tampered with.
8. The larger interest of the public or the state.

In Sohoni's work on the Indian Criminal Procedure, namely the "Code of Criminal Procedure, 1973" at page 3897 of volume IV (in the 17th Edition - 1977) another important factor in regard to which court must be satisfied is indicated. That is, the court in order to grant anticipatory bail must be satisfied that the arrest and detention of the applicant (suspect) would be not from motives of furthering the ends of justice in relation to the case but from some ulterior motive, and with the object of injuring the applicant (suspect), for example injuring his or her reputation.

The said work at the same page states that the discretion of the court to grant anticipatory bail must be exercised only in exceptional cases whose facts satisfy the above factors. It also states that ordinarily the judiciary should not interfere with the police in matters which are within their province and into which the law imposes upon them the duty of enquiry (investigation). Sohoni goes on to state there that merely because it is alleged that the suspect apprehends arrest on a false accusation and such arrest will be a cause of disgrace and dishonour to him, the court will not be justified in granting anticipatory bail. Sohoni states further that the court has both a right and a duty to satisfy itself that the apprehension is reasonable.

No doubt, the above concepts and principles must apply also to persons who think of themselves to be very powerful.

Is there any body to whom this mundane aspect would be unclear ?

# Bio Genetic Piracy and Patenting

*Hamsakanambiha Vamadeva*
*Attorney-at-Law*

Though it seems like science fiction in the minds of most people, genetic engineering is a current reality and is common practice in laboratories around the world. "With genetic engineering technology today, it is possible to manipulate the 'blueprints' of living organisms...to isolate, splice, insert, rearrange, recombine and mass-reproduce genes"[1]. Scientists are capable of reprogramming the genetic codes of living things to suit societal or economic purposes.

Transgenic experiments mix plant genome with that of animals, human genome with that of plants or animals. Does anyone have a right to own a life form or to commodify parts of the human body for profits? The ethical and legal questions raised by genetic engineering technology are numerous and unanswered. This area of biotechnology remains virtually unregulated. Patent law is the primary vehicle which enables scientists to secure exclusive rights to the commercial benefits of their genetic research.

Patent laws grant a limited property right to the patent holder, and exclude others from using the patented item for a specific period of time, usually for a 17-20 year period. Patents are usually granted for newly created inventions, as a means of recognizing the scientist's "intellectual property rights".

There has been a disturbing trend in patent law that extends patent protection to life forms since 1980 when the U.S. Supreme Court ruled that the creation of an oil-eating microbe is patentable[2]. Since then, the U.S. Patent and Trademark Office (PTO) has granted numerous patents for newly created micro-organisms, living animals, and for human tissues and genes, breaking long-standing policy that animate life forms were not patentable.

Intellectual property rights represent has now been branded as Western notions that one can have "ownership and property right(s)" extended to all facets of the natural world. Western laws are paradoxical to Indigenous cosmologies which revere the sanctity of all life, and mandate human responsibility to serve as stewards, not owners, of the natural world. The infringement of Western law on indigenous peoples over the past few hundred years has created a complex political and legal framework of existence for indigenous peoples. However, it is important to remember that, most fundamentally, indigenous peoples inherently have full rights and authority to control and manage their own natural resources and internal affairs, free from external interference and control.

Therefore steps should be taken or the measures that have already been taken must be implemented to arrest this public issue. Otherwise the world will be faced with a dilemma in sorting out the disparity that has been caused by bio-piracy in the developed and the developing worlds. The following could be identified as some mechanisms in the realm of biodiversity and bio genetic resources.

## Possible remedies and strategies

There are mainly two fields in which genetic resources play a major role. Genetic material useful in pharmaceutical and related fields should be distinguished from genetic resources for food and agriculture. Both types of genetic resources though have a distinct historical background and utility have been under threat after the advent of bio-piracy. While bearing at hind sight that bio-piracy an offence , it should not be forgotten that the aim of the research is to find ways that would benefit the developing nations as the assistance by way of technology is still dependent on the developed nations. Therefore the objective of the analysis is to identify the possibilities of benefiting from bio genetic resources without assisting the western world to engage in bio-piracy.

## Monitored access

Each and every nation is sovereign of its own and is vested with the unrestricted authority to allow intervention of others into the biodiversity. According to the CBD, the authority to determine access to genetic resources rests with national governments, with such access being "subject to prior informed consent of the contracting party providing such resources, unless otherwise

determined by the party"[3]. The CBD entitles the national governments to introduce access rules into national law[4]. At the same time the contracting the parties to the CBD are obliged to facilitate the access[5] .

It is the acknowledged fact that there can be no absolute taboo in the access to the bio genetic resources as the era is that of international relations and comity after the fast progressing concept of globalization. Therefore measures should be taken at national levels to closely monitor the bio genetic resources when it is being exposed to outsiders. This is not an easy effort as with the advance in technology there is no necessity to remove genes from the species in a substantial manner, instead relatively small quantities would suffice the intended purposes.

The indigenous of the nation should be first made aware of this plight and their coo-operation is of inevitable concern. Moreover the adventure of the researchers, usually the developed world should be under close scrutiny as there are provisions for prospective research which is identified as a major channel in the realm of bio-piracy. It is the usual practice that there is no follow up after the researchers return to their native places and this inevitably leads to the exploitation of the genetic resources.

There must be agreements to between the researchers and the nation in relation to the non exploitation of the genetic resources and it should also be followed for some to see whether they honour the agreements. This would lead to a better way of regulating the access in the national context as no nation could close the doors permanently to the other countries as co-existence is also part of biodiversity.

**International Treaties**

It has been the usual practice to enter into treaty agreements in this sphere of law to amicably solve the problems. Yet in a recent research it has been discovered by the FAO that bilateral agreements do not satisfy the special needs of agriculture and in order to address those characteristics of plant genetic resources for food and agriculture ,there has been established a multi lateral system of Access and benefit sharing. In this context the countries with a rich biological diversity of medicinal value resources would be in a better position to bargain their monetary benefits.

Though the objective of the multi lateral treaties is to agree to establish an efficient, effective and transparent Multilateral System to facilitate access to plant genetic resources for food and agriculture, and to share

the benefits in a fair and equitable way, it is not always the case. The Multilateral System applies to over 64 major crops and forages. The Governing Body of the Treaty, which will be composed of the countries that have ratified it, will set out the conditions for access and benefit-sharing in a "Material Transfer Agreement".

Therefore to strike parity in the bargaining power the countries should have expertise in this realm of the law to benefit the nation with all possible prospects. The idea of bio genetic resources is no more than benefits sharing agreements as the concentration of the other resources are vested in the developed nations.

**Technological transfer**

The successful development of biological diversity will depend upon creative relationship that can be nurtured between two opposite poles that is the formal innovative and community systems. For this to work, policymakers must implement technology transfer with a strong inclination towards active participatory approaches to research and extension. Active participation means exercising practical power and command over genetic resources by farmers and rural people that would be reciprocated by the formal system with their analysis, experimentation, profe ssional, institutional and policy changes from time to time in order to discharge our international obligations and at the same time keeping in view of sustainability of biodiversity. Ultimately, the reason to conserve our genetic diversity and to encourage innovation out of these biogenetic resources is to improve the quality of human life and this should be kept in mind always before any invention or policy changes, otherwise our very existence will be at stake.

A wider application of traditional knowledge for in situ conservation of biodiversity implies facilitation of technology transfer by holders of such knowledge to potential users. But technology transfer is a process, irrespective of the modality chosen for transfer, comprises three different steps as comprehension, communication and absorption. For this to happen, traditional knowledge must be systematically documented so that it forms a coherent set of instructions that a potential user can learn and apply. But such documentation raises IPR related concerns, including public disclosure of information, which, if made without appropriate controls, may impair protection of traditional knowledge by patent or the trade secret system. It also raises issues, common to traditional and non-

traditional knowledge, of public policies on tax incentives as well as recourse to compulsory licences.

**Protection of traditional knowledge**

The WIPO document has also stated that the implementation of the CBD and its Art.8 (j) relating to in-situ conservation, required three sorts of legislative actions:

* definition of standards concerning availability, scope and use of rights (including IPRs) in knowledge, innovation and practices of indigenous and local commu nities, as well as establishment of measures concerning enforcement of those rights;
* promotion of wide application of such knowledge, innovations and practices with approval and involvement of holders of such knowledge; and
* encouragement of equi table sharing of benefits arising from utilisation of such knowledge, innovations and practices.

Genetic resources usually stand in close relationship to the traditional knowledge of the local populace. If a human population has inhabited the biological diversity in a particular geographical area for a considerable amount of time, the knowledge of the people will be more valuable than the resources per se. Steps should be taken to preserve this knowledge and also this will benefit monetarily that the nation can negotiate this knowledge in the benefit sharing agreements. Otherwise these indigenous people will reveal their secrets to the foreigners without any hesitation as they are not aware of the outcome of the act.

Indigenous people must call for a world-wide moratorium on the collection, data basing, mani pulation, and commercialization of human cell lines and their genetic resources. Indigenous peoples need to determine the extent of existing international protections for genetic resources, and participate in the development of international policies which fully protect the resources of indigenous peoples from further theft, appropriation and exploitation. Indigenous people must assert their sovereign rights to manage and protect their peoples' resources and knowledge, as populace of their territories and their peoples' future generations, and these rights must be respected and protected by non-indigenous people and nations as this is ethically, legally and morally correct.

## Legislative intervention

The most effective remedy is by way of enacting legislations as it is more authoritative in nature. The governments to stop increasing privatisation of basic resources such as land, water, bio-mass and forests so as to guarantee an enabling environment for small and marginalised farmers with special emphasis on gender issues in rural livelihood context. The patents on life forms and that of bio-piracy should be stopped effectively. Legislation for this purpose must be enacted at local, provincial and federal levels, paying due attention to the vulnerability and threat of marginalisation faced by mountain farmers and other indigenous people.

## Contractual Agreements

The countries can have regional and national level contractual agreements in relation to bio genetic resources and benefit sharing agreements. Moreover there could be internal arrangements of patent offices to monitor the exploitation of the resources. This will lead to the protection of the bio genetic resources in a friendly manner. Moreover there should be programmes at national and regional level to enlighten the people in this area of law which would be of future assistance.

## Conclusion

Identifying mechanisms to finance environmental conservation is crucial to achieve sustainable development. Pharmaceutical prospecting has been touted as a mechanism with prospects to generate revenue to conserve biodiversity. Pharmaceutical prospecting could improve with the use of prior information to guide pharmaceutical prospecting research. Such prior information could be traditional knowledge on use of biodiversity for medicinal purposes. Sri Lanka is also richly bestowed with both biodiversity and traditional knowledge of the use of it for medicinal purposes.

Bio-piracy takes everything and returns nothing or very little. The only "value" added to native knowledge is a mere confirmation by Western scientists of the properties of the resource, often known to the community for years. Unlike the social system in which this knowledge evolves, in the commercial system from the origin to the end product, each "value-adder" seeks a profit-oriented monopoly. And more often than not it is the pharmaceutical or agro-chemical companies marketing the finished product that secure patents, irrespective of the fact that the

product may have had its origin in traditional knowledge. So the "first-to-file" gets legally protected rights rather than the "first-to-invent". Rights which ironically the former can use to prevent the original "inventor" from exercising any control over the resource is always in question. So the issue of protection of traditional knowledge is also that of preventing unauthorised persons from obtaining protection to the detriment of the real innovators.

According to Daes "'... *heritage includes all expressions of the relationship between the people, their land and the other living beings and spirits which share the land, and is the basis for maintaining social, economic and diplomatic relationships– through sharing – with other peoples. All of the aspects of heritage are interrelated and cannot be separated from the traditional Territory of the people concerned. What tangible and intangible items constitute the heritage of a particular indigenous people must be decided by the people themselves.*

Therefore the effort of preserving the bio genetic resources against the improper patenting will breed favourable results to the nations which involve the coordination of all three arms of the government if the expected outcome is to be reached.

**(Endnotes)**

1. Kimbrell, Andrew, The Human Body Shop: The Marketing and Engineering of Life. San Francisco: Harper, 1994.

2. Diamond v. Chakrabarty, 477 U.S. 303 (1980).

3. Article 15(5) of the CBD.

4. Article 15(1) of the CBD.

5. The text of Article 15(2) of the CBD states, "Each contracting party shall endeavour to create conditions to facilitate access to genetic resources for environmentally sound uses by other contracting parties and not to impose restrictions that run counter to the objectives of the convention".

6. Daes, E.I. (1996) Supplem entary Report of the Special Rapporteur on the Protection of Heritage of Indigenous Peoples, UN Sub-Commission on the Prevention of Discrimination and Protection of Minorities, 48th Session.

# நிர்வாக நடவடிக்கைகளில் நீதிமுறை மீளாய்விற்குக் காரணங்களை வழங்குதல் உறுதியான தளமாகக் காணப்படுகின்றன.

செல்வி.ஷர்மினி விக்னேஸ்வரன்
இறுதி வருடம்
சட்டபீடம்,
கொழும்பு பல்கலைக்கழகம்

அதிகாரம் பெற்ற நபரினால் தகுந்த வேலையை, சரியான விதத்தில், குறித்த நேரத்தில் அதிகார வரம்பினுள் நின்று செயல்படுத்த வேண்டும். இதனால் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் நிருவாகத்தினரிடம் வழங்கப்பட்டுள்ள தத்துவம், பணிகள், கடமைகள் என்பன தற்றுணிவதிகாரத்திற்கு உள்ளடக்கப்படாமல் செயல்படுத்தப் படுகின்றன என்ற நம்பிக்கை எழுகின்றது. ஆனால் என்றைக்கு அதிகாரமானது துஷ்பிரயோகப் படுத்தப்படுகின்றதோ அன்றைக்குத் தனி மனிதனின் அடிப்படை உரிமை மீறப்படுவதோடு, அவனது பாதுகாப்பும் கேள்விக்குட்படுத்தப்படுகின்றது. அதன் போதுதான் தனிமனிதனைப் பாதுகாப்பதற்கென நீதிமுறை மீளாய்வு தோற்றம் பெறுகின்றது. இந்நீதிமுறை மீளாய்வானது அதிகாரம் வாய்ந்த நபரினால் எடுத்துள்ள முடிவானது எந்தவொரு நியாயமான அறிவுள்ள மனிதனாலும் எடுத்திருக்கப்படக்கூடிய முடிவில்லை எனக் கருதும் போதுதான் நீதிமுறை மீளாய்வை மேற்கொள்ளுவதற்கு காரணங்களை வழங்கக் கோருகின்றது. காரணங்களை வழங்குவதற்கும், நீதிமுறை மீளாய்விற்கும் என்ன தொடர்பு?

காரணம் வழங்கும் போது செய்யப்பட்ட செயலானது காரணம் கருதியே செய்யப்பட்டது என்றும், காரணம் வழங்காத போது செய்யப்பட்ட செயலானது காரணம் இல்லாமல் செய்யப்பட்டது என்றும் நீதிமன்றம் கருதும். அதே நேரம் காரணங்களை வழங்காமையானது இயற்கை நீதிக்கோட்பாட்டை மீறுகின்றது.

இயற்கை நீதிக் கோட்பாடானது நிர்வாகச் சட்டத்தில் நிர்வாகங்களை அதிகார வரம்பினுள் மேற்கொள்ளுவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்டது. காரணங்கள் வழங்கா விட்டால் இயற்கை நீதிக்கோட்பாடு மீறப்படும் என்று ஏதாவது ஒரு சட்டம் இல்லையாயினும் காரணங்களை வழங்கினாலேயே நீதிமுறை மீளாய்வினை மேற்கொள்ளலாம் என்பது உட்கிடையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து. இயற்கை நீதிக் கோட்பாடானது மறுகட்சி கேட்க எழும் விதி, பாரபட்சத்திற்கு எதிரான விதி என்னும் இரண்டு கோட்பாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மறுகட்சி கேட்க எழும் விதிக்குள்ளேயே காரணங்களையும் வழங்க வேண்டும் என்ற கோட்பாடு காணப்படுகின்றது.

இந்தக் காரணங்கள் வழங்கல் நீதிமுறை மீளாய்விற்கு ஒரு முக்கியமான அம்சம் தொடர்பில் இயற்கை நீதிக் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு மூல காரணமாகவுள்ள

இங்கிலாந்தையும், அதே நாட்டின் சட்டத்தின் தொடர்புடைய இலங்கையையும், உரோமன் டச்சுச் சட்டத்தினை அடிப்படைக் காரணியாகக் கொண்ட தென்னாபிரிக்காவினையும் இன்றைய கால கட்டச் சட்ட வளர்ச்சியோடு நோக்குவோம்.

இங்கிலாந்து நாட்டினை முதலில் நோக்கும் போது இங்கு 1960ஆம் ஆண்டு அமையப்பெற்ற Ridge Vs Baldwin வழக்கே இயற்கை நீதிக்கோட்பாட்டின் வளர்ச்சிக்கு மூல காரணமாகவும், திருப்பு முனையாகவும் இருந்துள்ளது. இதன் பின்னரே காரணங்களை வழங்க வேண்டும் என்ற கோட்பாடும் வளர்ச்சியடைந்துள்ளன என்பதற்கு வழக்குகள் சான்றாதாரங்களாக உள்ளன.

**R Vs Civil Service Board exp Conningham (1991) 4All.E.R. 310**

இவ்வழக்கில் Lord Donaldson என்பவர் இயற்கை நீதிமுறைக் கோட்பாடானது நீதிமன்றத்திற்கும், பொதுமக்கள் சட்டத்திற்கும் பங்குடைமை போன்றது. நிருவாகச் சட்டத்தின் புதிய முயற்சியும், அபிவிருத்தியுமே இயற்கை நீதிக் கோட்பாட்டில் காரணங்களை வழங்க வேண்டும் என்ற விதியை வளர்ச்சியடையச் செய்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே நீதிமுறை மீளாய்வினை மேற்கொள்ளலாம். இல்லாவிட்டால் நீதிமுறை மீளாய்வினை மேற்கொள்ள முடியாது. இது ஒரு நெறிமுறையான எதிர்பார்ப்பு என்றும் Lord Donaldson வலியுறுத்திக் கூறுகின்றார். இதனையே M.C. Cowan என்பவரும் ஏற்றுக் கொண்டு கட்டாயம் காரணம் கொடுக்க வேண்டும். என்பதை அதே வழக்கில் கூறியுள்ளார். அதற்கு European Convention on Human Rights and Fundamental Freedom of 1950 ஆனது ஒருவர் குற்றவியல் குற்றமாயினும் சரி, குடியியல் குற்றமாயினும் சரி புரிந்திருந்தால் அவருக்கு வழங்கப்பட்ட தண்டனையின் காரணத்தையும், ஏன் அவ்வாறு வழங்கப்பட்டது என்று கேட்கும் உரிமையையும் வழங்க வேண்டுமென்பது வலுச்சேர்ப்பதாக உள்ளது.

எனவே இங்கிலாந்தைப் பொறுத்தவரையில் காரணங்களைக் கொடுப்பது நீதிமுறை மீளாய்வினை மேற்கொள்ள வழிசமைக்கும் என்ற கருத்தும் காரணங்களை கொடுப்பது இயற்கை நீதிக் கோட்பாட்டின் ஒரு பகுதி என்பதும் வழக்கினை அடிப்படையாகக் கொண்டே வளர்ச்சி யடைந்து வந்துள்ளது.

அடுத்ததாக தென்னாபிரிக்காவினை நோக்கும் பொழுது **King William's Town Transitional Local Council Vs Borde Alliance Tori Association (BATA) 2002 (4) SA 152 (5)** என்னும் வழக்கில் Jones J என்பவர் TLC ஆனது BATA இன் தரத்தை மாற்றி வேறோர் இடத்தில் வைப்பதற்கு South Africa இன் அரசியலமைப்பில் உள்ள Bills of rights என்னும் தலைப்பின் பிரிவு 33(2) இன் படியே செய்துள்ளது என்றும் எனவே இங்கும் காரணங்களை வழங்க வேண்டும் என்ற கோட்பாடு தெளிவாக பின்பற்றப்பட்டுள்ளது என்றும் அந்த வகையில் இயற்கை நீதிக் கோட்பாடானது பின்பற்றப்பட்டுள்ளது என்றும் அந்த வகையில் இயற்கை நீதிக் கோட்பாடானது மீறப்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

மேலும் தென்னாபிரிக்காவில் Promotion of Administrative Justic Act இன் பிரிவு 5 இல் நிர்வாக அதிகாரி தான் எடுத்த முடிவிற்கு காரணம் வழங்க வேண்டுமெனக் கூறுகின்றது.

எனவே தென்னாபிரிக்காவினைப் பொறுத்தவரையில் நீதிமுறை மீளாய்விற்குக் காரணம் வழங்க வேண்டுமென்பது வழக்குகளின் மூலமும், சட்டங்களின் மூலமும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளமை

அந் நாட்டுச் சட்டத்தின் தெளிவான தன்மையை விளக்குகின்றது.

இறுதியாக இலங்கையினை நோக்கும் பொழுது காரணங்களை வழங்கினால்தான் நீதிமுறை மீளாய்வினை மேற்கொள்ளலாம், இல்லாவிடின் இது இயற்கை நீதிமுறைக் கோட்பாட்டினை மீறுகின்றது என வெளிப்படையான சட்டம் இல்லாவிட்டாலும் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்புரை 12 (1) நீதிமுறை மீளாய்விற்குக் காரணம் வழங்க வேண்டுமென்பதை மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்கு 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தின் ஏனைய உறுப்புரைகளான 126 (1), 140 என்பன வலுச்சேர்ப்பனவாக உள்ளன.

மேலும் நீதிமுறை மீளாய்வு தொடர்பாக High Court of the Provinces (Special Provisions) Act No. 19 of 1990 இன் பிரிவு 8 (1) உம் கூறுகின்றது.

அதே நேரம் Butchers Ordinance No.09 of 1893, Welfare Benefits Act No.24 of 2002 Poor Relief Act No 32 of 1985 போன்றன நீதிமுறைமீளாய்விற்கு காரணங்களை வழங்கத் தேவையில்லை எனக் கூறினாலும் தீர்க்கப்பட்ட வழக்குகள் காரணங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் இல்லாவிட்டால் 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்புரை 12(1) மீறப்படும் என்பதனையும் வலியுறுத்தி நிற்கின்றன.

**<u>Karunadasa Vs Unique Gem Stones Ltd, and others 1997. 1SLR 256</u>**

என்ற வழக்கில் உயர் நீதிமன்ற நீதிபதியான Justice Fernando ''தனிப்பட்டவர் காரணம் கொடுக்கத் தவறினால் இயற்கை நீதிக் கோட்பாடு மீறப்பட்டுள்ளது'' என்றும் "நீதிமன்றம் காரணம் கொடுக்கத் தவறினால் அங்கே தற்றுணிவான நியாயமற்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. என்றும், அவ்வாறு காரணம் கொடுக்கத் தவறுதல் உறுப்புரை 12 (1) இனை மீறுகிறது'' எனவும் கூறியுள்ளார்.

**<u>Lanka Mulfi Moulds (Pvt) Ltd Vs Commissioner for Labour SCA No.60/2001</u>**

இவ் வழக்கினையும் ஆராய்ந்த Justice Fernando Karunadasa வழக்கினை எடுத்துக்காட்டி அதே போல் இங்கும் காரணங்களை வழங்குவதன் மூலமே சிறந்தவொரு நீதிமுறை மீளாய்வினை மேற்கொள்ளலாம் எனக் கூறியுள்ளார்.

எனவே இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும் பொழுது சிறந்தவொரு நீதிமுறை மீளாய்வினை மேற்கொள்ள வேண்டுமாயின் கட்டாயம் காரணம் வழங்கப்பட வேண்டு மென்றும் அவ்வாறு வழங்குவதன் மூலம் சிறந்தவொரு நீதிமுறை மீளாய்வினை மேற்கொள்ளலாம். சட்டத்தால் ஒவ்வொரு மனிதனையும் பாதுகாப்பதோடு சட்டத்தையும் பாதுகாக்கலாம். தன்னிச்சையாக, தற்றுணிவின்படி வழங்கப்பட்ட அதிகாரத்தினைப் பிரயோகித்தலைத் தடுக்கலாம். மக்களுக்கு நிர்வாக அதிகாரிகள் மீது அவர்களது நடவடிக்கைகள் மீது நம்பிக்கையைக் கூட்டலாம். சட்டத்தின் நீதித்துறையின் தூய்மையினை வெளிப்படுத்தலாம் போன்ற பல்வேறு செயற்பாடுகளை ஊக்குவிக்கலாம். இதன் மூலம் நீதித்துறையிடம், மக்களிடையே இருக்கின்ற நெறிமுறையான எதிர்பார்ப்பானது நிறைவேற்றப்படுகின்றது. எனவே நீதிமுறை மீளாய்விற்கு காரணங்கள் வழங்கப்படுதலானது அந்நீதிமுறை மீளாய்வினை மேற்கொள்வதற்கு உறுதியான தளமாக விளங்குகின்றன என்பதற்கு தீர்க்கப்பட்ட வழக்குகள் உலகளாவிய ரீதியில் என்றென்றும் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

# பித்துநிலை எதிர்வாதமாக...

ஷோபனா - அசோகதாசன்
இலங்கை சட்டக்கல்லூரி இடைநிலை ஆண்டு

இலங்கில் பெரும்பான்மையான குற்றங்கள் தண்டனைச் சட்டகோவையில் உள்ளடக்கப்பட்டடிருக்கின்றன. இதில் குற்றங்கள் கூறப்பட்டதோடு அதற்குரிய தண்டனைகளும் கூறப்பட்டும் காணப்படுகின்றன. ஆயினும் தண்டனைச் சட்ட கோவையின் IV ஆம் அத்தியாயம் பொதுவான விதிவிலக்குகள் பற்றி குறிப்பிடுகின்றன. இது பிரிவு 69 தொடக்கம் பிரிவு 99 வரை கூறுகின்றது. இந்த விதிவிலக்குக்கு உட்பட்டு ஒரு செயல் செய்யும் போது அது குற்றமாக கருதப்பட முடியாது எனக் கூறுகின்றது.

அதில் பிரிவு 77 இன் பிரகாரம் ஒருவர் சித்த சுவாதீனமற்ற நிலையில் ஒரு செயலை செய்யும் போது அது தவறாகாது எனக் கூறப்படுகிறது. அதாவது பிரிவு 77 'செயலொன்றை செய்யும் நேரத்தில் சித்த சுவாதீனமின்மை காரணமாக அச் செயலில் தன்மையினையேனும் அல்லது தான் செய்வது பிழையானது அல்லது சட்டத்துக்கு முரணானது என்பதையேனும் அறிந்து கொள்ள இயலாத ஆளொருவரினால் செய்யப்படும் எதுவும் தவறாகாது' என கூறப்படுகிறது. இதன் படி அதாவது இந்த பிரிவின் பிரகாரம் பின்வரும் கூறுகள் இன்றியமையாததாக இருந்தாலே ஒருவர் செய்யும் செயல் தவறாகாது (அதாவது அவருக்கு பாதுகாப்பு உண்டு என கூறுகிறது)

1. பித்தநிலை இருக்க வேண்டும்
2. செயலின் தன்மை அறியாது இருக்க வேண்டும்.
3. செய்யும் செயல் தீங்கு விளைவிக்கும் என தெரியாது இருக்க வேண்டும்.
4. செய்யும் செயல் சட்டத்துக்கு முரணானது செயல் என தெரியாது இருக்க வேண்டும்.

என்ற கூறுகள் காணப்பட்டால் மட்டுமே ஒருவர் பித்துநிலையை எதிர்வாதமாக கோரி நிரபராதி ஆக முடியும். மக்னாட்டான் வழக்கை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட அடிப்படைக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டே எங்கள் தண்டனைச் சட்டக் கோவை அமைந்து காணப்படுகின்றது.

இந்த வழக்கில் மெக்னாட்டான் என்பவன் ஒரு சோக குணவியல்பு கொண்டவன். இவர் in sominia என்ற துாக்கமின்மை நோயினாலும் தலை வலியினாலும் மேலும் பாதிக்கப்பட்டிருந்தார். இப் பாதிப்பினால் பொலிஸ், ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தினர், Doric party யினர் என்போர் தன்னை சித்திரவதை செய்கிறார்கள் என நம்பினார். இவற்றுக்கு விடிவு காணவென பிரதமரான Sir Robert Peel என்பவரை கொல்லுவதாக நம்பி அவரது காரியதரிசி Drunmond peal

என்பவரை சுட்டுக் கொன்றார். அவருக்கு எதிரான வழக்கில் மனநோயென்ற பாதுகாப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பினால் ஏற்பட்ட கொந்தளிப்பை அடுத்து பிரபுக்கள் சபையின் தீர்மானத்தினால் எல்லா நீதிபதிகளும் சபைக்கு அழைக்கப்பட்டு அவர்களிடம் 5 கேள்விகள் கொடுக்கப்பட்டன. அவர்களில் பெரும்பான்மையினர் கொடுத்த பதிலின் சாரமே 'மக்னாட்டான் விதி' அவை பின்வருமாறு

1. ஜுரர்கள் திருப்தி பெறுமாறு முரண்பாடான கருத்து ஏதேனும் நிரூபிக்கப்படும் வரையில், ஒவ்வொரு மனிதனும் புத்தி சுவாதீனம் உடையவனாகவே கருதப்படுவான்

2. புத்தி சுவாதீனமற்ற நிலையை ஒருவன் எதிர்வாதமாக பயன்படுத்த வேண்டுமெனின், அவன் அக்குற்றத்தை புரியும் போது மூளை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளான் என்றும், அச் செயலின் தன்மை அறியாதவனாக உள்ளான் என்றும் நிருபிக்க வேண்டும்.

3. குற்றம் சாட்டப்பட்டவன் தனது செயல் சட்டத்துக்கு முரணானது என அறிந்திருந்தால் அவன் தண்டிக்கப்படுவான்.

4. பித்து நிலையில் ஏற்பட்ட குழப்பம் முழுத் தடுமாற்றமானதாக இருப்பதற்கான சூழ்நிலைகள் இருந்தால் மட்டுமே அவனுக்கு விதிவிலக்கு உண்டு.

5. குற்றவாளியை இதற்கு முன் கண்டிராத ஒரு மருத்துவ சாட்சியிடம் குற்றவாளி சித்த சுவாதீனமற்றவரா என வினாவக் கூடாது.

மேலே கூறப்பட்ட விதியானது பிரிவு 77 உடன் அதாவது அதன் மூலக்கூறுடன் பெருமளவிற்கு ஒத்ததாக உள்ளதை காணலாம். அதாவது மூளை நோயினால் பாதிக்கப்பட்டிருத்தல், செயலின் தன்மை அறியாதவனாக இருத்தல், சட்டத்துக்கு முரணானது என அறியாது இருத்தல் என்பதாகும். ஆயினும் மக்னாட்டான் விதி decease of mind ஐ பற்றி கூறுவதாக அமையும் வேளை அதாவது இவ்வார்த்தை மூளையில் நோய் உள்ளதனால் பாதிக்கப்பட்டோரை தவிர ஏனைய வழிகளில் உள்ளடக்க வில்லை. ஆனால் இலங்கையில் Unsoundness என்ற வார்த்தை பாவிக்கப்படுகிறது.

**பித்து நிலையில் இரண்டு வகை உண்டு**

1. மருத்துவ ரீதியான பித்து நிலைமை (Medical insanity)

2. சட்டரீதியான பித்து நிலைமை (Legal insanity)

மருத்துவரீதியான பித்து நிலை எனும் போது ஒருவன் மருத்துவரீதியாக சில வகை மனநோயை கொண்டிருக்கலாம். ஆனால் நீதிமன்றம் அனேகமாக அத்தகைய பித்துநிலையை எடுப்பது அரிது. ஏனெனில் நீதிமன்றம் சட்டரீதியாக பித்து நிலையையே நோக்கும். அதாவது அந்த செயல் செய்யும் போது அந்த செயலில் தன்மையின் விளைவுகளை அறிந்திருந்தானா, அது சட்டத்துக்கு முரணானது என்பதை அறிந்திருந்தானா என்பதேயே முக்கியமாக பார்க்கும். மருத்துவரீதியான பித்தில் Doctors அவன் மனநிலை சரியில்லாதவன் என கூறினாலும் சட்டம் அவன் அந்த செயலை செய்யும் போது எவ்வாறு இருந்தான் என்பதையே நோக்கும். ஆயினும் சில வேளைகளில் மருத்துவரீதியான பித்து நிபுணத்துவ சாட்சி கொண்டு நிரூபிக்கலாம்.

* <u>Lakshman Dagadu</u> (1886) இவ் வழக்கு சட்டரீதியான பித்து நிலைமையின்

முக்கியத்துவத்தை விளக்குகிறது. இதில் குற்றவாளி கடுமையான காய்ச்சலின் காரணமாக மயக்கமும் தடுமாற்றமும் கொண்டான். அப்போது தன் குழந்தையின் அழுகுரல் கேட்டு அவர்கள் மீது வெறுப்பு கொண்டு அவர்களை கொன்று விடுகிறான். இங்கு மருத்துவ ரீதியான சோதனைகளை மேற்கொண்டால் அவனுக்கு ஏற்பட்ட பயங்கர காய்ச்சலினால் புத்தி தடுமாற்றம் ஏற்பட்டிருப்பது என்பது நிருபிக்கப்படலாம். ஆனால் சட்டரீதியாக அவன் அச்செயலை செய்யும் போது அச் செயலின் தன்மை மற்றும் விளைவை அறியும் திறன் பெற்றிருந்தான். என்பதற்கு சாட்சியம் இருந்தது ஆகவே அவன் தண்டிக்கப்பட்டான்.

* Jailal vs Delhi Adminstration (AIR| 1969 SC 19) என்ற வழக்கில் ஜெய்லால் என்பவன் தனது அண்டை வீட்டில் உள்ளவர்களை கத்தியால் கொலை செய்து விட்டு அக்கத்தியை எங்கோ மறைத்து வைத்துவிட்டான். பிறகு பொலிஸார் அவனைப் பிடித்து விசாரணை செய்ததில் தான் செய்த கொலையை மறைப்பதற்காக மிக சாதுர்யமாக பதிலளித்தான். இவையெல்லாம், அவன் அந்த கொலையை குற்றம் என அறிந்தே நல்ல மனநிலையுடன் செய்துள்ளான். என்பதை தெளிவாக காண்பித்தது. ஆனால் இந்நிகழ்ச்சிக்கு பிறகு அவனுடைய மனநிலை பாதிக்கப் பட்டது. ஜெய்லாலை பரிசோதித்த மனநோய் மருத்துவர், அவனுக்கு மூளை மனநோய் (Schizophrenia) ஏற்பட்டுள்ளது எனவும் தற்போது குணமடைந்து விட்டது எனவும் சாட்சியம் அளித்தார். ஆனால் ஜெய்லால் கொலை செய்யும் பொழுது எந்த மனநோயாலும் பாதிக்கப் படவில்லை. விளைவுகளை அறிந்தே கொலை செய்துள்ளான். ஆகவே இந்திய தண்டனை சட்டக்கோவைப் பிரிவு 84 இன் கீழ் (இலங்கையில் பிரிவு 77) பாதுகாப்பு பெறவியலாது என கூறி நீதிமன்றம் அவனை தண்டித்தது.

மேலே கூறிய வழக்குகளிலிருந்து எமக்கு மருத்துவரீதியான பித்துக்கும் சட்டரீதியான பித்துக்கும் வித்தியாசம் தெளிவாக தெரிகிறது. ஒருவனுக்கு குற்றப் பொறுப்பு சுமத்த சட்டரீதியான பித்து எவ்வளவு முக்கியமானது என்பதும் தெளிவாகின்றது.

அடுத்து பித்து நிலையில் உள்ளவர்களை 4 வகைகளாக பிரிக்கலாம்

(1) மூடன் (idiot),
(2) சுகவீனத்தின் காரணமாக புத்தி இழந்தவன் (one made non compose mentis),
(3) பித்தன் (Lunatic), அல்லது பைத்தியக்காரன் (mad man),
(4) மட்டற்றகுடியினால் ஏற்படுகின்ற பித்து

சாதாரண குடிபோதையில் விளையும் செயலுக்கு குற்ற பொறுப்பு உண்டு. ஆனால் மட்டற்ற குடி பழக்கத்தால் பித்து பிடித்து (சித்தபிரமை) எது சரி, எது தவறு என்று பிரித்துணரும் திறன் இழந்தவனுக்கு குற்ற பொறுப்பு இல்லை. மட்டற்ற குடியினால் நிரந்தரமாகவோ அல்லது விட்டுவிட்டோ பித்து நிலை ஏற்பட்டால், அது வேறு காரணிகளுக்காக விளையும் பித்து நிலைமை போன்றே கருதப்பட்டு அவனது குற்ற செயலுக்கு விலக்கு வழங்கப்படுகிறது. குடியினால் ஏற்படும் பித்து என்பது போதை வஸ்துக்களை உபயோகிப்பதால் ஏற்படும் பித்து நிலைமையை கருதும். Sakharam Vaid Ramji (1890) என்ற வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவன் கஞ்சா என்ற போதை வஸ்துவுக்கு அடிமையானவன். அவன்

மனைவி, மக்களுடன் வேறு கிராமத்துக்கு போக விரும்பியதை அவனது மனைவி மறுத்தாள். சச்சரவு ஏற்பட்டு மனைவியும், மக்களையும் கொன்று விடுகிறான். இந்த வழக்கில் கஞ்சா புகைக்கும் பழக்கத்தினால் சிந்தை கலங்கி தான் செய்வது குற்றம்தானா என்று அறிய முடியாத அல்லது தன்செயலின் தன்மை என்ன எனப்பகுத்துணரும் திறனற்ற நிலை ஏற்பட்டிருந்தால் மட்டும் குற்றம் சாட்டப்பட்டவனுக்கு பாதுகாப்பு உண்டு என முடிவாகியது.

இவற்றை கொண்டு பார்க்கும் போது பிரிவு 77இன் பிரகாரம் பித்துநிலையை எதிர்வாதமாக எடுத்து பாதுகாப்பு பெற வேண்டுமாயின், அவர் செயலின் தன்மை விளைவுகளையும், அது சட்டத்துக்கு முரணானது, பிழையானது என அறியாது செய்தால் மட்டுமே பாதுகாப்பு பெற முடியும். தண்டனைச் சட்டகோவையின் அத்தியாயம் IV இல் கூறப்பட்டுள்ள பொதுவான விதிவிலக்கைக் கொண்டு ஒருவர் பாதுகாப்பு நாட விரும்பினால் அதனை நிரூபிக்கும் பொறுப்பு அவரையே சார்ந்தது. அதாவது பிரிவு 77 இன் பிரகாரம் பித்துநிலை காரணமாக அந்த செயலை செய்தேன் எனக் கூறும் ஒருவரே பித்துநிலையினால் தான் அந்த செயலை செய்தார் என்பதை நிரூபிக்க வேண்டியவராவார்.

King v James Chandrasekara (44NLR Page 97) இந்த வழக்கில் இந்த விடயம் விரிவாக ஆராயப்பட்டது. அதாவது ஒருவர் செய்த தவறுக்கு பொதுவான விதிவிலக்கு எதிர்வாதமாக எடுக்க வேண்டுமாயின் அவர் தான் அதனை நிரூபிக்க வேண்டும் என Evidence ordinance குறிப்பிடுகிறது. Evidence ordinance Sec 101, 105 என்பன இதனை பற்றி கூறுகிறது. சாதாரணமாக குற்றவியல் வழக்குகளில் நிரூபிக்கும் தராதரமானது உயர்ந்ததாகும் அதாவது நியாயமான சந்தேகத்துக்கப்பால் (beyond the reasonable doubt) ஆனால் இங்கு நிரூபிக்கும் தராதரம் நிகழ்தகவு சமநிலை (Preprondrance of evidence) அடிப்படையில் ஆகும் என இந்த வழக்கில் தெளிவாக கூறப்பட்டது.

இவற்றை வைத்து பார்க்கும் போது தண்டனை சட்டக்கோவை சில மனநிலையில் சில செயல்களை செய்யும் போது பொதுவான விதிவிலக்கு மூலம் பாதுகாப்பு வழங்குகிறது. அதன் பிரகாரம் பிரிவு 77 ஐயும் எதிர்வாதமாக எடுப்பாராயின் அவர் பிரிவு 77 மூலக்கூறுகளை முழுமையாக திருப்திப்படுத்தினாலே பாதுகாப்புப் பெற முடியும்.

# சுயநிர்ணய உரிமை

**நிருஸ்யா செல்வநாதன்**
**இரண்டாம் வருடம்**
**இலங்கைச் சட்டக் கல்லூரி**
**இறுதி வருடம்,**
**கலைப்பீடம் - கொழும்பு பல்கலைக்கழகம்**

## சுய நிர்ணய உரிமை வரலாற்று ரீதியான - நோக்கு

"சுயநிர்ணய உரிமை என்ற எண்ணக்கரு கடந்த நூற்றாண்டில் முக்கியத்துவம் பெற்றதொன்றாக காணப்படுகின்றது. ஏனெனில் 1945 வரை உலகில் காணப்பட்ட முக்கியமான விடயம் காலனித்துவமாகும். அதாவது இக்காலப்பகுதியில் சுய நிர்ணய உரிமை என்ற சொற்பிரயோகம் இருந்திருக்கவில்லை. காலனித்துவம் இருக்கும் வரை பிரதானமாக காணப்பட்ட விடயம் தேசியவாதமாகும். தேசியவாதம் பிரதானமாக அரசியல் கோட்பாடாக மட்டுமன்றி அரசியல் உணர்வாகவும் காணப்படுகின்றது. காலனித்துவத்திற்கு எதிரான போராட்டமே தேசியவாதமாகும். இக்காலப்பகுதியில் இனம் நோக்கப் படவில்லை, ஒரு நாடு ஒரே நாட்டவர் என்ற உணர்வே காணப்பட்டது. 1945 களில் நாடுகள் காலனித்துவத்திலிருந்து விடுதலை பெறத் தொடங்கியவுடன், தேசத்தைக் கட்டியெழுப்புகின்ற செயற்பாட்டின் விளைவாக, தேசியவாதம் என்ற உணர்வு மக்களிடையே படிப்படியாக குறைந்து இனத்துவம், இனவாதம் என்ற உணர்வு மேலோங்கத் தொடங்கியது. ஏனெனில் தேசத்தைக் கட்டியெழுப்புகின்ற செயற்பாட்டில் பல குழுக்களின் நலன்கள், உரிமைகள் தொடர்பில் பாரபட்சம் காட்டப்பட்டமையால் இனரீதியான உரிமைப்போராட்டங்கள் உருவாகத் தொடங்கின. குறிப்பாக 1990ம் ஆண்டுவரை சர்வதேசரீதியில் பாரிய பிரச்சனையாக விளங்கிய கெடுபிடியுத்தபோரினால், சர்வதேசரீதியாக இனமோதல்கள் கவனத்திற் கொள்ளப்படவில்லை. 1990 இல் கெடுபிடியத்த முடிவானது, இதில் மாற்றத்தை உருவாக்கியது. இவ்வாறாக 1945 இல் இருந்து கூடிச் சென்று 1990 இன் பின் தீவிரமடைந்த இனமோதல் பாரிய அளவில் சர்வதேச சமூகத்திற்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியது.

இவ்வகையில் ஆக்கிரமிப்பு, காலனித்துவம் போன்றவற்றிற்கு எதிராக கிளர்ந்தெழுந்த தேசிய உணர்வு, போராட்டம் என்பன இனவாதம், சுய நிர்ணய உரிமைத் தோற்றத்திற்கு காரணமாக அமைந்தன எனலாம். வளர்ச்சியடைந்த சமூகங்கள் (நாடுகள்) தமது மேலாதிக்கத்தினை ஏனைய சமூகத்தின் மீது திணிக்கத் தொடங்கின; பாரபட்சம் காட்டத் தொடங்கின. சற்றுக்காலங்கழித்து விழிப்புற்று எழுந்த ஒடுக்கப்பட்ட சமுகம் தமது உரிமைக்காக குரல் கொடுத்த போது, அதனை நசுக்க முற்பட்டது. அதன் போது போராட்டம் வெடித்தது இதன் காரணமாக சுய நிர்ணய உரிமை முன்வைக்கப்பட்டது. தோற்றம் பெற்றது. 1776 இல் நிகழ்ந்த அமெரிக்க சுதந்திரபோர் இதனை ஆரம்பித்து வைத்தது எனலாம். தேசிய ஒடுக்குமுறையில் இருந்து விடுபட்டு தனி அரசை அமைத்துக்கொண்டு வாழும் உரிமைக்கான போராட்டம் முதன் முறையாக ஐரிஸ் மக்களிடம் தான் உதயமானது. இப்போராட்டம் தான் சுய நிர்ணய உரிமையை உலகிற்கு அறிமுகப்படுத்தியது. இது தான் போராட்டத்தின் மூலம் சுய நிர்ணய உரிமையினைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதை பறை சாற்றியது. 19ம் நூற்றாண்டின் பின்புதான் இனமோதல்களும்,

தேசியப்போராட்டமும் உக்கிரமடைந்து சுய நிர்ணய கோட்பாடு முன் எப்போதுமில்லாத அளவு வளர்ச்சியடைந்தது.

உலகில் இன்று பல சுய நிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்ளும் முகமாக பல போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் சூடான் இனமோதல், ஈராக்கிய போராட்டம், அங்கோலா, பாலஸ்தீனிய போராட்டம், காஷ்மீர் போராட்டம் போன்றவற்றினைக் குறிப்பிடலாம் அதாவது பல நாடுகள் சுய நிர்ணய உரிமைப்போராட்டத்தின் மூலம் தங்கள் சுய நிர்ணய உரிமைகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர். உதாரணமாக செக்கோசெலவாக்கியா பிரிந்தமை, கிழக்கு திமோர் விடுதலை, ஆச்சே மாநில சுய நிர்ணய அங்கீகாரம் போன்றவற்றினைக் குறிப்பிடலாம். எனவே இன்றைய உலகில் போராட்டம் மலிந்து காணப்படுகின்றது. வன்முறையை வன்முறையால்தான் வெல்ல முடியும் என்ற எண்ணத்தின் காரணமாக இன முரண்பாடும், தேசிய எண்ணங்களும் இன மோதலையும், ஆயுதப்போராட்டத்தில் கொண்டு சென்று விடுகின்றது. சுய நிர்ணய உரிமைப் போராட்டம பெரும்பாலும் ஆயுதப் போராட்டமாகவே உள்ளது.

**சுய நிர்ணய உரிமை – எண்ணக்கரு ரீதியான அறிமுகம்**

சுய நிர்ணய உரிமை என்பது ஒவ்வொரு தேசிய சமூகமும், இனக்குழுவும் தனது அரசியல் தலைவிதியை, தான் சுதந்திரமாக வாழும் அரசியல் வடிவத்தைத் தானே தீர்மானிக்கும் உரிமை உடையது என்பதனைக் குறிக்கின்றது. முதலில் சுய நிர்ணய உரிமை என்றால் என்ன என்பது தொடர்பான ஒரு வரைவிலக்கணத்தினை நோக்கினால் இந்த எண்ணக்கருவை மிகத் தெளிவான முறையில் அறிந்து கொள்ளலாம். எலிசபெத் ஐமிலா கோன் என்பவர் சுயநிர்ணயம் தொடர்பாக மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு எண்ணக்கருவினை முன்வைத்தார். அதாவது **சுயம் - நிர்ணயம் - உரிமை (Right – Self Determination)** என்ற தனித்தனி சொற்கள் அங்கத்தினைத் தெளிவாக விளங்கிக் கொள்வதன் மூலம் சுய நிர்ணய உரிமை புரிந்து கொள்ளலாம்.

**சுயம்** - என்பது ஒரு தேசிய சமூகம் சுயமாக தனது எதிர்காலம் எப்படி இருக்கலாம், தான் சுதந்திரமாக வாழக்கூடிய அரசியல் வடிவம் எதுவாக இருக்கலாம் என்பதைப் பற்றி தானே சுயமாக முடிவெடுத்தல். இதில் யாரும் தலையிட முடியாது என்பதனையும் குறிக்கின்றது.

**நிர்ணயம்** - என்பது அதனை நிர்ணயிப்பது வேறு யாருமல்ல அந்தந்த தேசிய சமூகங்களே என்பதைக் குறிக்கின்றது.

**உரிமை** – என்பது இது ஒவ்வொரு தேசியத்திற்கும் உள்ள பிறப்புரியையே என்பதாகும்.

எனவே மேற்கூறிய எண்ணக்கருவில் இருந்து சுய நிர்ணயம் உரிமை என்பது ஒவ்வொரு தேசிய சமூகமும் தனது சுயமாக வாழும் அரசியல் உரிமையைத் தானே தீர்மானிக்கும் உரிமையினைக் குறித்து நிற்பதுடன் பிரிந்து போகும் உரிமையினை உள்ளடக்கியதாகவும் உள்ளதுடன் ஒரு சமூகம் நினைத்தால் எப்போதும் தனது சுய நிர்ணய உரிமையினை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்பதனை எடுத்துக் கூறுகின்றது. சுய நிர்ணயம் தொடர்பாக ஹரிவோரன் (Harry Varon) "சமூகத்தின் சுயாதிபத்தியத்திற்குப் பதிலாக தனி மனிதர்களின் சுயாதிபத்தை வலியுறுத்துதல்"என்றார். எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமாகக் காணப்படுவது ஆண்டனியோ கெசாசி (Antonic Cassese) என்பவர் முன்வைத்த எண்ணக்கருவாகும். இவர் எழுதிய நூலான மக்களின் சுய நிர்ணய உரிமை (Self Determination of Peoples) சர்வதேச உலகில் மிகப்பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது. இந்நூலில் உள்ளக சுய நிர்ணய உரிமை, வெளியக சுய நிர்ணய உரிமை என இரண்டாக பிரித்துள்ளார். இந்த பிரிப்புத்தான் பல சிக்கலினை ஏற்படுத்தியது எனலாம். அதனை சற்று நோக்குவது சிறப்பானது எனலாம்.

**உள்ளக சுயநிர்ணய உரிமை** என்னும்போது பிரிந்து செல்லாமல் அரசுக்குள்ளேயே அதில் வாழும் சமூகங்களின் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளும் உரிமையைக் குறிக்கின்றது. உதாரணமாக :- சீனாவில் ஹோம்சே (Hoche) மக்களின் சுய நிர்ணய உரிமை அங்கீகாரம். **வெளியக சுய நிர்ணய உரிமை** என்பது வெளிவிவகாரம், சர்வதேச வர்த்தகம் போன் சுதந்திரம் பொருந்திய சமூகம் இணைந்து கொள்வதற்கான உரிமையினைக் குறிக்கின்றது. இதில் பிரிந்து செல்லலும் உரிமையும் உண்டாகின்றது. உதாரணமாக சுவிடனிலிருந்து நோர்வே பிரிந்தது, கியூபெக் மாநிலத்தின் உரிமை போன்றவற்றினைக் குறிப்பிடலாம். இன்றைய நிலையில் இந்த வெளியக சுய நிர்ணய உரிமையும் பிரிந்து செல்லும் உரிமையும் ஏற்றுக்கொள்ள படாமலே உள்ளது.

1859ம் ஆண்டு "ஜோன் ஸ்வோல்ட்மில்" என்பவர் தனது நூலில் ஒன்லிபர்ட்டி என்ற நூலில் எல்லா அரசிற்கும் குழுக்களுக்கும். தங்களின் அதிகாரத்தினை தாங்களே நிர்ணயித்துக் கொள்ள உரிமை உண்டு என்று கூறினார். கார்ல்கவுட்ஸ்சி இவரது தலைமையில 1896ம் ஆண்டு இலண்டனில் கூடிய சர்வதேச காங்கிரஸ், தேசியத்தின் சுய நிர்ணய உரிமையினை அங்கீகரித்துத் தீர்மானம் நிறைவேற்றிட உலக அளவில் ஒரு விவாதத்தினைத் தோற்றுவித்தார். 1ம் உலகயுத்த போரின்போது சுய நிர்ணய உரிமை பற்றி உலகத்தலைவர்கள் சிந்திக்க முன்வந்தனர். குறிப்பாக ரஷ்யாவின் லெனின் அமெரிக்காவின் வில்சன் போன்றவர்களைக் கூறலாம். லெனில் இதனை புரட்சியுடன் இணைத்துப் பார்த்தார் வில்சன் அதனை ஜனநாயக சீர்திருத்த கண்ணோட்டத்தில் நோக்கினார். லெனில் காலனித்துவ நாடுகள் விடுதலையே சுயநிர்ணய உரிமை என்றாா. வூட்ரோ வில்சன் முன்வைத்த 14 அம்ச திட்டமும் இதனைத்தான் குறிப்பிடுகின்றது. இதில் தேசியங்களின் சுய நிர்ணய உரிமையும் காலனித்துவ நாடுகளின் சுதந்திரத்துடன் இணைந்து இருந்தது. இதன் பின்னர் 1919ம ஆண்டு ஆபிரிக்க நாடுகளின் காங்கிரஸ், கூடி காலனித்துவ நாடுகளின் உரிமையினை முன்வைத்து. 1919ம் ஆண்டு மேற்கொள்ப்பட்ட வர்சேயில் ஒப்பந்தத்திலும் சுய நிர்ணய உரிமை பிரகடனப் படுத்தப்பட்டது. ஐ.நாவின் முன்னோடியான தேசங்களின் லீக் (League of nation) சுய நிர்ணய உரிமையினை அங்கீகரித்தது. 1926ம் ஜெனிவா மாநாடு மேலும் ஒரு படிக்கல்லாக அமைந்தது எனலாம். 1945ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டதன் பின்னர்தான் சுய நிர்ணய உரிமை நிறுவனப்படுத்தப்பட்ட கொள்கையாக மாற்றம் அடைந்தது எனலாம். 1945ம் ஆண்டு ஐ.நா.சபை சாசனத்தில் 19 அதிகாரங்களையும் 111 வாசகங்களையும் கொண்டிருந்த போதும் இரண்டு இடங்களில் மாத்திரம் தான் வெளிப்படையாக சுய நிர்ணய உரிமை பற்றிக் கூறப்பட்டது. 1960ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றிய 1514(xv) தீர்மானத்தில் அரசின் சமூக பொருளாதார சமூக கலாச்சார அபிவிருத்திக் கோட்பாட்டில் சுய நிர்ணய உரிமை அனைத்து மக்களுக்கும் உண்டு என்பதைத் தெளிவாக குறிப்பிட்டுள்ளது. ஆனால் பிரிந்து செல்லும் உரிமையினை அது எப்போதும் சுட்டிக்காட்டவில்லை. இன்றைய காலத்தில் சுய நிர்ணய உரிமை என்பது மிகவும் வளர்ந்து வரும் எண்ணக்கருவாகவே உள்ளது. 1998ம் ஆண்டு யுனெஸ்கோ வினால் பாசிலோனா நகரில் நடத்தப்பட்ட சர்வதேச சுய நிர்ணய உரிமை தொடர்பான நிபுணர்களின் மகா நாடு மிகச் சிறந்த உதாரணமாகும். தேசிய விடுதலை, தேசிய உணர்வு என்பன ஒரு இனக்குழுவிற்கு அதிகரிக்க அதிகரிக்க சுய நிர்ணயம் தொடர்பான எண்ணக்கரு வளர்ந்து கொண்டே இருக்கின்றது.

**சுய நிர்ணயக் கோட்பாட்டின் சாத்தியமான எதிர்காலம் யாது?**

- உலகெங்கிலும் ஏறத்தாழ 7000 – 10,000 வரையான இனக்குழுக்கள் காணப்படுகின்றன சிறுசிறு பூர்வீகக் குடிகளையும் சேர்த்துக் கணக் கிட்டால் இத்தொகை மேலும் அதிகமாகும். இதனால் குழுக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பது கடினமானது. இதுவே

நடைமுறை ரீதியான சுய நிர்ணய உரிமையை வழங்குவதிலுள்ள சிக்கலாகும். 7000 குழுவுக்கும் சுய நிர்ணய உரிமை வழங்கினால் மேலும் 7000 நாடுகள் உருவாகும் எனவே, இவ்வாறு உருவாவது பொதுவான சர்வதேச முறை மையைக் கைக் கொள்வதில் சிக்கல்களைத் தோற்றுவிக்கலாம்.

❖ உலகில் தற்போது தமது சுய நிர்ணய உரிமைக்காகப் போராடும் குழுக்கள் இதர குழுக்களின் சுய நிர்ணய உரிமையை ஏற்க மறுக்கின்றன. உதாரணமாக இலங்கையில் தமிழர்கள் தமக்கு சுய நிர்ணய உரிமை இருப்பதாக கூறுவதும் முஸ்லீம்களுக்கு இல்லை என மறுப்பதுமாகும். அதாவது ஒரு சமூகம் தான் எண்ணிக்கையில் பெரும்பான்மை வகிப்பதை வைத்துக் கொண்டு தமக்குத்தான் கூடுதலான தேசிய உரிமை இருப்பதாக வாதிடுவதாகும்.

❖ சுய நிர்ணய கோட்பாட்டின்படி பிரிந்து செல்கின்ற நாடுகள் அதனைத் தக்க வைத்துக் கொள்வதிலுள்ள இயலுமை கேள்விக்குரியதாகும். இவ்வாறு பிரிந்தநாடுகள் அரசியல் பொருளாதார அதிகளில் தம்மை உடனடியாக நிலைப்படுத்திக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது. உதாரணமாக :- கிழக்குத் தீமோர் 1999 இல் இடைக்கால நிர்வாகமொன்று அமைக்கப்பட்டு 2002ன் 1வது பொதுத் தேர்தலுடன் சுதந்திர தேசமாக ஆனாலும் 2006 இல் இந்த இளைய தேசம் பெரும் அரசியல் நெருக்கடியை சந்தித்தது. இங்கு இன்னுமோர் அம்சம், சுய நிர்ணய உரிமை வழங்கப்பட்ட பின்னர் அவ்வுரிமைக்காக ஆயுதம் தாங்கிய போராளிக் குழுக்கள் சரியான வகையில் சமூகத்தினுள் உள் வாங்கப்படுவதிலும் பிரச்சி னைகள் உள்ளன.

❖ 1950, 60 களில் தேசம் தொடர்பாக இருந்த சுய நிர்ணய உரிமைக்கான கோரிக்கைகள் இன்று இன, மத ரீதியான குழுக்களுக்கானவையாக வேண்டப்படுகின்றன. எதிர் காலத்தில் இக் கோரிக்கைக்கானபதப்புக் குறைவடையலாம். அதாவது சாதி, நகரம், கிராம என்ற பல வகைப் பிரிவுகளாக மாற்றமடையலாம். இந் நிலை இன்றுள்ள உலக முறையை மேலும் சிக்கலாக்கலாம். இது உலக எல்லையை வரையறுப்பதிலும் பிரச்சி னையை தோற்றுவிக்கலாம்.

❖ சர்வதேச ரீதியில் சுய நிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளவும் நடைமுறைப்படுத்தவும் கூடிய தகுந்த பாதுகாப்புக்கள் இல்லாமை, ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நீதிமன்றத்தில் கூட சுய நிர்ணய உரிமையைச் சாதகமாக பயன் படுத்தக்கூடிய சட்ட வாய்ப்புகள் அரிதாகவே உள்ளன. ஐக்கிய நாடுகள் சபை என்பதும் அரசுகளையே பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. ஒவ்வொரு நாட்டிலும் எந்தவொரு தேசியம் மேலாதிக்கம் செலுத்து கின்றதோ அந்தந்த தேசியங்களின் கருத்தே ஐக்கிய நாடுகள் சபையில் எதிரொலிக்கின்றது. அத்துடன் முக்கிய தீர்மானங்களை எடுப்பதில் வல்லரசுகளின் ஆதிக்கம் அதிகமாக இருக்கின்றது. உதாரணமாக:- 1975 இந்தோனிசியா கிழக்குத் திமோர் ஒரு மாநிலமாக பிரகடனப் படுத்தியபோது ஐக்கிய நாடுகள் அமைதியாக இருந்த காரணம் அவுஸ்திரேலியா, அமெரிக்கா அதை விரும்பியமை ஆனால் 1999 இவர்களின் விருப்பத்திற்கேற்ப ஐக்கிய நாடுகள் தலையிட்டது.

எது எவ்வாறாயினும் தற்காலத்தில் சமஸ்டி முறையிலுள்ள சாதகமற்ற சில காரணிகள் (விடுதலை கோரும் மக்களின் / குழுக்களின் அங்கத்தவர்கள் திருப்தியற்ற முறையில் இருப்பதால்) காரணமாக இம்முறைக்கு மாற்றீடாக சய நிர்ணய உரிமையை முன் வைப்பது பொருத்தமானதாக அமைகின்றது.

# குற்றத்தின் பகுதியொன்றாக ''குற்ற மனம்''

*F.Madeeha Mawoon*
*(Intermediate year)*
*Sri Lankna Law College*

''குற்றம்'' (Crime) ஒன்று நடைபெற வேண்டுமாயின் குற்ற மனம் (Mens Rea), குற்றச் செயல் ஆகிய இரு அம்சங்களும் உள்வாங்கப்பட்டிருத்தல் வேண்டும். 'குற்ற மனமின்றிக் குற்றச் செயல் இல்லை' எனப்படுகின்றது. ஆரம்ப கால கட்டத்தில் குற்றவாளியின் மனம் பற்றிக் கவனத்திற் கொள்ளப்படவில்லை. அவன் எக்குற்றத் தினைச் செய்த போதிலும் தண்டனைக் குட்பட்டான். ஆனால் அன்றைய நிலைக்கும் இன்றைய நிலைக்குமிடையே பாரிய வித்தியாசம் காணப்படுகின்றது.

எமது தண்டனைச் சட்டக் கோவையில் குற்ற மனமானது பல்வேறு விதத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக Fraudulently, dishonestly, maliciously, knowingly, negligently.... போன்ற பல்வேறு சொற் பிரயோகங்களின் ஊடாகக் குற்ற மனம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

உதாரணமாகdishonestly (நேர்மையின்னை) என்பது தண்டனைச் சட்டக் கோவையில் பிரிவு 22 மூலம் குற்ற மனத்தினை எடுத்துக் காட்ட உபயோகிக்கப்பட்ட சொற்பதம் ஒன்றாகும். அதாவது wrongful gain (பிரிவு 21(1)) ஒருவரிற்கும் wrongful loss (பிரிவு 21(2)) இன்னொருவரிற்கும் ஏற்படுத்தும் நோக்குடன் ஒரு செயல் செய்யப்படும் போது அச்செயல் நேர்மையீனமாகச் செய்யப்படுகின்றது எனப்படுகின்றது. இங்கு தனக்கு உரிமையற்ற ஆதனத்தினை சட்ட விரோதமாக ஒருவர் அடைவதோடு அவ்வாதனத்தின் மீது சட்ட உரிமையுள்ளவர் சட்ட விரோதமான முறையில் அவ்வா தனத்தினை இழக்கின்றார். **Ramalingam Vs Nair 45 NLR 515** வழக்கினிலே வெள்ளாள வகுப்பினரின் வயலில் வேலை செய்வதினைத் தடுக்கும் உறுப்பினர் ஒருவர், வெள்ளாளரின் வயலில் வேலை யெ்தவரிடம் ரூபா 25/= கேட்க, அவர் மறுத்ததால் ரூபா 25/- ஐ பலாத்காரமாக எடுத்துச் சென்றமையானது wrongful gain இனைக் காசை எடுத்தவரிற்கும் wrongful loss இனை வயலில் வேலை செய்தவரிற்கும் ஏற்படுத்தியுள்ளது. எனவே இங்கு நேர்மையின்மை (dishonestly) மூலம் குற்ற மனம் வெளிப்படுத்தப்படுகின்றது. இதே போன்று **King Vs Kasperz 47 NLR 165** வழக்கினிலே wrongful gain, wrongful loss

ஆகிய இரு கூறுகளும் காணப்பட்டதால் நேர்மையின்மை என்ற குற்ற மனம் வெளிப்படுத்தப்பட்டது எனப்பட்டது.

Fraudulently என்பதன் மூலமும் குற்ற மனம் வெளிப்படுத்தப்படுகின்றது. தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 23 ஏமாற்றும் எண்ணத்துடன் (with inter to defraud) செய்யப்படும் போது fraudulently ஆகக் கருதப்படுகின்றது.

**King Vs Fernando 30 CLW 79** வழக்கினிலே பிறப்பத்தாட்சிப் பத்திரத்திலுள்ள எண்களை மாற்றியதன் மூலம் வயதை மாற்றிய மைத்தமை ஏமாற்றும் நோக்குடன் செய்யப்பட்டதால் அங்கு Fraudulently என்ற குற்ற மனம் உண்டு எனப்பட்டது.

அசட்டுத் துணிவு மூலமும் குற்ற மனம் வெளிக்காட்டப்படுகின்றது. அதாவது தான் செய்யும் செயலால் பாரதூரமான விளைவு ஏற்படும் என நன்கு அறிந்தும் அதைப் பொருட்படுத்தாமல் செய்தலாகும். Ex.சனக் கூட்டத்தினுள் வேகமாக வாகனத்தினைச் செலுத்துதல்.

பொதுச் சட்டத்தினையும் நியதிச் சட்டங்களினையும் உள்ளடக்கிய இலங்கைக் குற்றவியல் சட்டத்தில் குற்ற மனம் இல்லாத போதும் ஒருவரைக் குற்றவாளியாகக் காண முடியும். இதுவே **கடும் பொறுப்பு** (Strict liability) எனப்படுகின்றது. ஆனால் இவ்வாறு குற்றப் பொறுப்பிற்குள்ளாகும் நியதிச் சட்டமானது குற்ற மனம் பற்றிக் குறிப்பிடாத போதும் ஒருவர் குற்றித்திற்காளாக முடியும். இவ்வேளையில் தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 72 இன் கீழ் உதவி நாட முடியும். பிரிவு 72 ஆனது எந்தவொரு செயலும்,

1. சட்டப் பிழை காரணமாக அல்லாமல் நிகழ்வுப் பிழை காரணமாக
2. நல்லெண்ணத்துடன்
3. குறித்த அச்செயல் சட்டததினால் நியாயமென நிரூபிக்கப்பட முடியும் எனக் கருதிச் செய்யப்படும்போது அச்செயல் குற்றமாகாது என்கின்றது.

**Perera Vs Munaweera 56 NLR 433** வழக்கினிலே, 16 அவுன்ஸ் எடையுள்ள பாணிற்கான விலையையே 15 1/4 அவுன்ஸ் பாணிற்கும் பெற்றதாக Price Control Act இன் கீழ் வழக்கிடப்பட்டது. இங்கு குறித்த பாணை தான் உண்மையிலேயே நல்லெண்ணத்துடன் 16 அவுன்ஸ் எனக் கருதி விற்றதாகக் கடைக்காரர் கூறினார். இது சட்டப்பிழை காரணமாக அல்லாமல் நிகழ்வுப் பிழை காரணமாக நிகழ்ந்தெனக் கூறிய நீதிமன்றம் பிரிவு 72 இனை நியதிச் சட்டங்களிற்கும் பாதுகாப்பாகப் பயன்படுத்தலாம் என்றது. (He honestly and erronously believe that weight is to be in 16 aunce, so be acquitted by the court) இவ் வழக்கின் பின்னரே இலங்கையில் கடும் பொறுப்பு தொடர்பில் ஒரு சீரான விதியொன்று கடைப்பிடிக்கப்பட்டது.

**S.M.Thasthakeer Vs P.J.N.Jayasekara 75 NLR 358** வழக்கினிலே, விற்கப்பட்ட பழப்பாகில் 8.01% மட்டுமே Orange இருந்ததாகவும் மீதி வேறுவகையான உள்ளடக்கங்களைக் கொண்டதாகவுமிருந்ததால் Food and Drugs Act ஏற்பாட்டினை மீறியதாக வழக்கிடப்பட்டது. இங்கு உயர் நீதிமன்றம் தொழிற்சாலையிலிருந்து வெகு துாரத்திலுள்ள கடைக்காரரால் பழப்பாகின் உள்ளடக்கங்களை அறிய வாய்ப்பில்லை என்றும் அவருக்கு குற்றம் சுமத்த தேவையான guilty knowledge or intention இங்கு இல்லையென்றும் அவர் தான்

உண்மையிலேயே Mistake of fact காரணமாக அனைத்துப் பழ உள்ளடக்கங்களும் இருந்ததாகக் கருதியே விற்றதாகவும் கூறியது. இச்செயலானது சட்டப் பிழை காரணமாக நிகழவில்லை என்பதும் நல்லெண்ணத்துடன் விற்பனை செய்தமை குறித்தும் கவனத்திற் கொள்ளப்பட்டு பிரிவு 72 இன் கீழ் பாதுகாப்பு நாடப்பட்டது.

<u>**Munasingha Vs Peiris 74 NLR 542**</u>

வழக்கினிலே ரூபா 5.89/- பெறுமதியுள்ள பொருளை ரூபா 5.98/- இற்கு விற்றமை Price Control Act இன் கீழ் குற்றஞ் சாட்டப்பட்டது. இது கருதிச் செய்தது அல்ல என்றும் சூழ்நிலையினாலேயே ஏற்பட்டது. என்றும் கூறப்பட்டதோடு பிரிவு 72 இன் கீழ் பாதுகாப்பு நாடப்பட்டது.

பிரிவு 72 இன் கீழ் பாதுகாப்பு நாடும் போது அந்நிகழ்வு சட்டப் பிழை காரணமாக ஏற்படாதிருத்தல் வேண்டும் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

எனவே குற்றம் ஒன்று உருவாக வேண்டுமாயின் குற்ற மனம் அவசியமானது. நியதிச் சட்டமொன்று குற்ற மனம் பற்றி ஏதும் குறிப்பிடாவிட்டாலும் ஒருவர் கடும் பொறுப்பு விதியின் கீழ் குற்றப் பொறுப்பிற்கு ஆளாகலாம். இதன் போது குறிப்பிட்ட அச் செயல் நிகழ்வுப் பிழை காரணமாகவும் (mistake of fact) சட்டப் பிழை காரணமாக அல்லாமலும் (mistake of law) குறித்த செயலை நல்லெண்ணத்துடன் (bonafide) செய்யும் போதும் நிகழ்ந்ததாகக் காட்ட முடியுமாயின் குற்றப் பொறுப்பிற்கு ஆளாவதிலிருந்து தப்பிக்க முடியும்.

**2006 ஆம் ஆண்டுக் கட்டுரைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற ஆக்கம்**

# அடிப்படை உரிமை மீறல்கள்

## அகதிமுகாம் வாசியின் குரலில்

மேனகா கேசவன்
இடை நிலை ஆண்டு

*மனிதன் தாழ்த்தப்பட்ட தாயின் வயிற்றில்*
*பிறக்கும் போது சமுதாயத்தில் உள்ள எவரும்*
*அவனை மனிதனாக ஏற்பதில்லை*
*அவன் மனிதனாக வாழும் போதேனும்*
*அவனது உரிமைகள் மழுங்கடிக்கப்படுகின்றன...*
*இறைவா! இந்த சமுதாயம் உரிமை என்ற*
*மூன்று எழுத்து வார்த்தையை வாயில்*
*உரைக்க விட்டு வைக்காவிட்டால் இந்த*
*ஆதரவற்ற அகதிகளுக்கு வேறெதற்கு – இந்த உடல்,*
*உலகம், உயிர்......*

'உரிமை' என்ற மூன்று எழுத்தும் 'அகதி' என்ற மூன்று எழுத்தும் ஒன்றுடன் ஒன்று பரஸ்பரம் தொடர்பு கொண்டு விளங்குகின்றது. இங்கு அகதி என்பதற்கு பொதுப்பால் என்ற அந்தஸ்தினை பொன்மொழி போற்றும் தமிழ்மொழி வழங்கியிருந்த போதும், உரிமை என்ற அந்தஸ்தினை இந்தப் பாழாய்போன சமுதாயம் வழங்க மறுப்பதை எமது கண்ணோட்டத்தில் காண முடிகின்றது.

அகதிகள் எனப்படுவோர் ஆயுதப் போராட்டத்தில் சிக்குண்டு அவற்றிலிருந்து தப்பும் பொருட்டு அல்லது சாதாரணமாக இடம்பெறும் இம்சைகள் மனித உரிமை மீறப்படுதல் அல்லது இயல்பாகவே மனிதர்களால் செய்யப்படும் கொடுமையான செயல்கள் என்பவை காரணமாக தமது வீடுகளில் இருந்து அல்லது வாச பூமியில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள் அல்லது வெளியேறியவர்கள் ஆவார். இலங்கையின் மொத்த சனத்தொகையில் சுமார் எட்டு இலட்சம் மக்கள் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் யுத்தம் மற்றும் மனித உரிமைகள் மீறப்படுகின்றமையாலும் ஏனைய பயம் உண்டு பண்ணுகின்ற செயல்கள் காரணமாகவும் தாம் வசித்து வந்த இடங்களிலிருந்து வேறு இடங்களில் இடம்பெயர்ந்து வசித்து வருகின்றார்கள். இவ்வாறாக வெளியேற்றப்பட்டவர்களில் அதிகமானோர் இரண்டு தசாப்தங்களுக்கு அதிகமான காலமாக அவர்கள் இருந்த வசிப்பிடங்களுக்கு செல்ல முடியாமல் இருப்பதுடன் அவர்கள் நலன்புரி மத்திய நிலையங்களிலும் அல்லது அகதி முகாம்களிலும் குடும்பமாக வசித்து வருகின்றார்கள். உள்நாட்டில் இடம்பெறுகின்ற யுத்தம் காரணமாக தமது சொந்த வீடுகள், நிலபுலன்கள், தாம் இதுவரை காலமும் செய்து வந்த தொழில்களையும் இழந்து இடம்பெயர்ந்து அகதிகளாக வசித்து வருபவர்கள் ஓரங்கட்டப்படுதலுக்கும் பல இன்னல் களுக்கும் முகம் கொடுத்து வருகிறார்கள்.

இன்றைய சமுதாயத்தில் மெழுகுகளாக உருகும் அகதிகளை தீச்சுவாலையாகிய அடிப்படை உரிமை மீறல்கள் விடாது பற்றிக் கொண்டிருக்கின்றன. உரிமைகளைப் பொறுத்தவரையில், மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அவசியமான உரிமைகளே மனித உரிமைகள் என வரையறுக்கப் படுகின்றது. இவற்றுள் அடிப்படை உரிமைகள் பற்றி தற்போது நடைமுறை யிலிருக்கும் 1978ம் ஆண்டு அரசியலமைப்

பின் IIIம் அத்தியாயத்தில் 10-14 வரையிலான உறுப்புரைகள் எடுத்து ரைக்கின்றன. சமுதாயத்தில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் இவ் அடிப்படை உரிமைகளுக்கு உரித்துடையவனாவான் இவ் அடிப்படை உரிமைகளானது, ஆட்சித்துறை அல்லது நிர்வாகத்துறை நடவடிக்கைகளினால் மீறப்பட்டமை தொடர்பில் அல்லது மீறப்படவுள்ளமை தொடர்பில் உறுப்புரை 126ல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்ய உரித்துடையவராதல் வேண்டும் என உறுப்புரை 17 குறித்துரைக்கின்றது.

இங்கு அகதிகளுக்கு இருக்கும் உரிமைகளையும் உரித்துக்களையும் பொறுத்த வரையில் தமது நாட்டில் இடம்பெறும் ஒடுக்கு - முறைகளுக்கு பயந்து வேறொரு நாட்டிற்கு சென்று அகதிகளாக தஞ்சமடைந்து வாழ்பவர்களுக்கு பாதுகாப்பும் பராமரிப்பும் கிடைக்கும் விதத்தில் அவர்கள் தமது உரிமைகளை நேரில் பெறலாம். இவ் உரிமைகளானது வெறுமனே சரீரத்திற்கான பாதுகாப்பு என்று மட்டுப்படுத்தப்படவில்லை. மேலும் அகதிகள் என்ற அடிப்படையில் பல நாடுகளில் தஞ்சம் புகுந்து வாழ்பவர்கள், அந்நாடுகளில் சட்டபூர்வமாக வசிப்பவர்களாக இருப்பதுடன், அவர்களுக்கு வெளிநாட்டவர்க்கு உரித்தாக இருக்கும் அடிப்படை உரிமைகளில் குறைந்தபட்ச உரிமைகளுக்காவது உரித்து காணப்படுதல் வேண்டும். அத்துடன் சிந்தனை செய்யும் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம், சித்திரவதைக்கு உட்படுத்தப்படாமை, அவமானத்திற்கு உட்படுத்தப்படாமை போன்ற உரிமைகளும் அவர்களுக்கு இருக்க வேண்டும். அதே போல் குறித்த நாட்டுப் பிரஜைகளுக்கு இருப்பது போன்ற பொருளாதார மற்றும் சமூக உரிமைகளுக்கு சமனான உரிமைகள் இவர்களுக்கும் இருக்க வேண்டும். சுகாதார மருத்துவ வசதி, பாடசாலைக் கல்வி வசதி மற்றும் தொழில் செய்யும் வசதி என்பவற்றுக்கும் இடம் பெயர்ந்து அகதிகளாக வசிப்பவர்கள் ஏற்புடையதலாக வேண்டும்.

உள்ளூரில் புலம் பெயர்ந்து அகதிகளாக வசிப்பவர்கள் எதிர்நோக்கும் அடிப்படை உரிமைகள் பற்றிய சில பிரச்சினைகளை நோக்குவோமாயின் 2002ம் ஆண்டில் நாட்டின் அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்திய பல சம்பவங்களினால் அகதிகளாக வாழ்பவர்கள் நன்மைகள் பலவற்றை அடைந்தனர். அதே வேளை நாட்டின் நீண்ட காலப் போருக்கு இரண்டு பிரதான திறத்தவர்களாயிருந்த இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு வழிகோலிய புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று இடம்பெற்றது. மேலும் 2001ம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் LTTE இன் ஒரு தலைபட்ச யுத்த நிறுத்தத்திற்கு மறுமொழியாக கடந்தகாலத்தில் மனித உரிமை மீறல்களுக்கு பங்களிப்புச் செய்த பல மட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டது. இவை போன்ற நடவடிக்கைகளினால் உள்நாட்டில் புலம்பெயர்ந்த அகதிகள் தமது உரிமைகள் தொடர்பில் பல நன்மைகளை அனுபவித்து வந்தனர். இன்றைய நாளில் இவையாவும் சீர்குலைந்து புலம் பெயர்ந்த மக்கள் பல இன்னல்களையும் துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

போரில் சிக்கிவிடுவோம் என மனதில் குடிகொண்ட அச்சமே மக்கள் தமது சொந்த வதிவிடங்களினை விட்டு வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்ற மைக்கான முக்கிய காரணமாகும். இவ்வாறாக புலம்பெயர்ந்த மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாக குடிமக்களின் குடியேற்றத்திட்டம் மீதான நேரடித்தாக்குதல், எதிர்தாக்குதல் நடாத்துதல், கைது செய்தல், தடுத்து

வைத்தல், சித்திரவதைக்கு உட்படுத்தல், பாலியல் ரீதியான தொல்லை கொடுத்தல், வளர்ந்தோரையும் சிறுவர்களையும் பலாத்காரமாக படைக்கு திரட்டுதல் அல்லது போருக்கான பிரதான திறத்தவர்களினால் விளைவிக்கப்படும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றை குறிப்பிடலாம். இவ்வாறாக அவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளில் அநேகமானவை அடிப்படை உரிமை பற்றிய பிரச்சினையாக காணப்படுகின்றது. அவையாவன, சிங்களவர், தமிழர், முஸ்லிம் ஆகிய மூன்று பிரதான சமுதாயத்திற்கிடையிலான இன ரீதியான பதற்ற அடிப்படையில் எழுந்த குடியியல் கொந்தளிப்பு, ஆயுதப் படையினரால் சிறுவர்கள் படைக்கு திரட்டப்படுதல், சிறுவர்களின் கல்வி உரிமை மறுக்கப்படுதல், பொதுமக்கள் சித்திரவதை மற்றும் இம்சைகளுக்கு உள்ளாகுதல் இவற்றுள் சிலவாகும். மேலும் புலம்பெயர்ந்தவர்களுக்கு பாதுகாப்பும் உதவியும் கிடைக்காமை உரிமை மீறலுக்கு தொடர்ந்து பங்களிப்பு செய்தன.

கடந்த காலங்களில் உள்ளூரில் புலம் பெயர்ந்த அகதிகளின் நடமாட்டம் பல வழிகளில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதில் புலம்பெயர்ந்தவர்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் நடாத்தப்படும் ''மூடியமுகாம்கள்'' உள்ளூரில் புலம்பெயர்ந்த அகதிகள் மீது கடுமையான இராணுவ உத்தரவுச் சீட்டுமுறை சுமத்தப்பட்டமை என்பன அடங்கும் வடிவேலு vs OIC சிதம்பரபுரம் வவுனியா என்ற வழக்கில் வவுனியாவிலும், வவுனியாவிலிருந்து வெளியேறுவதற்குமாக விதிக்கப்பட்டிருந்த அனுமதிச் சீட்டு முறை வடிவேலு என்பவருக்கு அவர் ஒரு தமிழன் என்ற காரணத்தினால் மறுக்கப்பட்டமை ஒரு அடிப்படை உரிமை மீறல் என உயர்நீதிமன்றமானது உறுப்புரை 12 (2)ன் அடிப்படையில் தீர்ப்பு வழங்கி இருந்தது. மேலும் இரு தரப்பு படையினரும் இளைஞர்களின் நடமாட்டம் தொடர்பாக கடுமையான மட்டுப்பாடுகளை விதித்திருந்தது. LTTE தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வெளியேறுபவர்களிடம் கட்டணம் அறவிடப்பட்டது. இந் நிலைமையானது இவ்வாறக இருந்த போதிலும் மீளாய்வுக்குட்பட்ட காலப் பகுதியில் முன்னேற்றகரமான பல மாற்றங்கள் இடம்பெற்றன. ஆறுமுகம் வடிவேலு Vs சட்டத்துறைதலைமையதிபதி என்ற வழக்கில் இலங்கையில் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் உள்ளூரில் புலம் பெயர்ந்த அகதிகளின் நட மாட்டத்தினை மட்டுப்படுத்தும் இராணுவ அனுமதிச்சீட்டு முறையானது அகற்றப் பட்டது. இத் தடைகளானது அகற்றப் பட்டமைக்கு சமாதான பேச்சுவார்த்தைக்கு வழிவகுப்பதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகளும் மேற்படி வழக்கில் பின்பற்றப்பட்ட சட்டமுறைபற்றிய ஆட்சேபனையும் உதவி புரிந்தன. ஆனால் LTTE இன் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலம்பெயர்ந்துள்ள முஸ்லீம் மற்றும் சிங்கள மக்களின் நடமாட்ட உரிமை பற்றி நிச்சயமற்ற தன்மை நிலவி வருகின்றது.

அரசாங்கத்தின் மீளமர்த்தும் கொள்கை யானது நடமாடும் சுதந்திரத்திற்கு ஒரு முட்டுக்கட்டையாக இருந்தது.கடந்த ஆண்டுகளில் புலம் பெயர்ந்த அகதிகள் எந்த மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந் தார்களோ அம் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலுள்ள அரச காணிகளில் மீளக் குடியமர்த்த முடியாதிருந்தது. மேலும் அகதிமுகாம்களில் இருந்த பல உள்ளூரில் புலம் பெயர்ந்த அகதிகள் அரசாங்கத்தின் கட்டாயத்தின் பெயரில் அல்லது வற்புறுத்தலினால் அவர்களது சொந்த இடத்திற்கு திருப்பி அனுப்பி வைக்கப் பட்டார்கள். இவ்வாறாக அகதிகளை திருப்பி அனுப்புவதற்காக அரசாங்கமானது பல யுக்திகளைக் கையாண்டது. அவையாவன: உலர் உணவு பங்கீட்டை நிறுத்துவது, முகாம்கள் பாடசாலை போன்ற முகாம் வசதிகளையும் மூடிவிடுவதாக செய்யப்பட்ட

அச்சுறுத்தல்கள் என்பனவாகும். வேறுபல காரணங்களாலும் பாதுகாப்பாக திருப்பிச் செல்லும் உரிமையானது தடை செய்யப்பட்டது. இவற்றில் கண்ணிவெடிகள், வெடிக்காத பீரங்கிகள், இனரீதியான பதற்றம், ஆயுதப்படையினராலும் உள்ளூரில் புலம் பெயர்ந்த வேறு அகதிகளாலும் ஆதனங்கள் இருப்பாட்சி செய்யப்படுதல், ஏனைய அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் அழிக்கப்பட்டமை, சேதப்படுத்தப் பட்டமை, திரும்பிச் செல்வதற்கான உதவி கிடைக்கப்பெறாமை என்பன அடங்கும்.

உள்ளூரில் புலம்பெயர்ந்த அகதிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது மற்றுமொரு பாரிய பிரச்சினையாக இருந்தது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் வீடு, பாடசாலை, மருத்துவமனைகள், உள்ளூர் நிர்வாக நிறுவுகைகள் என்பன உட்பட உட்கட்டமைப்பு வசதிகள் முழுமையாகவோ பகுதியளவிலோ நிர்மூலமாக்கப்பட்டிருந்தன. மேலும் சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளில் தனித்துவ சேவைகள் வழங்க உயர் உத்தியோகத்தர்கள் கிடைக்கப் பெறாமை மற்றும் கட்டிடப் பொருட்கள் கூடுதலான செலவு காரணமாக மீளக் கட்டியெ ழுப்புவதற்கு தடை ஏற்பட்டது.

உள்ளூரில் புலம் பெயர்ந்து அகதிகளாக வசித்து வருபவர்களில் கூடுதலாக பெண்களே யதார்த்தபூர்வமான சவால்க ளையும் கவலையையும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் எதிர்கொள் கின்றார்கள். நிவாரண உதவி, நட்டஈடு, ஆதனத்திற்கு சட்டரீதியிலான உரிமை பெறுதல் போன்ற அனுபவங்களும் ஒப்புரவற்ற கொள்கைகளும் சட்டங்களும் பெண்களை பொறுத்தவரையில் சிக்கலாக்கப் பட்டிருக்கின்றன. மேலும் அநேகமாக இடம்பெர்ந்து அகதிகளாக வசித்து வரும் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்றனர்.

உள்ளூரில் புலம்பெயர்ந்து அகதிகளாக வசித்து வருபவர்களில் அடுத்தபடியாக சிறுவர்கள் பாதிப்புக்குள்ளாகின்றார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் ஆயுதப்படையினரால் படைக்கு திரட்டப்படுதல் அவர்களின் கல்வி உரிமையானது அவர்களின் பிறப்புச் சான்றிதழ் பத்திரம் தவறவிடப்பட்டமை காரணமாக மறுக்கப்படுதல் மற்றும் அவர்களின் சுதந்திரம் மறுக்கப்படுதல் என்பவற்றை உரிமை மீறல்களாக குறிப்பிட முடியும்.

வெறுமனே யுத்தத்தால் மாத்திரமல்லாது, கடல் அன்னையாவள் அலையைத் தந்தாலும் இன்றைய நிலைமைகளில் அகதிகளையும் தந்துள்ளாள். இதற்கு சான்றாக 2004ம் ஆண்டில் இடம்பெற்ற சுனாமிப் பேரழிவைக் குறிப்பிடலாம். இப் பேரழிவால் நாட்டின் பல பாகங்களிலும் மக்கள் தமது வீடுகளை இழந்து நிர்க்கதியாக நிற்க வேண்டிய நிலையானது காணப்படுகின்றது. இன்று கூட இச் சுனாமிப் பேரழிவால் அல்லலுற்ற மக்களுக்கு பூரண நிவாரணம் கிடைக்கப்பெறவில்லை.

உள்ளூரில் இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்பவர்கள் உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு ஐக்கிய நாடு அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் இடம்பெயர்ந்த அகதிகள் தொடர்பில் சில வழிகாட்டல் கொள்கைகளை வகுத்து அவை கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டும் என வலியுறுத்தியது. இடம் பெயர்ந்து அகதிகளாக இருப்பவர் நாட்டின் ஏனைய பொது பிரஜை அனுபவிக்கும் அதே விதமான உள்ளூர் மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழான உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை அனுபவிக்க முடியும். இடம் பெயர்ந்தவர்கள் என்ற காரணத்தால் அவர்களின் உரிமைகளோ, சுதந்திரங்களோ மறுக்கப்படுதலோ மாற்றப்படுதலோ ஆகாது

என்பன அக் கொள்கைகளுள் சிலவாகும். மேலும் UNHCR நிறுவனமானது அகதிகளுக்கான வேலை திட்டத்தினை செயற்படுத்தும் பொருட்டு முயற்சித்து வருகின்றது. அத்துடன் சட்டத்தரணிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மத்தியில் அகதிகள் தொடர்பான சட்டங்களை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த உதவிபுரிகின்றது.

ஒடுக்குமுறைக்குட்படுத்தப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தினரின் அடிப்படை மனித உரிமைகளை பாதுகாத்தல் என்பது ஒரு முக்கிய விடயமாக இருப்பதுடன் அகதிகள் தொடர்பில் மிக பரந்த ஏற்பாட்டை கொண்ட ஒரு சட்டமாக 1951ம் ஆண்டின் அகதிகள் நிலைப்பாடு தொடர்பான சாசனம் விளங்குகின்றது. இச்சாசனமானது அகதிகள் தொடர்பில் கட்டுப்படுத்தப்பட வேண்டிய உரிமை மீறல்கள் மற்றும் கடைப்பிடிக்க வேண்டிய உரிமைகள் பற்றி எடுத்துரைக்கின்றது. மேலும் இலங்கை சட்டத்தரணிகள் சங்க சட்ட உதவிமன்றமானது உள்ளூரில் இடம் பெயர்ந்த அகதி வாழ் மக்களுக்கு சட்ட உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பில் நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றது. ஒவ்வொரு வருடமும் உலக அகதிகள் தினமாக ஆனி மாதம் 20ம் திகதி கொண்டாடப்பட்டு அவர்களின் உரிமைகள் மீறப்படுவதை இயன்றளவில் குறைப்பதற்கு பல நிறுவனங்கள் முயற்சி செய்து வருகின்றமையும் இன்றைய நிலைமையில் காணக்கூடியதாக உள்ளது.

இன்றைய சமுதாயத்தின் உரிமைகள் அனைத்தும்
மனிதப் பிசாசுகளால் தின்று விழுங்கப்படுகின்றன.
இவ்வாறாக விழுங்கப்படும் உரிமைகள் அவர்களின் வயிற்றில்
சமிபாடடையப் போவதில்லை...........
பேய்க்கேது இரைப்பை என்று யோசிக்காதீர்கள்
அகதிக்கு ஏன் உரிமை வேண்டும் என சிந்தியுங்கள்....

# EUROPEAN UNION

*By:* **Vithya Ambigaibagan**
*Dip in Human Rights,*
*Dip in International Relations*
**Intermediate Year**
**Sri Lanka Law College**

Treaty of European Union 1992 (The Maastricht Treaty) established the union. These are the three pillars to the European Union.

1) European Community consisting of not only its treaties but wider aspects relating to citizenship and indeed economic and monetary union.
2) Common foreign and Security policy
3) Home Affairs and Justice

Its important to note here, that the European Union does not share the same legal institutional form as the EC and that it is, therefore still appropriate to talk about community law rather than Union law.

It is also essential to distinguish between the two different courts that operate within the European Context: the European Court of Justice (ECJ) which is the court of the EC sitting in Luxembourg; and the ECHR which deals with cases relating to the Human Rights and sits in Strasbourg.

Establishment of EC was a response to two factors: the disasters of and the emergence of the Soviet Bloc in Eastern Europe, The aim is to link the separate European Countries together in such a manner as to prevent the outbreak of future armed hostilities: The first step in this process was the establishment of a European Coal and Steel Community. The next step towards integration was the formation of the European Economic Community (EEC) under the Treaty of Rome in 1957; UK joined the EEC in the year of 1973. Single European Act (SEA) 1986 established a single economic market within the EC and widened the use of majority voting in the council of ministers.

As the establishment of the single market within the European Community progressed, it was suggested by the adoption of a common currency, or at least a more closely integrated monetary system. Thus in 1979, the European Monetary System (EMS) was established under which individual national currencies were valued against the nominal currency called the ECU and allocated a fixed rate within which they were allowed to fluctuate to a limited extent. Britain was a member of the EMS until 1992, when financial speculation against the pound forced its withdrawal. Nonetheless other members of the EC Continued to pursue the policy of Monetary Union now entitled European Monetary Union (EMU) and January 1999 saw the installation of the New European Currency, the **'Euro'**, which has now replaced national currencies within what is now known as the Euro zone.

In December 2000, the European Council met in Nice in the south of France. The Council consists of the Heads of State or Government of the member countries of the European Union and is the body charged with the power to make amendments to European Union treaties. The purpose of the meeting was to prepare the union for expansion from its current 15 to 27 members by the year 2004.

Now let us see about the institutions of the European Union, major institutions of the European Union are the council of ministers,

the European Parliament, the European Commission and ECJ.

The Council of Ministers is made up of ministerial representative of each of the 25 member states of the European Union. The actual composition of the council varies depending on the nature of the matter to be considered, when considering economic matters, the various states will be represented by their finance ministers or culture, and the various states if the matter before the council relates to agriculture, the various agricultural ministers will attend. The Organization of the various specialist councils falls to the president of the Council and that post is held for six monthly periods in rotates by the individual member states of the European Union. The presidency of the council is significant to the extent that the country holding the position can to a large extent control the agenda of the council and thus can focus European Union attention on areas that it considers to be of particular importance. This is the supreme decision making body of the European Union and it has the final say in deciding upon European Union legislation. Although it acts on recommendations and proposals made to it by the commission. It has the power to instruct the commission to undertake particular investigations and to submit detailed proposals for its consideration.

The meeting of the European Council at Nice in December 2000 approved the future enlargement of the Union; this is chaired by the head of government currently holding the presidency of the council. The function of the European Council was clarified by Article D of the Treaty on European Union, which stated that it shall provide the union with the necessary impetus for its development and shall define the general political guidelines thereof.

Next major Institution which I'm going to focus on is the European Parliament. It is a directly elected European Institution and can be seen as the body which exercises democratic control over the operation of the European Union. As in national Parliaments, members are elected to represent constituencies the elections being held every five years. There were a total of 626 members divided amongst the 15 member states approximately in proportion to the size of their various populations. Members of the European Parliament do not sit in national groups but operate within political groupings.

The European Parliaments' general secretariat is based in Luxembourg and although the Parliament sits in plenary session in Strasbourg for one week in each month it's detailed and preparatory work is carried out through 18 permanent committees which usually meet in Brussels. These permanent committees consider proposals from the commission and provide the full parliament with reports of such proposals for discussion. Originally its powers were merely advisory and supervisions.

European Parliament is together with the council of Ministers the budgetary authority of the European Union. The budget is drawn up by the commission and is presented to both the council and the Parliament. As regards what is known as 'obligatory' expenditure, the Council has the final say, but in relation to 'non-obligatory' expenditure, the Parliament has the final decision whether to approve the budget or not.

Next let us concern about the European Commission. This is the executive of the European Union and in that role it is responsible for the administration of European Union policies. There are 20 commissioners chosen from the various member states to serve for renewable terms of four years. Commissioners are appointed to head departments with specific responsibility for furthering particular areas of European Union policy. Once appointed Commissioners are expected to act in the general interest of the European Union as a whole rather than in the partial interest of their own home country.

The commission also acts under instructions fro m the council as the negotiator between the European Union and external countries. In addition to the executive functions, legislative process. The council can only act on proposals

put before it by the commission. The commission therefore has a duty to propose to the council measures that will advance the achievement of the European Union's general policies.

The European Court of Justice is the judicial arm of the European Union and in the field of community law its judgments overrule those of national courts. It consists of 15 judges, assisted by nine Advocate General to investigate the matter submitted to the court and to produce a report, together with a recommendation for the consideration of the court. The actual court is free to accept the report or not as it sees fit. The Court of Justice performs two key functions.

1) It provides whether any measures adopted or rights denied, by the commission, council or any national government is compatible with treaty obligations. Such actions may be raised by any European Union institution, government or individual. A member state may fail to comply with its treaty obligations in a number of ways. It might fail or indeed refuse to comply with a provision of the Treaty or a regulation; alternatively it might refuse to implement a directive within the allotted time provided for. Under such circumstances, the state in Question will be brought before the ECJ, either by the Commission or another member state or indeed individuals within the state concerned.

2) It provides authoritative rulings at the request of national courts, under Article 234 of the Treaty of Rome on the interpretation of points on community law. When an application is made under Article 234, the national proceedings are suspended until such time as the determination of the point in question is delivered by the ECJ.

The European Court of Human Rights is established and emphasized from the outset that the substance of this section has absolutely nothing to do with the European Union as such; the council of Europe, of which the ECHR is the legal institution, is a completely distinct organization and although membership of the two organizations overlap, they are not the same. The Council of Europe is concerned not only with economic matters but with the protection of Civil rights and freedoms.

The ECHR consists of 41 judges, representing the number of signatories to the ECHR, although they do not have to be chosen form each state and in any case sit as individuals rather than representatives of their state. Judges are elected by the Parliamentary Assembly of the Council been put in place so that one-half of their membership of the judicial panel will be required to seek renewal every three years.

Those are the main institutions and functions of the European Union which I discussed above.

## "பொதுச் செயலாளரின் ஆண்டறிக்கை"

சட்டக் கல்லூரியின் சைவ சமய தத்துவங்களையும் விழுமியங்களையும் யாவருக்கும் வலியுறுத்தி மேன்மையடையச் செய்வதனை நோக்காகக் கொண்டு இயங்கி வருகின்ற எமது சட்ட மாணவர் இந்து மகாசபையானது மிகவும் குறைந்தளவிலான மாணவர்களையே அங்கத்தவர்களாக கொண்டிருந்த போதிலும் தனது செயற்பாடுகளை நீரூற்று போல எத்தகைய சோர்வுமின்றி தொடர்ச்சியாக செயற்படுத்தி வருகின்றமையானது பாராட்டப்பட வேண்டியதாகும்.

சட்டமாணவர் இந்து மகாசபையின் தொடர்ச்சியான பணியில் நாமும் பங்களிப்பு செய்திருக்கின்றோம் என்ற பெருமைகளோடு 2006/07ம் ஆண்டிற்கான சட்டமாணவர் இந்து மகா சபையின் செயற்குழுவானது தெரிவு செய்யப்பட்டது.

இந்த வகையில் 2007ம் ஆண்டிற்கான சட்டமாணவர் இந்து மகாசபையின் செயற்பாடுகள் வழக்கம் போல வருடாந்த சிவராத்திரி பூஜையுடன் ஆரம்பமாகின. இவ்வாண்டு சட்டமாணவர் இந்து மகாசபை ஏற்பாடு செய்த சிவராத்திரி பூஜையானது 16.02.2007அன்று ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்றது. இப் பூஜை நிகழ்வுகளில் சுவாமி ஆத்மகனானந்தஜீ, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் கௌரவ ஸ்ரீஸ்கந்தராஜா, சட்டக்கல்லூரி விரிவுரையாளரும் சட்ட மாணவர் இந்து மகாசபையின் பெரும் பொருளாளருமாகிய திருமதி.க.நாகேந்திரா, சட்டகல்லூரி விரிவுரையாளர் திரு.வி.புவிதரன், சிரேஷ்ட சட்டத்தர ணிகளான திரு.D.M.சுவாமிநாதன் திரு.சசி மகேந்திரன், திரு.கணேசயோகன், திரு.சிவஞானம் மற்றும் சட்டத்தரணிகளான செல்வி ஹம்சஹகானாம்பிகை, திரு.றாஷி ஆகியோரும் சட்டக்கல்லூரியில் பயிலும் சகோதர இனமத மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர். இப் பூஜை நிகழ்வினை நடாத்த எமக்கு உதவிய சிரேஷ்ட சட்டத்தரணியும் ஸ்ரீ பொன்னம்பலவா னேஸ்வரர் ஆலயத்தின் தர்மகர்த்தாவும் ஆகிய திரு.டி.எம்.சுவாமிநாதன் அவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிக் கரம் நீட்டிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

சட்டமாணவர் இந்து மகாசபை இவ் வருடம் நடைபெற இருக்கின்ற சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு தமிழ்மொழி மூலம் தோற்றவுள்ள மாணவர்களுக்காக கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் வகுப்புக்கள் நடாத்தி வருகின்றது. இவ்வாறாக நடாத்தப்பட்டு வரும் வகுப்புக்களில் விரிவுரைகளை நடாத்த எமக்கு உதவியளித்து வரும் சட்டத்த ரணிகளான திரு.செ.செல்வகுண பாலன், திரு.சி.யோதிலிங்கம், செல்வி.ந.மதிவதனி, திரு.எம்.எம்.பஹீஜ் ஆகியோர்களுக்கும்

மற்றும் உதவிய அனைத்து சட்ட மாணவர்களுக்கும் எமது விசேட நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மாணவர்களுக்கு ஊக்கமளித்து அவர்களையும் விண்ணப்பம் செய்வதற்கு உதவிய சட்டத்தரணி ஜெ.ஜெயரூபன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாட்டில் இடம்பெறுகின்ற யுத்த சூழ்நிலையால் பாதிப்புக்குள்ளாகி இடம்பெயர்ந்த கிழக்கு மாகாண வாகரைப் பகுதி மக்களுக்கு சட்டமாணவர் இந்து மகாசபையானது தன்னால் இயன்றளவான உதவியைச் செய்தமை முக்கியம்சமாகும்.

அடுத்தபடியாக சட்டமாணவர் இந்து மகாசபையினால் நடாத்தப்பட்டு வரும் மாணவர்களுக்கான போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் சில வருடங்களின் பின்னர் இவ் வருடம் நடைபெற்றது. இவ்வாறாக நடைபெற்ற கட்டுரைப் போட்டிகள் மற்றும் பேச்சுப் போட்டிகளில் நடுவர்களாகப் பங்குபற்றி எமக்குதவிய சட்டத்தரணிகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சட்டமாணவர் இந்து மகாசபையின் செயற்பாடுகளுக்கெல்லாம் மகுடமாக விளங்கும் வருடாந்த வெளியீடான ''நக்கீரம்'' மலரினை இவ்வருடமும் படைத்து, தங்கள் கரங்களில் தவழவிட்டிருப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம். அத்துடன் இவ்வாறு படைக்கப்பட்ட ''நக்கீரம்'' மலர் வெளியீட்டு விழாவானது 08.02.2008 ஆகிய இன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பதை இட்டு பெருமகிழ்ச்சிடைகின்றோம்.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் கௌரவ எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா அவர் களும், கௌரவ விருந்தினராக இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவரான சுவாமி சர்வரூபானந்தா அவர்களும் மற்றும் பல பெரியோர்களும் நண்பர்களும் கலந்து சிறப்பிக்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அடுத்ததாக சட்டமாணவர் இந்து மகாசபையின் செயற்பாடுகளிற்கு ஆலோசனைகளை வழங்கி மிகவும் பக்கபலமாக இருந்து வரும் சட்டகல்லூரி விரிவுரையாளரும் சட்டமாணவர் இந்து மகாசபையின் முன்னாள் பெரும் பொருளாளருமாகிய திருமதி.கமலா நாகேந்திரா அவர்களுக்கும், 2008ஆம் ஆண்டு பெரும் பொருளாளருமாகிய திரு. வி. புவிதரன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது ''நக்கீரம்'' மலர் வெளியீடு சிறப்புற வெளிவர வாரி வழங்கிய சட்டத்தரணிகள் மற்றும் விளம்பரதாரர்களுக்கும், ஆக்கங்களைத் தந்துதவிய ஆக்குனர்களுக்கும் ஆசிச் செய்திகளைத் தந்த பிரமுகர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் எமக்கு எல்லா வழிகளிலும் உதவிகள் வழங்கி ஊக்கப்படுத்தி ஆசிகள் வழங்கிய பெரியார்களையும், நேசக்கரம் நீட்டிய சகோதரர்களையும் இதே வேளையில் அன்புடன் நினைவு கூர்ந்து எமது நன்றிகளை காணிக்கையாக்கி கொள்கின்றோம்.

# நன்றி

* அனைத்தும் சிறக்க அருள்புரிந்த இறைவனுக்கும்
* நக்கீரம் மலருக்கு ஆசியுரை வழங்கிய பெருந்தகைகளுக்கும்
* நக்கீரம் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு எமக்கு பெருமை சேர்த்த மேன்முறையீட்டு நீதியரசர் கௌரவ எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களுக்கும்
* கௌரவ விருந்தினராக கலந்து எம்மை கௌரவப்படுத்திய இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி சர்வரூபாகந்தா அவர்களுக்கும்
* இந்து மகாசபையின் செயற்பாடுகளில் அக்கறையுடனும் நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடனும் கலந்து கொண்ட எமது அதிபர் W.D.ரொட்றிசோ அவர்களுக்கும்
* மன்றத்தையும் எம்மையும் வழிநடாத்தி சென்ற பெரும் பொருளாளர் திருமதி.க.நாகேந்திரா அவர்களுக்கும், 2008ம் ஆண்டிற்கான பெரும் பொருளாளர் திரு.வி.புவிதரன் அவர்களுக்கும்
* எமது ஆக்கங்களை சீர்திருத்தி தந்த விரிவுரையாளர் திரு.செ.செல்வகுணபாலன் அவர்களுக்கு
* மன்றத்தினால் அங்கத்தவர்களிடையே நாடாத்தப்பட்ட போட்டிகளுக்கு நடுவர்களாக கலந்து கொண்டவர்களுக்கும்
* தமது ஆக்கங்களால் மலரை அலங்கரித்த ஆக்குனர்களுக்கும்
* விமர்சனப் பணியை ஏற்றுக் கொண்ட சிரேஷ்ட அரச சட்டவாதியும், விரிவுரையாளருமான எஸ்.துரைராஜா அவர்களுக்கும்,
* மலரை அழகுற அச்சிட்டு தந்துதவிய Vakmee Printers அச்சக உரிமையாளருக்கும் மற்றும் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கும்
* மலரை வெளியிடுவதற்கு நிதியுதவி வாரி வழங்கிய சட்டத்தரணிகளுக்கும்
* எமக்கு விளம்பர உதவிகளை வழங்கிய அனைவருக்கும்
* எம்முடன் கைகோர்த்து செயற்பட்ட சகோதர இன,மத மாணவர்களுக்கும்
* மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிய அனைவருக்கும் பெயர்குறிப்பிட மறந்தோருக்கும், எமது இதயங்கனிந்த நன்றிகள்.

*With best Complement from*

# Little
# Asia
## Emporium (Pvt) Ltd.

***Specialist in Wedding Sarees, Shalwar Kameez, Blouse Materials, Childrens Wear, Shirting, Suiting & Readymade Garments.***

No.317, 317A, Galle Road,
Wellawatte, Colombo-6,
Sri Lanka.
Tel: 2504470, 2500098
E-mail: info@littlrasialk.com
Website: http://www.littleasialk.com

*With best Complement from*

**A V K C O LANKANS BOOKSHOP (PVT) LTD**
**&**
**J.P.TRAVELS (PVT) LTD.**

No.399, Galle Road, Colombo-4
T.P. No.2590884
Fax No.2590884

***Dealers in School Books / Stationeries items Religious Books & Birthdays / Anniversary Cards.***

***Undertake Van Transport Services on hire basis inside and outside Colombo areas.***

***Translation Works Form Tamil - English of Births, Marriages, Deaths Certificates by Sworn Traslation.***

***Affidavits, Drafting Appeals and certification by Justice of the Peace services.***

*With best Complement from*

Law Students'
Hindu Mahasabha

*With best Complement from*

**JEYECHANDRANS**
*The Art of Fashions*

ஜெய்சந்திரன்ஸ் ජෙයිචන්ද්‍රන්ස්

*# 433, Galle Road,*
*Wellawatte, Colombo- 06.*
*Tel: +94 11 4528438 / 5*
*Fax: +94 11 4528434*
*E-mail: info@jeyechandrans.com*
*www.jeyechandrans.com*

*With best Complement from*

# Jeki

## Boutique

*Dealers in Textiles Export Quality Baticks. Sarees, Shalwers, Gent's, Children wear & Etc...,*

**107E, Galle Road,
Wellawatte,
Colombo-06,
Sri Lanka.
Tel: 011 4979374**

*With best Complement from*

# Sri Kumaralayam

*An exclusive shalwar showroom*

**77E, Manning Place,
Colombo 6, Sri Lanka.
Tel: 0094 777 66 7685 / 060 2158058
E-mail: rkonesh@hotmail.com**

**Programming**
VB 6
C/C++
VB.Net
ASP.Net
C#.Net
PHP
Java

MCP
MCSE
CCNA

**Computerized Accounting**
Tally
Acc Pack
Quick Book

Dip in Hardware
Dip in Networking
AutoCAD 2007

ICT For O/L
GIT For A/L

AAT
Foundation
Intermadiate
Final
CIMA
Foundation

MS Office Graphic Design Web Development
Multimedia Studio Design

STUDY IN



UK,
CYPRUS,
SINGAPORE,
MALAYSIA.

Pre University English Language Program
(Suitable for School leavers & Working Professionals)

IELTS 100% Pass Rate
Course ranging 1-3 Months

Sri Lankan Official Representative for Camden College London Americanos College Cyprus

Vision
Academy of Computer Studies
No: 10-1/1, 38th Lane, Wellawatta, Colombo-06.
Tel: +94 112553557, Fax: +94 112362115

## இந்து மகா சபைப்போட்டி முடிவுகள்

இலங்கை சட்டக்கல்லூரி இந்து மகா சபையினால் ஒவ்வொரு வருடமும் நடாத்தப்பட்டு வரும் போட்டிகள் இடையே சில தவிர்க்க முடியாத காரணங்களால் நடாத்தப்படாமல் போய்விட்டன. அதனை தொடர்ந்தும் நடாத்த வேண்டும் என்ற முயற்சியில் இவ் வருடம் சில போட்டிகள் மன்ற அங்கத்தவர்களிடையே நடாத்தப்பட்டன. இப்போட்டியில் நடுவர்களாக கடமையாற்றியவர்களுக்கு எமது மன்றம் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் இவ்வாறான போட்டிகள் நடைபெற உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றது.

### 2006ம் ஆண்டிற்கான கட்டுரைப்போட்டி

முதலாமிடம் :- செல்வி. மேனகா கேசவன்
இரண்டாமிடம் :- செல்வி. செல்வரஞ்சினி நடராஜா
மூன்றாமிடம் :- செல்வி. எம்.எம்.எப்.மதீஹா

### 2006ம் ஆண்டிற்கான பேச்சுப்போட்டி

முதலாமிடம் :- செல்வி. அகல்யா முருகானந்தன்
இரண்டாமிடம் :- திரு. மரியதாஸ் ஜே. டினேஷ்
மூன்றாமிடம் :- செல்வி. எம்.எம்.எப்.மதீஹா

### 2007ம் ஆண்டிற்கான கட்டுரைப்போட்டி

முதலாமிடம் :- செல்வி. பிரியதர்ஷினி
இரண்டாமிடம் :- செல்வி. மேனகா கேசவன்
மூன்றாமிடம் :- செல்வி. செல்வரஞ்சினி நடராஜா

### 2007ம் ஆண்டிற்கான பேச்சுப்போட்டி

முதலாமிடம் :- திரு. மரியதாஸ் ஜே. டினேஷ்
இரண்டாமிடம் :- திரு. விஸ்வலிங்கம் திருக்குமரன்
மூன்றாமிடம் :- செல்வி. அன்புவதனி சாம்பசிவம்

**இந்து மகா சபையின் சரித்திரத்தில்.......**

| ஆண்டு | தலைவர் | செயலாளர் | இதழாசிரியர் |
|---|---|---|---|
| 1963 | ஏ.மயில்வாகனம் | ரீ.யோகநாதன் | |
| 1964 | என்.அருணாசலம் | எம்.காசி விஸ்வநாதன் | |
| 1965 | ஆர்.ஸ்ரீநிவாசன் | பி.சிவலோகநாதன் | |
| 1966 | சிவா பாலேந்திரன் | எஸ்.என்.ஜீவலோகநாதன் | |
| 1967 | எம்.திருநாவுக்கரசு | ஏ.வி.கே.நீலகண்டன் | விமல் சொக்கநாதன் |
| 1968 | ஏ.வி.கே.நீலகண்டன் | ஏ.தம்பாபிள்ளை | சு.சி.தவராஜா |
| 1969 | கே.வி.மகாதேவன் | எஸ்.எம்.சண்முகநாதன் | |
| 1970 | கே.வெற்றிவேல் | கே.கணேசயோகன் | ச.லோகேஸ்வரன் |
| 1971 | திருமதி.எம்.சின்னதுரை | எஸ்.பகீரதன் | |
| 1972 | ஆர்.மாசிலாமணி | செல்வி.சி.சிங்காரம் | |
| 1973 | கே.ஜெயகிருஸ்ணன் | எஸ்.திருஞானம் | |
| 1974 | கே.ஜெயகிருஸ்ணன் | எஸ்.திருஞானம் | |
| 1975 | கே.ஜெயகிருஸ்ணன் | எஸ்.திருஞானம் | |
| 1976 | கே.நவரேந்திரன் | என்.ரஞ்சிதகுமாரன் | |
| 1977 | ஆர்.ரீ.விக்னராஜா | வீ.ரீ.சித்தேஸ்வரன் | |
| 1978 | --- | --- | |
| 1979 | ஏ.தெய்வேந்திரன் | எம்.விமலேந்திரன் | |
| 1980 | எஸ்.விக்னேஸ்வரன் | எஸ்.செல்வமுருகானந்தன் | |
| 1981 | எஸ்.கணபதிபிள்ளை | செல்வி.எஸ்.விஜயரட்ணம் | |
| 1982 | --- | --- | |
| 1983 | --- | --- | |
| 1984 | --- | --- | |
| 1985 | எஸ்.முத்துலிங்கம் | செல்வி.எஸ்.செல்லையா | |
| 1986 | ந.ரவிராஜ் | எஸ்.ராஜரட்ணம் | |
| 1987 | எஸ்.துரைராஜா | செல்வி.எஸ்.மாதவராஜா | |
| 1988 | பாலகுமார் | செல்வி.எஸ்.பாலச்சந்திரன் | |
| 1989 | என்.சுரேஸ்குமார் | செல்வி.டீ.சம்பந்தபிள்ளை | |
| 1990 | செல்வி.டீ.சம்பந்தபிள்ளை | ஏ.பிரேம்சங்கர் | |
| 1991 | செல்வி.எல்.காசிப்பிள்ளை | சி.சிவதாசன் | |
| 1992 | சி.சிவதாசன் | பெ.ரவீந்திரன் | |
| 1993 | வி.வி.தேவதாஸ் | எஸ்.குணநாதன் | |
| 1994 | செல்வி.வி.நடராஜா | சின்னத்துரை மயூரன் | |
| 1995 | செல்வி எஸ்.துரைராஜா | செல்வி. எஸ். மாதவராஜா | ப.பா.கௌதமன் |
| 1996 | செல்வி. சீ. தாமோதரம்பிள்ளை | செ.பிருந்தாவன் | |
| 1997 | செ.பிருந்தாவன் | மோகன் பாலேந்திரா | ப.பா.கௌதமன் |
| 1998 | | ப.ச.மௌலீஸ்வரன் | |
| 1999 | அ.சந்திரவதனி | கு.செல்வேந்திரன் | ந.மதிவதனி |
| 2000 | கு.செல்வேந்திரன் | ந.காண்டீபன் | |
| 2001 | சி.ஸ்ரீஸ்கந்தராஜா | வா.ஹம்சகனாம்பிகா | பி.கதிர்காமநாதன் |
| 2002 | ரி.சரவணராஜா | ச.ஈசாநந்தினி | சி.ஸ்ரீஸ்கந்தராஜா |
| 2003 | ஜெ.ஜெயரூபன் | செ.அனுறஜி | த.ஜனகன் |
| 2004 | செ.அனுறஜி | த.ஜனகன் | பா.பார்த்திபன் |
| 2005 | வீ.சுபாஜினி | சி.ஜெயதேவி | இரா.அஜந்தினி |
| 2006/07 | மா.தியாகராஜா | கே.மேனகா | செ.நிருஸ்யா அ.வித்யா |

Printed by:
Vakmee Printer
"Creative Printer for the New Generation"
Office:
# 258/3, Dam Street,
Colombo-12, Sri Lanka.
T.P / Fax: 0094-11-2421987
e-mail:vakmin@sltnet.lk
Factory:
# 29/1B, Sangamitha Mawatha,
Colombo-13, Sri Lanka.
T.P: 0094 - 11 - 5357524

Sara Creations